2015 புதிய பாடத்திட்டத்திற்கமைவானது.

# சைவநெறி

# தரம் - 10

[விரிவான விளக்கங்களுடனும் மாதிரி வினாக்களுடனும் கூடிய துணை நூல்]



கலாநிதி, பண்டிதர்
செ.திருநாவுக்கரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது.

# சைவ நெறி

[விரிவான விளக்கங்களுடன் கூடிய துணைநூல்]


## கலாநிதி செ. திருநாவுக்கரசு

[பண்டிதர், சைவப்புலவர்,கலாபூஷணம், கலைவாரிதி, கலைஞானச் சுடர், பீ.ஏ, எம்.ஏ, எம்.ஈ.டி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா (திறமை), முகாமைத்துவ டிப்ளோமா, இ.அ.சே 2-1, இ.க.நி.சே.வகுப்பு - iii]



வெளியீடு
பிள்ளையார் அச்சகம்
676, பருத்தித்துறை வீதி, நல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | சைவநெறி தரம் - 10 |
| நூலாசிரியர் | : | கலாநிதி செ. திருநாவுக்கரசு |
| முதற்பதிப்பு | : | 24 மார்ச் 2015 |
| பதிப்புரிமை | : | திருமதி. விஜயலட்சுமி திருநாவுக்கரசு |
| விநியோகம் | : | சீரடிபாபா விநியோகிஸ்தர்<br>676, பருத்தித்துறை வீதி,<br>நல்லூர், யாழ்ப்பாணம். |
| மொத்தப்பக்கங்கள் | : | **200 + 06** |
| விற்பனை விலை | : | ரூ . 350.00 |
| ISBN இலக்கம் | : | ISBN |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



கலாநிதி செ. திருநாவுக்கரசு அவர்களின் **தரம் -10** வகுப்புக்கான **சைவநெறி** நூல் வெளிவருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். 2015 ஆம் ஆண்டு முதல் இலங்கைப் பாடசாலைகளில் நடைமுறைக்கு வந்த புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாகக் கூடுதலான விளக்கங்களுடனும், மொழிச் செம்மையுடனும் எளிமையும் பொருண்மையும் நிறைந்ததாக, மாணவர் உள வயதுக்கேற்ற விதத்தில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பண்டிதரும் சைவப் புலவருமான திருநாவுக்கரசு அவர்கள் ஆசிரியராக, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக, பல்துறை எழுத்தாக்கங்களில் ஈடுபட்டவராகப் பணியாற்றிய அனுபவம் மிக்கவர். பல ஆண்டுகளாக அவரை நான் நன்கு அறிவேன். எனது சகோதரர்களுடன் ஒன்றாக விடுதியிலிருந்து கல்வி கற்றவர். அவரது க.பொ.த உயர்தரம், க.பொ.த சாதாரண தரம் ஆகிய வகுப்புகளுக்கான தமிழ் நூல்களுக்கு நான் அணிந்துரை வழங்கி ஊக்கப்படுத்தியுள்ளேன். மாணவர் மனமறிந்து கற்பிக்கக் கூடிய ஆற்றலுள்ள அவர் எழுதிய இந்தச் சைவநெறி நூலும் மாணவர்களுக்கு மிகவும் பயனுடையதாக விளங்குகின்றது. ஒவ்வொரு மாணவரும் இந்நூலினை வாங்கிப் படித்து நன்மை பெற வேண்டுமென விரும்புகின்றேன். நூலாசிரியரின் பணி மேன்மேலும் தொடர வாழ்த்து கின்றேன்.

**கலாபூஷணம். த. துரைசிங்கம் (பீ.ஏ) சிறப்பு,**
**பட்டப்பின் கல்வி டிப்ளோமா,**
**இ.க.நி. சேவை வகுப்பு – ii,**
**முன்னாள் கல்விப் பணிப்பாளர்.**

**கொழும்பு**
24.03.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

**2**015 ஆம் ஆண்டுமுதல் நடைமுறைக்கு வந்துள்ள புதியபாடத் திட்டத்திற்கு அமைவாகத் **தரம் 10** ஆம் வகுப்புக்கான **சைவ நெறி** என்னும் நூல் என்னால் எழுதப்பட்டு வெளிவருகிறது. இந்நூலினை எழுதுவதற்கு இலங்கைக் கல்விவெளியீட்டுத் திணைக்களம் வெளியிட்டுள்ள மூலநூல் பெருமளவுக்குத் துணைசெய்துள்ளது. எனவே, என்னால் எழுதப்பட்டது ஒரு துணைநூலாகும். இதில் மாணவருக்குப் பயன்படக்கூடிய குறிப்புகளும், மேலதிக விளக்கங்களும், மாதிரி வினாக்களும், பாடல்களுக்கான சொற்பொருள், பொழிப்புரை, விளக்கம் முதலானவைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலுக்கான அணிந்துரையை வழமைபோன்று எனது அன்புக் குரியவரும், நாடறிந்த நல்லதமிழ் எழுத்தாளரும், கவிஞரும், ஏராளமான பாட நூல்களை எழுதிவருபவரும், முன்னாள் கல்விப் பணிப்பாளரும், மூதறிஞருமான **கலாபூஷணம் த. துரைசிங்கம்** அவர்கள் எழுதி என்னைப் பெருமைப்படுத்தியுள்ளார். இந்நூலுக்கான கணினி அச்சு வேலைகள் அனைத்தையும் மிகவும் அழகாகச் செய்து தந்தவர் **திரு. சூ.சஞ்ஜீவ்காந்** அவர்கள். அட்டைப் படத்தினை அழகாக வடிவமைத்துத் தந்தவர் தாவடியைச் சேர்ந்த **திரு. ஸ்ரீநாத்** அவர்கள். உள்முகப்பில் சைவ நெறி விருட்சத்தினை அழகாக வரைந்து தந்தவர் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் **திரு. செ. வினோத்குமார்** அவர்கள். இந்நூலின் வெளியீடு, விநியோகம் ஆகியவற்றைப் பொறுப்பேற்று அர்ப்பணிப்புடன் செயற்படுபவர் நல்லூர், பிள்ளையார் அச்சக உரிமை யாளர் **உயர்திரு ஆ. குமாரசாமி** அவர்கள். இவர்கள் அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**- நூலாசிரியர் -**

**நல்லூர்**
24.03.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பரம்பொருள் | 01 |
| 2. | இறை சிந்தனை | 05 |
| 3. | சைவ விழுமியங்கள் | 10 |
| 4. | பஞ்சாங்கம் | 14 |
| 5. | விரதங்கள் | 17 |
| 6. | தீபாவளிப் பண்டிகை | 23 |
| 7. | திருமணச் சடங்கு | 26 |
| 8. | வேதமும் ஆகமமும் | 33 |
| 9. | திருமுறைகள் | 40 |
| 10. | திருக்கூட்டச் சிறப்பு | 57 |
| 11. | திலகவதியார் | 65 |
| 12. | மகோற்சவம் | 68 |
| 13. | சமயகுரவர் நால்வர் | 71 |
| 14. | சந்தான குரவர் | 89 |
| 15. | திருமூலர் | 94 |
| 16. | சுவாமி விபுலாநந்தர் | 98 |
| 17. | இறைவனும் ஆன்மாவும் | 101 |
| 18. | திருவருட்பயன் | 105 |
| 19. | குருலிங்க சங்கம வழிபாடு | 139 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | | |
|---|---|---|
| 20. | நாட்டார் தெய்வங்கள் | 141 |
| 21. | நாட்டார் கலைகள் | 147 |
| 22. | இலங்கைச் சைவ மரபின் தொன்மையை விபரிக்கும் இதிகாசங்கள் | 150 |
| 23. | இலங்கையிலுள்ள சைவ ஆலயங்கள் | 155 |
| 24. | இலங்கைச் சைவ சமய நூல்கள் | 174 |
| 25. | இலங்கை சைவ சமய நிறுவனங்கள் | 178 |
| 26. | சரியைத் தொண்டுகள் | 182 |
| 27. | சைவ தர்மம் | 186 |
| 28. | சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வினாக்கள் | 188 |
| 29. | மாதிரி வினாப்பத்திரம் | 195 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்




**என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்**
**ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட**
**மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்**
**நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.**

- பெரியபுராணம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. பரம்பொருள்

1. மெய்ஞ்ஞானம் என்பது, எது உண்மைப் பொருள்? என்பதை ஆராய்ந்து இறுதியில் கடவுள்தான் என்று தெளிவடைந்து கொள்வதைக் குறிப்பதாகும்.

2. மெய்ஞ்ஞானத்தால் கண்டறிந்தவற்றைச் சமய தத்துவ நூல்களும், தோத்திரங்களும் எடுத்துக் கூறுகின்றன.

3. கடவுளின் இருப்பையும், குணங்களையும் திருமுறைப் பாடல்கள் மூலம் அறியலாம்.

4. இறைவன் உள்நின்று உணர்த்தும் நெறியினைச் **சமயம்** எனலாம்.

5. சைவ சமயத்தின் மூலப் பொருள், உள்நின்று உணர்த்தும் பரம்பொருள் **சிவன்** எனப்படும்.



சிவபெருமான்

6. சிவன் அல்லது சிவம் என்பது செம்மையைக் கொடுப்பது, மங்கலத்தைத் தருவது, பேரின்ப நிலையை அருளுவது, எல்லாமாக இருந்து இயற்கையை ஆளுவது, மூல மெய்ப்பொருளாய் விளங்குவது என்று பொருள் கொள்ள முடியும்.

7. **சைவத் திருமறைகள் கூறும் சிவனின் இயல்புகள்:**

**அ)** ஆதியும் அந்தமும் இல்லாதவர்.
**ஆ)** அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூவகைத் திருமேனிகள் கொண்டு ஆன்மாக்களுக்கு அருள் புரிபவர்.
**இ)** இயற்கையாகவே முற்றறிவுடையவர்.
**ஈ)** இயல்பாகவே பாசங்களில் நின்றும் நீங்கியவர்.
**உ)** விருப்பு, வெறுப்பு இல்லாதவர்.
**ஊ)** எமது மனத்திற்கு எட்டாதவர்.
**எ)** அவர் செய்யும் செயல்களால் மாத்திரம் அறியத் தக்கவர்.
**ஏ)** அன்பே வடிவானவர்.
**ஐ)** தன்னை வழிபடுவார்க்கும், வழிபடாதோர்க்கும் அருள் செய்பவர்.
**ஒ)** வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அளிப்பவர்.
**ஓ)** எங்கும் நிறைந்தவர்.

8. சைவ சமய நூல்கள் கடவுளைப் பல பெயர்களால் அழைத்துள்ளன. பதி, இறைவன், பரம்பொருள், நிர்மலன், ஈஸ்வரன், ஈசன், பரமன், மெய்ப்பொருள், சிவன், சிவம் என்பன இவற்றுள் அடங்குவன.

9. கடவுளுக்கு (பதிக்கு) இருநிலைகள் உண்டு. சொரூபநிலை (சிறப்பு நிலை), தடத்த நிலை ( பொது நிலை) என்பன அவையாகும்.

10. சொரூப நிலையில் இறைவன் சுயம்பிரகாசமாய், குணம் குறிகளற்று விளங்குகிறார். தடத்த நிலையில் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுத் தமது சொரூப நிலையினின்றும் பல படிகள் இறங்கி வந்து, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் ஆற்றுகிறார். அப்போது மகேசுரன், உருத்திரன், மால், அயன், ஆகிய உருவத் திருமேனிகள் மூலமும், சிவம், சக்தி, நாதம், விந்து ஆகிய அருவத் திருமேனிகள் மூலமும், சதாசிவம் என்னும் அருவுருவத் திருமேனி மூலமும், ஆன்மாக்களின் பக்குவ நிலைக்குத் தக்கதாக அருள் புரிகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. **இறைவன் எண்குணத்தவன். அக் குணங்களாவன:**

**அ)** தன்வயத்தனாதல்.
**ஆ)** தூய உடம்பினனாதல்.
**இ)** இயற்கை உணர்வினனாதல்.
**ஈ)** முற்றுமுணர்தல்.
**உ)** இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்குதல்.
**ஊ)** வரம்பிலாற்றலுடைமை.
**எ)** வரம்பிலின்பமுடைமை
**ஏ)** பேரருளுடைமை

12. இறைவன் எண் குணங்களை உடையவன் என்பதை திருவள்ளுவரும் பின்வருமாறு கூறியுள்ளார்.

**கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை**

13. இறைவனை மெய்யன்போடு வழிபட்டு முத்தியடைவதற்காகச் சைவ சமய ஆகமங்கள் நால்வகை மார்க்கங்களைக் கூறியுள்ளன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவே அவையாகும்,

| | | |
|---|---|---|
| சரியை | - | உடம்பாற் செய்யப்படுவது. |
| கிரியை | - | சடங்குகளாற் செய்யப்படுவது. |
| யோகம் | - | மனத்தை ஒருநிலைப் படுத்தும் பயிற்சிகளால் செய்யப்படுவது. |
| ஞானம் | - | அறிவு நூல்களைக் கற்பதனால் அடையப் படுவது. |

14. இறைவனை எந்த உறவு நிலையிலும் வழிபட முடியும் எனச் சைவ சமயம் கூறுகின்றது.

**அ)** திருநாவுக்கரசர், இறைவனைத் தலைவனாகவும்(ஆண்டான்) தன்னை அடிமையாகவும் கருதித் தாச மார்க்கத்தில் (அடிமை மார்க்கம்) நின்று முத்தி அடைந்தார்.

**ஆ)** திருஞான சம்பந்தர், இறைவனைத் தந்தையாகவும், தன்னைப் புத்திரனாகவும் கருதிச் சற்புத்திர நெறியைக் கடைப்பிடித்தார்.

**இ)** சுந்தரர், இறைவனுடன் தோழமை மார்க்கத்தில் உறவு கொண்டார். இதனைச் சக மார்க்கம் என்பர்.

**ஈ)** மாணிக்கவாசகர், ஞான மார்க்கத்தைப் பேணிநின்று (சன்மார்க்கம்) முத்தி பெற்றவர்.

15. இறைவனின் திருவிளையாடல்களில்,

**அ)** சுந்தரமூர்த்திநாயனாரின் திருமணத்தின்போது கிழப் பிராமணராக வந்து தடுத்தாட் கொண்டமை.

**ஆ)** வயது போன செம்மனச் செல்வியின் பொருட்டு வைகையாற்றுக் கரையின் அணை கட்டும் கூலியாளாய் வந்து மன்னனிடம் பிரம்படி பட்டமை.

ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கன. தனது மெய்யடியார் மீது கொண்டுள்ள இறைவனின் அன்பை இவை வெளிப்படுத்துகின்றன.

16. **தலைவன்** என்னும் சொல்லின் பொருள் தாங்குபவன் என்பதாகும். **கடவுள்** என்பதன் பொருள் யாவற்றையும் கடந்து உள்நிற்பவர் என்பதாகும்.

17. **இறைவன் உலக, உயிர்களில் நிறைந்து (வியாபித்து) நிற்பதைப் பற்றித் திருமுறைப் பாடல்கள் கூறுவன:**

**அ) ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே!** (அப்பரடிகள் பாடிய தேவாரத்திலிருந்து)
[ஓசை, ஒலி என விளங்குவதெல்லாம் நீயே]

**ஆ) பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி** (மாணிக்கவாசகரின் திருவாசகத்திலிருந்து)
[பூமியில் ஐம்பூதங்களாய்ப் பரந்து விளங்குபவனே போற்றுகின்றேன்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) **கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை** *(சேந்தனாரின் திருவிசைப்பாவிலிருந்து)*
[ஞான நூல்களைக் கற்றோர், உணர்ந்து கொள்ளும் கற்பகக் கனி போன்றவனே]

ஈ) **சிவன் எனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி**
*(அப்பரடிகளின் தேவாரத்திலிருந்து)*
[சிவன் என்னும் பெயரினைத் தனக்கேயுரித்தாக்கிக் கொண்ட சிவந்த மேனியை யுடையவன்]

உ) **தன்னை ஒப்பாய் ஒன்றுமில்லாத் தலைவன்**
*(திருமூலரின் திருமந்திரத்திலிருந்து)*
[தனக்கு நிகராக மேலொருவன் இல்லாத தலைவன்]

ஊ) **எல்லா உலகமும் ஆனாய் நீயே!** *(அப்பரடிகளின் தேவாரத்திலிருந்து)*
[எல்லா உலகங்களாகவும் விளங்குபவன் நீயே!]

எ) **எண்ணென் குணமுறைக்கு இசைந்த வண்ணமே** *(தேவாரத்திலிருந்து)*
[எண்குணங்களாகிய முறைக்கேற்றவாறு விளங்குபவனே!]

ஏ) **எண்ணுவார் குணநீசன்** *(தேவாரத்திலிருந்து)*
[எட்டுக் குணங்களையுடைய ஈசன்]

ஐ) **தாயினும் நல்ல தலைவர்** *(திருஞான சம்பந்தர் தேவாரத்திலிருந்து)*
[பெற்ற தாயிலும் பார்க்க நல்ல தலைவர்]

ஒ) **அப்பன் நீ அம்மை நீ** *(அப்பர் தேவாரத்திலிருந்து)*
[தந்தையும் நீ தாயும் நீ]

18. இவ்வுலகில் நாம் அனைவரும் ஒரே இறைவனின் பிள்ளைகள் என நினைத்து வாழ்வதாற் பெறும் பயன்கள்:


சமத்துவம், சகோதரத்துவம், சமரசம், ஆன்மீக ஒருமைப்பாடு, சாந்தி, சமாதானம் போன்றவை ஓங்கி வளரும். இதனால் உலகம் நன்மைபெறும்.

19. இறைவன் ஞானப் பழமாய் இருப்பவன் என்பதைக் "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை" எனத் தொடங்கும் திருவிசைப்பாவின் அடி உணர்த்துகிறது. அதேபோல் தந்தையும் தாயுமாய் விளங்குபவன் என்பதை "அப்பன் நீ அம்மை நீ" எனும் பாடலடி விளக்குகிறது.

20. இறைவன் **"அகர உயிர்"** போன்றவன். "அ" என்னும் ஒலியானது ஏனைய எழுத்துக்களில் நிறைந்து நிற்பது போல் இறைவனும் உலக உயிர்களில் நீக்கமற நிறைந்துள்ளான்.

## குறிப்புகள்

**01**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02

**இறைவன்**

- அருவத்திருமேனி
  - சிவம்
  - சக்தி
  - நாதம்
  - விந்து
- உருவத்திருமேனி
  - மகேசுரன்
  - உருத்திரன்
  - மால்
  - அயன்
- அருவுருவத் திருமேனி
  - சதாசிவம்



**ஐந்தொழில்களை உணர்த்தும் நடராஜ வடிவம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. இறை சிந்தனை

1. மனிதனைச் சிறந்த வாழ்க்கை முறைக்கு வழிப்படுத்தும் ஒழுங்குபடுத்தப்பட்ட நெறி அல்லது மார்க்கம் சமயம் எனப்படும்.

2. இறை நம்பிக்கையானது ஆன்மீகத்தை வலுப்படுத்தவும், ஒழுகலாறுகளை நெறிப்படுத்தவும் பெரிதும் உதவுகின்றது.

3. நாம் இறை சிந்தனையுடன் நாள்தோறும் எமது கடமைகளையும், கருமங்களையும் ஆற்றுவதால் பெரும்பயன் அடைய முடியும்.

4. எமது சைவ சமய நூல்கள், ஆன்றோர் வாழ்க்கை முறைகள், சமய குரவர் நால்வரது இறையனுபவங்கள், அனுபூதிச் செல்வர்களின் அனுபவங்கள் யாவும் இறை சிந்தனையின் பயன் பற்றி, எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

5. நாம் இறை சிந்தனையுடன் வாழ்க்கைச் செயல்களை மேற்கொள்வதற்குப் பொருத்தமாகவுள்ள முக்கிய இடங்கள்

**அ.** வீடு
**ஆ.** ஆலயம்
**இ.** பாடசாலை

## அ. வீட்டில் சைவம்

6. மனிதனின் பிறப்பிலும் இறப்பிலும் சடங்குகளின் செல்வாக்கு இந்து சமயத்தில் பாரம்பரியமாக உள்ளது.

7. **சடங்கு** என்பதை வடமொழியில் **சமஸ்காரம்** என்பர்.



**வீட்டில் இறை வழிபாடு**

8. **வீட்டில் நடைபெறும் சடங்குகள்:**

   1) சமய சம்பந்தமானவை.
   2) நாளாந்தமும் விஷேட காலங்களிலும் நடைபெறுபவை.
   3) இறை சிந்தனையுடையவை.

9. நாம் அதிகாலையில் நித்திரை விட்டெழுந்ததும் முதற் கடமையாகச் சிவ மந்திரத்தை (நமசிவாய அல்லது சிவாயநம) உச்சரித்தல் வேண்டும்.

10. வீட்டில் நாம் செய்ய வேண்டிய அன்றாடக் கடமைகள்:

   1) சூரிய நமஸ்காரம் செய்தல்.
   2) வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்தல்.
   3) மஞ்சள் நீர் தெளித்தல்.
   4) சாணம் கலந்த நீரால் வீட்டையும் சுற்றாடலையும் புனிதப் படுத்தல்.
   5) கோலம் போடுதல்.
   6) நீராடல்.
   7) சுவாமி அறையிலுள்ள தெய்வத் திருவுருவப் படங்களுக்கு பூவும் நீரும் வைத்துத் தூபமும் தீபமும் காட்டி வணங்குதல்.
   8) இறை சிந்தனையுடன் தோத்திரப் பாடல்களைப் பாடுதல்.
   9) விபூதியைச் "சிவ சிவ" எனக் கூறிக் கொண்டு நெற்றியில் அணிதல்.

11. விபூதியை நாம் அணிய வேண்டிய முறைகள், காலங்கள், இடங்கள் பற்றிச் சமய நூல்கள் கூறியுள்ளன. தீட்சை பெற்றவர்கள் மூன்று குறிகளாக விபூதி தரிப்பதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரிபுண்டரம்** என்றும், தீட்சை பெறாதோர் நெற்றியில் விபூதியைப் பரவிப் பூசுவதை **உத்தூளனம்** என்றும் கூறுவர்.

12. **நாம் வீடுகளில் சமயக் கடமைகளைச் செய்யும்போது பேணப்படும் ·மனித விழுமியங்களில் சில:**

 **அ)** இறைபக்தி
 **ஆ)** ஜீவகாருண்யம் (உயிர்கள் மேல் அன்பு காட்டல்)
 **இ)** பிறருக்கு உதவுதல்.
 **ஈ)** பெரியோரை மதித்தல்.
 **உ)** விருந்தோம்பல்.
 **ஊ)** நலிந்தோரைப் பேணுதல்.
 **எ)** பிராணிகளுக்கு மதிப்பளித்தல்.
 **ஏ)** சமுகத்துடன் ஒற்றுமையாய் வாழுதல்.
 **ஐ)** நந்தவனம் அமைத்தல்.
 **ஒ)** துளசி மாடம் அமைத்தல்.
 **ஓ)** சந்தியா வந்தனம் செய்தல் (காலை, மாலை வேளைகளில் சிவ மந்திரம் சொல்லி இறைவனை வணங்குதல்)

13. **விழுமியம்** என்பது உயர்வான பெறுமதி வாய்ந்த நடத்தைக் கோலங்கள் ஆகும். அது ஒவ்வொரு சமூகத்திற்கும் பொதுவாகவும், சிறப்பாகவும் அமைந்திருக்கும். மனித விழுமியம், பண்பாட்டு விழுமியம், சமூக விழுமியம், கல்வி விழுமியம் எனப் பலவாறு காணப்படும். உதாரணமாகச் சைவ சமய விழுமியங்களில் ஒன்றாக எம்மைப் படைத்துக் காத்து அருளுகின்ற ஒரே தலைவன் சிவ பெருமானே என்பதில் முழு நம்பிக்கை கொண்டு அவனை வணங்குதல் என்பது காணப்படுகிறது.

14. நமது நாளாந்த வாழ்வில் பின்பற்றப்படும் விழுமியப் பண்புகள் யாவும் இறை சிந்தனையை வளர்க்கவும், இலட்சிய வாழ்வை அடையவும், உதவுகின்றன.

15. உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவை உண்ணும் முறைகளும் சமயப் பழக்கங்களில் அடங்கும். அந்த உணவை எமக்குத் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்தவேண்டியது எமது கடமையாகும். எமது மூதாதையர் உணவு உண்ணுவதற்கு முன்னர் " அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" என்னும் நாவுக்கரசரின் தேவாரத்தைப் பாடிய பின்னரே உணவுண்டனர். அதை நாமும் பின்பற்ற வேண்டும்.

16. மாலையில் கைகால், முகம் கழுவி, விளக்கேற்றி, இறைவனைத் தோத்திரம் பாடி வழிபடுவது அவசியமாகும். வெள்ளிக் கிழமை மற்றும் விரத நாட்கள், புனித நாட்கள் போன்றவற்றில் வீட்டிலுள்ளோர் ஒன்றுகூடிக் "கூட்டுப் பிரார்த்தனை" செய்தல் சிறந்தது. நித்திரைக்குச் செல்லும்போது கடவுளை நினைந்து திருநீறு அணிவதுடன், நாளாந்தம் நாம் செய்த தவறுகளுக்கு இறைவனிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு நித்திரை செய்தல் வேண்டும்.

17. **1) விரதங்கள் 2) சடங்குகள் 3) பண்டிகைகள்** ஆகியன இந்துக்களின் விசேட நாட்களாகும். இவை புண்ணிய காலங்களுமாகும். எமது சமயம், சமூகம் சார்ந்த பண்பாட்டை இவை பிரதிபலிக்கின்றன.

18. சிவராத்திரி, நவராத்திரி, கந்த சஷ்டி, திருவாதிரை, திருவெம்பாவை, பிரதோஷம், விநாயக சதுர்த்தி போன்ற விரதங்களும், தைப் பொங்கல், தீபாவளி, புதுவருடப் பிறப்பு, கார்த்திகை விளக்கீடு போன்ற பண்டிகைகளும் முக்கியமானவை.

19. தூய்மையான இடத்தில் தான் கடவுளின் **சானித்தியம்** (அருட்பார்வை) உண்டாகிறது. ஆதலால் பண்டிகைக் காலங்களிலும், புனித நாட்களிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறாமல் எமது வீட்டையும் எமது சூழலையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். இதுவே கடவுளை எமது அருட் பார்வைக்கு உட்படுத்தும் முதல் நடவடிக்கையாகும்.

20. பண்டிகை நாட்களில் மருத்து நீர் வைத்து முழுகுதல் (புதுவருடப் பிறப்பன்று), எண்ணெய் தேய்த்து முழுகுதல் முதலிய நடைமுறைகளுடன்

    1) மாக்கோலம் இடுதல்
    2) மாவிலைத் தோரணம் கட்டுதல்
    3) நிறைகுடம் வைத்தல்.
    4) இறைவனுக்கு உணவு படைத்தல்.

ஆகியனவும் இடம்பறுகின்றன.

21. வீடுகளில் நடைபெறும் சடங்குகளில் வாழ்வியற் சடங்குகளான பூர்வக் கிரியை, அபரக் கிரியை (கிரியை - சடங்கு) என்பன முக்கியமானவை. இவை இல்லறக் கடமையாகவும், மனச் சாந்திக்காகவும் செய்யப் படுகின்றன. பூர்வீகக் கிரியை உயிருடன் இருக்கும் போதும், அபரக் கிரியை இறந்த பின்னரும் செய்யப்படுபவை.

22. இல்லறக் கடமைகளில்

    1) ஏடு தொடக்குதல்.
    2) திருமணம்.
    3) உபநயனம்.
    4) புதுமனைப் புகுதல்.
    5) பூப்புனித நீராட்டல்.
    6) அறுபதாம் கல்யாணம் (சஷ்டியப்பப் பூர்த்தி).
    7) பிறந்த நாள்.

முதலிய சடங்குகளும் இடம்பெறுகின்றன.

## ஆ. பாடசாலையில் சைவம்





**பாடசாலையில் இறைவழிபாடு**

23. எமது சமய, சமூகப் பண்பாட்டினைச் சமூக மயப்படுத்தும் களமாக(இடமாக)ப் பாடசாலை கள் விளங்குகின்றன. பாடசாலை களில் இடம்பெறும் பல்வேறு நிகழ்ச்சிகளும் ஆன்மீகம் சார்ந்தவைகளாகவும், இறை சிந்தனையை வளர்ப்பதாகவும் அமைகின்றன. உதாரணமாக; நற்சிந்தனை வழங்கல், காலைப் பிரார்த்தனை, மாலைப் பிரார்த்தனை, சமய விழாக்கள், விழாக்களின் போதான அலங்காரங்கள், சமயச் சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள், சமய மறைச் செயற்பாடுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

24. பாடசாலைகளில் அமைந்திருக்கும் கோயில், சரஸ்வதி சிலை, வகுப்பறையின் வழிபாட்டு மூலையும் சுவாமி படங்களும் ஆகியவற்றில் மாணவர்கள் பிரார்த்தனை செய்து வழிபட இயலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. ஆசிரியர் வகுப்பறைக்கு வரும்போது எழுந்து நின்று வணக்கம் தெரிவித்தல், எழுதும் போது பிள்ளையார் சுழி இடல், சிவமயம் என்று எழுதத் தொடங்கும் போது எழுதுதல், பாடசாலை தொடங்கும்போதும், நிறைவடையும் போதும் தேவாரம் பாடிப் பிரார்த்தனை செய்தல், பாடசாலைக் கீதம் பாடுதல் போன்றனவும் எமது பண்பாட்டு விழுமியங்களாகும்.

26. பாடசாலைகளில் நிறைவேற்றக் கூடிய சமயஞ்சார்ந்த இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் சில பின்வருமாறு:

1) மாணவர்களை அருகிலுள்ள கோயிலுக்கு அழைத்துச் சென்று பூசை வழிபாடுகளில் பங்குபற்றவும் அவதானிக்கவும் செய்தல்.
2) தலயாத்திரைக்கான களப்பயணம் மேற்கொள்ளல்.
3) சமய விழாக்களைப் பாடசாலைகளில் நடத்துதல் (சிவராத்திரி விழா, நவராத்திரி விழா, நாயன்மார்களின் குருபூசைத் தினங்கள்)
4) பேச்சுப் போட்டி, கோலம் போடுதல், பூமாலை கட்டுதல், சமய அறிவுப் போட்டி, பண்ணிசை, இசை, நாடகம், வில்லுப் பாட்டு, கதாப்பிரசங்கம், முதலானவற்றைச் சமய மன்றங்கள் மூலம் நடத்துதல்.

27. **பாடசாலைகளில் சமயம் சார்ந்த நிகழ்ச்சிகளினூடாக மாணவர்கள் அடையக் கூடிய நன்மைகள்:**

1) சமய வரலாறுகளைத் தெரிந்து கொள்ளல்.
2) சமயப் பெரியார்களின் இறையனுபவங்கள், செயற்கரிய செயல்கள் ஆகியவற்றை அறிதல்.
3) சமய அனுபவங்களைப் பெறல்.
4) நாமும் சிறந்த சைவ சமயிகளாக வாழுவதற்குரிய உணர்வினை வளர்த்துக் கொள்ளல்.

## இ. கோயிலும் சமயமும்

28. கோயில் என்பது இறைவன் கூடியிருக்கும் இடமாகும். இதனையே மனம் ஒடுங்குவதற்குரிய இடமாகக் கருதி ஆலயம் என்பர். ஆலயம் என்பதில் ஆ -ஆன்மாக்கள் ; லயம் - ஒடுங்குதல் எனப் பொருள் கொள்ளலாம்.



**தீர்த்தத்திருவிழாவின்போது**

29. கோயில்கள் பண்பாட்டை வளர்க்கும் இடமாகவும், பண்பாட்டுக் களஞ்சியமாகவும் விளங்குகின்றன.

30. **"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"**
**"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"**
**"ஆலயம் இல்லாத ஊர் அடவிகாடே"**
ஆகிய முதுமொழிகள் திருக் கோயில் வழிபாட்டின் அவசியத்தை எமக்குணர்த்தியுள்ளன.

31. கோயிலில் தொண்டு செய்வதன் சிறப்பு, புகழ் பற்றி அப்பர் சுவாமிகள், "நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா!" எனத் திருத் தாண்டகத்தில் பாடியுள்ளார்.


32. எமது வாழ்க்கையில் ஆன்மீகம் சார்ந்த அதிக செயற்பாடுகள் ஆலயங்களிலேயே நடைபெறுகின்றன. அவற்றுள் தினந்தோறும் நடைபெறும் நித்திய பூசைகளும், விசேட தினங்களில் நடைபெறும் நைமித்திய பூசைகளும், அடங்குகின்றன. இவற்றை விட அடியார்களின் விருப்பம், நேர்த்தி ஆகியவற்றின் பொருட்டு செய்யப்படும் காமிய பூசைகளும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. ஆலயங்கள் ஒரு சமூக மயப்பட்ட நிலையங்களாக விளங்குகின்றன. தினமும் மக்கள் கூடி வழிபடும் இடமாகவும், பூசைகள், விழாக்கள், கலைகள் போன்றவற்றின் ஊடாக மக்கள் மனதைப் பண்படுத்தி, வீடுபேறு நோக்கி அழைத்துச் செல்லும் ஆன்மீக இடங்களாகவும் கோயில்கள் பணியாற்றுகின்றன.

## குறிப்புகள்






"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. சைவ விழுமியங்கள்

1. **சமயம்** என்பது ஒரு வாழ்க்கை நெறி அல்லது வாழும் முறை ஆகும். உலகிலுள்ள எல்லா மதங்களிலும் இந்த நோக்கமே காணப்படுகின்றது.

2. சைவசமயம் வலியுறுத்தும் அறங்களாகப் பண்பாட்டின் கூறுகளான ஒழுக்க நெறியும், அன்பு நெறியும் அமைகின்றன.

3. உயிர்களிடத்தில் நாம் செலுத்தும் அன்புதான் இறைவன் என்ற பொருளில் திருமந்திரம் நூல் **அன்பே சிவம்** எனக் கூறுகின்றது.

4. விழுமியம் என்பது உயர்வான, பெறுமானம் மிக்க செயற்பாடுகளைக் குறிப்பதாகும். அவை குறித்ததொரு சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். சைவ நெறியானது கலாசார மரபுகளைப் பேணுதல், ஒழுக்க நியமங்களைக் கடைப்பிடித்தல், நீதியான வாழ்க்கை முறைமையினை மேற்கொள்ளல் ஆகியவற்றை அறஞ்சார்ந்த வாழ்க்கையாகப் போதிக்கிறது. இதனையே எமது சமய நூல்களும் வலியுறுத்துகின்றன.

5. எமது ஆன்மீக இலட்சியத்தை (ஆன்மா இறைவனை அடைதலாகிய உயர் இலட்சியத்தை) எய்துவதற்குச் சைவ சமயம் வலியுறுத்தும் இலட்சியங்களாக

   1) கடமை
   2) வாய்மை
   3) அன்புடைமை
   4) பிறரை மதித்தல்
   5) ஒழுக்கமுடைமை
   6) செய்ந்நன்றி மறவாமை

   போன்றவை விளங்குகின்றன.

6. ஒழுக்க வாழ்வின் மூலம் பின்பற்றப்படும் நடத்தைகள் யாவும் விழுமியங்களாகும்.

## அ. அன்புடைமை

7. மனிதர்கள் உட்பட உலகிலுள்ள சீவராசிகள் அனைத்தும் அன்பினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இதனை திருவள்ளுவரும் **அன்பின் வழியது உயிர் நிலை** என்றார். பிற உயிர்களின் மீது காட்டும் அன்பும், பேணலும் இறைவனுக்குப் பிரியமான தொண்டாகும். எமது சமயம் வலியுறுத்தும் இலட்சிய வாழ்வும் அதுவாகும்.


**திருவள்ளுவர்**

8. எமது இறைவழிபாடு அன்பை அடிப்படையாகக் கொண்டதால் அன்பை மலராகவும், ஆர்வத்தை நீராகவும் கொண்டு வழிபடும் போது நம்பிக்கை பிறக்கிறது. திருமூலர் **அன்பும் சிவமும் ஒன்றுதான்** எனப் பாடியுள்ளார்.

9. சைவ சமயத்தின் இலட்சிய நோக்கம் உயிர்கள் இறைவனை அடைதலாகும். எனவே கடவுள் மீது பக்தி செலுத்த வேண்டும். அன்பினால் ஆகாதது எதுவுமில்லை. அன்புடைய வாழ்க்கை தான் சைவ சமய வாழ்க்கை. அன்புநெறி தான் சைவநெறி.

10. கடவுளைக் காலை, மாலை வேளைகளில் பூசித்தல், தியானித்தல், திருக் கோயிலில் வழிபாடு செய்தல், இறைவனின் புகழைப் பாடுதல் முதலியவற்றால் பக்தி செலுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கடவுள் உலக உயிர்களிடத்தில் நிறைந்திருப்பவராதலால் நாம் எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவராய் இருத்தல் வேண்டும். உயிர்களிடத்தில் நாம் காட்டும் கருணை இறைவனிடத்தில் காட்டும் பற்றாகும். ஏழைகள் உள்ளத்தில் இறைவனைக் காண முடியும். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதை நாம் உணருதல் வேண்டும்.


12. **எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின்**
**தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே!**

எந்தவுயிரையும் எனது உயிர்போலக் கருதி அன்பு செய்ய எனக்கு உனது அருளைச் செய்வாய் பரம்பொருளே! என்று தாயுமானவ சுவாமிகள் பாடியிருப்பதை மேலேயுள்ள பாடலடிகள் உணர்த்துகின்றன.

13. அன்பில்லாத வாழ்வை **என்பு தோல் போர்த்த உடம்பு** (வெறும் எலும்பும் தோலும் மூடிய உடம்பு) எனத் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். சிவபெருமானைக் **கருணாகர மூர்த்தி** என்றும், **ஜீவ காருண்யன்** என்றும், **தயாபரன்** என்றும் திருமுறைகள் போற்றுகின்றன. மணிவாசகப் பெருமான் **அன்பில் விளைந்த ஆரமுதே** எனப் பாடியுள்ளார்.

14. **பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்** உயர்வான அறமாகும். அத்தகைய மனநிலை அன்பினால் உண்டாகிறது. பசித்து வந்தோர், உதவி வேண்டி வந்தோர் ஆகியோருக்கு உதவுதல் எமது கடமையாகும். **யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி** எனத் திருமூலர் குறிப்பிடுவதும் அன்பினால் பிறருக்கு உதவும் இரக்கத்தைத் தான்.


மாணிக்கவாசகர்


தாயுமானவர்


திருமூலர்

## ஆ. வாய்மை

15. இந்துமதம் வலியுறுத்தும் முக்கிய அறங்களுள் **வாய்மை**(உண்மை)யும் ஒன்றாகும். எக்காலத்திலும் கடைப்பிடிக்க வேண்டிய விழுமியம் இதுவாகும்.

16. உள்ளம் வழுவாது உண்மையாக வாழும் வாழ்க்கை முறையான வாய்மை பற்றி அறநூல்கள் போதிக்கின்றன. திரு வள்ளுவரும்

**வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்** எனும் குறளினூடு தீமை தராத சொற்களைக் கூறுதலே வாய்மை என்கிறார்.


அரிச்சந்திரன்

17. நேர்மையாகவும் கடமையுணர்வோடும் செய்யப்படும் செயலால் மனிதரும் தெய்வமாகலாம்.

**உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்**

என்ற திருவள்ளுவரின் கூற்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் முன் அறியப்படும்**

என்ற சிலப்பதிகாரக் கூற்றும் இங்கு நோக்கத் தக்கது.

**வாய்மையே வெல்லும்** என்னும் இலட்சிய வாழ்க்கையினை முன்னுதாரணமாகக் காட்டியோருக்கு அரிச்சந்திரன், மகாத்மா காந்தி ஆகியோரைக் குறிப்பிடலாம்.

18. வாழ்க்கையில் பெறற்கரிய சகல செல்வங்களையும் இழந்தபோதும் **கட்டுரை இழுக்கிலோம்** (வாய்ச்சொல் தவறோம்) என்று கூறியவன் அரிச்சந்திரன்.

19. அகத் தூய்மையே உண்மையான வாய்மையாகும். இந்து தருமத்தில் வாய்மை, உண்மை, சத்தியம், நேர்மை, கடமை, பொய்யாமை ஆகிய சொற்கள் ஒரு பொருளையே குறிப்பனவாகும்.

20. பொய் பேசுதல், கடமை தவறுதல், நேர்மையின்றி நடத்தல் ஆகியவை வாய்மைக்கு இழுக்குத் தருவன.

21. **அறம் செய விரும்பு**

**என்று ஔவையாரும்,**

**புறத் தூய்மை நீரான் அமையும் அகத் தூய்மை**
**வாய்மையாற் காணப் படும்**

எனத் திருவள்ளுவரும் குறிப்பிடுவதும் அகத் தூய்மை பற்றியதாகும். ஒருவனது உள்ளத் தூய்மை அவனது வாய்மையாற் காணப்படும் எனக் கூறியிருப்பதும் இதனைத் தான்.

22. வாய்மையின் பெருமையை வேதங்கள் முதலாகச் சமய நூல்கள் பலவும் குறிப்பிட்டுள்ளன. **சத்யம் வத** (உண்மையைக் கடைப்பிடி), **தர்மம் சர** (தருமத்தைப் பின்பற்று) என உபநிடத மகா வாக்கியங்கள் கூறுகின்றன.

23. **மகாபாரதம், இராமாயணம்** ஆகிய இதிகாசங்களில் வாய்மையின் வெற்றியே சிறப்பாக உணர்த்தப் பட்டுள்ளது.

24. வாழ்க்கையும் சமயமும் வேறுவேறல்ல. இரண்டும் ஒன்றுதான். சமயங் காட்டும் சீரிய வழியில் தான் வாழ்க்கை அமைகிறது.

25. மனித வாழ்க்கையானது விழுமியங்களால் சிறப்படைகின்றது. உண்மை, அகிம்சை, கடமை, என்பன உயர்வான அற வாழ்க்கைக்கு அவசியமானவைகள் ஆகும்.



**ஔவையார்**



**மகாத்மா காந்தி**




**உபநிடதம்**



**சிலப்பதிகாரக் கண்ணகி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகள்

சைவ விழுமியங்கள்

அன்புடைமை | வாய்மை

அன்புடைமை | ஒழுக்கமுடைமை | கடமை | பிறரை மதித்தல் | செய்ந்நன்றி மறவாமை



குருவும் சீடர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4.பஞ்சாங்கம்



பஞ்சாங்கம் பார்த்தல்

1. சமய நம்பிக்கையின் அடிப்படையில் ஒழுக லாறுகள், வழக்காறுகள் பலவற்றைச் சைவ சமய மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர். இவை பிறப்பு முதலாக இறப்பு வரை நீடிக்கின்றன.
2. சகுனம் பார்த்தறிதல், நாள்கோள் பார்த்தறிதல், காகம் கரைதல் பலன் பார்த்தறிதல், பல்லி சொற் பலன் பார்த்தறிதல், பல்லி விழும் பலன் பார்த்தறிதல் போன்றவை இவற்றுள் சிலவாகும்.
3. இந்து அல்லது சைவ சமயத்தவர் வாழ்வியலில் பஞ்சாங்கம் பார்த்தறிதல் தொன்று தொட்டு வரும் வழக்கமாகும். பஞ்சாங்கம் என்பது பஞ்ச(ஐந்து) அங்கங்களைக் (உறுப்புகள் அல்லது பகுதிகள்) குறிப்பதான வட சொல்லாகும்.
4. வாரம் (கிழமையின் ஏழு நாட்கள்), திதி, நட்சத்திரம், யோகம், கரணம், ஆகிய ஐந்து உறுப்புக்களும், பஞ்சாங்கத்தில் முக்கியமானவை. **வாரம்** என்பதில் சோமவாரம், மங்கலவாரம், புதன்வாரம், பிரகஸ்பதிவாரம், சுக்கிரவாரம், சனிவாரம் என்பன அடங்குகின்றன.
5. சூரியன் நிற்கும் இடத்திலிருந்து சந்திரன் நிற்கும் தூரத்தைக் குறித்து நிற்பது **திதி** எனப்படும். பிரதமை முதல் பூரணை வரை சுக்கில பட்சம்(பூர்வ பட்சம்) என்றும், பிரதமை முதல் அமாவாசை வரை கிருஸ்ண பட்சம்(அபரபட்சம்) என்றும் திதி இருவகைப் படும். அச்சுவினி முதல் தேய்பிறை ரேவதி வரையுள்ள இருபத்தேழும் நட்சத்திரங்களாகும்.
6. இருபத்தேழு நட்சத்திரங்களைக் கொண்டு கணிக்கப்படுவது **யோகம்** ஆகும். முப்பது திதிகளுக்கும் அறுபது கரணங்கள் குறிப்பிடப் படுகின்றன.
7. பஞ்சாங்கம் பார்க்கும்போது முக்கியமான ஐந்து உறுப்புக்களுடன், உத்தராயணம், தட்சிணாயனம் ஆகிய இரு அயனங்களையும் சேர்த்துக் கொள்வர். தைமாதம் முதல் ஆனி மாதம் ஈறான ஆறு மாத காலங்களும் உத்தராயண காலமாகும். ஆடி தொடங்கி மார்கழி வரையுள்ளது தட்சிணாயன காலமாகும்.

   அயனம் – உஷ்ணம், வெப்பம்
8. பஞ்சாங்கம் கணித்த முதல் முயற்சியாக இந்தியாவின் குப்தர் பேரரசுக் காலத்தில் ஆரியபட்டர் என்பவரால், வான சாஸ்திர ஆய்வின்படி கோள்களின் நிலை கண்டறிந்து கணிக்கப்பட்டதாகச் சான்றோர் கூறுவர்.
9. இதன் பின்னர் இதே காலப் பகுதியில் வாழ்ந்த வராக மித்திரர் என்பவர் பஞ்சாங்கம் பற்றிய தெளிவான விடயங்களைக் கூறிச் சோதிடக் கலைக்குப் பெருமை சேர்த்தார்.
10. இந்தியாவில் **1) வாக்கிய பஞ்சாங்கம், 2) சித்தாந்த பஞ்சாங்கம், 3) திருக்கணித பஞ்சாங்கம்** ஆகிய மூன்று வகைகள் காணப்படுகின்றன.
11. இலங்கையில் **1) வாக்கிய பஞ்சாங்கம், 2) திருக்கணித பஞ்சாங்கம்** ஆகிய இருவகைப் பஞ்சாங்கங்கள் பின்பற்றப் படுகின்றன.
12. இப் பஞ்சாங்கங்களில் திதிகள், சூரியனுக்குரிய நாட்களையன்றித் திதிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்டே கணிக்கப்படுகின்றன. முப்பது திதிகள் (30) ஒரு சந்திரமாதமாகவும், இருபத்தொன்பதரை (29 1/2) சூரியாட்சிகளாகவும் கருதப்படுகின்றன. ஒவ்வொரு சந்திர மாதமும் பதினைந்து (15) திதிகள் கொண்ட இரு பட்சங்களாகப் பிரிக்கப்படுகின்றன. அமாவாசையுடன் தொடங்குவது சுக்கில பட்சம்( சுக்கிலம் - வெள்ளை) எனவும், பௌர்ணமியுடன் தொடங்குவது கிருஸ்ணபட்சம் (கிருஸ்ணம் – கறுப்பு)எனவும் கொள்ளப்படும்.



**இலங்கையின் வாக்கிய பஞ்சாங்கம்**

13. ஆரம்ப காலத்தில் வட இந்தியா, தக்கணப் பிரதேசம் ஆகியவற்றில் பௌர்ணமியிலேயே மாதம் தொடங்கியது. ஆனால் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் அமாவாசையிலேயே மாதம் தொடங்குகின்றது. இந்த வகைப் பஞ்சாங்கமே இந்தியா, இலங்கை முதலான நாடுகளிலுள்ள இந்து சமயத்தவர்களால் பயன் படுத்தப்படுகிறது.

14. சூரிய நாளில் எந் நேரத்திலும் திதி தொடங்கலாம். ஆயினும் சூரியன் உதயமாகும் போதுள்ள திதி தான் அன்று முழுவதும் இருக்குமெனக் கருதப் படுகிறது. சந்திர மாதங்கள் சித்திரையில் தொடங்கிப் பங்குனி வரை கணக்கிடப் பட்டன. பன்னிரண்டு மாதங்களிலும் 354 நாட்களே உள்ளன. சூரிய ஆண்டுகளுக்கும் சந்திர ஆண்டுகளுக்கும் இடையேயுள்ள முரண்பாடு இதுவாகும்.

15. அறுபத்து இரண்டு சந்திர மாதங்கள் அறுபது சூரிய மாதங்களுக்குச் சமனாகும்.


**இலங்கையின் திருக்கணித பஞ்சாங்கம்**

16. **பாரத ஆண்டுகள் ஆறு பருவங்களைக் கொண்டவை.**

    1) இளவேனில் காலம் (சித்திரை –வைகாசி)
    2) முதுவேனில் (ஆனி – ஆடி)
    3) கார் காலம்(ஆவணி –புரட்டாதி)
    4) குளிர் காலம் (ஐப்பசி – கார்த்திகை)
    5) முன்பனிக் காலம் (மார்கழி –தை)
    6) பின்பனிக் காலம்(மாசி –பங்குனி)

தமிழ் மாதங்கள் ஆங்கில மாதங்களின் நடுப்பகுதியில் ஆரம்பமாகி, நடுப்பகுதியில் முடியும்.

17. பாரத (இந்திய) ஆண்டுகள் பிரபவ முதல் அட்சய வரையிலான அறுபது வருடங்களைக் குறிப்பன. வருடங்களின் அடிப்படையிலும் பருவகாலங்கள் அமைந்துள்ளன.

18. **பஞ்சாங்கம் பார்த்து நடைபெறும் இந்துச் சடங்குகள் சில வருமாறு:**

**அ)** திருமணப் பொருத்தம்
**ஆ)** திருமண நிச்சயதார்த்தம்
**இ)** திருமண நாள்
**ஈ)** பொன்னுருக்கல்
**உ)** வளைகாப்புச் செய்தல்
**ஊ)** வித்தியாரம்பம்
**எ)** புதுமனை கட்டுதல், நிலை வைத்தல், புதுமனை புகுதல்
**ஏ)** காது குத்துதல்
**ஐ)** சோறூட்டல்
**ஒ)** ஏர் மங்கலம் பூட்டுதல்
**ஓ)** முளைப்புச் சடங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


12) களப் பொங்கல்

13) பூப்புனித நீராட்டு விழா

14) பால் காய்ச்சுதல்

19. எந்த நல்ல காரியத்தைச் செய்வதானாலும் பஞ்சாங்கம் பார்த்து, நல்ல நாளையும் நன்னேரத்தையும் தெரிவு செய்தே இந்துக்கள் செயற்படுவர். இது அவர்களது பாரம்பரியமாக விளங்குகின்றது.

## குறிப்புகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. விரதங்கள்

1. **விரதம்** என்பதன் பொருள் உண்ணும் உணவைச் சுருக்குதல் அல்லது தவிர்த்தல் என்பதாகும்.

2. விரதத்துடன் நோன்பு, உபவாசம் ஆகியனவும் தொடர்புடையவை.

3. சைவமக்களது ஆன்மீக வாழ்வை நெறிப்படுத்தவும், முத்தியடையச் செய்யவும் விரதம் சாதனமாக உதவுகிறது.

4. **உபவாசம்** என்பது இறைவனின் அருகே வசித்தல் எனப் பொருள் தருகிறது. ஒரு நாள் அல்லது சிலநாட்கள் உணவு உண்ணாது இறை சிந்தையுடன் காலங்கழிப்பதை உபவாசம் எனலாம்

5. உணவைத் தவிர்த்தல் முலம் பொறுமை என்னும் பண்பு மேலோங்குகையில் அது நோன்பெனப் படும்.

6. **விரதமானது மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும், கடவுளை மெய்யன்போடு விதிப்படி வழிபடல்** என நல்லை நகர் ஆறுமுகநாவலர் அவர்கள் விரதம்பற்றி வரையறை செய்துள்ளார்.

7. **விரதத்தினைக் கடைப்பிடிக்கும் முறை:**
   - (i) ஆறு அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் விரதம் அனுட்டிக்க வேண்டும்.
   - (ii) விரத நிறைவின் மறுநாள் அடியார்களுடன் சேர்ந்து உணவு உண்ணும் சம்பிரதாயமான **பாரணம்** அல்லது **பாரணை** இடம்பெறல் வேண்டும்.
   - (iii) விரத அனுட்டானத்தைத் தொடர முடியாத முதுமை அல்லது நோயுற்ற நிலையில் அதற்குரிய கிரியைகளை முறைப்படி செய்தபின் விரதத்தைவிட்டுவிட வேணடும்.

8. விதி முறைப்படி விரதம் அனுட்டிப்பதால், அதுவே சிறந்த இறைவழிபாடு ஆகிறது. குடும்பநலம், உடனலம் வளருகிறது. விசுவாசம், தன்னம்பிக்கை, துணிவு, பணிவு, பக்தி, அன்னியோன்யம், அன்பு, கருணை, ஒழுக்கம், நேர்மை, பொறுமை ஆகிய உயர்ந்த பண்புகள் மேலோங்கு கின்றன.


9. காலந்தோறும் பல்வேறு விரதங்கள் சைவமக்களால் அனுட்டிக்கப்படுகின்றன. அவற்றுள் சிவவிரதங்கள், சக்திவிரதங்கள், விநாயகவிரதங்கள், சுப்பிரமணியவிரதங்கள் முக்கிய மானவை.

10. ஆண்டுதோறும் அனுட்டிக்கப்படும் மகாசிவராத்திரி, சதுர்த்தி, கார்த்திகைநாள் என்பனவும், சோமவாரம், வெள்ளிக்கிழமை நாள் முதலான விரதங்களும் விரத வகைகளுள் அடங்குகின்றன.

12. விரதங்கள் பல இருப்பினும் விநாயகர் சஷ்டி, கந்தசஷ்டி, புரட்டாதிச்சனி ஆகிய விரதங்கள் பற்றி இங்கு விரிவாக நோக்குவோம்.

## (அ) விநாயக சஷ்டி விரதம்

- (i) ஓங்காரப் பொருளாக விளங்கும் விநாயகப் பெருமானுக்கு முதலிடங்கொடுத்து வழிபடுவது மரபாகும்.
- (ii) பிள்ளையார், கணபதி, ஐங்கரன், இலம் போதரன், கஜமுகன், மோதக வயிறன், வல்லபை மணாளன் எனப் பல பெயர் களால் விநாயகர் அழைக்கப் படுகிறார்.



கஜமுக சங்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) விநாயகருக்குரிய விரதங்களாக சுக்கிர வாரம், சதுர்த்தி, விநாயகசஷ்டி, சித்திரை விநாயகசதுர்த்தி, கணபதி விரதம் ஆகியவை குறிப்பிடத் தக்கன. இவற்றுள் விநாயக சஷ்டி விரதமே தலைசிறந்ததாகக் கருதப் படுகிறது.

(iv) விநாயக சஷ்டி விரதம் கார்த்திகை மாதத்துத் தேய்பிறைப் பிரதமை (முதலாம் நாள்) தொடக்கம் மார்கழி மாதத்து வளர்பிறைச் சஷ்டி (ஆறாம் நாள்) வரையுள்ள இருபத்தொரு நாட்கள் அனுட்டிக்கப் படுவதாகும்.

(v) விநாயக சஷ்டி விரதத்தினைச் சைவ மக்கள் **பெருங்கதை விரதம், பிள்ளையார் நோன்பு, பிள்ளையார் கதைவிரதம்** ஆகிய பெயர்களாலும் அழைப்பர்.

(vi) நம்நாட்டு விநாயர் ஆலயங்களில் வரதபண்டிதரின் **பிள்ளையார் கதை, விநாயகபுராணம்** என்பவற்றைப் படனம் செய்யும் வழக்கம் நீண்ட காலமாகப் பின்பற்றப் பட்டு வருகின்றது.



**விநாயகர்**

(vii) பிள்ளையார் கதை படனம் செய்யும் போது பின்வரும் காப்புச் செய்யுள் பாடப்படும்.

**கரும்பும் இளநீரும் காரெள்ளுந் தேனும்**
**விரும்பும் அவல்பலவும் மேன்மேல்- அருந்திக்**
**குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்**
**கணபதியே இக்கதைக்குக் காப்பு**

மேலும், பின்வரும் விநாயகர் துதியோடு பெருங்கதை படிக்கப்படும்.

**திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுங் செஞ்சொற்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும்- உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**
**காதலாற் கூப்புவர்தம் கை**

(viii) **விநாயகர் சஷ்டி விரதத்தின் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்:**

**(அ)** விரதம் தொடங்கும் நாளில் 21 இழைகள் கொண்ட நூலினாலான காப்பினை ஆண்கள் வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் அணிந்து கொள்ளல்.

**(ஆ)** முதலிரு தினங்களும் ஒரு பொழுது நண்பகலில் உணவு உண்ணலும், இரவில் பால் பழம் அருந்துதலும்.

**(இ)** தினந்தோறும் விநாயகப் பெருமானுக்குக் கரும்பு, இளநீர், மோதகம் அவல், எள்ளுருண்டை, என்பவற்றை நிவேதனம் செய்தல்.

**(ஈ)** இறுதித் தினமன்று உபவாசம் இருத்தல்.

**(உ)** பாரணைத் தினத்தன்று காலையில் அவதானமாய்க் காப்பினைக் கழற்றுவித்தல்.

**(ஊ)** பாரணையின்போது அடியவர்கள், உறவினர்கள், ஏழை எளியவர்கள் ஆகியோருடன் சேர்ந்து உணவு உண்ணல்.

(ix) விநாயகர் சஷ்டி விரதத்தினை 21 வருடங்கள் தொடர்ந்து கடைப்பிடிப்பது உத்தமமான பலனைத் தரும் எனப்படுகிறது, இயலாதவர்கள் ஏழு ஆண்டுகளாவது தொடர்ந்து நோற்பது பயனுடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஆ) கந்த சஷ்டி விரதம்

(i) சிவ பெருமானின் திருக்குமாரர்களில் இளையவர் கந்தப் பெருமான். இவரைச் சுப்பிரமணியன், கார்த்தி கேயன், சரவணபவன், ஆறுமுகன், குமரன், முருகன், சேயோன், சுவாமிநாதன், கடம்பன் முதலான பெயர்களாலும் அழைப்பர்.



சூரனை வதைத்த ஆறுமுகன்

(ii) கந்தப்பெருமானுக்குரிய விரதங் களாகச் சுக்கிரவாரம், திருக் கார்த் திகை விரதம், கந்தசஷ்டி ஆகியன குறிப்பிடத் தக்கன.

(iii) **கந்த சஷ்டி விரதம்**

**(அ)** கந்தப் பெருமான் சூரசங்காரம் செய்து, தேவர்களைக் காத்த அருட்செயல் குறித்து அனுட் டிக்கப் படுவது கந்த சஷ்டியாகும்.

**(ஆ)** ஐப்பசி மாதத்துத் தீபாவளியை அடுத்த அமாவாசையைத் தொடர்ந்து வளர் பிறைப் பிரதமை தொடக்கம் சஷ்டி வரையுள்ள ஆறு நாட்களும் அனுட்டிக்கப்படுவது கந்த சஷ்டி விரதமாகும்.

**(இ)** முருகப் பெருமானைக் குலதெய்வமாக வழிபடுவோரும், செல்வங்கள், நற்புத்திரப் பேறு, சுகபோகங்கள் போன்றவற்றை வேண்டி நிற்போரும் இவ் விரதத்தினை அனுட்டிப்பர்.

**(ஈ)** ஆறு தினங்களும் உபவாசம் இருந்து தீவிரமாக அனுட்டிப் பவர்களும், ஐந்து தினங்கள் ஒருவேளை உணவு உண்டு ஆறாம் நாள் உபவாசம் இருப்பவர்களும், வெறுமனே எள்ளுந் தண்ணீருடன் மாத்திரம் இருப்பவர்களும் எனத் தத்தம் இயல்புக்கேற்ப இவ் விரதத்தினைக் கடைப்பிடிப்பர்.

**(உ)** கந்த சஷ்டியின் ஆறாம் நாள் முருகன் ஆலயங்களில் சூரன் போர் அல்லது சூரசங்காரம் இடம்பெறும். இது நாடக பாணியில் நடைபெறும். தாரகன், சிங்க முகன், சூர பதுமன் ஆகிய மூவரையும் முருகப் பெருமான் அழித்துத் தேவர்களைக் காத்த புராண வரலாற்றினை ஆலயங் களில் நிகழ்த்திக் காட்டுவார்கள்.



சூரன்போர்

**(ஊ)** மனிதர்களிடையே உட்பகையாகவுள்ள காமம், வெகுளி, மயக்கம், ஈயாமை, செருக்கு, பொறாமை முதலான அசுரப் பண்புகளை அழித்து அவர்கள் தெய்வீகமாக வாழ இறைவன் அருள்பாலிப்பதான உண்மைப் பொருளை உணர்த்தி நிற்பதும் சூரன் போரின் தத்துவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(எ) கந்த சஷ்டி விரத நியதிகள்:**

(i) அமாவாசை தினத்தில் ஒருவேளை உணவு உண்ணல்.

(ii) தொடக்க நாளில் ஆலயத்தில் தர்ப்பை அணிந்து காப்புக் கட்டல்.

(iii) ஆறு நாட்களும் முருகன் ஆலயத்தில் இறை வழிபாட்டிலும், புராண படனத்திலும் ஈடுபடல்.

(iv) இறுதி நாளில் காப்பை அவிழ்த்துத் தட்சணையுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பித்தல்.

(v) ஏழாம் நாளின் அதிகாலை நீராடி, அனுட்டானங்களை நிறைவேற்றி, பாரணைப் பூசை முடித்து, மாகேசுர பூசை (அன்ன தானம்) செய்து விரதத்தினை நிறைவு செய்தல்.

**(ஏ)** கந்தசஷ்டி விரத மகிமையையும், பயனையும் கந்த புராண படலத்தின் 23 ஆம் செய்யுள் எடுத்துக் கூறுகின்றது. இதனை மனனஞ்செய்து ஓதுவது நல்லதாகும்.

**ஆரண முனிவர் வானோர் அங்கதன் மற்றை வைகல்**
**சீரணி முருக வேட்குச் சிறப்பொடு பூசை யாற்றிப்**
**பாரணம் விதியிற் செய்தார் பயிற்று மிவ்விரதம் தன்னால்**
**தாரணி அவுணர்கொண்ட தம்பதத் தலைமை பெற்றார்**

**பொருள்**

வேதங்களிற் சிறந்த முனிவர்கள், தேவர்கள், மன்மதன் முதலானவர்கள் நாள்தோறும் அலங்கரிக்கப்பட்ட முருகக் கடவுளுக்குச் சிறப்பான முறையில் பூசை செய்து, கந்த சஷ்டி விரதம் அனுஷ்டித்து பாரணம் தன்னை விதிமுறைப்படி செய்து, அசுரர்கள் தாம் செய்த தவத்தினால் பெற்றுக் கொண்ட பூமி முழுவதையும் சகல செல்வங்களையும், பதவிகளையும் தாம் பெற்றுத் தலைமை கொண்டனர்.

## (இ) புரட்டாதிச் சனி விரதம்

(i) நவக்கிரகங்களில் ஒருவராகிய சனீஸ்வரன், சூரிய பகவானுக்கும், உஷா தேவிக்கும் புரட்டாதி மாதச் சனிக்கிழமை ஒன்றில் தோன்றியவர் எனப் புராணம் கூறுகிறது.

(ii) எனவே சனி பகவானுக்குரிய விஷேச நாட்களாகப் புரட்டாதி மாதச் சனிக் கிழமைகள் கொள்ளப் படுவதோடு, அந் நாட்களில் புனிதமாக விரதம் அனுட்டித்துச் சனீஸ்வர பகவானின் அருளை வேண்டுவது அடியார்களின் தொன்று தொட்ட வழக்க மாகும்.



சனி பகவான்

(iii) ஒவ்வொரு சனிக்கிழமைகயிலும் விரதம் அனுட்டிக்காவிடினும், புரட்டாதி மாதச் சனிக் கிழமைகளில் விரதமிருத்தல் நல்லது. தன்னை வழிபடும் அடியார்களின் பாவங்களை நீக்கி மகிழ்ச்சியை அளிப்பார் சனீஸ்வரன்.

(iv) புரட்டாதிச் சனி வழிபாட்டின்போது எள்ளுச் சாதமும், கறுப்பு நிறப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டும் வைத்து வழிபாடியற்ற வேண்டும். ஏனெனில் சனீஸ்வர வழிபாட்டில் எள்ளும், கறுப்பு நிறமும் முக்கியமாகும். அடியார்கள் சிவன், பெருமாள் ஆலயங்களில் எள்ளெண்ணெய் எரித்து விரதம் அனுட்டிப்பது வழக்கம்.

(v) சனீஸ்வரனின் வாகனம் கறுப்பு நிறக் காகமாகும். இதனால் இந்துக்கள் காகத்திற்கு உணவு படைப்பதை விரத நாட்களில் கட்டாயமாகக் கடைப்பிடிப்பர். தாம் உண்ணும் உணவிலும் எள்ளு, நல்லெண்ணெய் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளுவர். சனிக்கிழமைகளில் எள்ளு, கறுப்புத்துணி, நல்லெண்ணெய் ஆகியவற்றைத் தானம் செய்வர். இதனால் சனிதோஷம் நீங்கும் என நம்புவர்.

(vi) புனிதமான மனிதப் பிறவியை எடுத்திருக்கும் ஒவ்வொருவரது வாழ்க்கையையும் நிர்ணயிப்பவராக சனி பகவான் விளங்குகிறார். இவரை ஆயுட்காரன், பாவத்தின் கிரகம் என அழைப்பது வழக்கம். "சனியைப் போலக் கொடுப்போரும் இல்லை, சனியைப்போலக் கெடுப்போரும் இல்லை" எனக் கூறுவதுண்டு.

(vii) ஒருமனிதனுடைய வாழ்க்கையில் மூன்று முறை ஏழரைச் சனி வரும் 30 வருடங்களுக்கு ஒரு முறை என இது அமையும். மங்கு சனி, பொங்கு சனி, மரணச் சனி என அமைவதுடன் ஒவ்வொரு காலகட்டமும் இரண்டரை ஆண்டுகளைக் கொண்டதாக விளங்கும் எனச் சோதிட நூல்கள் கூறுகின்றன.

(viii) பிள்ளையார், ஆஞ்சனேயர் ஆகிய இருவர் மட்டுமே சனி பகவானாற் பிடிக்கப்படாதவர்கள்.

(ix) ஒருமுறை இராமர் இலங்கை வருவதற்கா அனுமான் பாலம் கட்டிக் கொண்டிருந்தார். அப்போது சனி பகவான் வந்து, "இப்போது உன்னை நான் பிடிக்கப் போகிறேன்; உன் உடம்பில் ஓரிடம் கொடு" என்றார். ஆஞ்சனேயரோ "சனீஸ்வரரே! இப்போது நான் இராம காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். சீதையை இராமர் மீட்ட பின்பு என்னை வந்து பிடியுங்கள்" என்றார். சனீஸ்வரரோ "இது காலதேவன் கட்டளை" எனக் கூற ஆஞ்சனேயரும் "சரி என்னுடைய தலையிலே அமருங்கள்" என்றாராம். சனீஸ்வரரும் ஆஞ்சனேயரின் தலையிலே ஏறி அமர்ந்து கொண்டார். ஆஞ்சனேயர் பெரிய பெரிய மலைகளைத் தூக்கி தன் தலையிலே வைத்தார். பாரம் ஏற ஏறச் சனீஸ்வரரால் தாங்க முடியாமல் கீழே குதித்து விட்டார். ஏன் இறங்கி விட்டீர் என ஆஞ்சனேயர் கேட்க, நீ என்னை வென்று விட்டாய்; ஏழரை விநாடிகள் மட்டும் உன்னைப் பிடித்து விலகுகின்றேன் எனச் சனீஸ்வரன் கூறினாராம். அப்போது ஆஞ்சனேயர் சனீஸ்வரனைப் பார்த்து "இராம நாமம் சொல்லுபவர்களை நீங்கள் பிடித்து அதிகம் வருத்தக் கூடாது" எனக் கேட்டுக்கொண்டாராம்.

(x) பிள்ளையாரைப் பிடிப்பதற்காகச் சனிபகவான் சென்றபோது அவர் தன் முதுகைக் காட்டியவாறு நாளை என்று சொன்னாராம். நாளை என்ற படியால் ஒவ்வொரு நாளும் சென்று பிள்ளையாரைப் பிடிக்க முடியவில்லை. பிள்ளையாரிடம் தோல்வி கண்ட சனீஸ்வரன் உம்மை வணங்குவோருக்கு அதிக துன்பம் வராது எனக் கூறிச் சென்றாராம்.

(xi) எமது துன்பங்கள் நீங்கப் புரட்டாதிச் சனி விரதம் இருத்தல் சிறந்தது. சிறிய செப்புப் பாத்திரத்தில் எடுக்கப்பட்ட நல்லெண்ணெயில் முகத்தைப் பார்த்த பின்னர் தானம் செய்வதும் சிறந்தது. புரட்டாதிச் சனி விரத நாட்களில் கோயில்களில் கறுப்புத் துணியில் எள்ளினைப் பொட்டலமாகக் கட்டி, அதனைச் சிறிய மண்சட்டியில் வைத்து நல்லெண்ணெய் விட்டு எரித்து வழிபடச் சனிதோஷம் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(xii) சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்கலம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சரவின்றிச் சாகா நெறியில்!
இச்செகம் வாழ இன்னருள் தாதா!

## குறிப்புகள்

**விரதங்கள்**

- **விநாயக சஷ்டி**
  - கார்த்திகை மாதத் தேய்பிறைப் பிரதமை → மார்கழிமாத வளர்பிறைச் சஷ்டி வரை
  - 21 நாட்கள்
  - பிள்ளையார் படனம்
- **கந்த சஷ்டி**
  - ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையை அடுத்த வளர்பிறைப் பிரதமை → சஷ்டி வரை
  - 6 நாட்கள்
  - கந்தசஷ்டி கவசப் பாராயணம்
- **புரட்டாதிச் சனி**
  - புரட்டாதி மாதத்துச் சனிக்கிழமைகள்
  - நான்கு அல்லது ஐந்து சனிக்கிழமைகள்
  - சனி தோத்திரப் பாடல்கள் பாராயணம்



சூரனை அழித்த தேவ சேனாதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. தீபாவளிப் பண்டிகை



குடும்பத்துடன் கொண்டாடும் தீபாவளி

1. பண்டிகை என்பது பெருநாள், விஷேட நாள் என்று பொருள் தருகின்றது.
2. **தாம் சார்ந்துள்ள சமயத்திற்கு முக்கிய மானதாகக் கருதப்பட்டு வருடத்தில் குறிப்பிட்ட நாள், விருந்துடன் சிறப்பாகக் கொண்டாடப் படுவது பண்டிகை** எனத் தற்காலத் தமிழ் அகராதி வரைவிலக்கணம் கொடுத்துள்ளது.
3. விரதமும், பண்டிகையும் சமய முக்கியத்துவம் வாய்ந்தவையானாலும், இரண்டிற்கும் இடையில் வேறுபாடு உள்ளது.
4. விரதமானது உணவைத் தவிர்த்தல் அல்லது சுருக்குதல் என அமைந்திடப் பண்டிகையானது பலவகை உணவுகளையும் உறவினர்கள், அயலவர்கள், பெரியவர்கள், நண்பர்கள் ஆகியோருடன் பகிர்ந்துண்ணுதலாக அமைகின்றது.
5. பண்டிகைகளின் போது புத்தாடை அணிதல், உறவினர் வீடுகளுக்குச் செல்லல், வாழ்த்து மடல்கள் அனுப்பல், கலை நிகழ்ச்சிகள், பலகாரங்கள் செய்தல், அலங்காரங்கள், வேடிக்கை நிகழ்ச்சிகள், என்பனவும் இடம்பெறுகின்றன.
6. தைப் பொங்கல், தீபாவளி, சித்திரைப் புத்தாண்டு, ஆடிப்பிறப்பு, ஓணம் பண்டிகை, காமன் பண்டிகை, முதலியன குறிப்பிடத்தக்க இந்துக்களின் பண்டிகைகளாகும்.
7. **தீபாவளிப் பண்டிகை**
   - (i) இந்திய நாட்டின் இமயம் முதல் குமரி வரை பல பிரதேசங்களிலும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் இந்து சமயத்தவர், புலம்பெயர்ந்து வாழுகின்ற, பல நாடுகளிலும், தீபாவளிப் பண்டிகை ஆண்டு தோறும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.
   - (ii) சைவர்கள், வைணவர்கள் உள்ளிட்ட இந்து சமயப் பிரிவினர் அனைவராலும், பல்வேறு இந்திய மொழிகளைப் பேசுவோராலும், தீபாவளி கொண்டாடப் படுவதனால் இந்துப் பண்டிகைகளில் முதன்மை பெற்றதாக விளங்குகின்றது.
   - (iii) தீபாவளிப் பண்டிகையானது, ஐப்பசி மாதத்து அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசித் திதி பொருந்திய விடியற்காலை நேரம் (சந்திரன் உதிக்கும் காலம்) கொண்டாடப் படுகின்றது.
   - (iv) வீடு, கிணற்றடி, பூந்தோட்டம் முதலான பல்வேறு இடங்களிலும், தீபங்களை விஷேசமாக ஏற்றிவைத்து வழிபாடு செய்வதால் இந்நாளுக்குத் தீபாவளி எனப் பெயருண்டாயிற்று. **தீப + ஆவலி = தீபாவலி** எனப்படும். அதுவே பின்னர் **தீப + ஆவளி = தீபாவளி** என்றாயிற்று. ஆவளி (ஆவலி) என்பது **வரிசை** எனப் பொருள் தரும். தீபங்களை வரிசையாக ஏற்றும் நாள் தீபாவளி எனலாம்.
   - (v) புத்தாடை அணிதல், நீராடிக் கோயிலுக்குச் சென்று வழிபடல், இயலுமானால் உபவாசம் அனுட்டித்தல் ஆகியவற்றைத் தீபாவளி நாளில் கடைப்பிடிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(vi) ஆன்மாக்கள் நரக வழியினின்றும் இறைவனால் காக்கப்படும் நாளாகத் தீபாவளி விளங்குவதால் இதற்கு **நரக சதுர்த்தசி** என்ற பெயரும் உண்டு.

(vii) தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்பு பட்டதாக நரகாசுரன் என்ற அசுரனின் கதை விளங்குகின்றது. இந்த அசுரன் குடிமக்களைக் கொடுமைப்படுத்தி, அவர்களின் சேலை தோய்த்தல், வீடுகளைக் கட்டுதல், மெழுகுதல் முதலிய நல்ல செயல்களையும் தனது ஆணையால் தடுத்து வந்தான். மக்களைப் பாவ வழியில் செல்லுமாறு செய்தான். இந் நிலையில் மகாவிஷ்ணு, அசுரனைக் கொன்று மக்களைக் காப்பாற்றினார். இறப்பதற்கு முன் நரகாசுரன் மகா விஷ்ணுவிடம் வரமொன்று வேண்டினான். "கடவுளே! நான் எனக்காக ஒரு நன்மையும் கேட்கவில்லை. இந்த நாளிலே (நான் அழிக்கப்படும்) எவர் ஆசாரம் மிக்கவர்களாய், நல்லொழுக்கம் உள்ளவர்களாய் கொலை முதலான பாவங்களை விடுத்து இறைவனைப் பூசிக்கின்றார்களோ, அவர்களுக்கு விஷேச நன்மை செய்தருள்க" என்று வேண்டிக் கொண்டான். இதன் அடிப்படையிலும் இப் பண்டிகையினைக் கொண்டாடுவதாகக் கருதப்படுகிறது.

(viii) **வட இந்தியாவில் தீபாவளி**

வட இந்தியாவில் தீபாவளிப் பண்டிகை பல பெயர்களில் கொண்டாடப்படுகின்றது. அவற்றுள்

*(1) யட்ச ராத்திரி (அசுர ராத்திரி)*
*(2) ஜெகத் ராத்திரி*
*(3) சுக ராத்திரி*
*(4) தீபோற்சவம்*
*(5) தீபப் பிரதிபதி உற்சவம்*
*(6) தீப மாலா வர்ணனம்*
*(7) கார்த்திகா அமயம்*
*(8) தீவாளி*


**தீபாவளிப் பலகாரங்கள்**

என்பன முக்கியமானவையாகும்.

(ix) **தென்னிந்தியாவில் தீபாவளி**

தென்னிந்தியாவில் தீபாவளி கொண்டாடப் பட்டமைக்கான பல குறிப்புகள் உள. அவற்றுள் இரண்டு குறிப்புகள் முக்கியமானவை. அவை வருமாறு;

(1) முற்காலச் சாளுக்கிய மன்னனான திருப்புவன மல்லவின் கி.பி. 1117 இன் கன்னடக் கல் வெட்டு

(2) விஜயநகர ஆட்சி பற்றி **ஆகாச பைரவகதா** நூலில் மன்னனின் வெற்றி, செல்வ வளம் ஆகியவற்றுக்காக இரு நாட்கள் மகாலட்சுமி பூசை செய்தது.

(x) தீபாவளிப் பண்டிகையானது இலங்கையில் ஒருநாளும், தென்னிந்தியாவில் இரு நாட்களும், வட இந்தியாவில் ஐந்து நாட்களும் கொண்டாடப்படுகின்றது.

(xi) (1) பழைய பொருட்களை நீக்கிப் புதுப் பொருட்கள் வாங்கல்.

(2) வீட்டில் மாவிளக்கேற்றல்.

(3) கோவர்த்தன கிரி உருவம் செய்து அதனைச் சூழ்ந்து ஆடிப் பாடுதல்.

(4) திருமணமான பெண்கள் பூசை செய்தபின் தங்கள் சகோதரங் களுக்குத் திலகமிட்டு விருந்துக்கு அழைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியன தீபாவளிக் கொண்டாட்டத்தின் போது இடம்பெறுவன வாகும்.

(xii) தீபாவளிக் கொண்டாட்ட முறைகள் இடத்துக்கிடம் வேறுபடுதலையும், கொண்டாட்டங்களில் கேளிக்கைகள் செல்வாக்குப் பெறுதலையும் காண முடியும்.

(xiii) தீபாவளிப் பண்டிகையின் போது உயிர்க்கொலை, புலாலுண்ணல், கள்ளுண்ணல் ஆகியவற்றில் ஈடுபடாதிருத்தல் வேண்டும். ஆனால் எம்மவரிற் பலர் இவற்றில் ஈடுபடுவது வழக்கமாயுள்ளது. இதனைத் தவிர்ப்பதே பயனுடையதாகும்.

(xiv) தீபாவளிப் பண்டிகைக்காலப் பூசைகளும் நற்செயல்களும் ஆன்மாக்களை நரகத்திலிருந்து காக்கும் எனப் **பத்மபுராணம்** கூறுகிறது.

(xv) தீபாவளியன்று கட்டாயம் எண்ணெய் தேய்த்து நீராட வேண்டும். எண்ணெய் இலட்சுமியாகவும், நீர் கங்காதேவியாகவம் கருதப்படும்.

## குறிப்புகள்

**தீபாவளிப் பண்டிகை**

**ஐப்பசி மாத முதல் நாளாகிய சதுர்த்தசி**

**நரகாசுரன் கதைத் தொடர்பு**

- **வடபாரதத்தில் தீபாவளி**
- **தென்பாரதத்தில் தீபாவளி**
- **தீபாவளிக் கொண்டாட்ட முறைகள்**



**நரகாசுரனை வதம் செய்தமை**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. திருமணச் சடங்கு

1. ஓர் இனத்தின் பண்பாட்டினைப் பிரதிபலிப்பதாக விளங்குவன **சடங்குகள்** (கரணங்கள்) ஆகும்.
2. மனித இனத்தின் பாரம்பரியங்களை (மரபுகளை)ப் பாதுகாக்கச் சடங்குகள் உதவுகின்றன.
3. உண்மையான உணர்வுடன் மனம் ஒன்றிச் செய்யப்படும் சடங்குகள் விரைவான பயனை அளிப்பன என்று பெரியோர்கள் கூறியுள்ளனர்.
4. சடங்குகளின்றி நாம் எடுத்த காரியம் நிறைவேறாது என்பது மக்கள் நம்பிக்கையாகும்.
5. வாழ்க்கையில் பிறப்பிலிருந்து இறப்பு வரை சடங்குகள் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன.
6. இன்பத்தைப் பெற, துன்பத்தைப் பகிர, கடமைகளைச் செவ்வனே புரிந்து பயன்பெற, ஒருவருக்கொருவர் உதவ, உறவுகளை வலுப்படுத்த, ஒற்றுமையைப் பேணச் சடங்குகள் உதவுகின்றன.
7. சடங்குகள் பலவகைப்படும். அவற்றுள் சமயச் சடங்குகள், பிறப்புத் தொடர்பான சடங்குகள், திருமணச் சடங்குகள், ஈமச் சடங்குகள், வேளாண்மைச் சடங்குகள் என்பன வாழ்வியல் சார்ந்தவைகளாகும். இவற்றுள் திருமணச் சடங்கு பற்றி விரிவாக நோக்குவோம்.

## திருமணச் சடங்கு

8. திருமணச் சடங்கானது சைவ சமய மரபில் முக்கியமான ஒன்று. இது பற்றிச் **சைவக் கிரியை விளக்கம்** போன்ற பல நூல்கள் குறிப்பிட்டுள்ளன. இன்றும் இச் சடங்கு முறைகள் பெருமளவுக்குப் பின்பற்றப் படுகின்றன.
9. திருமண நிச்சயதார்த்தம், திருமணப் பதிவு, பொன்னுருக்கல், மணமகன், மணமகள் ஆகியோரை மங்கல நீராட்டல், மாப்பிள்ளை அழைத்தல், மணமேடையில் ஆரம்பச் சடங்குகள், அங்குரார்ப்பணம், இரட்சா பந்தனம், மணமகன் வருகை, பிதிர் ஆசீர்வாதம், கன்னிகாதானம், மங்கல நாண் பூட்டுதல் (தாலி கட்டுதல்), மாலை மாற்றுதல், பால்பழம் உண்ணல், பசு தரிசனம், பாணிக் கிரகணம், ஏழடி வைத்து நடத்தல், அம்மி மிதித்தல், கணையாழி எடுத்தல், அருந்ததி காட்டல், பூர்ணாகுதி, ஆசீர்வாதம், பூதாக்கலம் உண்ணல், மணமக்களை மணமகன் வீட்டில் வரவேற்றல் ஆகிய சடங்கு முறைகள் இந்துத் திருமணத்தின் போது இடம் பெறுகின்றன.



திருமணப் பத்திரிகை

10. **திருமண நிச்சயதார்த்தம்**

மனித வாழ்வின் ஒரு கட்டமாக இல்லறத்தை மேற்கொள்ளல் அமைகிறது. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற் பொருள்களையும் பெறுவதற்குரிய ஆரம்ப இடம் அதுவாகும். சந்ததி விருத்திக்கும், நற்கதி யடையவும், அறப்பணிகளை ஆற்றவும் இல்லறம் துணையாகின்றது. பருவம் அடைந்த தம் பிள்ளைகளுக்குப் பெற்றோர் கருத்தொருமித்த துணையினைத் தேடித் திருமணம் செய்து வைக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. இதுவரையிலும் மாணவப் பருவத்தில்(பிரம்மச்சரிய நிலை) இருந்த பிள்ளையானது இல்லற நிலைக்(கிருஹஸ்த நிலை)குத் தயாராகிறது. ஒத்த வயதும் (ஆணை விடப் பெண் மூன்று அல்லது நான்கு வயது குறைந்திருத்தல்) கல்வி, உடனலம் மற்றும் ஒத்த உணர்வுகள் பொருந்தியிருக்கும் விதத்தில் சாதகப் பொருத்தமும் பார்த்துத் திருமணம் நிச்சயிக்கப்படும். ஆண் வீட்டார், பெண் வீட்டார் ஆகிய இருபகுதியினரின் திருப்தியுடன் திருமண ஏற்பாடுகள் நடைபெறும்.

12. சுபநாள் பாாத்துத் திருமணப் பதிவு, பொன்னுருக்கல், திருமணம் ஆகியவற்றுக்கான நாள் குறிப்பிடப்படும்.

13. திருமணத்திற்கான படிமுறை ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் போது இரு பகுதியினரும் மனம் விட்டுக் கலந்துரையாடவும், விருந்துண்டு மகிழவும், இணைந்து செயற்படவும் வாய்ப்புகள் ஏற்படும். ஆரம்பத்தில் சம்பந்தம் கலத்தல் இடம்பெறும்.

**14. திருமணப் பதிவும் பொன்னுருக்கலும்**


திருமணப் பதிவுச் சட்டத்தின்படி பதிவாளரால் திருமணஞ் செய்வதற்குரிய நல்ல நாளொன்றில் திருமணப் பதிவு இடம்பெறும். இது பெண் வீட்டில் இடம்பெறுவது மரபு. திருமண நாளுக்குச் சில நாட்கள் முன்னர் திருமணப் பதிவு செய்வது வழமையாயினும், வசதி போல் திருமணத்தன்றும் பதிவு செய்யும் நிலையும் உள்ளது. மணமக்கள் குறித்த திருமணதிற்குச் சம்மதம் தெரிவிப்பதுடன் ஒருவரையொருவர் எக்காலமும் பிரியாது மனமும் உடலும் ஒன்றுபட்டு வாழ்வோம் என்றவாறு சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்வது சம்பிரதாயமாகும்.


**திருமணப் பதிவு**

15. திருமணப் பதிவின் பின் பொன்னுருக்கலுக்காக நிச்சயிக்கப்பட்ட சுபநாளில் மணமகன் வீட்டில் பொன்னுருக்கல் நடைபெறும். அப்போது **கன்னிக்கால் நடுதல்** இடம்பெறும். வடகிழக்குப் பக்கத்தில் முள் முருங்கைத் தடி, கல்யாண முருங்கைத்தடி, கமுகங் கன்று, கரும்பு, தென்னம்பிள்ளை ஆகியவற்றில் ஒன்றை முதலில் மணமகன் இல்லத்திலும் பின்னர் மணமகள் இல்லத்திலும் நடுவார்கள். அதனடியில் பாத்திகட்டி பாலூற்றி நவதானியங்களும் விதைக்கப்படும். அதற்குத் தீபாராதனையும் செய்யப்படும். முருக்கந் தடியே அதிகமாக நடுவதாயிருப்பினும் தற்போது ஏனைய வகையிலானவற்றையும், பயன்படுத்துகின்றனர்.

**16. மணப்பந்தல் அமைத்தல்**

இருவீட்டார் முற்றங்களிலும் பந்தல் அமைத்தல், பந்தலுக்கு வெள்ளை கட்டல், பழ வாழைக் குலை, மாவிலை, தோரணங்கள், பூமாலைகள் ஆகியவற்றால் பந்தல் அலங்காரம் செய்தல், பந்தலில் கிழக்கு முகமாக மணவறை அமைத்தல் ஆகிய ஒழுங்குகள் நடைபெறும். தற்காலத்தில் இந்துத்


**மணப் பந்தல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணங்களில் அதிகமானவை திருமண மண்டபங்களில் அல்லது ஆலய மண்டபங்களில் நடைபெறுவதால் அதற்கேற்ப அலங்காரங்கள் இயற்கையாகவும் செயற்கையாகவும் செய்யப்படுகின்றன.

**17. மங்கல நீராட்டல்**


மணமகன், மணமகள் ஆகியோரை அவரவர் இல்லங்களில் பெரியவர்கள் கூடி நின்று பால், அறுகு முதலானவற்றைத் தலையில் வைத்துச் சுபவேளையில் மங்கல நீராட்டலைச் செய்வர். இரு வீட்டாரிலும் உரிமையுள்ள சிலர் மாறிமாறி அந் நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிப்பர்.

**18. மாப்பிள்ளை அழைப்பு**

மங்கல வாத்தியங்கள் முழங்க மாப்பிள்ளை அழைத்து வரப்பட்டு மணமேடையில் (மணவறையில்) அமர்த்தப்படுவார். அதேபோல் மாப்பிள்ளை வந்ததன் பின் மணப் பெண்ணும் மணவறைக்கு அழைத்து வரப்படுவார். இச் சடங்குகளில் மாப்பிள்ளையின் சகோதரி அல்லது உறவினர் மணமகளின் தோழியாகவும் மணமகளின் சகோதரர் அல்லது உறவினர் மணமகனின் தோழனாகவும் உடனிருப்பர்.

**19. மணமேடை**

கிழக்கு முகமாக அமைக்கப் பட்டிருக்கும் மண மேடையில் வட கிழக்கில் சிவன் அம்பாள் கும்பமும், வடமேற்கில் சந்திர கும்பமும், நவ தானியமும் உடைய மண் சட்டியும், வடக்கில் அம்மிக் கல்லும், நடுவே ஓம குண்டமும் விநாயக பூசை மற்றும் பஞ்ச கௌவியப் பூசைக்கான ஒரு கும்பமும், தென்மேற்கில் நவக்கிரக கும்பமும், கிழக்கில் அரசாணியும் சூழ நான்கு கும்பங்களும், குத்து விளக்கும் அதற்குக் கிழக்கில் மஞ்சள் நீர் நிறைத்த பாத்திர மொன்றும்அமைந்திருக்கும்.



**மணமேடையில் மணமக்கள்**

**20. ஆரம்பக் கிரியையும் அங்குரார்ப்பணமும்**

திருமணத்தை நடத்திவைக்கும் சிவாச்சாரியார் மணமகனுக்குத் திருநீறு கொடுத்து அணியச் செய்தல், மணமகனின் மோதிர விரலில் தர்ப்பை (பவித்திரம்) அணிவித்துச் சங்கர்ப்பம் செய்தல், பின்னர் விநாயகர் பூசை ஆகியவற்றினால் மண்டபத்தினையும் திரவியங்களையும் தூய்மைப்படுத்தல், மணமகனுக்குப் பஞ்ச கௌவியம் பருகக் கொடுத்தல் ஆகிய ஆரம்பக் கிரியைகள் இடம்பெறும். அதன் பின்னர் நவதானியத்தைப் பாலுடன் சேர்த்து மண்ணிறைந்த சட்டியொன்றில் போடப்படும். இது அங்குரார்ப்பணம் ஆகும். குடும்பத்தில் சந்திரனை வழிபட்ட பின் மணமகனின் உறவினரான மூன்று சுமங்கலிப் பெண்களை அழைத்து விபூதி அணிவித்து அவர்களைக் கொண்டு நவதானியம் போடச் செய்வது மரபாகும்.

**21. இரட்சா பந்தனம் (காப்புக் கட்டுதல்)**

ஒரு தட்டத்தில் பச்சை அரிசியைப் பரப்பி, வெற்றிலை, பாக்குடன் வாழைப் பழமும் வைத்து, தேங்காய் மீது மஞ்சள் பூசிய நூலினை வைத்து, அந்நூலினை மணமகனின் வலது கை மணிக்கட்டில் கிரியை நடத்தும் குருவானவர் கட்டுவார். எடுத்த காரியம் எவ்வித இடையூறுமின்றியும், தடைகள் ஏற்படாமலும், இனிது நிறைவேறக் காப்புக் கட்டுதல் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**22. மணமகள் வருகை**

மணமகளின் முகத்தை மெல்லிய துணியால் மறைத்துத் தோழியும் ஏனைய சுமங்கலிப் பெண்களும், பெற்றோர் உறவினர்களும், அழைத்து வந்து மணமேடையில் மணமகனுக்கு வலப்புறத்தில் இருத்துவர். கிரியாகுரு மணமகளுக்கும் காப்புக் கட்டுவார்.

**23. பிதிர் ஆசீர்வாதம்**

கிரியைகளை நடத்தும் ஆச்சாரியாரினால் பிதிர் ஆசீர்வாதம் செய்யப்படும். இல்வாழ்வில் இடரேதுமின்றியும் தவறேதுமின்றியும் நடக்கும் பொருட்டு பிதிர்களைத் திருப்திப் படுத்த சாந்தி சிரார்த்தம் என்னும் இச் சடங்கு நடைபெறும். அப்போது மணமகளின் பெற்றோர் மணமகனுக்கு இடது புறத்திலும், மணமகனின் பெற்றோர் மணமகளுக்கு வலது புறத்திலும் கிழக்கு முகமாக அமர்ந்திருப்பர்.

**24. கன்னிகாதானம்**


கன்னிகாதானம்

மணமக்களின் பெற்றோர் முதலில் ஒருவர்க் கொருவர் சந்தனத் திலகமிட்டுப் பன்னீர் தெளித்து மரியாதை செய்வர். பின் மணமகளின் பெற்றோர் கிழக்கு நோக்கியிருந்து மணமகளும் கிழக்கு நோக்கியிருக்க வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், மஞ்சள், பொன், காசு, எலுமிச்சம்பழம் என்பவற்றுடன் பெண்ணின் இரு கைகளையும் பிடித்து மணமகனின் இருகைகளிலும் கொடுப்பதுடன், இரு பகுதியினரதும் தகப்பன், பேரன், பூட்டன் ஆகியோரின் பெயர்களை மும்முறை ஆச்சாரிய குரு கூற இந்தக் கன்னிப் பெண்ணை இந்த ஆணிடம் ஒப்படைக்கிறேன் என்று கருதி, பெண்ணின் தாயார் கைகளில் மூன்றுமுறை நீர் வார்க்க, பெண்ணின் தந்தையார் தமது மகளை மணமகனிடம் ஒப்படைத்தல் நடைபெறும். இதுவே கன்னிகாதானச் சடங்காகும்.

**25. மங்கல நாண் பூட்டுதல்(தாலி கட்டுதல்)**


தாலி கட்டுதல்

கூறையுடுத்தி வந்த மணமகள், மணமகனுக்கு வலப்புறம் அமர்தல், முகூர்த்தக் குற்றம் நீங்கத் தானம் அளித்தல், மணமகன் எழுந்து பெண்ணின் வலப்புறமாக நின்று மணமகள் கழுத்தில் மங்கல நாணைப் பூட்டுதல், அவ்வேளை மங்கல வாத்தியங்கள் (நாதஸ்வரமும் தவிலும்) முழங்கல், சபையோர் மலர்தூவி ஆசீர்வதித்தல், தாலி கட்டிய பின் மணமகள் மணமகனுக்கு இடப்புறம் அமர்தல் ஆகியன முறைப்படி நடைபெறும்.

**26. மாலை மாற்றுதல்**


மாலை மாற்றுதல்

மணமக்கள் இருவரும் இனிமேல் உடலாலும், உள்ளத்தினாலும் ஒருவரே என்ற தத்துவத்தை உணர்த்தும் சடங்கு மாலை மாற்றுதல் ஆகும். மணமகள் கழுத்தில் அணிந்துள்ள மாலையை முதலில் மணமகனுக்கும், மணமகன் கழுத்தில் அணிந்துள்ள மாலையை மணமகளுக்கும் மூன்று முறை மாறிமாறி அணிவிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**27. பால் பழம் உண்ணல்**

வாழ்க்கை என்றென்றும் இனிமையாக அமைதல் என்பதை உணர்த்தும் சடங்கு இதுவாகும். தயிர், நெய், தேன், சர்க்கரை, வாழைப்பழம் ஆகியன கலந்து முதலில் மணமகள் மணமகனுக்கும், பின்னர் மணமகன் மணமகளுக்கும் மூன்று முறை உண்ணக் கொடுப்பர். பால் பழம் உண்ணும் போது திரைச் சீலையினால் மறைத்துக் கொடுப்பார்கள்.

**28. கோமாதா(பசு) தரிசனம்**

நல்ல சகுனத்திற்காக மணமக்கள் கோமாதாவைத் தரிசனம் செய்வர். பசுவின் உடலில் சகல தேவர்களும் வசிப்பதனாலும் புண்ணிய நதிகள் அமைந்திருப்பதனாலும் திருமணத் தம்பதியர்க்கு அதன் முழுவியளம் நல்லதெனக் கருதப் படுகின்றது. பசுவின் பின்புறத்தில் இலக்குமி வாசம் செய்வதால் கிழக்கு முகமாக நிற்கும் பசுவின் பின்புறத்தை மணமக்கள் தமது இருதய மந்திரத்தால் தரிசிப்பர். முதன்முதலில் மங்கலகரமும் புனிதமும் நிறைந்த தரிசனமாகக் கோமாதா தரிசனம் அமைகிறது.

**29. பாணிக் கிரகணம்**

பாணிக் கிரகணம் என்பது கைப்பிடித்தல்(பாணி - கை; கிரகணம் - பற்றுதல், பிடித்தல்) எனப்படும். அக்கினி சாட்சியாகவும் பெரியோர், சபையோர் சாட்சியாகவும் நாம் இருவரும் கைப்பிடித்திருக்கிறோம்; வாழ்வின் எல்லை வரையிலும் இணைபிரியாது வாழ்வோம் எனும் தத்துவம் இதில் அடங்கியுள்ளது. மணமகனின் கை கீழேநோக்கி இருக்கத் தக்கதாகப் பிடித்தல் வேண்டும்.



கைப்பிடித்தல்

**30. ஏழடி வைத்து நடத்தல்**



ஏழடி வைத்து நடத்தல்

மணமகன் மணமகள் கையைப் பிடித்தவாறு அக்கினிக்குப் பக்கமாக ஏழடி நடப்பார். மணமக்களுடன் தோழன், தோழி ஆகிய இருவரும் கை கோர்த்து அக்கினி அருகில் வருவர். இல் வாழ்க்கையில் இன்றியமையாத பொருட்களான உணவுப் பொருட்கள், உடற்பலம், இறையருள், மனநிறைவு, அறிவு, காலந்தோறும் கிடைக்கும் பொருட்சுகம், காலம்தோறும் செய்யும் கருமங்களுக்கு வேண்டிய துணைகள் ஆகியவற்றைக் கடவுளிடம் மண மக்கள் பெறுவதற்குரிய சடங்காக ஏழடி வைத்தல் அடங்குகிறது.

**31. அம்மி மிதித்தல்**

நான்கு மூலை விட்டமுடைய அம்மி மீது மணப் பெண்ணின் வலது காலைத் தூக்கி வைத்து மணமகன் நடு விரலில் மெட்டி(மிஞ்சி) அணிவிக்கும் சடங்கு இதுவாகும். பெண்ணானவள் தளரா மன உறுதியுடன் கல்லைப்போல் கணவனுக்குரியவளாய் அவன் மீது பற்றுடையவளாய் கற்புடன் விளங்க வேண்டும் என்பதை இச் சடங்கு குறிப்பிடுகிறது. அக்கினியை வலம் வந்து அக்கினியில் நெற்பொரி தூவி, மீண்டும் அம்மியில் மணமகளின் காலைத் தூக்கி வைத்தல் நடைபெறும். மும்முறை அக்கினியை வலம் வந்த பின்னர் குற்றங்கள் நீங்கும் பொருட்டு பிராயச்சித்த ஹோமம் செய்யப்படும்.



அம்மி மிதித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 32. மோதிரம்(கணையாழி) எடுத்தல்



மோதிரம் எடுத்தல்

அரசாணிக்குக் (முருங்கை) கிழக்கேயுள்ள மஞ்சள் நீர் நிரம்பிய ஒரு பாத்திரத்தில் ஒரு மோதிரத்தினை இட்டு இருவரும் அதனைத் தேடி ஒருவர் எடுக்குமாறு இச் சடங்கு அமைந்திருக்கும். அக்கினியை வலம் வரும் மூன்று முறையும் மோதிரம் எடுத்தல் நிகழும். புரிந்துணர்வு, விட்டுக் கொடுத்தல் முதலிய நற்குணங்களை மணமக்களிடையே வலியுறுத்தும் வண்ணம் இது நடைபெறுகிறது.

### 33. அருந்ததி காட்டுதல்



அருந்ததி காட்டுதல்

வசிட்ட முனிவன் மனைவி அருந்ததி வானில் நட்சத்திரமாக விளங்குபவள். அவளது கற்பு நெறியில் திருமணமான பெண்கள் வாழ வேண்டும் என்பதை இச் சடங்கு உணர்த்துகிறது. இரவு வேளையில் மட்டும் அருந்ததி நட்சத்திரம் தெரியுமாகையால், பகலில் நிகழும் திருமணத்தின் போது அதற்கென வைக்கப்பட்ட கும்பத்தில் பூப்போட்டு வணங்குதல் நடைபெறும்.

### 34. பூர்ணாகுதி (சடங்கு நிறைவு)

கிரியாகுரு ஓம குண்டலத்தில் நெய்யைச் சொரியும் போது மணமக்கள் வாழைப்பழம் தேங்காய், நெற்பொரி, சமித்து( தாவரப்பட்டை) முதலியவற்றை இடுவர் பின்னர் தீபாராதனை செய்வதுடன் ஓமாக்கினிச் சாம்பலை நெய்யிலே குழைத்து மணமக்களின் நெற்றியில் திலகமாயிடுவர்.

### 35. ஆசீர்வாதம்



ஆசீர்வதித்தல்

கிழக்கு முகமாக மணமக்கள் எழுந்து நிற்க ஆச்சாரிய குரு ஆசீர்வாத மந்திரம் கூறி மணமக்களை வாழ்த்துவார். இரு கைகளாலும் அறுகரிசியை எடுத்து மூன:று முறை உச்சியில் போட்டு வாழ்த்த வேண்டும். முனையுடையாத பச்சை அரிசியும் மஞ்சள் தூளும் அறுகும் சேர்த்த கலவையே அட்சதையாகும். அட்சதை போட்டு வாழ்த்தலையே அறுகரிசி போடல் என்பர். மணமக்களை “ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி வாழ்க” என வாழ்த்த வேண்டும்.

### 36. பூதாக்கலம்



பூதாக்கலம் உண்ணல்


தலைவாழை இலை போட்டு, அதில் சாதமிட்டு, மணமகள் முதலில் மணமகனுக்கு ஊட்டிய பின், மணமகனும் மணமகளுக்கு ஊட்டுதலாகிய இச் சடங்கு, அன்பினையும் அன்னியோன்னியத்தையும் உணர்த்துவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**37. மணமக்களை மணமகன் வீட்டில் வரவேற்றல்**

திருமணம் நிறைவு பெற்ற பின் மணமக்கள் தத்தம் குல தெய்வங்களை வழிபாடு செய்த பின்னர் மணமகன் வீடு செல்வர். அங்கு சுமங்கலிப் பெண்கள் வீட்டு வாசலில் ஆரத்தி எடுப்பர். பெரியோர்கள் ஆசீர்வதிப்பர், இல்லறம் நல்லறமாகத் தொடங்கும்.



மணமக்களை வரவேற்றல்

## குறிப்புகள்

**திருமணச் சடங்குகள்**

1. திருமண நிச்சயம்
2. திருமணப்பதிவு
3. பொன்னுருக்கல்
4. மணப்பந்தல் அமைத்தல்
5. மணமக்கள் அழைத்துவரப்படுதல்
6. மணமேடை ஒழுங்கு
7. ஆரம்பக் கிரியையும் அங்குரார்ப்பணமும்
8. இரட்சாபந்தனம்
9. மணமகள் வருகை
10. பிதிர் ஆசீர்வாதம்
11. கன்னிகாதானம்
12. மங்கல நாண் பூணல்(தாலி கட்டுதல்)
13. மாலை மாற்றுதல்
14. பால் பழம் புசித்தல்
15. பசு தரிசனம் செய்தல்
16. பாணிக் கிரகணம்(கைப்பிடித்தல்)
17. ஏழடி வைத்து நடத்தல்
18. அம்மி மிதித்தல்
19. கணையாழி எடுத்தல்
20. அருந்ததி காட்டல்
21. பூர்ணாகுதி
22. ஆசீர்வாதம்
23. பூதாக்கலம்
24. மணமக்களை மணமகன் வீட்டில் வரவேற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. வேதமும் ஆகமமும்

1. **வேதம்** என்னும் சொல்லானது **வித்** என்பதன் அடியாகப் பிறந்தது. அறிவு என்பது அதன் பொருளாகும்.
2. வேதங்கள் இருக்கு(பாட்டு), யசுர்(சடங்கு), சாமம்(இசை), அதர்வணம் என நான்கு வகைப்படும்.
3. வேதங்களை நான்காக வகுத்தவர் வேதவியாசர்.
4. நால்வேதம், சதுர்வேதம், நான்மறை என்பவை ஒரே பொருளுடையவை.
5. மொழிநடை, சிந்தனை வளர்ச்சி, புவியியற் குறிப்புகள் முதலிய அகச் சான்றுகளை நோக்கும் போது வேதங்கள் நீண்ட காலப் பகுதியிலே வளர்ச்சி கண்டுள்ளன.
6. மிகவும் பழமையானது இருக்கு வேதமாகும். இது கி.மு 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டது.
7. அதர்வசு, ஆங்கிரசு போன்ற முனிவர்களால் ஆக்கப்பட்ட அதர்வ வேதம் காலத்தாற் பிந்தியது.
8. வேதத்திற்குச் **சுருதி**(காதால் கேட்கத்தக்கது), **எழுதாக் கிளவி, எழுதாமறை** முதலிய பெயர்களும் உண்டு.
9. முனிவர்களின்(இருடிகள்) குடும்பத்தவரால் தலைமுறை தலைமுறையாகச் செவிவழி மரபில் கேட்கப்பட்டு வந்ததால் வேதங்கள் **சுருதி** என அழைக்கப்பட்டன.
10. வேதங்கள் தெய்வத்தன்மை வாய்ந்த நூல்களாக இந்து மதத்தவர் அனைவராலும் போற்றப் படுகின்றன.
11. **வசிட்டர், வாமதேவர், விசுவாமித்திரர், அத்திரி, பரத்துவாசர்** முதலிய முனிவர்களுக்கு இறைவனால் வெளிப்படுத்தப்பட்டவை வேதங்கள் ஆகும்.
12. வேதங்கள் நான்கிலும் பிரதான நான்கு பகுதிகள் காணப்படுகின்றன. அவையாவன
    - **(அ)** சங்கிதைகள் (மந்திரங்கள்)
    - **(ஆ)** பிராமணங்கள்
    - **(இ)** ஆரணியகங்கள்
    - **(ஈ)** உபநிடதங்கள்
13. **சங்கிதைகள்(மந்திரங்கள்)**

வேதகாலத் தெய்வங்களைத் துதிக்கும் துதிப் பாடல்களையுடையன. இம்மை, மறுமை நல் வாழ்வுக்கான வேண்டுதல்களைக் கொண்டவை

**பிராமணங்கள்**

வேள்விகள்(யாகங்கள்) செய்வதற்குரிய சடங்குகள் பற்றியும், விதிமுறைகள் பற்றியும் கூறுவன. யாகங்களே தெய்வங்களைத் திருப்தி செய்யும் சிறந்த வழி எனக் கூறுவன.

**ஆரணியங்கள்(வனநூல்கள்)**

சமயச் சடங்குகள் பற்றிய தத்துவங்களைத் தொடர் உருவகக் கதைகளாகக் கூறுவன. பிராமணங்களின் பிற்சேர்க்கையாகவும் சில வேளைகளில் இடம்பெற்றுள்ளன. வனத்திலே தனிமையில் இருந்து கற்க வேண்டியவை யாதலால் ஆரணியங்கள் எனப் பெயர் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உபநிடதங்கள்**

இவை வேதாந்தம்(வேதத்தின் இறுதிப் பகுதியாய் அமைதலால்), வேத சிரசு(வேதத்தின் உயர்வான தத்துவப் பொருளை உணர்த்தலால்) எனவும் அழைக்கப்படுவன. மெய்யியல் தத்துவ ஆராய்ச்சிகளைக் கொண்டவை. சமய சிந்தனையின் முக்கியமான தனிப்பகுதியாய் அமைந்தாலும் பிற்காலத்தில் வேதத்தின் பகுதிகளாக்கப்பட்டன.

14. வேதங்கள் **கர்ம காண்டம், ஞான காண்டம்** என இரு பெரும் பிரிவினை உடையன.

15. கர்ம காண்டப் பகுதியுள் சங்கிதைகளும் பிராமணங்களும் அடங்கும். இருப்பினும் ஆரணியங்களை உபாசனக் காண்டமெனத் தனித்துக் கூறப்படுதலும் உண்டு. எனவே **கர்மகாண்டம்**(சமய ஆசாரங்கள் பற்றிய பகுதி), **உபாசனைக் காண்டம்**(தியானத்துக்குரிய பகுதி), **ஞான காண்டம்**(அறிவுக்கான தத்துவப் பகுதி) என மூன்று காண்டங்களாகவும் நோக்க முடியும்.

16. சங்கிதைகள்(பிரம்மச்சரிய நிலை - மாணவ நிலை), பிராமணங்கள்(கிருஹஸ்த நிலை - இல்லற நிலை), ஆரணியங்கள்(வானப்பிரஸ்த நிலை - துறவுக்கான ஆயத்த நிலை), உபநிடதங்கள்(சந்நியாச நிலை - துறவு நிலை) என வாழ்க்கையின் நான்கு படி நிலைகளுக்கும் உரியவைகளாகக் கொள்ளப் படுகின்றன.

17. வேதங்களில் முதலில் சங்கிதைகளும் பின்னர் காலத்துக்குக் காலம் ஏனைய மூன்று பகுதிகளும் சேர்க்கப்பட்டு முழுமை பெற்றன.

18. சங்கிதைகள் (மந்திரங்கள்) மட்டும் செய்யுள்களாகும். பிராமணங்கள் செய்யுள், உரைநடை இரண்டிலுமுள்ளன. ஏனைய இரண்டும் உரைநடையிலும் செய்யுளிலும் அமைந்தவையாகும்.

## 19. இருக்கு வேதம்

**அ)** வேத நூல்களில் மிகவும் பழைமையானது.

**ஆ)** 1028 பாசுரங்களைக் கொண்டது.

**இ)** 10 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**ஈ)** இயற்கைச் சக்திகளைத் தெய்வங்களாக உருவகித்து அவற்றை அழைப்பதான மந்திரப் பாடல்களைக் கொண்டன.

**உ)** 2 - 7 வரையுள்ள மண்டலங்கள் மிகவும் பழைமையானவை.

**ஊ)** ஒவ்வொரு மண்டலமும் ஒவ்வோர் இருடியின் (ரிஷி) பெயரில் அமைந்து அவரவர்க்கு வெளிப் படுத்தப்பட்டவை.



**இருக்கு வேதம்**

**எ)** இந்திரனுக்குரிய பாசுரங்களே அதிகம்(250), அக்கினி(200), சோமன்(120) என முதன்மை பெற்றுள்ளனர். வருணன் 12 பாசுரங்களிலும், உருத்திரன் 03 பாசுரங்களிலும் போற்றப் படுகின்றனர். உருத்திரன், விஷ்ணு போன்றோர் சிறு தெய்வங்களாயுள்ளனர்.

**ஏ)** தெய்வங்களாகக் கருதப்பட்டோர் யாவரும் மனித வடிவுடையவர்களாகவும், வல்லமை படைத்தோராகவும், தீய சக்திகளை எதிர்த்துப் போரிடுவோராகவும், பாசுரங்களில் கூறப்படுகின்றனர்.

**ஐ)** அக்கினி விண்ணுக்கும் மண்ணுக்கும் தூதுவனாகவும், இந்திரனும் உருத்திரனும் போர்த்தெய்வங்களாகவும். வருணன் ஒழுக்கம், நியதி ஆகியவற்றுக்குப்பொறுப்பான தெய்வமாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒ)** இருக்கு வேதகாலத் தெய்வங்களாக 33 தெய்வங்களும், இவை விண்ணுக்கும், மண்ணுக்கும், இடைநிலைக்கும் உரியோராகவும் போற்றப்பட்டுள்ளனர்.

**ஓ)** சரஸ்வதி, உஷை, வனதேவதை முதலான பெண் தெய்வங்களும் இருக்கு வேதத்திற்குரியவர்கள்.

**ஔ)** வேதங்கள் ஆரியரின் நூல்களாகும். இவர்களிடம் பல தெய்வ வழிபாடு காணப்பட்ட போதிலும், அவையனைத்தும் ஒன்றேயென்னும் ஒரு தெய்வக் கோட்பாடும் காணப்பட்டது. பிற்காலத்தில் இது ஒரு பொருட் கோட்பாடாக வளர்ச்சி கண்டது.

20. **அ)** இருக்கு வேதப் பாசுரமொன்று பின்வருமாறு கூறுகின்றது.**"உள்பொருள் (சத்துப்பொருள்) ஒன்றே; அதனை அக்கினி என்றும், யமன்என்றும், மாரீசன் என்றும் ஞானிகள் பலவாறு கூறுவர்"**

**ஆ)** இருக்கு வேதத்தில் வரும் மந்திரம் ஒன்று **சாவித்திரி மந்திரம்** என்றும், **காயத்திரி மந்திரம்** என்றும் அழைக்கப்படுகின்றது. பழைய ஞாயிற்றுக் கடவுளான சவித்திருவைப் போற்றிப் பாடியதால் **சவித்திரு** என்பது **சாவித்திரி** மந்திரமாக மாறியது. மேலும் **காயத்திரி** யாப்பில் பாடப்பட்டதால் **காயத்திரி மந்திரமும்** ஆகியது. இன்று வரை 3000 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவிலும் இந்துக்கள் வாழும் பிற நாடுகளிலும் சூரிய வணக்கமாக இக் காயத்திரி மந்திரம் பக்தியோடு ஓதப்பட்டு வருகின்றது.

**ஓம் பூர் புவஸ்வக**
**தத்ஸவிதுர் வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி**
**தியோ யோ நப் பிரசோதயாத்**

(வடமொழி வடிவம்)

**செங்கதிர்த் தேவன் சேண்வீளங் கவிரொளி**
**சிந்தையில் வைக்குதும் அன்னான்**
**உந்தியெம் உள்ளத்தை ஊக்குதற் பொருட்டே**

(தமிழ் வடிவம்)



**காயத்திரி மந்திரம்**

சவிதா என்னும் தேவன் சூரியனிலும் வேறானவன். சூரியக் கதிர்களின் துணை கொண்டு ஒளி பரப்புபவன். சூரியனை இயங்கச் செய்பவனும் இவனே; சவித்திரு(இதன் எழுவாய் வடிவம் சவிதா) என்னும் வடசொல் **இயக்குபவன்** எனத் தமிழில் பொருள் தருவதாகும்.எங்கும் நிறைந்த ஒளிமயமான உட்பொருள் பற்றிய உண்மையினை இம்மந்திரம் உணர்த்தி வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றது. இம் மந்திரம் சைவ முறைப்படியே ஓதப் படுகின்றது.

## 21. யசுர் வேதம்

**அ)** செய்யுள் உரைநடை இரண்டிலும் அமைந்தவை.

**ஆ)** வேள்வி மந்திரங்களைக் கொண்டவை.

**இ)** வேள்விச் சடங்குகளைச் செய்யும் அதர்வாயு என்னும் புரோகிதனால் ஓதற்கு உரியவை.

**ஈ)** பல்வேறு சங்கிதைகளாகப் பயின்று வரப்பட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) **கிருஷ்ண யசுர்**(கறுப்பு நிற வேதம்), **சுக்கில யசுர்** (வெள்ளை நிற வேதம்) என இரு பிரிவுகளை உடையது.

ஊ) வேள்வி மந்திரங்கள், கிரியை விதிமுறைகள் ஆகியவற்றைக் கிருஷ்ணயசுர் கூறுகிறது. அம் மந்திரங்களுடனான கிரியை முறைகள் பற்றிய விரிவான விளக்கத்தினைப் **பிராமணம்** என்னும் பிற்சேர்க்கையாகச் சுக்கில யசுர் கூறுகிறது.



**யசுர் வேதம்**

எ) இருக்கு வேத வாழ்வியல் முறையினின்றும் யசுர் வேத வாழ்வியல் முறை வேறு பட்டதாகவும், இருக்கு வேத கால இயற்கை வழிபாடு பின்னடைந்து விடச் சிக்கலான கிரியை வழிபாட்டு முறை முதன்மை பெற்றதாகவும் காணப்படுகிறது. இதனால் கிரியைகள் நடத்தும் புரோகிதரின் செல்வாக்கு மிகுந்தும் விளங்குகின்றது.

ஏ) யசுர் வேதத்தில் ஆதிக்குடிகள் பின்பற்றிய சமய வழிபாட்டு முறைகளும் காணப்படுகின்றன.

ஐ) தெய்வங்களைப் பல பெயரிட்டு அழைக்கும் புதிய வழிபாட்டுமுறை யசுர் வேதத்தில் உள்ளது. சுக்கில யசுர் வேதத்தின் பதினாறாம் அத்தியாயத்தில் வரும் உருத்தி ரனுக்கான நூறு பெயர்களைக் கூறி வழிபடும் **சதருத்திரயம்** அல்லது **ஸ்ரீருத்திரம்** குறிப்பிடத்தக்கதாகும்.

ஒ) சதருத்திரயத்தில் உருத்திரன் கோபங் கொள்ளாதிருக்குமாறும், தீங்கு செய்து உயிர்களை அழிக்காதிருக்குமாறும், உருக்கமாக வேண்டப்படுகின்றான். இருக்கு வேதத்தில் முதன்மையற்றுச் சிறு தெய்வமாக விளங்கிய உருத்திரன் யசுர் வேதத்தில் முதன்மை பெற்றுள்ளான். சங்கரன், சம்பு, சிவன், சிவாதரன், நீலக்ரீவன், பசுபதி எனப் பல நாமங்களால் துதிக்கப் படுகின்றான்.

ஓ) **சிவன்** என்பது **மங்கலமானவன்** எனப் பொருள் தரும். வைத்தியர்களுக்குள் தலை சிறந்தவனாகவும், பயங்கரமான இயல்புகளை உடையவனுமாக வருணிக்கப்படும் சிவனுக்கு மங்கல வழக்காகவே **சிவன்** எனும் பெயர் வழங்கலாயிற்று.

ஔ) சிந்துவெளி நாகரிகம் உலகுக்கு வெளிச்சமாக்கப்பட்ட பின்னர் திராவிட மக்கள் தமது முதன்மைத் தெய்வத்திற்குச் **சிவன்** எனப் பெயர் கூறி வழிபட்டதால், ஆரியர்கள் உருத்திரனுக்கு அப்பெயரையும் ஆக்கிக் கொண்டனர் என ஆய்வாளர்கள் கூறுவர். சிவ பெருமானின் கட்டளைப்படி அழித்தல் தொழிலைச் செய்யும் மூர்த்தியே உருத்திரன் என்று சைவ சமயத்தவர் கூறுவர். உருத்திரனும் சிவனும் ஒருவரே எனக் கருதுவதும் சைவ மரபு.

க) யசுர் வேதத்தின் சதருத்திரயம்(ஸ்ரீருத்திரம்) சைவர்களுக்கு முக்கியமானது. தென்னாட்டு ஆலயங்களில் இறைவனுக்கு 108 பெயர் (அஷ்டோத்திர நாமம்), 1008 பெயர்(சகஸ்ர நாமம்) சொல்லியும் அருச்சனை செய்யும் வழக்கிற்கு அடியெடுத்துத் தந்தது யசுர் வேதமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 22. சாம வேதம்



சாமவேதம்

இருக்கு வேதத்திலிருந்து இசையுடன் பாடக்கூடியதாகத் தெரிந்தெடுக்கப்பட்ட பெரும்பாலான பாசுரங்களுடன் புதியவையான சிலவற்றையும் உள்ளடக்கியதே சாம வேதமாகும். சாமம் என்பதை இசை எனப் பொருள் கொள்ளலாம். தெய்வ வழிபாட்டில் இசையின் முக்கியத்துவத்தை இவை உணர்த்துகின்றன. இராவணன் **சாம வேதப்பிரியன்** எனப் போற்றப் பட்டுள்ளான். நாயன்மார்களும் இறைவனைப் பண்ணிறைந்த பாடல்களால் வழிபட்டனர். இவற்றுக்குச் சாமவேதம் முன்னோடி எனலாம்.

## 23. அதர்வ வேதம்



அதர்வ வேதம்

**அ)** ஆரம்ப காலத்தில் அதர்வ வேதம் வேதங்களுடன் சேர்க்கப்படவில்லை. ஏனைய மூன்று வேதங்களையுமே **பிரதானமான மூன்று** எனும் பொருளில் **திரயீவித்யா** எனப்பட்டது. பிற்காலத்திலேயே அதர்வ வேதம் சேர்க்கப்பட வேதங்கள் நான்காயின.

**ஆ)** இது செய்யுள் நடையில் அமைந்த வசிய மந்திரங்களையும் செபங்களையும் பெரும்பான்மையாகக் கொண்டுள்ளது. தாழ்நிலைத் தெய்வ வழிபாடுகளான மாந்திரீகம், பில்லி, சூனியம், மந்திரம், மாயம், மருந்து ஆகியவற்றைக் கொண்டது. இவற்றுக்கான பாடல்களில் மந்திரம், கட்டளை, துதி ஆகியன உள்ளடங்கியுள்ளன.

**இ)** ஆரியர், ஆரியரல்லாதோர், ஆதிகால மக்கள் ஆகியோரிடம் காணப்பட்ட சமய ஆசார முறைகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் போன்றன பற்றிஅதர்வ வேதம் கூறுவதால் மானுடவியல் ஆராய்ச்சியாளருக்கு இது முக்கியமான தகவல்களை வழங்கக் கூடியது.

**ஈ)** இந்தியாவில் விஞ்ஞான வரலாற்றை ஆய்வு செய்வதற்கும், இவ் வேதத்தின் செய்திகள் உதவக் கூடியவை. அதர்வ வேதத்தின் பெரும் பகுதியாக **ஆயுர்வேதம்** அமைந்துள்ளது. இது பச்சிலைகள், மூலிகைகள் மூலம் பல்வேறு நோய்களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கூறுகின்றது. பிற்கால மருத்துவ முறைகளின் முன்னோடியாக விளங்குகிறது.

**உ)** இருக்கு வேத சிந்தனைகளுக்கும், உபநிடத சிந்தனைகளுக்கும் இடைப்பட்ட நிலையான சமயப் போக்கை அதர்வ வேதம் காட்டுகிறது. ஆரியரதும், ஆரியரில்லாதவர்களதும் கலப்புற்ற கொள்கையையே இவ்வேதம் வெளிப் படுத்தி உள்ளது.

**ஊ)** இருக்கு வேத உருத்திரனைச் சிவனுடன் ஐக்கியப்படுத்தும் முயற்சியின் வளர்ச்சியை அதர்வ வேதத்தில் காணலாம். இது, பின்னர் முழுமையான நிலையைச் சுவேதாஸ்வர உபநிடதத்தில் பெற்றது.

**எ)** சைவ மெய்யியலுக்குச் சிறந்த உதாரணமாக **சுவேதாஸ்வர உபநிடதம்** விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. ஆகமம்

**அ)** வேதங்களும் ஆகமங்களும் இறைவனால் உணர்த்தப்பட்டவை

**ஆ)** வேதம் பொது நூல் என்றும் ஆகமம் சிறப்பு நூல் என்றும் கூறுவர். வேதங்களில் பொதுவான முறையில் சமயக் கொள்கைகள் கூறப்பட, ஆகமங்களில் தத்தம் சமயக் கோட்பாடுகளுக்கு ஏற்ப வழிபாடுகள், சடங்குகள், பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

**இ)** **ஆகமம்** என்பது **தொன்று தொட்டு வரும் அறிவு** எனப்படும். இருப்பினும் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் உண்மையைக் கூறுவது எனவும் கருதப்படும். மேலும் இறைவனை அடைவதற்கான ஞான நூல் எனவும் பொருள் கொள்ளப்படும்.

**ஈ)** சைவம், வைணவம், சாக்தம், ஆகியன தனித்தனியே ஆகமங்களைக் கொண்டுள்ளன. சைவாகமங்கள் காமிகம் முதல் வாதுளம் வரை இருபத்தெட்டாகும். இவை சிவ பெருமானால் ஓர் ஊழிக்காலத்தில் அருளப்பட்டமையால் **சிவாகமங்கள்** எனப்படும்.

**உ)** சைவமரபில் சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொல்லியருளினார் என்றும், பின்னர் அவை சதாசிவ மூர்த்தியின் ஐந்து திருமுகங்களிலுமிருந்தும் தோன்றிச் சுத்த வித்தியா தத்துவத்திலிருந்து சதாசிவனால், அநந்தருக்கும், அவரால் ஸ்ரீகண்டருக்கும், அவரால் தேவர்களுக்கும், அவர்களால் முனிவர் களுக்கும், முனிவர்களால் மானிடர்களுக்கும், மானுடரால் மானுடருக்கும் உபதேசிக்கப்பட்டதெனக் கூறப்படுகின்றது.



சிவலிங்கம்

**ஊ)** சிவாகமங்கள் தொன்மை தொடங்கி வழங்கிவரும் சிவ வழிபாட்டு முறைகளை விளக்கிக் கூறுவதாலும், சைவ சித்தாந்தக் கொள்கையை விளக்குவதாலும் சைவ சமயத்தின் பிரமாண நூல்களாகவும், சிறப்பு நூல்களாகவும் பேணப்படுகின்றன.

**உ)** சிவாகமங்கள் ஒவ்வொன்றும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களை(மார்க்கங்களை) உடையன. ஆன்மாக்களின் இறுதி இலட்சியமான வீடுபேற்றினை அடையச் செய்வதே இவற்றின் நோக்கமாகும்.

**ஏ) சிவாகமங்கள் கூறும் பிரதான விடயங்கள்:**

(i) கோயிற் கிரியைகளின் வகைகள்.
(ii) கோயிற் கிரியைகள் செய்யும் முறைகள்.
(iii) வழிபடுவோர் இயல்புகள்.
(iv) சைவ சாதனங்கள்.
(v) கடவுள் வழிபாட்டினால் ஆன்மாக்கள் அடையும் பேறுகள்.

**ஐ) சிவாகமங்கள் கூறும் ஆலய வழிபாட்டுடன் தொடர்புடைய விடயங்கள்:**

(i) ஆலயம் அமைவதற்கான இடம்
(ii) ஆலய அமைப்பு முறை
(iii) படிம இலக்கணம் (தெய்வ வடிவ மூர்த்தங்கள்)
(iv) படிமங்களை வார்க்கும் முறை
(v) வாகனங்கள் அமைக்கும் முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(vi) தேர் அமைக்கும் முறை
(vii) அர்ச்சகர், சிற்பாசிரியர் ஒழுக்கம்
(Viii) அடியார்கள் இயல்பு

ஒ) சிவாகமக் கருத்துக்களை திருமூலரின் **திருமந்திரம்** நூலானது ஒன்பது தந்திரங்களில் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளது.


ஓ) சிவாகமங்கள் **சைவ** சித்தாந்த தத்துவ வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளன.

## குறிப்புகள்

**1**




**2**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09. திருமுறைகள்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டாகும். சிவபெருமானின் புகழையும் அருட் செயல்களையும் கூறுகின்ற தெய்வீகப் பாடல்கள் இவற்றுள் அடங்கியுள்ளன. இவை கேட்போரையும், பாடுவோரையும் இறையுணர்வில் ஈடுபடச் செய்வன. எம்மிடம் மன நிம்மதி, இறைபக்தி, ஆன்மீக உணர்வு ஆகியன மேலோங்கத் துணை செய்வன. உள்ளங் கசிந்துருகித் திருமுறைகளைப் பாடி இறைவனைத் துதிப்போர்க்கு இம்மை, மறுமை நலன்களுடன் வீடுபேற்றினையும் அளிக்கக் கூடியவை. திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி. தொகுப்பித்தவர் அநபாய சோழ மன்னன். இதன் முதல் மூன்று திருமுறைகளும் திருஞான சம்பந்தர் தேவாரங்களையும் அடுத்த மூன்றும் அப்பர் தேவாரங்களையும், ஏழாந் திருமுறை சுந்தரர் தேவாரங்களையும், கொண்டவை. மாணிக்கவாசகரின் திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையில் அடங்குவன. ஒன்பதாந் திருமுறையில் திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் இடம்பெற்றுள்ளன. இதனை ஒன்பது பேர் பாடியுள்ளனர். பத்தாந் திருமுறை திருமூலரின் திருமந்திரமாகும். பதினோராந் திருமுறையில் பன்னிருவர் பாடிய 40 பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. பன்னிரண்டாந் திருமுறையாகச் சேக்கிழாரின் பெரியபுராணம் திகழ்கிறது.

## I. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரங்கள்.

**பதிக வரலாறு**



**திருமருகல் தலம்**

திருஞான சம்பந்தப் பெருமான் திருமருகல் என்னும் திருத் தலத்திற்குச் சென்ற போது அங்கு பாம்பினாற் கடியுண்ட வணிகனொருவன். இறந்த செய்தியை அறிந்து "சடையா யெனுமால்" என்னும் திருப்பதிகத்தைப் பாடி இறையருளால் அவனை உயிர் பெறச் செய்தார். அவனுக்கென நிச்சயிக்கப்பட்ட பெண்ணை அவன் மணம் முடிக்கவுஞ் செய்தார். அப்போது சிறுத்தொண்ட நாயனார் அவரிடம் வந்து தமது ஊருக்கு வருமாறு வேண்டிக் கொண்டார். ஆளுடைய பிள்ளையாரும் ஏனைய சிவத் தலங்களையும் வழிபட வேண்டுமென்ற நோக்கத்துடன் திருமருகல் இறைவன் வீற்றிருக்கும் கோயிலினுட் சென்றார். அப்போது திருமருகல் இறைவன். திருச் செங்காட்டங்குடி கணபதியீச்சரத்திலுள்ள தனது திருக் கோலத்தினைக் காட்டியருளினார். அப்போது பாடிய திருப்பதிகம் இதுவாகும். சிறுத் தொண்டரின் ஊரான திருச்செங்காட்டங் குடிக்கு ஏகாதவாறு இறைவன் குறிப்பினால் அங்கேயுள்ள திருக்கோலத்தைக் காட்டியதை உணர்ந்து, சிறுத் தொண்டரை விடைகொடுத்து அனுப்பி விட்டார். இத் தேவாரத்தில் திருமருகற் பெருமானை நோக்கி, நீவீர்! கணபதியீச்சரத்தை விரும்பியது ஏன் என்றவாறு சம்பந்தர் கேட்பதாகக் காணப்படுகிறது.

**(அ) தலம் :- திருமருகலும் திருச் செங்காட்டங்குடியும்** **பண் :- நட்டபாடை**

**திருச்சிற்றம்பலம்**

**அங்கமும் வேதமும் ஓதும் நாவர் அந்தணர் நாளு மடிபரவ**
**மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல்நிலாவிய மைந்த சொல்லாய்**
**செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்**
**கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதியீச்சரங் காமுறவே!**

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சொற்பொருள்

வேதமும் அங்கமும் - நால் வேதங்களையும் அவற்றின் அங்கங்களாகிய சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி ஆகியவற்றையும்; ஓது நாவர் - நாவினால் ஓதுகின்றவர்களாகிய; அந்தணர் நாளும் அடி பரவ - பிராமணர்கள் உனது திருவடிகளை நாள்தோறும் துதிக்கின்ற; மங்குல் மதிதவழ் மாடவீதி - சந்திரன் உலாவுகின்ற வானளவு உயர்ந்த வீதிகளையுடைய; மருகல் நிலாவிய மைந்த சொல்லாய் - திருமருகல் என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கின்ற வல்லமையுடைய பெருமானே கூறுவாயாக; செங்கயலார் புனல் - சிவந்த கண்களையுடைய கயல் மீன்கள் புரளுகின்ற நீர் வளத்தையும்; செல்வம் மல்கும் - செல்வச் செழிப்பையும் உடைய; சீர் கொள் செங்காட்டங்குடி அதனுள் - சிறப்பு வாய்ந்த திருச்செங்காட்டங்குடி என்னும் ஊரிலுள்ள; கங்குல் விளங்கு எரி ஏந்தி ஆடும் - தமது திருக் கைகளில் அனலை ஏந்திக் கொண்டு நடனம் ஆடுகின்ற ஈஸ்வரன் வீற்றிருக்கின்ற; கணபதியீச்சரம் காமுறவே - கணபதியீச்சரம் என்னும் திருத்தலத்தின் மீது விருப்பம் கொள்வது ஏனோ?


### பொழிப்புரை

நால்வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் நாவினால் ஓதுகின்ற அந்தணர்கள் நாள்தோறும் உன் திருவடிகளைத் துதிக்கின்ற, சந்திரன் உலாவுகின்ற வானளாவி உயர்ந்த மாடவீதிகளையுடைய திருமருகல் என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கின்ற வல்லமையுடைய பெருமானே! கூறுவாயாக; சிவந்த கண்களையுடைய கயல் மீன்கள் புரளும் நீர்வளமும், செல்வச் செழிப்பும் உடைய சிறப்பு வாய்ந்த திருச் செங்காட்டங்குடியாகிய ஊரில் தமது திருக்கைகளில் அனலையேந்தி நடனம் ஆடுகின்ற ஈஸ்வரன் அமர்ந்துள்ள கணபதியீச்சம் என்னும் திருத்தலத்தின் மீது (இங்கிருந்த படியே) விருப்பம் கொள்வது எதற்காக?

### அருஞ்சொற்பொருள்

அங்கம் - வேதாங்கங்கள் ஆறும்; வேதம் - நால்வேதங்கள்; பரவ - துதிக்க; மங்குல் - மேகம்; மதி - சந்திரன்; மருகல் - திருமருகல் என்னும் திருத்தலம்; மைந்த - வல்லமையுடைய பெருமானே; செங்கயல் - சிவந்த கண்களையுடைய கயல் மீன்கள்; ஆர் - அழகிய; மல்கும் - பெருகும்; சீர் -சிறப்பு; கங்குல் - இரவு; எரி - நெருப்பு; காமுறவே - விரும்பவே.

### பதிக வரலாறு



சீர்காழித் தலம்

தென் தமிழ் நாடாகிய பாண்டிய நாட்டில் சைவ சமயத்திற்கு ஏற்பட்ட தாழ் நிலையறிந்து பாண்டிமாதேவி மங்கையற்கரசியாரின் வேண்டுதலின்படி மதுரைக்குச் சென்ற திருஞான சம்பந்தப் பெருமான், அங்கு சமணர்களின் சூழ்ச்சியினை இறையருளால் வென்று, அனல்வாதம், புனல்வாதம், ஆகியவற்றில் சமணர்களைத் தோற்கடித்து, சமண சமயத்திற்கு மாறியிருந்த கூன் பாண்டியனான நின்ற சீர் நெடுமாறனைத் திரும்பவும் சைவனாக மாறும்படி அவனது வெப்பு நோயைத் திருநீற்றின் மகிமையால் மாற்றி, மதுரையம்பதியில் மீண்டும் சைவம் தழைக்கவிட்டுத் தமது பிறந்த இடமான திருப்புகலியை (சீர்காழி) அடைந்தார். அங்குள்ள திருத் தோணீஸ்வரரைத் தொழுது, எல்லையில்லா ஆனந்தம் பெருகிடப் பணிந்தேத்திப் பாடியதே இத் திருப்பதிகமாகும். கழுமலம், பிரமபுரம், தோணிபுரம், திருப்புகலி ஆகியன சீர்காழியின் மறுபெயர்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச் சிற்றம்பலம்

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பது முன்பணியே அமரர்கள் செய்வது முன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே பிரம புரத்தை யுகந்தனையே!

திருச்சிற்றம்பலம்

### சொற்பொருள்

(இறைவனே!) உற்று உமை சேர்வது மெய்யினையே - உமையம்மையார் பிரியாது பொருந்தியிருப்பது உமது திருமேனியையே ஆகும்; உணர்வது நின் அருள் மெய்யினையே - சிவ ஞானிகள் உணர்ந்து கொள்வது உன் பேரருளாகிய உண்மைப் பொருளையேயாகும்; கற்றவர் காய்வது காமனையே -ஞான நூல்களைக் கற்றுணர்ந்த ஞானிகள் வெறுப்பது மன்மதனின் உணர்ச்சிகளுக்கு இலக்கான சிற்றின்பத்தையேயாகும்; கனல்விழி காய்வது காமனையேயாகும் - உனது நெற்றிக்கண் எரித்தது மன்மதனையேயாகும்; அற்றம் மறைப்பது உன் பணியே - உனது அரையினை ஆடையாக மறைத்திருப்பது நீர் அணிந்துள்ள பாம்பாகும்; அமரர்கள் செய்வதும் உன் பணியே - தேவர்கள் எப்போதும் செய்வது உனது திருத் தொண்டேயாகும்; பெற்றும் உகந்தது கந்தனையே - பெற்ற மகனாக விரும்பித் தந்தது கந்த பெருமானையே ஆகும்; பிரம புரத்தை உகந்தனையே - நீர் பிரம புரம் எனும் திருத்தலத்தில் விருப்புடன் வீற்றிருந்து அருளுகின்றீர்.

### பொழிப்புரை

இறைவா! உமையவள் பிரியாது பொருந்தி இருப்பது உன் திருமேனியாகும். சிவ ஞானிகள் உணர்வது உன் பேரருளாகிய மெய்ப்பொருளாகும். ஞான நூல்களைக் கற்றுணர்ந்த துறவிகள் வெறுப்பது இல்லறத்தையே ஆகும். உனது நெற்றிக்கண் எரித்தது மன்மதனையேயாகும். உனது அரையினை ஆடையாக மறைப்பது நீர் அணிந்துள்ள பாம்பாகும். தேவர்கள் செய்வது உனது திருத் தொண்டாகும். நீர் பெற்று விருப்பத்துடன் தந்தது கந்தப் பெருமானையாகும். நீர் திருப் பிரமபுரம் எனும் திருத்தலத்தில் வீற்றிருந்து அருளுகின்றீர்.

### அருஞ்சொற்பொருள்

உற்று - பொருந்தி; மெய் - உடம்பு, மேனி, உண்மை, காமன் - மன்மதன்; காய்வது - வெறுப்பது, எரிப்பது; கனல் - தீ, நெருப்பு; அற்றம் - உடம்பின் அரையாகிய பகுதி; பணி - தொண்டு, பாம்பு; உகந்தது - விரும்பியது;

## ௨. திருநாவுக்கரசு நாயனார் தேவாரங்கள்

### பதிக வரலாறு

திருநாவுக்கரசு நாயனார் சிவத்தலங்கள் பலவற்றையும் தரிசித்துக்கொண்டு சிதம்பரம் திருக் கோயிலை அடைந்தார். அங்கு நடராசப் பெருமானின் ஆனந்த நடன அற்புதத் திருக்கோலத்தைக் காணும் பேறு கிடைக்க வேண்டுமென இறைவனை வேண்டிப் பாடிய பதிகம் இதுவாகும். நடராசப் பெருமானின் திருக்கோலச் சிறப்பு இப் பதிகத்தால் விளங்குகிறது.


சிதம்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

**குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்**
**மனித்த பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநி லத்தே**

திருச்சிற்றம்பலம்

## சொற்பொருள்

குனித்த புருவமும் - வளைந்த புருவங்களும்; கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும் - கோவைப்பழம் போன்ற சிவந்த வாயில் புன்னகையும்; பனித்த சடையும் - குளிர்ச்சியான சடாமுடியும்; பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும் - பவளம் போன்ற சிவந்த திருமேனியில் பூசப்பட்ட பால் போலும் திருநீறும்; இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் - உயிர்களுக்கு இனிமையளிக்கும் தூக்கிய பொன் போன்ற திருவடியும்; காணப் பெற்றால் - காணக் கூடிய பேற்றினைப் பெற்றால்; மனித்த பிறவியும் - மனிதப் பிறவியும்; இம்மாநிலத்தே வேண்டுவதே - இந் நிலவுலகில் எனக்குத் தேவைப்படத் தக்கதாய் உள்ளது;

## பொழிப்புரை

வளைந்த புருவங்களும், கோவைப்பழம் போன்ற சிவந்த வாயில் புன்னகையும், குளிர்சியான சடாமுடியும், பவளம் போல் திருமேனியில் பூசப்பட்ட பால் போன்ற திருநீறும், உயிர்களுக்கு நன்மையளிக்கும் பொன்னிறத் தூக்கிய திருவடியும், காணக்கூடிய பேற்றினைப் பெற்றால் இவ்வுலகில் மனிதப் பிறவியும் எனக்குத் தேவையானதாகும்.

## அருஞ்சொற்பொருள்

குனித்த - வளைந்த; குமிண் சிரிப்பு - புன் சிரிப்பு, புன்னகை; பனித்த - குளிர்ந்த; இனித்தமுடைய - நன்மைக்குரிய; எடுத்த - தூக்கிய; மனித்த - மனித(விரித்தல் விகாரத்தால் "மனித்த" எனவாயிற்று).

## பதிகவரலாறு

சைவ சமயத்தை விட்டுச் சமண சமயத்தைத் தழுவிக் கொண்ட திருநாவுக்கரசரை மீட்டுத் தருமாறு, அவரின் தமக்கையாரான திலகவதியார் திரு வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமானை எப்பொழுதும் வேண்டி நின்றார். சமண குருவாக வீற்றிருந்த தரும சேனரை (சமணர்கள் கொடுத்த பெயர்) சூலை நோயால் வருந்தச் செய்து ஆட்கொண்டார் சிவபெருமான். மீண்டும் தமக்கையாரிடம் வந்ததும், திரு வீரட்டானேசுவரர் அருளால் சூலை நோய் நீங்கியதும், "நாவுக்கரசு" என்று இறைவனே நாமம் தந்ததும், சிவ சமயமே மெய்ச் சமயமென உணர்ந்து இறைவனைப் பாடிப் பரவியதும் அறிந்த சமணர்கள் வெகுண்டெழுந்து பல்லவ மன்னனையும் தூண்டி நாவுக்கரசரை அழிக்கும் எண்ணத்துடன் அமைச்சரை அனுப்பி அவரை அழைத்து வருமாறு கட்டளை பிறப்பித்தனர். அமைச்சரும் திருவதிகைப் பதி சென்று அரசன் ஆணையைத் தெரிவித்தார். ஆணையைக் கேட்ட திருநாவுக்கரசர், இறைவனைத் தவிர வேறெவர்க்கும் நாம் அஞ்சமாட்டோம் எனக் கூறிப்பாடிய திருப்பதிகம் இதுவாகும். சிவ பெருமானுக்கு அடியவராய் இருப்பவர்கள் எந்தத் துன்பத்துக்கும் அஞ்ச மாட்டார்கள் என்பது இப் பதிகம் மூலம் புலப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத் தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்ப மே எந்நாளும் துன்பமில்லைத்
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கர ன்நற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளாயாளாய்க்
கொய் மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே

திருச்சிற்றம்பலம்

### சொற்பொருள்

நாமார்க்கும் குடி அல்லோம் - நாம் எவரிடமும் அடிமையாக இருக்க மாட்டோம்; நமனை அஞ்சோம் - இயமனுக்கும் பயப்பட மாட்டோம்; நரகத்தில் இடர்ப் படோம் - நரகத்தில் கிடந்து துன்பப்பட மாட்டோம்; நடலை இல்லோம் - ஏனைய துன்பங்களும் எமக்கு இல்லை; ஏமாப்போம் - மகிழ்ச்சியாக இருப்போம்; பிணியறியோம் - நோயற்று வாழ்வோம்; பணிவோம் அல்லோம் - எவரிடமும் பணிந்து வாழ மாட்டோம்; இன்பமே எந்நாளுந் துன்பம் இல்லை - எந்த நாளும் இன்பமே அல்லாமல் துன்பம் கிடையாது; தாம் யார்க்கும் குடியல்லாத் தன்மையான - தாம், எவர்க்கும் அடிமையாயில்லாத இயல்பினையுடைய; சங்கரன் நற் சங்க வெண் குழையோர் காதில் கோமாற்கே - அடியவர்க்குச் சுகத்தைச் செய்பவரும், சிறந்த வெண் சங்குகளை காதில் ஆபரணமாக அணிந்தவருமாகிய தலைவரான சிவபெருமானுக்கே; நாம் என்றும் மீளா ஆளாய் - நாம் என்றைக்கும் மீள முடியாதவாறு ஆட்பட்டு; கொய்மலர் சேவடியிணை குறுகினோமே - புதிதாகப் பறிக்கப்பட்ட மலர் போன்ற அவரது சிவந்த திருவடிகளை அடைந்து விட்டோம்(எனவே யாருக்கும் கட்டுப்பட மாட்டோம்).

### பொழிப்புரை

நாம் எவருக்கும் அடிமையாக மாட்டோம். இயமனுக்கும் அஞ்ச மாட்டோம். நரகத்தில் கிடந்து துன்பப் படோம். வேறு துன்பங்களையும் அடையோம். இன்பமாக இருப்போம். நோயினால் வாடோம். எவரையும் பணிந்து வாழோம். எந்த நாளும் இன்பமே அல்லாமல் எமக்குத் துன்பமில்லை. தாம் எவருக்கும் அடிமையில்லாத இயல்பினையுடைய உயிர்களுக்குச் சுகத்தைச் செய்பவரும், சிறந்த வெண் சங்குகளைக் காதில் ஆபரணமாக அணிந்தவரும், எமது தலைவருமாகிய சிவ பெருமானுக்கே மீள முடியாமல் ஆட்பட்டு, புதிதாய்ப் பறிக்கப்பட்ட மலர் போன்ற அவரது சிவந்த திருவடிகளை அடைந்து விட்டோம் (எனவே நாம் யாருக்கும் கட்டுப்பட மாட்டோம்).

குடி - அடிமை; நமன் - இயமன்; இடர் - துன்பம்; நடலை - துன்பம்; ஏமாப்போம் - மகிழ்வோம்; பிணி - நோய்; சங்கரன் - சிவபெருமான், ஆன்மாக்களுக்குச் சுகத்தைச் செய்பவன்; சங்கம் - சங்கு; குழை - ஆபரணம், தோடு; கோ - தலைவன், அரசன்; மீளா - திரும்ப முடியாத; கொய்மலர் - புதிதாகப் பறித்த மலர்; சே - சிவந்த; அடி - திருவடி, கால்; இணை - சோடி; குறுகினோம் - அடைந்தோம்;

## 3. சுந்தர மூர்த்தி நாயனார் தேவாரங்கள்


### பதிகவரலாறு

ஏற்கெனவே பரவையாரைத் திருமணஞ்செய்திருந்த சுந்தரமூர்த்தி நாயனார், சங்கிலியாரையும் திருமணஞ் செய்ய விரும்பினார். தன்னை விட்டு எக்காலமும் பிரிவதில்லை எனச் சுந்தரரிடம் சத்தியம் வாங்கிய பின்னரும் சங்கிலியாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்திற்குச் சம்மதித்தார். இருப் பினும் சில காலங்கழித்துத் திருவாரூரில் பங்குனி உத்தரத் திருவிழாவைக் காண விரும்பிய சுந்தரருக்கு, திருவொற்றியூரின் எல்லையைத் தாண்டியவுடன் இரண்டு கண்களும் பார்வை தெரியாத படி மறைந்து விட்டன. திருவெண்பாக்கத்தின் இறைவ னிடம் முறையிட்டு **பிழையுளன பொறுத் திடுவீர்** எனும் பதிகம் பாடி ஊன்றுகோலைப் பெற்றுக் கொண்டார். ஊன்றுகோல் உதவி



திருப்புன்கூர்த் தலம்

யுடன் தல யாத்திரை செய்து திருவேகம்பத்தில் திருக்கச்சி யேகம்பநாதரை வணங்கி **கடையானேன் எண்ணாத** எனத் தொடங்கும் பதிகம் பாடி இடக்கண் பார்வையைப் பெற்றுக் கொண்டார். பின்னும் பல தலங்களையும் வழிபாடு செய்து திருவாரூரை அடைந்தார். அங்குள்ள பூங்கோயிலினுட் சென்று தியாகேசப் பெருமானை வணங்கி **மற்றைக் கண்தாரீர்** என்று கேட்டுப் பாடினார். இறைவனுடன் தோழமை கொண்ட சுந்தரரின் உணர்வுகளை வெளிக்காட்டும் இத் திருப்பதிகப் பாடல்களின் முதலாவது பாடல் இங்கு இடம்பெற்றுள்ளது.

**(அ) தலம் :- திருப்புன் கூர்** **பண் :- தக்கேசி**

**திருச்சிற்றம்பலம்**

**அந்த நாளனுன் அடைக்கலம் புகுத**
**அவனைக் காப்பது காரண மாக**
**வந்த காலன்தன் ஆருயி ரதனை**
**வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்**
**எந்தை நீயெனை எமன்தமர் நலியின்**
**இவன்மற் றென்னடி யானென விலக்கும்**
**சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்**
**செழும் பொழில்திருப் புன்கூருளானே.**

**திருச்சிற்றம்பலம்**

## சொற்பொருள்

செழும் பொழில் திருப் புன்கூர் உளானே - வளமிக்க சோலைகளையுடைய திருப் புன்கூரிலுள்ள திருத்தலத்தில் எழுந்தருளியிருப்பவனே; அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத - பிராமணனாகிய மார்க்கண்டேயன்(தனது உயிரைக் கவர்ந்து செல்ல வந்த இயமனிடம் இருந்து காப்பாற்றுமாறு) உன்னிடம் அடைக்கலமாகத் தன்னை ஒப்படைக்க; அவனைக் காப்பது காரணமாக - அவனைக் காப்பாற்றும் பொருட்டாக; வந்த காலன் தன் ஆருயிர் அதனை - உயிரைக் கவருமாறு வந்த இயமனின் அரிய உயிரினை; வவ்வினாய்க்கு - கவர்ந்து கொண்ட; உன்றன் வண்மை கண்டு அடியேன் - உனது வள்ளன்மையைக் கண்டு அடியவனாகிய நானும்; எந்தை நீ எனை எமன் தமர் நலியின் - என்னையும் இயமனின் தூதர்கள் வந்து துன்புறுத்துவார்களாயின் என் தந்தையாகிய நீ; இவன் மற்று என் அடியான் என விலக்கும் சிந்தையால் - இவனும் எனது அடியவன், இவனைத் துன்புறுத்தாதீர் என விலக்குவாய் எனும் எண்ணத்தால்; வந்து உன் திருவடி அடைந்தேன் - உனது திருவடிகளே துணையென வந்து சேர்ந்தேன்.

## பொழிப்புரை

வளமான சோலைகளையுடைய திருப்புன்கூர்த் திருத்தலத்தில் எழுந்தருளி யிருப்பவனே. மார்க்கண்டேய முனிவன்(தனது உயிரைக் கவர்ந்து செல்ல வந்த இயமனிடம் இருந்து காப்பாற்றுமாறு) உன்னிடம் அடைக்கலமாகத் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்படைக்க அவனைக் காப்பாற்றும் பொருட்டு இயமனின் அரிய உயிரைக் கவர்ந்து கொண்ட உன் வள்ளன்மையைக் கண்டு அடியவனாகிய நானும், என்னை இயமனின் தூதுவர்கள் வந்து துன்புறுத்துவார்களாயின் எனது தந்தையாகிய நீ, இவனும் எனது அடியவனாதலால் இவனைத் துன்புறுத்தாதீர் என விலக்குவாய் என்னும் எண்ணத்தால் உனது திருவடிகள் துணையென நம்பி வந்து சேர்ந்தேன்(என்னைக் காப்பாற்றுவாயாக).

## அருஞ்சொற்பொருள்

அந்தணாளன் - பிராமணன், முனிவன்; அடைக்கலம் - சரண்; காலன் - இயமன்; வவ்வினாய் - பறித்தாய், கவர்ந்தாய்; வண்மை - கொடை, வள்ளன்மை; எந்தை - எனது தந்தை; சிந்தையால் - மனத்தால், எண்ணத்தால்; செழும் - வளமுள்ள; பொழில் - சோலை.

## பதிக வரலாறு

சுந்தரமூர்த்தி நாயனார் திருத்துருத்தியிலிருந்து திருவாரூருக்குச் சென்று அங்கு கோயில் கொண்டுள்ள பரவையுடன் மண்டலிப் பெருமானை வணங்கித் **தூதுவாயா** எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். பின்னர் திருமூலட்டானரை வழிபட அர்த்தயாமம் செல்லும்போது, அன்பர்கள் எதிர்வந்து சேரக் கண்டு அயலவர் வினாவுவது போல **குருகுபாய** என்னுந் திருப்பதிகம் பாடித் திருத் தேவாசிரியன் முன்வணங்கி, கோபுரத்தினைத் தொழுது கோயிலினுட் சென்று ஆழ்ந்த துயர்க்கடலினின்றும் அடியேனைக் காத்தருளக் கண்தாரும் என இறைவனை வேண்டி வழிபட்டார். திருமூலட்டானம் சேர் பிஞ்ஞகனைக் கண்ணாற் பருகுதற்கு மறைக்கண் தாரீர் என வணங்கிப் பாடி அருளியதே இத் திருப்பதிகம் ஆகும். இப் பதிகத்திலுள்ள பத்துப் பாடல்களிலும் **வாழ்ந்து போதீரே** எனக் கூறப் பட்டுள்ளதனூடாக இறைவன் மீது சுந்தரர் கொண்டுள்ள தோழமை உணர்வை அறிய முடிகிறது.



திருவாரூர்த் தலம்

**ஆ) தலம் :- திருவாரூர்** **பண் :- செந்துருத்தி**

**திருச்சிற்றம்பலம்**

**மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்**
**பிறரை வேண்டாதே**
**மூளாத் தீப்போல் உள்ளே கனன்று**
**முகத்தால் மிகவாடி**
**ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்**
**அல்லல் சொன்னக்கால்**
**வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்**
**வாழ்ந்து போதீரே!.**

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சொற்பொருள்

*(திருவாரூர்த் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே!)மீளா அடிமை உமக்கே ஆளாய் பிறரை வேண்டாதே* - என்றும் நீங்காத அடிமைகளாய் உமக்கு ஆட்பட்டுத் தொண்டு செய்துவரும் அடியவர்கள் பிறரிடம் எதையும் வேண்டிக் கொள்ள மாட்டார்கள்; *மூளா தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிக வாடி* - மூண்டு எரியாது உள்ளே வெந்து கொண்டிருக்கும் நெருப்பைப் போல மனம் வருந்தி முகமானது மிகவும் வாட்டமுற்று; *ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொல்லக்கால்* - நிற்கும் மெய்யடியார்கள் தங்களது துன்பங்களையெடுத்து உன்னிடம் சொன்ன போதும்; *வாளா அங்கு இருப்பீர் திருவாரூரிர் வாழ்ந்து போதீரே* - எதுவுங் கூறாது வீணே திருவாரூரில் வீற்றிருக்கின்றீர் . இதுதான் உமது இயல்பாயின் நீர் நன்கு வாழ்வீராக! (உரிமை யோடும் தோழமையோடும் புகழ்வது போல் இகழ்ந்து கூறியது).

### பொழிப்புரை

*(திருவாரூர் இறைவா!)* என்றும் நீங்காத அடிமைகளாய் உமக்கு ஆட்பட்டுத் தொண்டு செய்துவரும் அடியவர்கள் பிறரிடம் எதையும் வேண்டிக் கேட்க மாட்டார்கள். மூண்டு எரியாது உள்ளே வெந்து கொண்டிருக்கும் நெருப்பைப் போன்று வேதனையால் முகம் வாடியிருக்கும் மெய்யடியார்கள், தங்கள் துன்பங்களை உம்மிடம் எடுத்துச் சொல்லும் பொழுது நீர் எதுவும் பேசாது வீணே திருவாரூரில் வீற்றிருக்கின்றீர். இதுதான் உமது இயல்பானால் நீர் நன்கு வாழ்வீராக!.

### அருஞ்சொற்பொருள்

*மீளா* - விட்டு விலகாத, நீங்காத; *ஆளாய்* - ஆட்பட்டு; *மூளாத் தீ* - மூண்டு எரியாத நெருப்பு; *கனன்று* - வெந்து; *அல்லல்* - துன்பம்; *வாளா* - வீணே;

## 4. மாணிக்க வாசகர் சுவாமிகளின் திருவாசகப் பாடல்கள்

### (அ)பதிக வரலாறு

*சீர்காழி என்னும் திருத்தோணிபுரத்தில் அருளப் பெற்ற* **பிடித்த பத்துப்** பாடல்களில் இதுவும் ஒன்று. இறைவனைச் சிக்கெனப் பிடித்தமையால் இப் பெயர் பெறலாயிற்று. **சிக்கெனப் பிடித்தல்** என்பது இறைவனை மனம், மொழி, மெய்களால் இடைவிடாது பற்றி நிற்றலாகும். மாணிக்க வாசகரின் தெய்வீகப் பனுவல்கள் உள்ளத்தை உருக்கக் கூடியவை. "திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்ற முதுமொழிக்கு ஏற்ப ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குபவை. அத்தகைய பாடல்களில் ஒன்று இதுவாகும்.

**திருச்சிற்றம்பலம்**

**பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்**
**பரிந்துநீ பாவியே னுடைய**
**ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கி**
**உலப்பிலா ஆனந்த மாய**
**தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த**
**செல்வமே சிவபெரு மானே**
**யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே**

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சொற்பொருள்

பால் நினைந்து ஊட்டுகின்ற தாயினும் சால - தனது குழந்தையின் பசிவேளையினை அறிந்து பால் ஊட்டும் தாயிலும் பார்க்க; பரிந்து நீ பாவியேன் உடைய - பரிவுடன் நீ பாவியாகிய என்னுடைய; ஊனினை உருக்கி - உடம்பினை உன் நினைவினால் உருகுமாறு செய்து; உள் ஒளி பெருக்கி - உள்ளத்திலே ஞான அறிவாகிய ஒளியினை வளரச் செய்து; உலப்பில்லா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து - வற்றுதல் இல்லாத பேரின்பமாகிய தேனினை அதிகளவில் பொழிந்து; புறம் புறம் திரிந்த - யான் செல்லும் இடம் தோறும் என்னுடன் தொடர்ந்து திரிந்த; செல்வமே சிவ பெருமானே - என் செல்வமாகிய பொருளே! சிவபெருமானே; யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் - யான் உனக்குப் பின்னால் தொடர்ந்து வந்து உன்னை இறுக்கமாகப் பற்றிப் பிடித்துக் கொண்டேன்; எங்கு எழுந்து அருளுவது இனியே - ஆகவே இனி என்னிடமிருந்து நீங்கி எங்கு எழுந்து சென்று அருளுவது? (என்னை விட்டு நீங்க இயலாது).

### பொழிப்புரை

தனது குழந்தையின் பசி வேளையினை அறிந்து பாலூட்டும் தாயிலும் பார்க்கப் பரிவுடன் நீ, பாவியாகிய என்னுடைய உடம்பினை உன் நினைவால் உருகச்செய்தும், உள்ளத்தில் ஞான அறிவாகிய பேரொளியைப் பெருகச் செய்தும், வற்றுதல் இல்லாத பேரானந்தமாகிய தேனினை அதிகமாகப் பொழிந்தும், யான்செல்லும் இடந்தோறும் என்னுடன் திரிந்த செல்வமாகிய பொருளே! சிவபெருமானே, யான் தொடர்ந்து வந்து உன்னை இறுக்கமாகப் பற்றிப் பிடித்துக் கொண்டேன். இனிமேல் எங்கு எழுந்து சென்று அருளுவாய்? என்னை விட்டு நீங்க இயலாது.

### அருஞ்சொற்பொருள்

நினைந்தூட்டும் - காலமறிந்து தானாக ஊட்டும்; சால - மிகுதியாக, பார்க்கினும்; பரிந்து - இரங்கி; ஊன் - உடம்பு; உலப்பில்லா - வற்றுதலில்லாத, அழிவில்லாத; சொரிந்து - பொழிந்து; புறம் புறம் - செல்லும் இடமெல்லாம்; சிக்கென - இறுக்கமாக;

## (ஆ) பதிக வரலாறு

எல்லாத் திருத்தலங்களும் கோயிலென்று அழைக்கப்பட்டாலும் சிறப்பான முறையில் கோயில் என்பது தில்லைச் சிதம்பரத் தலத்தையே குறிக்கும். அங்கு சென்று மாணிக்கவாசகப் பெருமான் ஊனும் உயிரும் உருகிப் பாடியதே கோயிற் திருப்பதிகம் ஆகும். இதிலுள்ள பத்துப் பாடல்களின் இறுதிப் பாடல் இங்கு இடம்பெற்றுள்ளது. இது அநுபோக இலக்கணம் கூறுவதாகும். இறைவனை உள்ளுணர்வினால் அனுபவிப்பது பற்றியதெனலாம்.

**தலம் :- தில்லை (சிதம்பரம்)**

**திருச்சிற்றம்பலம்**

**தந்ததுன் தன்னைக் கொண்டதென் றன்னைச்**
**சங்கரா ஆர்கொலோ சதுரர்**
**அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்**
**யாதுநீ பெற்றதொன் றென்பால்**
**சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்**
**திருப்பெருந் துறையுறை சிவனே**
**எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்**
**யானிதற் கிலனோர் கைம்மாறே**

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சொற்பொருள்

சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான் - எனது உள்ளத்தையே கோயிலாகக் கொண்ட எமது இறைவனே!; திருப் பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறை திருத்தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே; எந்தையே ஈசா - என்னுடைய தந்தையே! ஈசனே; உடல் இடம் கொண்டாய் - அடியேனுடைய உடலையே இருப்பிடமாகக் கொண்டவரே!; தந்தது உன் தன்னை - உனது பேரருளையே எனக்குத் தந்து ஆட்கொண்டு விட்டாய்; கொண்டது என் தன்னை - ஆனால் அதற்குக் கைமாறாக நீ என்னிடமிருந்து பெற்றுக் கொண்டது எதுவுமில்லை; சங்கரா ஆர் கொலோ சதுரர் - சங்கரனே! இதில் யார் கெட்டிக்காரர்?; அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன் - எல்லையில்லாத பேரின்பத்தை நான் உன்னிடமிருந்து பெற்றுக் கொண்டேன்; யாது நீ பெற்றது ஒன்று என்பால் - நீ என்னிடமிருந்து அதற்குப் பதிலாகப் பெற்றுக் கொண்டது எதுவுமில்லை; யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே - இவ்வாறு எனக்குப் பேரின்பப் பெருவாழ்வு தந்ததற்குக் கைம்மாறாக யான் செய்யக் கூடிய உதவி எதுவுமில்லை.

### பொழிப்புரை

எனது உள்ளத்தில் கோயில் கொண்ட எமது இறைவனே, திருப்பெருந்துறைத் திருத்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானே, எனது தந்தையே, ஈசனே, எனது உடலையே இருப்பிடமாகக் கொண்டவரே, உனது பேரருளினைத் தந்து என்னை ஆட்கொண்டாய். அதற்குப் பதிலாக என்னிடமிருந்து யாதொன்றையும் பெறவில்லை. சங்கரனே! இதில் யார் கெட்டிக்காரர்? உன்னிடமிருந்து எல்லையில்லாத ஆனந்தத்தை யான் பெற்றுக் கொண்டேன். ஆனால் என்னிடமிருந்து நீ ஒன்றையும் பெறவில்லை. இவ்வாறு எனக்குப் பேரருள் தந்து ஆட்கொண்டதற்குப் பிரதியுபகாரமாக யான் செய்யக்கூடியது எதுவுமில்லை.

### அருஞ்சொற்பொருள்

சங்கரா - இறைவனே, சிவபெருமானே; சதுரர் - கெட்டிக்காரர், திறமையாளர், வல்லவர்; அந்தம் - முடிவு, எல்லை; என்பால் - என்னிடம்; கைம்மாறு - பிரதியுபகாரம், பதிலுதவி; எந்தை - எனது தந்தை; சிந்தை - மனம், உள்ளம்.

## 5. திருவிசைப்பா



**திருவீழி மிழலைத் தலம்**

திருவீழி மிழலை என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் போற்றிச் சேந்தனார் பாடிய பாடல் இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருச்சிற்றம்பலம்**

**கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்**
**கரையிலாக் கருணைமா கடலை**
**மற்றவர் அறியா மாணிக்க மலையை**
**மதிப்பவர் மனமணி விளக்கைச்**
**செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்**
**திருவீழி மிழலை வீற் றிருந்த**
**கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்**
**குளிரவென் கண்குளிர்ந் தனவே**

**திருச்சிற்றம்பலம்**

### சொற்பொருள்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை - ஞான நூல்களைக் கற்றறிந்தோர் உணர்ந்து அனுபவிக்கின்ற கற்பகக் கனியாக விளங்குபவரை; கரை இலாக் கருணை மா கடலை – எல்லையற்ற பெரும் கருணைக் கடலானவரை; மற்றவர் அறியா மாணிக்க மலையை - ஞான நூல்களைக் கற்காதவர்ளால் அறிந்துணர முடியாத மாணிக்க மலையானவரை; மதிப்பவர் மனமணி விளக்கை - தம்மை நினைத்து வழிபடுவோர்களின் மனங்களில் தூண்டாமணி விளக்காய் ஒளிர்பவரை; செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை - தம் மீது பகை கொண்டு பொருத வந்த மூன்று கோட்டைகளையுடைய அசுரர்களின் முப்புரங்களையும் அழித்தொழித்த சிவபெருமானை; திரு வீழி மிழலை வீற்றிருந்த கொற்றவன் தன்னை – திருவீழி மிழலை என்னும் திருத்தலத்தில் விற்றிருந்த அருள்புரிகின்ற தலைவனை; கண்டு கண்டு உள்ளம் குளிர - காணும் தோறும் உள்ளமானது அன்பினால் நெகிழ்ந்து குளிர்ச்சி அடைய; என் கண் குளிர்ந்தனவே - எனது கண்களும் ஆனந்தத்தால் குளிர்ச்சி அடைந்தன.

### பொழிப்புரை

ஞான நூல்களைக் கற்றுணர்ந்தோருக்குக் கற்பகக் கனியாய் விளங்குபவரை எல்லையில்லாத பெரும் கருணைக் கடலை, ஞான நூல்களைக் கற்காதோரால் அறிய முடியாத மாணிக்கமாகிய மலையை, தம்மை நினைந்து வழிபடுவோரின் மனங்களில் தூண்டாமணி விளக்காய் ஒளிர்பவரை, பகைகொண்டு பொருத வந்த அசுரரின் முப்புரங்களை எரித்த சிவபெருமானை, திருவீழி மிழலை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்து அருளும் தலைவனை, காணக் காண உள்ளம் குளிர்வதுடன் ஆனந்தத்தால் என் கண்களும் குளிர்ச்சி கண்டன.

### அருஞ்சொற்பொருள்

விழுங்கும் – உணர்ந்து கொள்ளும்; கற்பகக் கனி – தேவலோகத்து கற்பக மரக் கனி, கேட்டதெல்லாம் அருளக் கூடியது; கரையிலா – அளவில்லாத, எல்லையில்லாத; மாகடல் – பெருங்கடல்; மற்றவர் – அறியாமை மிக்கவர்; மணிவிளக்கு – தூண்டாமணி விளக்கு; செற்றவர் - பகைத்தவர்; புரங்கள் - இரும்பு வெள்ளி, பொன் ஆகியவற்றாலான மூன்று கோட்டைகள்; செற்ற – அழித்த; கொற்றவன் – தலைவன், வெற்றிக்குரியவன்;

## 6. திருப்பல்லாண்டு

தில்லைச் சிதம்பரத்தில் ஓடாது நின்ற தேரினை ஓட வைக்கும் பொருட்டுச் சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டுப் பாடலில் ஒன்று இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

திருச்சிற்றம்பலம்

**சொற்பொருள்**

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிட - புலிநகங்களையுடைய வியாக்கிரபாதர் என்னும் முனிவரின் குழந்தையாகிய உபமன்யு, பசியினால் பாலை விரும்பி அழுதபோது; பாற்கடல் ஈந்த பிரான் - அவனுக்காகப் பாற்கடலையே வரவழைத்துக் கொடுத்த அன்புடையவனும்; மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன் - முன்னொரு காலத்தில் திருமால் யுத்தம் செய்வதற்காகச் சக்கர ஆயுதத்தைக் கொடுத்து அருளியவனும்; மன்னிய தில்லை தன்னுள் - நிலை பெற்று விளங்கும் தில்லைச் சிதம்பரத்தில்; ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாக - வேத மந்திரங்களை ஓதுவதால் ஆரவாரம் செய்கின்ற அந்தணர்களாகிய தீட்சிதர்கள் வாழ்கின்ற சிற்றம்பலமாகிய பொருட் சபையினைத் தமக்கு இடமாகக் கொண்டு; பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே - அடியவருக்கு அருள் புரிந்து ஆனந்த நடனம் ஆடுகின்ற வல்லமையுடைய சிவபெருமானைப் புகழ்ந்து; பல்லாண்டு கூறுதுமே - "பல்லாண்டு வாழ்க" எனக் கூறி நாம் வாழ்த்துவோமாக.


**பொழிப்புரை**

வியாக்கிரபாத முனிவரின் பாலகன் பசியினால் பாலுக்காக அழுதபோது பாற்கடலையே வரவழைத்துக் கொடுத்த அன்புடையவனும், முன்னொருபோது திருமாலுக்குப் போர் புரியுமாறு சக்கர ஆயுதம் கொடுத்து அருள் செய்தவனும், நிலைபெற்ற தில்லைச் சிதம்பரத்தில் வேதமோதி ஆரவாரிக்கும் அந்தணர்களாகிய தீட்சிதர்கள் வாழ்கின்ற பொருட்சபையாகிய சிற்றம்பலத்தினை இடமாகக் கொண்டு, அடியவருக்கு அருள்புரிந்து ஆனந்த நடனம் ஆடுகின்ற வல்லமையுடைய சிவபெருமானைப் புகழ்ந்து "பல்லாண்டு வாழ்க" எனக் கூறி வாழ்த்துவோமாக.

**அருஞ்சொற்பொருள்**

பாலகன் - வியாக்கிர பாத முனிவனின் குழந்தை உபமன்யு; ஈந்த - அளித்த, கொடுத்த; பிரான் - அன்புடையவன், இறைவன்; மன்னிய - நிலைபெற்ற; ஆலிக்கும் - ஆரவாரிக்கும்; அந்தணர் - சிதம்பரத்தில் பூசைசெய்யும் மூவாயிரம் தீட்சிதர்கள்; பாலித்து - அருள்செய்து; நட்டம் - நடம் (செய்யுளின் விரித்தல் விகாரத்தால் நட்டம் ஆயிற்று), நடனம்; பயில - ஆட; வல்லானுக்கே - ஆற்றலுள்ளவனுக்கே.

## 7. திருமந்திரம் – பத்தாந் திருமுறை, திருமூலர் பாடியது



திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வீற்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண் ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சொற்பொருள்

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை - யாவருக்கும் நன்மை தருவது, இறைவனை ஒரு பசிய இலையினை இட்டு வணங்குவதாகும். யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை - யாவருக்கும் நன்மை தருவது பால் தரும் பசுவினுக்கு ஒரு வாயளவுக்குப் பசும் புல்லைக் கொடுப்பது; யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி - யாவர்க்கும் நன்மை தருவது உணவு உண்ணும் போது பசியென வரும் எவருக்காயினும் பேதம் பாராது ஒரு பிடி சோறு கொடுத்தலாகும்; யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே - யாவருக்கும் நன்மை தருவது எவருடனும் இனிமையாகப் பேசுதல் ஆகும்.

### பொழிப்புரை

பச்சிலை ஒன்றினையாவது இட்டு இறைவனை வழங்குதல், பசுவுக்கு ஒருவாய் பசும் புல்லையாவது கொடுத்தல், உண்ணும்போது பசியென வருவோருக்கு ஒருபிடி அன்னம் அளித்தல், பிறரிடம் இனிமையாகப் பேசுதல் ஆகியவை எல்லோருக்கும் நன்மை அளிப்பனவாகும்.

### அருஞ்சொற்பொருள்

பச்சிலை - பசிய இலை, பச்சை இலை; வாயுறை - ஒரு வாய் அளவுள்ள புல்; கைப்பிடி - ஒரு கைப்பிடி அளவு சோறு; இன்னுரை - இனிய வார்த்தை, இனிய பேச்சு.

## 8. மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை – கபிலன் தேவனார் பாடியது, பதினோராந் திருமுறை.

பதினோராந் திருமுறையில் 12 பேர் பாடிய நாற்பது பிரபந்தங்கள் உள்ளன. இதில் மொத்தம் 1385 பாடல்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் கபிலதேவ நாயனார் பாடியது **மூத்த நாயனார் திருவிரட்ண்ட மணிமாலை**யாகும். விநாயகப் பெருமான் மீது பாடப்பட்ட பக்திப் பிரபந்தம் இதுவாகும். விநாயகப் பெருமான் சிவபெருமானின் மூத்தபிள்ளை என்றபடியால் மூத்த நாயனார் என்று இந்நூலில் பாடப்பட்டுள்ளது. மூத்த பிள்ளையார் எனவும் விநாயகரைக் கூறுவது மரபாகும். இந்நூலில் இருபது பாடல்கள் உள்ளன. எந்தக் காரியம் செய்வதானாலும் விநாயகப் பெருமானை முதலில் வழிபட வேண்டியதன் அவசியத்தை இப்பாடல் எடுத்துக் காட்டுகிறது.

**திருச்சிற்றம்பலம்**

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்**
**கண்ணிற் பணிமின் கனிந்து**

**திருச்சிற்றம்பலம்**


விநாயகப் பெருமான்

### சொற்பொருள்

விநாயகனே வெவ்வினையை வேறறுக்க வல்லான் - விநாயகப் பெருமானே கொடிய பிறவித் துன்பங்களை அடியோடு அறுத்தெறிய வல்லமை உடையவர்; விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகப் பெருமானே எம்மிடையேயுள்ள ஆசை, அவா முதலிய உலக இன்ப விருப்புக்களை தணிவித்து எம்மை ஆட்கொள்ளக் கூடியவர்; விநாயகனே விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாம் - விநாயகப் பெருமானே விண்ணுலகம், மண்ணுலகம் ஆகிய இரண்டுக்கும் தலைவனுமாக உள்ளார்; தன்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து - இத்தகைய இயல்புகள் காரணமாக உளங்கனிந்து கண்ணில் ஒற்றி அவரைப் பணிந்து போற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொழிப்புரை

விநாயகப் பெருமான், கொடிய பிறவித் துன்பங்களை அடியோடு அறுத்தெறிய வல்லவர்; எமது ஆசை அவா போன்றவற்றைத் தணிவிப்பவர்; மண்ணுலகம், விண்ணுலகம் ஆகியவற்றிற்குத் தலைவராய் உள்ளவர்; இத்தகைய இயல்புடைய அவரை உள்ளத்தில் வைத்து கண்ணில் ஒற்றிப் போற்றுவோம்.

### அருஞ்சொற்பொருள்

வெவ்வினை - கொடிய பிறவி வினை; வேரறுக்க - அடியோடு ஒழிக்க; வேட்கை - விருப்பம்; தணிவிப்பான் - இல்லாமல் குறையச் செய்வான்; நாதன் - தலைவன்; கனிந்து - உளமுருகி.

## 9. பெரிய புராணம்



மனுநீதி கண்ட சோழன்

சைவ சமத்தின் இரு கண்களென விளங்கும் சமயக் காப்பியங்களில் ஒன்றாகப் **பெரியபுராணம்** அமைந்துள்ளது. சேக்கிழார் குடியிற் பிறந்தவரும் அநபாய சோழனின் அமைச்சராய் இருந்தவருமாகிய அருண்மொழித் தேவரால் இந் நூல் 4253 விருத்தப் பாக்களால் செய்யப்பட்டது. இரண்டு காண்டங் களையும் (பெரும்பிரிவு), பதின்மூன்று சருக்கங் களையும் (சிறுபிரிவு) கொண்டது. அறுபத்து மூன்று நாயன்மார்களினதும், ஒன்பது தொகையடியார் களினதும் வரலாற்றைக் கூறுவது. சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய **திருத் தொண்டத்தொகை**யை மூல நூலாகவும், நம்பியாண்டார நம்பி இயற்றிய **திருத்தொண்டர் திருவந்தாதி**யைத் துணைநூலாகவும், சுந்தரமூர்த்தி நாயனாரைக் காப்பியத் தலைவராகவும் கொண்டு படைக்கப்பட்டது. தமிழில் சிறந்த இலக்கி நூலாக, சமய நூலாக, வரலாற்று நூலாகப் பெருமைபெற்றது. சிவனடியார்கள் வரலாற்றைக் கூறுவதால் **ஆளுடைய நம்பி புராணம்** எனவும், **பெரிய புராணம்** எனவும், **திருத் தொண்டர்புராணம்** எனவும், **திருமுறை கண்ட புராணம்** எனவும் அதன் ஒவ்வாரு சிறப்பு நோக்கி அழைக்கப்படுகிறது. **உலகெலாம்** எனச் சிவபெருமானே அடியெடுத்துக் கொடுக்கச் சேக்கிழாராற் பாடப்பட்ட இந்நூலினைப் பிற்காலத்தில் பன்னிரண்டாந் திருமுறையாகச் சேர்த்துக் கொண்டார்கள். சோழ நாட்டின் திருவாரூர் நகரச் சிறப்பினைக் கூறுமிடத்து மனுநீதி கண்ட சோழனின் வரலாற்றைப் பாடிய சேக்கிழார், அவனது சைவ நீதியைக் கண்டு இறைவன் காட்சி தந்து அருள் புரிந்தமையைப் பின்வரும் பாடலினூடாக எடுத்துக் கூறியுள்ளார்.

**திருச்சிற்றம்பலம்**

**தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது**
**மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைசொரிந்தார்**
**அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்**
**விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்**

**திருச்சிற்றம்பலம்**

### சொற்பொருள்

(தனது கன்றானது, மனுநீதிச் சோழனின் மகனான வீதிவிடங்கன் உலாவந்த தேர்ச் சில்லினுள் அகப்பட்டு இறந்த துன்பந் தாளாது, அரசனின் ஆராய்ச்சி மணியை நீதி கேட்டு அடித்த பசுவிற்காக தன் ஒரேயொரு புதல்வனைத் தேர்க்காலினுள் இட்டுத் தேரையூர்ந்து கொன்ற) தண்ணளி வெண்குடை வேந்தன்வேந்தன் செயல் னண்டு தரியாது - உயிர்களிடத்தில் அன்பு மிக்கவனும் வெண்கொற்றக் குடையினைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்குபவனுமாகிய மனுநீதிச் சோழனது அபூர்வமான செயலைக் கண்டு பொறுக்க மாட்டாமல்; மன்னவர் கண்மழை பொழிந்தார் -மண்ணுலகில் உள்ளவர்கள் கண்ணீர் மழையினைப் பொழிந்தார்கள்; வானவர் பூமழை சொரிந்தார் - தேவர்கள் மலர் மழை பொழிந்தார்கள்; அண்ணல் அவன் கண் எதிரே - அப்போது தலைவனான மனுநீதிச் சோழன் கண்முன்னே; அணிவீதி மழவிடை மேல் - அழகான வீதியில் இளம் இடபத்தின் மீது(இடபாரூடாக) வீற்றிருந்து; விண்ணவர்கள் தொழ நின்றான் வீதி விடங்கப் பெருமான் - தேவர்கள் வணங்கி நிற்க மனுநீதி கண்ட சோழனுக்கு வீதி விடங்கப் பெருமானாகிய சிவபெருமான் காட்சி தந்தருளினார்.

**பொழிப்புரை**

உயிர்களிடத்தில் அன்புடைய வெண் கொற்றக் குடையைத் தாங்கிய மனுநீதி கண்ட சோழனின் அபூர்வமான செயலைக் கண்டு மனம் பொறுக்க முடியாது மண்ணுலகத்தினர் கண்ணீர் மழை பொழிந்தார்கள். தேவர்கள் பூமழை சொரிந்தார்கள். தலைவனாகிய மனுநீதிச் சோழ மன்னன் கண்முன்னே அழகான வீதியில் இளம் எருதை வாகனமாகக் கொண்டு,தேவர்கள் வணங்கி நிற்க திருவாரூர் வீதிவிடங்கப் பெருமானாகிய சிவபெருமான் காட்சி தந்தருளினார்.

**அருஞ்சொற்பொருள்**

தண்ணளி - இரக்கம், அன்பு, கருணை; வெண்குடை - அரசருக்குரிய வெண்கொற்றக் குடை; வானவர் - தேவர்கள்; அண்ணல் - தலைவன்; அணிவீதி - அழகான வீதி, அலங்கரிக்கப்பட்ட வீதி; மழவிடை - இளம் எருது;



**மனுநீதிச் சோழனின் ஆராய்ச்சி மணியை நீதி கேட்டு அடித்த பசு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே பார்வையில் திருமுறைப் பாடல்கள்

| திருமுறைப் பாடல் | இடம்பெற்ற திருமுறை | பாடியவர் | பாடப்பட்ட திருத்தலம் | பண் | பாடப்பட்ட சந்தர்ப்பம் |
|---|---|---|---|---|---|
| 1. அங்கமும் வேதமும் | 1 வது | திருஞானசம்பந்தர் | திருமருகலும் திருச் செங்காட்டங்குடியும் | நட்டபாடை | திருமருகற் கோயிலில் திருச் செங்காட்டங்குடி இறைவனின் திருவுருவைத் தரிசித்தபோது |
| 2. உற்றுமை சேர்வது | 3 வது | திருஞானசம்பந்தர் | திருக்கழுமலம் | பழம் பஞ்சுரம் | திருத் தோணிபுரத் தீசனைப் பார்த்து பாடியது. |
| 3. குனித்த புருவமும் | 4 வது | திருநாவுக்கரசர் | சிதம்பரம் | திருவிருத்தம் | சிதம்பர நடராசப் பெருமானின் அற்புதக் கொலங்கண்டு அக மகிழ்ந்து பாடியது |
| 4. நாமார்க்கும் குடியல்லோம் | 6 வது | திருநாவுக்கரசர் | பொது | - | சமண அமைச்சர் அரசன் அழைத்து வருமாறு கூறிய போது |
| 5. அந்தணாளனுன் | 7வது | சுந்தரர் | திருப்புன்கூர் | தக்கேசி | இரண்டு கண்களும் கண் பார்வை இழந்த பின்னர் இறைவனை வேண்டிக் கண் பார்வை தருமாறு பாடியது |
| 6. மீளா அடிமையுனக்கே ஆளாய் | 7வது | சுந்தரர் | திருவாரூர் | செந்துருத்தி | ஒரு கண் பார்வை பெற்ற பின்னும் திருவாரூர் இறைவனை மற்றக்கண் பார்வையையும் தருமாறு வேண்டிப் பாடியது |
| 7. பால் நினைந்தூட்டும் | 8 வது | மாணிக்கவாசகர் | சிதம்பரம் | - | சிதம்பரத்தில் இறைவனைப் போற்றிப் பிடித்த பத்துப் பாடல் களைப் பாடியது |
| 8. தந்ததுன் தன்னை | 8 வது | மாணிக்கவாசகர் | தில்லை | - | சிதம்பரத்தில்(கோயில்) மனமுருகி கோயிற்றிருப்பதிகமாய்ப் பாடியது |
| 9. கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை | 9 வது | சேந்தனார் | திருவீழி மிழலை | பஞ்சமம் | சிதம்பரப் பெருமானைத் திருவிசைப்பாவால் பாடியது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. பாலுக்குப் பாலகன் வேண்டியமுதிட | 9 வது | சேந்தனார் | கோயில் | பஞ்சமம் | சிதம்பரத்தில் ஓடாது நின்ற தேரை ஓடவைக்கும் பொருட்டு இறைவனை வேண்டித் திருப்பல்லாண்டாகப் பாடியது. |
| 11. யாவர்க்குமாம் | 10 வது | திருமூலர் | திருவாவடுதுறை | - | இறைவன் கட்டளைப்படி திருவாவடுதுறையிலிருந்து திருமந்திரப் பாடல்களைப் பாடியது. |
| 12. விநாயகனே வெவ்வினையை | 11 வது | கபிலதேவர் | - | - | விநாயகப் பெருமானை மூத்த பிள்ளையாகவும் மூத்த நாயனாராகவும் கருதிப் பாடியது. |
| 13. தண்ணளி வெண்குடை வேந்தன் | 12 வது | சேக்கிழார் | - | - | பெரிய புராண காப்பியத்தால் மனுநீதிச் சோழனின் நீதி கண்டு சிவபெருமான் தோன்றி அருள் செய்தமையைக் கூறும் பகுதியாகப் பாடியது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. திருக் கூட்டச் சிறப்பு

## அறிமுகம்

சைவத் திருமுறைகளில் பன்னிரண்டாந் திருமுறையாக விளங்குவது சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் ஆகும். இந் நூல் அறுபத்து மூன்று நாயன்மார்களினதும், ஒன்பது தொகையடியார்களினதும் வரலாற்றைச் சுவைபடக் கூறுவது. இரண்டு காண்டங்களையும், பதின்மூன்று சருக்கங்களையும், 4287 விருத்தப் பாக்களையும் கொண்டு அமைந்துள்ளது. இதன் முதற் பகுதியாகிய திருமலைச் சருக்கத்தில் பாயிரம், திருமலைச் சிறப்பு,திரு நாட்டுச் சிறப்பபு, திரு நகரச் சிறப்பு(திருவாரூர்), திருக் கூட்டச் சிறப்பு, தடுத்தாட்கொண்ட புராணம் ஆகிய ஆறு பகுதிகள் அடங்கியுள்ளன.



பெரியபுராணம்

திருக்கூட்டச் சிறப்பில் பதினொரு பாடல்கள் காணப் படுகின்றன. சைவ சமய அடியார்களின் பெருமைகள் அதில் கூறப்பட்டுள்ளன. **திருக்கூட்டம்** என்பது சிவபிரானுடைய மெய்யடியார்களைக் குறிப்பதாகும். புற்றிடங் கொண்ட ஆதி தேவர் எழுந்தருளியிருக்கும் பூங்கோயிலின் முகப்பு வாயிலின் முன் தேவாசிரியன் என்னும் திருப் பெயரையுடைய மண்டபம் உள்ளது. அங்கு தெய்வத் தன்மையுடைய ஆசிரியர்கள்(தேவாசிரியர்கள்) எழுந்தருளியுள்ளனர். அவர்கள் நுண்ணிய ஒளி வடிவினராய் இமயம், மேரு முதலான மலைகளில் இருப்பவர்கள். அவர்கள் உருத்திராட்ச மாலை அணிந்திருப்பவர்கள். திருமேனியில் வெண்ணிறமான திருநீற்றைப் பூசியவர்கள். அதுபோலவே அவர்களது உள்ளமும் புனிதமுடையதாகும். அவர்கள் பேரன்பால் சிவபிரானை வணங்குபவர்கள். முத்தியின்பம் வேண்டாதவர்களாய் விருப்பு, வெறுப்பு அற்றுச் சிவ பிரான்பால் மேவி நிற்கும் சிந்தையுடன் இருப்பவர்கள். அத்தகைய தவ சீலர்களைச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருத் தொண்டத் தொகையில் திருவாய் மலர்ந்தருளியவாறு திருத் தொண்டர்களின் வரலாறு சேக்கிழார் சுவாமிகளால் பாடப்பட்டது. இப்பாடல்கள் கலி விருத்தத்தால் அமைந்தவை.

### தேவாசிரிய மண்டபத்தின் சிறப்புரைத்தல்

1. **பூத நாயகர் புற்றிடங் கொண்டவர்**
**ஆதி தேவர் அமர்ந்தபூங் கோயிலிற்**
**சோதி மாமணி நீள் சுடர் முன்றில் சூழ்**
**மூது எயில்திரு வாயில்முன் னாயது**

### சொற்பொருள்

பூதநாயகர் - ஐம்பூதங்களால் சூழப்பட்ட உலகின் உயிர்களுக்கெல்லாம் தலைவராய்; புற்றிடம் கொண்டவர் - வேதங்களாலான புற்றினை இடமாகக் கொண்டவராய்; ஆதி தேவர் அமர்ந்த பூங்கோயில் - ஆதி தேவராய்த் திருவாரூர்த் தியாகேசப் பெருமான் வீற்றிருக்கும் பூங்கோயிலின்; சோதி மாமணி நீள்சுடர் முன்றில் சூழ் - பொன்னைப் போல ஒளிரும் பேரொளியையுடைய திருமுற்றத்தினைச் சூழவுள்ள; மூது எயில் திரு வாயில் முன் ஆயது - பழைமையான மதிலின் அழகிய வாயிலின் முன்னர் தேவாசிரிய மண்டபம் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொழிப்புரை

ஐம்பூதங்களால் சூழப்பட்ட உலகின் உயிர்களுக்கெல்லாம் தலைவராய், வேதங்காலான புற்றினை இடமாகக் கொண்டவராய், ஆதி தேவராய்த் திருவாரூர்த் தியாகேசப் பெருமான் வீற்றிருக்கும் பூங்கோயிலின், பொன்னினையொத்த பேரொளி வீசும் திரு முற்றத்தினைச் சூழவுள்ள பழைமையான அழகிய மதிலின் முன் தேவாசிரிய மண்டபம் உள்ளது.

## அருஞ்செற்பொருள்

பூதநாயகர் - பஞ்ச பூதங்களால் சூழவுள்ள உலகுயிர்களின் தலைவர்; புற்று - வேதங்களாலான புற்று; பூங்கோயில் - திருவாரூர்ப் பெருமான் வீற்றிருக்கும் கோயிலுள்ள இடத்தின் பெயர்; ஆதிதேவர் - சிவபிரான்; சோதிமாமணி - ஒளிவீசும் பொன்; நீள்சுடர் - பேரொளி; முன்றில் - முற்றம்; மூது - பழைமை; எயில் - மதில்; ஆயது - அமைந்துள்ளது.

2. **பூவார் திசைமுகன் இந்திரன் பூமிசை**
**மாவாழ் அகலத்து மால்முதல் வானவர்**
**ஓவா தெவரும் நிறைந்துறைந் துள்ளது**
**தேவா சிரியன் எனும்திருக் காவணம்**

## சொற்பொருள்

பூவார் திசைமுகன் - தாமரையில் வீற்றிருக்கும் நான்முகன் ஆகிய பிரமன்; இந்திரன் - தேவேந்திரன்; பூமிசை மாவாழ் அகலத்து - மலரின் மீது வீற்றிருக்கும் திருமகளைத் தன் மார்பில் கொண்டு விளங்கும்; மால் முதல் வானவர் ஓவாது எவரும் - திருமால் முதலாகத் தேவர்களும் நீங்காது; நிறைந்து உறைந்து உள்ளது - எல்லாக் காலங்களிலும் நிறைந்திருக்கும் இடமாக உள்ளது; தேவாசிரியன் எனும் திருக் காவணம் - தேவாசிரியன் என்னும் அந்த அழகிய மண்டபம்.

## பொழிப்புரை

தாமரையில் வீற்றிருக்கும் நான்முகன், தேவேந்திரன்,மலரின் மீது வீற்றிருக்கும் திருமகளைத் தன் மார்பில் கொண்ட திருமால் முதல் தேவர்களும் நீங்காது எல்லாக் காலங்களிலும் நிறைந்திருக்கும் இடமாகத் தேவாசிரியன் என்னும் அந்த அழகிய மண்டபம் உள்ளது.

## அருஞ்சொற்பொருள்

திசைமுகன் - பிரமன்; பூமிசை - மலர்மீது; மா - திருமகள்; அகலத்து - மார்பில்; ஓவாது - நீங்காது; திரு - அழகிய; காவணம் - மண்டபம்.

### 3. திருக் கூட்டத்தினரின் தோற்றப் பொலிவு உரைத்தல்

**அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்**
**நிரந்த நீற்றொளி யால்நிறை தூய்மையால்**
**புரந்த அஞ்செழுத் தோசை பொலிதலால்**
**பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது**

## சொற்பொருள்

அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல் - பிறப்பு என்னும் உலகத் துன்பத்தைத் தீர்க்கின்ற அத்தகைய அடியவர்களின் திருமேனி மீது; நிரந்த நீற்றொளியால் - ஒருங்கு பெற அணியப் பட்ட திருநீற்றின் ஒளியாலும்; நிறை தூய்மையால் - நிறைந்த தூய்மையாலும்; புரந்த ஐந்தெழுத்து ஓசை பொலிதலால் - உயிர்களைப் பாதுகாக்கும் திருவைந்தெழுத்தின் ஓசையானது பொலிந்து எழுதலாலும்; பரந்த ஆயிரம் பாற்கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல்வது – மிகப் பரந்து விரியும் ஆயிரம் பாற்கடல்களைப் போன்று அத் தேவாசிரியன் மண்டபம் விளங்கியது.

**பொழிப்புரை**

பிறப்பு என்னும் உலகத் துன்பத்தைத் தீர்க்கும் அத்தகைய அடியவர்களின் திரு மேனிமீது ஒழுங்குபெற அணியப்பட்ட திருநீற்றின் ஒளியாலும், நிறைந்த தூய்மையாலும் உயிர்களைப் பாதுகாக்கும் திருவைந்தெழுத்தின் ஓசையானது பொலிந்து எழுவதாலும், மிகப் பரந்து விரியும் ஆயிரம் பாற்கடல்கள் போன்று அத் தேவாசிரிய மண்டபம் விளங்கியது.

**அருஞ்சொற்கள்**

அரந்தம் – உலகத் துன்பம்; நிரந்த – ஒழுங்குடன்; தூய்மை – பரிசுத்தம்; புரந்த – பாதுகாத்த; அஞ்செழுத்து – "நமசிவாய" எனும் திருவைந்தெழுத்து; பொலிதலால் – மிக்குற்று விளங்குதலால்; பரந்த – விரிந்த.

**4. திருக் கூட்டத்தின் சிறப்புரைத்தல்**

**அகில காரணர் தாழ்பணி வார்கள்தாம்**
**அகில லோகமும் ஆளற் குரியரென்று**
**அகில லோகத் துளார்கள் அடைதலின்**
**அகில லோகமும் போல்வ ததனிடை**

**சொற்பொருள்**

அகில காரணர் தாள் பணிவார் தாம் – எல்லா உலகங்களுக்கும் காரண கர்த்தாவான சிவ பெருமான் திருவடிகளை வணங்குகின்ற அடியார்கள் அனைவரும்; அகில லோகமும் ஆளற்கு உரியர் என்று – எல்லா உலகங்களையும் ஆட்சி செய்வதற்கு உரியவர்கள் ஆவரென்று ; அகில லோகத்து உளார்கள் அடைதலின் – எல்லா உலகங்களில் உள்ளவர்களும் அங்கு வந்து சேர்வதால்; அகில லோகமும் போல்வது அதனிடை – அத் தேவாசிரியன் மண்டபமானது அகில உலகமும் ஒன்றாய்ச சேர்ந்து இருப்பதைப் போல் காணப்படுவதாகும்.

**பொழிப்புரை**

எல்லா உலகங்களுக்கும் காரண கர்த்தாவான சிவபெருமானின் திருவடியை வணங்குகின்ற அடியார்கள் யாவரும் எல்லா உலகினையும் ஆட்சி செய்வதற்கு உரியவர்கள் ஆதலால், அனைத்துலகங்களிலும் உள்ளவர்களும் அங்கு வந்து சேர்வதால், அத் தேவாசிரியன் மண்டபமானது அகில உலகமும் ஒன்றாய்ச சேர்ந்து இருப்பதைப் போல் காணப்படுவதாகும்.

**அருஞ்சொற்பொருள்**

காரணர் – காரணகர்த்தா; லோகம் – உலகம்; அடைதலின் – வந்து சேர்தலின்; அதனிடை – அந்த மண்டபம்.

5. **அத்தர் வேண்டிமுன் ஆண்டவர் அன்பினால்**
**மெய்த் தழைந்து விதிர்ப்புறு சிந்தையார்**
**கைத்தி ருத்தொண்டு செய்கடப் பாட்டினார்**
**இத்திறத் தவர் அன்றியும் எண்ணிலார்**



**சிவனடியார்கள்**

**சொற்பொருள்**

அத்தர் வேண்டிமுன் ஆண்டவர் – இத்தன்மையுடைய திருக் கூட்டத்தவர் முற்காலத்தில் சிவபெருமானால் விரும்பி ஆட்கொள்ளப் பட்டவர்கள்; அன்பினால் மெய்த்தழைந்து விதிர்ப்புறு சிந்தையார் – சிவபெருமான் மீது இவர்கள் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும், பக்தியும் தேகம் முழுவதிலும் பரவி விளங்குவதால்உடலின் மயிர்க்கால்கள் தோறும் புளகாங்கிதம் அடைந்து நெகிழ்ந்து கொள்ளும் மனமுடையவர்கள்; கைத் திருத்தொண்டு செய்கடப் பாட்டினார் - இவர்கள் ஈசனுக்குத் தமது கைகளால் தொண்டு செய்தலையே தமக்குரிய கடமையாகக் கொள்பவர்கள்; இத்திறத்தவர் அன்றியும் எண்ணிலார் - இவர்கள் இத்தன்மை ஆனவர்களேயன்றி வேறு எவரையும் மனதில் கொள்ளாதவர்களும் ஆவர்.

### பொழிப்புரை

இத்தன்மையுடைய திருக் கூட்டத்தினர் முற்காலத்தில் சிவபெருமானால் விரும்பி ஆட்கொள்ளப் பட்டவர்கள். சிவ பிரான் மீது கொண்ட அன்பினால் உடலில் மயிர்க்கால்கள் தோறும் புளகாங்கிதம் அடைந்து நெகிழும் மனமுடையவர்கள். இவர்கள் ஈசனுக்குத் தமது கைகளால் தொண்டு செய்வதையே தமது கடமையாகக் கொள்பவர்கள். இவர்கள் இத் தன்மை உடையவர்களேயன்றி வேறு எவரையும் மனதிலே நினையாதவர்களும் ஆவர்.

### அருஞ்சொற்பொருள்

அத்தர் - சிவபெருமான்(அத்தா! என்ற மணிவாசகர் கூற்று); ஆண்டவர் - ஆட்கொள்ளப்பட்டவர்; மெய் - உடம்பு; தழைந்து - புளகாங்கிதம் அடைந்து(ஆனந்தத்தால் மயிர்க்கால்கள் சிலிர்த்துக் குத்திட்டு நிற்றல்); விதிர்ப்புறு - நெகிழ்வுறும்; கடப்பாடு - கடமைப்பாடு; திறத்தவர் - இயல்புடையவர், தன்மையானவர்; எண்ணிலார் - கருதாதவர், நினையாதவர்.

6. **மாசி லாத மணிதிகழ் மேனிமேல்**
**பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்**
**தேசி னால்எத் திசையும் விளக்கினார்**
**பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்**

### சொற்பொருள்

மாசு இலாத மணி திகழ் மேனிமேல் - குற்றம் இல்லாத உருத்திராக்க மணியினை அணிந்திருக்கும் திருமேனியில்; பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள் - விதிப்படி குழைத்து அணியப்படும் திருநீற்றின் புனிதம் போன்று புனிதத் தன்மை உடையவர்கள்; தேசினால் எத்திசையும் விளக்கினார் - அவர்கள் தாம் கொண்டுள்ள புனிதத் தன்மையால் அருளின் வெளிப்பாடு விளங்க எல்லாத் திசைகளிலும் ஞான ஒளி பரவச் செய்தனர்; பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார் - சொல்லால் எடுத்துக் கூற முடியாத எல்லையில்லாப் பெருமையுடன் திகழ்பவர்கள்.

### பொழிப்புரை

குற்றமில்லா உருத்திராக்க மணியினைத் தரித்துள்ள திருமேனியில் அணியப்படும் திருநீற்றின் புனிதம் போன்று உள்ளத்திலும் புனிதத் தன்மை உடையவர்கள். அவர்கள் தமது புனிதத் தன்மையால் அருள் வெளிப்படுமாறு எல்லாத் திசைகளிலும் ஞான ஒளி பரவச் செய்தனர். சொல்லினால் எடுத்துக் கூற முடியாத எல்லையில்லாப் பெருமையுடன் திகழ்பவர்கள்.

### அருஞ்சொற்பொருள்

மாசு - குற்றம்; மணி - உருத்திராக்க மணி; உள்ளும் - உள்ளமும்; புனிதர்கள் - தூய்மையானவர்கள்; தேசு - ஒளி; விளக்கினார் - விளங்கச் செய்தனர்; பேச ஒண்ணா - சொல்லாற் கூறமுடியா; பிறங்கினார் - விளங்கினர், திகழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்**
**மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்**
**ஓது காதல் உரைப்பின் நெறி நின்றார்**
**கோது இலாத குணப் பெருங் குன்றனார்.**

## சொற்பொருள்

பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும் - இத்தகைய பெருமையுடைய அடியவர்கள் ஐம்பூதங்களும் தமது நியைினின்றும் கலங்கிய போதும்; மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார் - உமாதேவியாரைத் தன் இடப்பாகத்தில் கொண்டு விளங்கும் சிவபிரானின் தாமரை மலர்போன்ற திருவடியை மறவாது ஏத்தி மகிழ்பவர்கள்; ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார் - சான்றோர்களால் எடுத்துக் கூறப்பட்ட, உயிர்களிடத்தில் காட்டும் அன்பின் வழியில் தவறாது நிற்பவர்கள்; கோது இலாத குணப்பெரும் குன்றனார் - குற்றமற்ற நற்குணத்தின் பெரிய மலைபோன்ற உறுதியுடையவர்கள்.

## பொழிப்புரை

இத்தகைய பெருமையுடைய திருக் கூட்டத்து அடியவர்கள்; ஐம் பூதங்கள் தமது நிலை தவறிக் கலங்கி நின்றாலும், உமையம்மையைத் தனது இடப் பாகத்தில் கொண்டுள்ள சிவ பிரானின் தாமரை மலர் போன்ற திருவடிகளை மறவாமல் ஏத்தி மகிழ்பவர்கள். சான்றோரால் எடுத்துக் கூறப்பட்ட உயிர்களிடத்தில் காட்டும் அன்பின் வழியில் தவறாது நிற்பவர்கள். குற்றமில்லாத நற்குணப் பெருமலை போன்ற உறுதியுடையவர்கள்.

## அருஞ்சொற்கள்

ஐம்பூதங்கள் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்; மாதொர் பாகர் - சிவ பெருமான்; ஓது காதல் - கூறப்பட்ட அன்பின்; உறைப்பின் - தவறாது; கோது - குற்றம்; குன்றனார் - மலையை ஒத்தவர்.

8. **கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்**

## சொற்பொருள்

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார் - செல்வமில்லாத நிலையில் வறுமையுற்ற போது துன்புறுதல் கொள்ளாத இயல்பும், பெரும் பொருள் எய்தும் போது மகிழ்ச்சி கொண்டு ஆரவாரித்தலும் இல்லாது எக்காலத்திலும் சமநிலையில் விளங்கும் சிறப்பு உடையவர்கள்; ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார் - அத்தகைய அடியவர்கள் ஓடு போன்ற பொருளாக இருந்தாலும், பொன்போன்ற உயர்ந்த பொருளாக இருந்தாலும் விருப்பு வெறுப்பின்றி நோக்கும் இயல்புடையவர்கள்; கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி - அவர்கள் இறைவனை உள்ளத்தில் சேர்த்து வைத்த அன்பினால் வழிபடுவதைத் தவிர; வீடும் வேண்டா விறலின் விளங்கினார் - அப் பெருமானின் முத்திப்பேறு என்றாலும் தமக்கு வேண்டாம் என்று கூறும், பயன் கருதாது பக்தி செய்யும் உறுதி வாய்ந்தவர்கள்.

## பொழிப்புரை

திருக் கூட்டத்தினர் வறுமையிலும் செல்வத்திலும் சமநிலையில் விளங்கும் சிறப்பு உடையவர்கள். ஓட்டையும் பொன்னையும் விருப்பு வெறுப்பின்றி நோக்கும் இயல்புடையவர்கள். உள்ளத்தில் சேர்த்து வைத்த அன்பினால் இறைவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடுதலைத் தவிர, வீடு பேற்றினையும் வேண்டாமென்று கூறும் உறுதி வாய்ந்தவர்கள்.

**அருஞ்சொற்பொருள்**

கேடு - வறுமை, குறைவு; ஆக்கம் - செல்வம், மிகுதி; திருவினார் - செம்மையுடையவர், சிறப்புடையவர்; ஒக்கவே - சமமாக; கூடும் - சேர்ந்த, கூட்டிய; வீடு - முத்தி நிலை; விறலின் - உறுதியில்.

9. **ஆரம் கண்டிகை ஆடையுங் கந்தையே**
**பாரம் ஈசன் பணியல தொன்றிலார்**
**ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்**
**வீரம் என்னால் விளம்புந் தகையதோ?**

**சொற்பொருள்**

ஆரம் கண்டிகை - இவ்வடியார்கள் மாலையாக அணிவது உருத்திராக்க மாலையாகும்; ஆடையும் கந்தையே - உடுப்பதும் எளிமையான கிழிந்த ஆடையாகும்; ஈசன் பணி அலது ஒன்றிலார் - ஈசற்குப் புரியும் திருத் தொண்டு அன்றி வேறொரு பணியும் இல்லாதவர்கள்; ஈர அன்பினர் - ஈசன்பால் கசிந்துருகும் அன்புடையவர்கள்; யாதும் குறைவிலார் - குறைவற்ற மனத்தினை உடையவர்கள்; வீரம் என்னால் விளம்பும் தகையதோ - இத்தகையவர்களின் பெருமை பற்றி வார்த்தைகளால் உரைப்பது என்னால் இயலக் கூடியதோ? இயலாது.

**பொழிப்புரை**

இவ்வடியார்கள் மாலையாக உருத்திராக்கமும் ஆடையாகக் கிழிந்த துணியையும் கொண்டவர்கள். ஈசனுக்குத் தொண்டு செய்வதைத் தவிர வேறு பணி இல்லாதவர்கள். ஈசனிடத்துக் கசிந்துருகும் அன்புடையவர்கள். குறைவற்ற மனமுடையவர்கள். இத்தகையவர்களின் பெருமையை வார்த்தைகளால் உரைப்பது என்னால் இயலக் கூடியதோ? இயலாது.

**அருஞ்சொற்பொருள்**

ஆரம் - மாலை; கண்டிகை - உருத்திராக்கம்; கந்தை - கிழிந்த துணி; பாரம் - தொண்டு; ஈரம் - குளிர்ந்த; வீரம் - பெருமை; விளம்பும் - சொல்லும், கூறும்; தகையதோ - இயலக் கூடியதோ? தகுதியானதோ.

10. **வேண்டு மாறு விருப்புறும் வேடத்தர்**
**தாண்ட வப்பெரு மான்தனித் தொண்டர்கள்**
**நீண்ட தொல்புக ழார்தம் நிலைமையை**
**ஈண்டு வாழ்த்துகேன் என்னறிந் தேத்துகேன்?**

**சொற்பொருள்**

வேண்டுமாறு விருப்புறும் வேடத்தர் - இவ்வடியார்கள் தாம் விரும்பியவாறு பல்வேறு வேடத்தினைக் கொள்பவர்கள்; தாண்டவப் பெருமான் தனித் தொண்டர்கள் - ஆனால் திருநடனம் புரிகின்ற கூத்தப் பெருமானின் தனித் தொண்டர்களாய் ஒருமித்து விளங்குபவர்கள்; நீண்ட தொல் புகழார் தம் நிலைமையை - அளவற்ற தொன்மையாகிய புகழையுடைய வர்களாகிய இவ் அடியார்களுடைய நிலையை; ஈண்டு வாழ்த்துகேன் என்னறிந்து ஏத்துகேன் - இங்கு எடுத்துக் கூறி வாழ்த்தப் புகும் யான், என்னவென்று அறிந்து போற்றுவேன்.

**பொழிப்புரை**

இவ்வடியார்கள் தாம் விரும்பியவாறு பல வேடங்களைக் கொண்டவர் களாயினும், திருநடனம் புரிகின்ற கூத்தப் பெருமானின் தொண்டர்களாய் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் விளங்குபவர்கள். அளவில்லாத தொன்மையான புகழையுடைய இவர்களது நிலையை இங்கு எடுத்துக்கூறி வாழ்த்தப் புகும் யான், என்னவென்று அறிந்து போற்றுவேன்?

**அருஞ்சொற்பொருள்**

தாண்டவப் பெருமான் - நடராசப் பெருமான்; தொல்புகழ் - பழமையான புகழ்; ஈண்டு - இங்கு; ஏத்துவேன் - போற்றுவேன்.

11. **இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான்**
**அந்தம் இல்புகழ் ஆலால சுந்தரன்**
**சுந்த ரத்திருத் தொண்டத் தொகைத்தமிழ்**
**வந்து பாடிய வண்ணம் உரை செய்வாம்**

**சொற்பொருள்**

இந்த மாதவர் கூட்டத்தை - இத்தகைய பெருமை மிக்க அடியவர் கூட்டத்தை; எம்பிரான் அந்தம் இல் ஆலால சுந்தரன் - எம் தலைவராகியவரும் எல்லையில்லாத புகழ் மிக்கவருமாகிய ஆலால சுந்தரர்; சுந்தரத் திருத் தொண்டத் தொகைத்தமிழ் - அழகிய திருத் தொண்டத் தொகை என்னும் திருப் பதிகத்தை தமிழால்; பாடிய வண்ணம் உரை செய்வாம் - அருளிச் செய்தவாறு உரைக்கத் தொடங்குவோம்.

**பொழிப்புரை**

இத்தகைய பெருமை மிக்க அடியவர் திருக் கூட்டத்தை எம் தலைவரும் புகழ் மிக்கவருமாகிய ஆலால சுந்தரர் அழகிய திருத் தொண்டத் தொகை என்னும் பதிகத்தைத் தமிழால் அருளியவாறு உரைக்கத் தொடங்குவோம்.

**அருஞ்சொற்பொருள்**

மாதவர் - பெருமையுடைய அடியவர்; பிரான் - தலைவன்; அந்தமில் - எல்லையில்லாத; சுந்தரம் - அழகு; வண்ணம் - விதமாக;

## குறிப்புகள்

1. **பெரிய புராணம் கூறுகின்ற தேவாசிரியன் மண்டபச் சிறப்புகள்:**

   **அ)** சிவபெருமான் வீற்றிருந்து அருள்செய்யும் பூங்கோயில் என்னும் இடத்திலுள்ள கோயிலின் ஒளி விளங்கும் திருமுற்றத்தில் பழைமையான மதில்கள் சூழப்பட்ட திருவாயிலின் முன்னர் தேவாசிரியன் மண்டபம் அமைந்துள்ளது.

   **ஆ)** பிரமன், இந்திரன், திருமால் முதலான தேவர்களும் நீங்காமல் நிறைந்துள்ள இடமாக இது விளங்குகிறது.

   **இ)** சிவனடியார்களின் மேனி மீது பூசப்பட்டிருக்கும் வெண்ணீற்றின் ஒளியாலும், அவர்கள் நாவினின்றும் எழும் ஐந்தெழுத்தின் ஓசை பொலிவுற்று விளங்குவதாலும் பரந்துள்ள ஆயிரம் பாற்கடல்கள் ஒன்று சேர்ந்துள்ளதைப் போல இதே தேவாசிரிய மண்டபம் காணப்பட்டது.

   **ஈ)** எல்லா உலகங்களுக்கும் காரணகர்த்தாவான சிவபெருமானின் அடியவர்களின் எல்லா உலகங்களையும் ஆளுதற்கு உரியவராதலால், எல்லா உலகத்தினரும் இங்கு வந்து சேருவதால், உலகங்களெல்லாம் ஒன்றுசேர்வதைப் போல தேவாசிரிய மண்டபம் சிறந்து விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **பெரிய புராணம் கூறுகின்ற திருக் கூட்டத்தவர் (சிவனடியார்கள்) சிறப்பு:**

i. உயிர்களின் துன்பத்தைப் போக்குபவர்கள்.

ii. திருமேனிகளில் வெண்ணீறு பூசியவர்கள்.

iii. உயிர்களைக் காக்கும் திருவைந்தெழுத்தை ஓதுபவர்கள்.

iv. சிவபெருமான் தாள்களையே பற்றி நிற்பவர்கள்.

v. சிவபெருமானால் முன்னரே விரும்பி ஆட்கொள்ளப்பட்டவர்கள்.

vi. சிவபெருமானை நினைந்து என்புருகி மயிர்கள் புளகாங்கிதம் அடைய நெகிழ்ச்சியுபவர்கள்.

vii. இறைவனுக்கே தமது கைகளினால் திருப்பணிகள் செய்யும் கடமைப்பாடு உடையவர்கள்.

viii. எண்ணிக்கை அளவிட முடியாத அளவுடையவர்கள்.

ix. மேனியிற் பூசும் திருநீறு போன்று உள்ளமும் புனிதமானவர்கள்.

x. எல்லாத் திசைகளிலும் ஞான ஒளி பரப்புபவர்கள்.

xi. பேசமுடியாத பெருமைகளை உடையவர்கள்.

xii. ஐம்பூதங்கள் நிலை கலைந்தாலும் சிவனடி மறவாதவர்கள்.

xiii. சிவ பக்தியில் வைராக்கியம் கொண்டு நிற்பவர்கள்.

xiv. குற்றமற்ற குணமலை போன்றவர்கள்.

xv. பொருட் செல்வமானது கூடுதலைப் பற்றியோ, குறைதலைப் பற்றியோ கருதாதவர்கள்.

xvi. ஓட்டையும், செம்பொன்னையும் சமமாகவே கருதுபவர்கள்.

xvii. உள்ளத்தில் திரண்ட அன்பினால் சிவபெருமானை வணங்குதலேயன்றி வீட்டின்பத்தையும் விரும்பிக் கேட்காத இயல்பினர்.

xviii. உருத்திராக்க மாலை அணிந்து, கிழிந்த ஆடையுடுத்து, ஈசன் அன்பையே நினைத்து வாழும் மனத்திண்மை மிக்கவர்கள்.

xix. பல்வேறு வேடங்களைத் தாம் விரும்பியவாறு கொண்டிருப்பவர்கள். ஆனாலும் நடமாடும் சிவபெருமானின் தனித் தொண்டர்கள் எனும்படி ஒன்றுபட்டவர்கள்.

xx. ஆலால சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் புகழ்ந்த பாடப் பெற்றவர்கள்.

● ● ● ● ● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. திலகவதியார்

1. பல்லவர் காலத்தில் சைவ சமயப் பணிபுரிந்த பெண்மணிகளுள் திலக வதியாரும் ஒருவர்.
2. திருநாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்றினூடாக, அவரது தமக்கையாராகிய சைவ சமய குரவர்களில் ஒருவரான திலக வதியார் பற்றியும் சேக்கிழார் கூறியுள்ளார்.
3. திலகவதியார், திருநாவுக்கரசர் ஆகியோரின் தாய் தந்தையர்கள் புகழனாரும் மாதினியாரும் ஆவர்.
4. சோழ நாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் இடையிலுள்ள திருமுனைப்பாடி நாட்டின் திருவாமூர் இவர்கள் பிறந்த இடமாகும்.
5. இவர்கள் வாழ்ந்த கி.பி ஆறாம் நூற்றாண்டுப் பிற்பகுதியும் ஏழாம் நூற்றாண்டு முற்பகுதியுமான காலப்பகுதியில் தமிழ் நாட்டில் சமண சமயமானது அரச ஆதரவுடன் வளர்ச்சி கண்டிடச் சைவ சமயமானது நலிவுற்றுக் காணப்பட்டது.



திலகவதியார்

## திருவவதாரம்

6. திலகவதியார் திருவவதாரம் பற்றிப் பெரிய புராணத்தில் சேக்கிழார் பின்வரும் பாடலால் எடுத்துக் காட்டியுள்ளார்.

**புகழனார் தமக்குரிமைப் பொருளில்குலக் கொடியின்கண்**
**மகிழவரு மணம்புணர்ந்த மாதினியார் மணிவயிற்றில்**
**நிகழுமலர்ச் செங்கமல நிரையிதழி னகவையினிற்**
**றிகழவருந் திருவனைய திலகவதி யார்பிறந்தார்**

**பொருள்** : புகழனார், தமக்குரிமையான எல்லையிலாப் புகழையுடைய குலமரபில் வந்த மாதினியாரை மகிழ்ச்சியோடு திருமணஞ் செய்ததனால், மாதினியாரின் ஒளிபொருந்திய வயிற்றில் செந்தாமரை மலரின் அக இதழில் மேவும் திருமகள் போன்று திலகவதியார் திருவவதாரஞ் செய்தார்.

(மணிவயிறு - ஒளிபொருந்திய வயிறு, அழகான வயிறு; நிகழுமலர் - பூத்த மலர்; திகழ - விளங்க; நிரையிதழின் - நிரையாகவுள்ள இதழ்களின்; அகவயில் - உள் இதழில்)

### 7. நிறைவேறாத திருமணம்

திலகவதியாருக்கு உரிய வயது வந்ததும் பெரியவர்கள் கலிப்பகையாரைக் கணவனாக நிச்சயித்ததனால் மணநாளும் குறிக்கப்பட்ட நிலையில், அரசனின் ஆணைப்படி யுத்தகளத்துக்கு போர் புரியச் சென்ற கலிப்பகையார், போரில் வீர மரணம் எய்தினார். ஏற்கெனவே தந்தையார் உயிர் நீத்த துயரந் தாளாது தாயாரும் மரணமடைந்து விட்டார். இப்போது தனக்கென நிச்சயிக்கப்பட்ட கலிப்பகையாரும் இறந்ததனால் தானும் உடன் கட்டை ஏறுவதற்குத் திலகவதியார் தயாரானார்.

### 8. தம்பியாருக்காக வாழத் துணிதல்

திலகவதியார் உடன் கட்டை ஏறத் தயாரான போது பன்னிரு வயதினராகிய தம்பியார் மருணீக்கியார், தாய் தந்தையரை இழந்த எனக்கு நீங்கள் தான் ஆதரவாக இருந்தீர்கள்; நீங்களும் இறக்கத் துணிந்தால் எனக்கு யாரும் துணையில்லை. நானும் உங்களுடன் இறந்து விடுகின்றேன் என்று கூறினார். தம்பியாரின் நிலைகண்டு மனம் இளகிய திலகவதியார், தம்பிக்காக உயிர்வாழத் தலைப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மருணீக்கியார் சமணராதல்

அ) தொடர்ந்து வந்த துன்பங்கள் மருணீக்கியாரைச் சமண சமயத்தைச் தழுவச் செய்தது. சமணர்களின் கொள்கைகளால் கவரப்பட்டார். சமணக் கருத்துக்களைக் கூறும் நூல்களைக் கற்றதுடன் சமண சமயஞ்சார்ந்த நூல்களை வெளியிட்டார்.

ஆ) திருப்பாதிரிப் புலியூர் என்னும் இடத்திலுள்ள சமண மடத்தின் தலைமைக் குருவாக தர்மசேனர் எனும் பெயருடன் விளங்கினார்.

இ) தம்பியாரின் நிலை கண்டு திலகவதியார் கலங்கினார். தான் யாருக்காக வாழ விரும்பினாரோ, அந்தத் தம்பியே தன்னை விட்டு விலகிப் புறச் சமயத்தில் சேர்ந்ததைக் கண்டு துன்புற்றார்.

ஈ) திலகவதியார் சிவ வழிபாட்டில் நிலை நின்றார். தான் வசித்த வீட்டை விட்டுக் கெடில நதிக் கரையில் விளங்கும் திருவதிகை வீரட்டா னேஸ்வரர் ஆலயமடத்தில் வாழ்ந்து கொண்டு சிவத்தொண்டில் ஈடுபட்டு வந்தார்.

10. கோயில் திருப்பணி

அ) திருவதிகை வீரட்டானேஸ்வரர் ஆலயத்தில் திலகவதியாரின் திருப்பணிகள் எப்போதும் நடைபெற்று வந்தன.

(i) அதிகாலை எழுந்து திருப்பள்ளி எழுச்சிக்கு முன்னர் ஆலயத்தைக்கூட்டித் துப்புர வாக்கல்.

(ii) சாணத்தால் மெழுகல்

(iii) பூசைக்கு வேண்டிய பூக்களைப் பறித்தலும் மாலைகட்டி வழங்கலும்.

(iv) தூப தீபங்களை ஏற்றி வழிபாடு செய்தல் முதலானவை திலகவதியாரின் அன்றாடச் சிவத் தொண்டுகளில் அடங்குவன.



திருவதிகை
வீரட்டானேஸ்வரர் ஆலயம்

ஆ) பிற்காலத்தில் திலகவதியாரின் சரியைத் தொண்டுகளைப் பின்பற்றியே உழவாரப் பணியடங்கலான பல திருத் தொண்டுகளை தம்பியாரான திருநாவுக்கரசரும் செய்தாரெனக் கருதமுடியும்.

11. திலகவதியார் இறைவனிடம் விண்ணப்பித்தல்

அ) சிவபெருமானின் எட்டு விதமான வீரச் செயல்கள் இடம்பெற்ற தலமாக அட்ட வீரட்டானேஸ்வரம் விளங்குகிறது. அங்குள்ள திரு வீரட்டானேஸ்வரப் பெருமானிடம் திலகவதியார் தினந்தோறும் விண்ணப்பஞ் செய்து வந்தார். அது தனது தம்பியாரை ஆட்கொள்ள வேண்டும் என்பதாகும்.

ஆ) திலகவதியாரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட இறைவன் ஒருநாள் அவரது கனவில் தோன்றி "நீ உன் மனக் கவலையினை ஒழிவாயாக! உன்னுடன் பிறந்தான் முற்பிறப்பில் தவ முனிவனாய் இருந்து என்னை அடையத் தவம் செய்தான். அதில் சிறிது தவறியதில் இப் பிறவியைப் பெற்றான். அவனை இனிச் சூலை நோய் கொடுத்து ஆட்கொள்வோம்" என்று அருளினார்.

12. சூலை நோய்

சிவ பக்தையாகிய திலகவதியாரின் வேண்டுதலின்படி, அவரது தம்பியாரை ஆட்கொள்ளச் சித்தமான சிவபெருமான், தருமசேனர் வயிற்றில் கொடிய சூலை நோய் தோன்றும்படி செய்தார். சமணர்களின் மந்திரங்களுக்குக் கட்டுப்படாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன சூலை நோயினால் வருந்திய தர்மசேனருக்குத் தமக்கையாரின் நினைவு வந்தது.

**13. திருவதிகைக்கு வந்து சேர்தல்**

நோயினால் மிகவும் வருந்திய தர்மசேனர், தமக்கையாரிடம் செல்வதே இனித் தன்னால் முடிந்த காரியம் எனக் கருதினார். சமணர்கள் யாரும் அறியாதவாறு நள்ளிரவில் திருவதிகையை அடைந்தார். திருமடத்தில் தங்கியிருந்த திலகவதியார் காலில் வீழ்ந்து "என்னால் இந்தச் சூலை நோயைத் தாங்க முடியவில்லை; இதிலிருந்து கடைத்தேறும் வழியைத் தாங்கள்தான் காட்டவேண்டும்" என்று கதறியழுதார். இது வீரட்டானப் பெருமானின் திருவிளையாடல் என்பதை உணர்ந்து கொண்ட திலகவதியார் "இறைவன் திருவருளினால் தான் இது நீங்க வேண்டும்; நீ இறைவனுக்குத் தொண்டு செய்வாயாக" என்று கூறித் தம்பியாரை திரு வீரட்டானேஸ்வரரின் சந்நதிக்குக் கூட்டிச் சென்றார்.

**14. திலகவதியார் மருணீக்கியாருக்குக் குருதீட்சை அளித்தல்.**

திலகவதியார் தனது தம்பியான மருணீக்கியாருக்கு குருதீட்சை அளித்து அவரை மீண்டும் சைவ நெறியைப் பின்பற்றும் விதமாகப் பக்குவப் படுத்தினார். திருவைந்தெழுத்தினை ஓதித் திருநீற்றினை வழங்கினார். திலகவதியார் வழங்கிய திருநீற்றை அணிந்ததும் மருணீக்கியார் புதுப் பொலிவுடன் திகழ்ந்தார்.

**15. சிவபெருமான் மருணீக்கியாரை ஆட்கொள்ளல்**

திருவதிகை வீரட்டானேஸ்வரப் பெருமானின் திருப்பள்ளியெழுச்சிப் பூசைகள் நடந்து கொண்டிருக்கையில், தமக்கையாருடன் ஆலயத்தை வலம் வந்த மருணீக்கியாருக்குப் பழைய நினைவுகள் உள்ளத்தில் கொந்தளித்தன.

**கூற்றா யினவாறு விலக் ககலீர்**
**கொடுமை பலசெய்தன நான் அறியேன்**

எனும் பதிகத்தினைப் பாடினார். சூலை நோயும் இறைவன் திருவருளினால் நீங்கியது. மருணீக்கியார் செந்தமிழால் தம்மைப் பாடிப் பரவும் திறன் கண்ட சிவபெருமான் "நாவுக்கரசா! எழுந்திரு!" என அசரீரியாக விளித்து அருள் புரிந்தார். அன்றுமுதல் மருணீக்கியாரின் திருநாமம் திருநாவுக்கரசர் ஆயிற்று.

**16. திலகவதியார் சிவபதம் அடைதல்**

தனது தம்பியாரைச் சிவபெருமான் ஆட்கொண்டதன் மூலம் (ஆட்கொள்ளல்- ஆளாய்க்கொள்ளல், அடியவராய்க் கொள்ளல்); தனது எண்ணம் ஈடேறிய திருப்தியுடன் இன்னும் சில காலம் திருவதிகை வீரட்டானேஸ்வரப் பெருமானுக்குத் தொண்டு செய்து திலகவதியார் சிவபதம் அடைந்தார்.

## குறிப்புகள்

**திலகவதியார்**
|
**திருவவதாரம்**
|
**நிறைவேறாத திருமணம்**
|
**தம்பிக்காக உயிர் வாழ்தல்**
|
**தம்பியார் மதம் மாறியமைக்காக வருந்துதல்**
|
**கோயில் திருப்பணி**
|
**இறைவனிடம் தம்பியாருக்காக வேண்டுதல்**
|
**இறைவன் சூலைநோய் கொடுத்து நாவுக்கரசரை ஆட்கொள்ளல்**
|
**சிவபதமடைதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. மகோற்சவம்

1. ஆண்டு தோறும் ஆலயங்களில் நடைபெறும் தொடர்ச்சியான பத்து, பன்னிரண்டு, பதினைந்து அல்லது இருபத்தைந்து நாட்களுக்கான திருவிழாவினை மகோற்சவம் (மகாஉற்சவம்) என அழைப்பர். கோவில் மூலமூர்த்திகளைப் பலவிதமான வாகனங்களில் ஏற்றி வீதி வலம் வரும் விழாவாக இது அமையும்.

2. மகோற்சவம் என்பது (மகாஉத்சவம்)பெரிய உயர்வான ஐந்தொழில்களைக் குறிப்பதாகும். மேலும் **உற்சவம்** என்பதற்கு (உத்சவம்) மேலான ஞானத்தையும் யோக மோட்சத்தையும் கொடுப்பது என்னும் கருத்தும் உள்ளது.

3. ஆலயங்களில் இடம்பெறும் மகோற்சவங்கள் இறைவன் ஐந்தொழில்களைச் செய்வதனூடாக உயிர்களைக் காத்து அருளுவதை உணர்த்துகின்றன.

   **அ)** கொடியேற்றத் திருவிழா - படைத்தல்
   **ஆ)** வாகனத் திருவிழாக்கள் - காத்தல்
   **இ)** தேர்த் திருவிழா - அழித்தல்
   **ஈ)** மௌனோற்சவம் - மறைத்தல்
   **உ)** தீர்த்தத் திருவிழா - அருளல்

**4. சாந்தி செய்தல்**

மகோற்சவத்தின் போது கொடியேற்றத்துக்கு முதல் நாள் ஊருக்கு நன்மை உண்டாகுமாறு கிராம சாந்தி செய்யப்படும். அப்போது கோயிலின் மேற்கு மூலையில் வைரவ மூர்த்திக்குப் பூசை செய்யப்படும். மேலும் வீதிகளைச் சுத்தி செய்யும் பொருட்டு வாஸ்து சாந்தி செய்யப்படும். தர்ப்பைப் புல், வைக்கோல் முதலியவற்றால் செய்யப்பட்ட வடிவத்தினை சிவாக்கினி சேர்த்துத் (தீயில் கொழுத்தி) வீதியினூடாக இழுத்துக் கொண்டு செல்லப்படும்.

5. மகோற்சவ ஆரம்பத்தில் மண்ணெடுத்தல், முளையிடுதல், காப்புக் கட்டுதல் முதலான முதற் கிரியைகள் நடைபெறும். திருவிழாவினை இடையூறின்றி நடத்தி முடிப்பதற்காகச் சிவாச்சாரியார் காப்புக் கட்டிக் கொள்வார்.

**6. கொடிமரம்**

மகோற்சவம் இடம்பெறும் ஆலயங்களில் கொடிமரம் அமைக்கப்பட்டிருக்கும். கொடியேற்றத்துடன்தான் மகோற்சவம் ஆரம்பமாகும். கொடியேற்றத்தில் கொடிமரம், திரைச்சீலை, கயிறு ஆகியன முக்கியத்துவம் பெறுகின்றன. கொடிமரம் சிவபெருமானையும், திரைச் சீலை ஆன்மாவையும், கயிறு பாசத்தையும் உணர்த்துகின்றன.

7. கொடியேற்றுவதற்கு முன்னுள்ள தனிக் கொடிமரமானது படைத்தலுக்கு முன் ஆன்மாவும் பாசமும் ஒடுங்கியிருக்கச் சிவம் மாத்திரமுள்ள நிலையைக் காட்டுகிறது. கொடியேற்றத்தின் பின்னுள்ள கொடிமரமானது, படைப்புத் தொழில் நிகழ்ந்த பின்னர் ஆன்மாவும், பாசமும் சிவத்தையே ஆதாரமாகக் கொண்டுள்ளதை உணர்துகிறது. கொடிச் சீலையில் ஆன்மாவைக் குறிக்கும் இடபமும், ஆன்மாவுக்கு அருள்புரிவதற்காக அஸ்திரதேவரும், கும்பம் முதலான மங்கலப் பொருட்களும் இடம்பெற்றிருக்கும்.

**8. கொடியேற்றம்**


**அ)** திருவிழாவின் முதல் நாளில் இடம்பெறுவது கொடியேற்றம்.

**ஆ)** திருவிழாவுக்கு வரும் அடியார்கள் நற்கதி அடையுமாறு இறைவன் எழுந்து அருளுவான் என்னும் நோக்கத்துடன் செய்யப்படுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) இன்னுமொரு கருத்தின்படி சமம், விசாரம், சந்தோஷம், சாது சங்கமம் ஆகிய நாற்குணங்களையும் கால்களாகக் கொண்டதும், வெள்ளை நிறமுடையதுமான, நந்தி எனும் பரிசுத்தமான தர்மதேவதையைப் போன்று ஆன்மாக்களும் தூய்மையுடைய வர்களாய் அந் நாற்குணங்களையும் கொண்டிருப்பார்களானால், இறைவன் அத்தகைய ஆன்மாக்களை அவர்களது தற்போதைய நிலையிலிருந்தும் உயர்த்தி விடுவான் என்று கூறப்படுகின்றது.



கொடியேற்றம்

ஈ) கொடிச்சீலையைக் கொடிமரத்துக் கயிற்றினாற் கட்டிக் கும்பத் தீர்த்தம் தெளித்து, கொடியிலுள்ள இடப தேவர் படத்தைப் பூசித்து, பின் சகல தேவர்களையும் அழைத்து மங்கல வாத்திய, தோத்திர உபசாரங்கள் செய்த பின், விநாயகப் பெருமானுக்குத் தேங்காயுடைத்துக் கொடியேற்றப்படும்.

## 9. கொடிமரப் பூசை

கொடி கட்டிய இடத்தில் சிவபெருமானுக்கும், கொடிமரத்தின் அடியில் லோக பாலகருக்கும், வேறு தேவர்களுக்கும் பூசை செய்யப்படும். அதன் பின் அஸ்திர தேவரில் தெய்வ ஆவாகனம் செய்த பின் ஐந்தொழில்களை(பஞ்ச கிருத்தியங்கள்) ஆற்றி உலகங்களைக் கடவுள் காப்பாற்றுவாராக என்று ஆசீர்வாதம் செய்யப்படும்.

## 10. சுவாமி வெளி வீதி வலம் வருதல்

அ) பலிபீடத்திற்குப் பிரதிஷ்டை, இரட்சா பந்தனம்(காப்புக் கட்டல்) பூசைகள் முடிந்து சுவாமி வெளி வீதி வலம் வரும்.

ஆ) சுவாமி வீதிவலம் வருகையில் வாயில் முன்னிலையில் சங்கீதம் முதலான உபசாரங்கள் செய்யப்படும்.(பிரம்மாவையும், அட்டத்திக்குப் பாலகரையும் அழைத்து அவர்களுக்கு உபசாரம் செய்தல்).



சுவாமி வீதிவலம் வருதல்

இ) அன்றிரவு யாகம் தொடங்கி, அக்கினி காரியம் வரை முடித்து, ஒவ்வொரு நாளும் பகலிலும் இரவிலும், பூசை செய்யப்படும்.

ஈ) ஒவ்வொரு நாளும் அஸ்திரதேவரை எழுந்தருளச் செய்து எட்டுத் திக்குகளிலும் பலியிடுதல் நடைபெறும். இது உலகெங்கணும் திரோதான சக்தியின் முயற்சியால் கன்ம வினைகளை அகற்றி மல பரிபாகம் (மலத்தை நீக்குதல்) செய்தலை உணர்த்துகின்றது.

## 11. தேரோட்டம்

அ) தேர்களை நகரும் கோயில்கள் என்பர். கோயிலின் அமைப்பைப் போலவே தேர்களும் உருவாக்கப்பட்டிருக்கும்.


ஆ) தேர்கள் எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் என்பதை **மானசாரம்** என்னும் நூல் குறிப்பிட்டுள்ளது.

இ) தேர் செய்வதற்குக் கோங்கு, தேக்கு, மருது, வேங்கை போன்ற மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) சதுரம், அறுகோணம், எண் கோணம், பதின்கோணம், பன்னிரு கோணம், வட்டம், நீள்வட்டம், நீள்சதுரம், முட்டை வடிவம் என ஒன்பது வடிவங்களில் தேர்கள் செய்யப்படுகின்றன.




தேரோட்டம்

உ) தேரோட்டத்தின் போது ஒன்று, மூன்று அல்லது ஐந்து தேர்கள் இடம்பெறுவ துண்டு. கோயிலின் தலைமைக் கடவுளுக்கு (மூல மூர்த்திக்கு)ப் பெரிய தேரும், பிற கடவுளர்க்கு முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் தேர்கள் இருக்கும்.

**12. தீர்த்தோற்சவம்**

அ) மகோற்சவத்தில் இறுதியாகத் தீர்த்தத் திருவிழா இடம்பெறும். தீர்த்தத் திருவிழாவின் பின்னர் அடுத்த நாட்களில் இடம்பெறும் பூங்காவனம், வைரவர் மடை முதலானவை மகோற்சவக் கணக்கில் வராதவையாகும். அவை சம்பிரதாய பூர்வமானவை.



தீர்த்தோற்சவம்

ஆ) அருளலைக் குறிக்கும் தீர்த்தத் திருவிழாவிலே அஸ்திரதேவர் தீர்த்தத் திலே மூழ்குதல் திரோதான சக்தியானது பராசக்தியோடு ஒன்றாதலைக் குறிக்கும்.

இ) அடியார்கள் தீர்த்தமாடுவது திரோதான சக்தியால் தாங்கப்பட்ட ஆன்மாக்களும் பராசக்தியிலே படிந்து சிவனருளைப் பெற்றுய்தலைக் குறிக்கும்.

**13. கொடியிறக்கம்**

கொடியிறக்கமானது மகோற்சவ நிறைவை உணர்த்துவதாகும். ஐந்தொழில்களின் முடிவையும், ஆன்மாக்கள் முத்தியடைதலையும் குறிப்பதாகும்.

**14. சாம்பவ தீட்சை**

திருவிழாக்களைச் சாம்பவ தீட்சை என அழைப்பர். முறைப்படி தீட்சை பெறாதவர்களும் தீயவர்களும், மிருகங்கள் - பறவைகள் முதலியனவும் இத் திருவிழாக்களைக் காணுவதால் பெறுகின்ற சிவப்பேறே சாம்பவ தீட்சையாகும்.

## குறிப்புகள்

மகோற்சவம்

- கொடியேற்றம் (படைத்தல்)
- வாகனத் திருவிழாக்கள் (காத்தல்)
- தேர்த் திருவிழா (அழித்தல்)
- மௌனோற்சவம் (மறைத்தல்)
- தீர்த்தத்திருவிழா (அருளல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. சமய குரவர் நால்வர்

சைவ சமய குரவர்கள் திருஞான சம்பந்த மூர்த்திநாயனார், திருநாவுக்கரச நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய நால்வருமாவர். இவர்கள் **சமய குரவர் நால்வர்** என அழைக்கப்படுவர். சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்குப் பெற்றதுடன் ஆட்சி புரிந்த அரசர்களும் அச் சமயங்களுக்கு ஆதரவு கொடுத்ததால், சைவசமயம் நலிவுற்றுக் காணப்பட்ட வேளையில் சைவசமயமே மெய்ச்சமயம் என்பதைத் தமது அற்புதங்கள் மூலம் சாதித்துக் காட்டியவர்கள் இவர்கள். மீண்டும் சைவ மதமானது புத்தெழுச்சி பெறுவதற்காக இவர்கள் ஆற்றிய இறை பணி மகத்தானது. சிவபெருமானின் உண்மை இருப்பினை மறுத்து நாத்திகம் பேசியவர்களைச் சிவாகமங்களின் துணை கொண்டு எதிர் வாதம் புரிந்தும், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள இறைவனின் பல்வேறு திரு விளையாடல்களையும், அருட் செயல்களையும் எடுத்துரைத்தும் சைவக் கடவுளரிடத்தும், சைவ சமயத்தின் மீதும் மக்கள் நம்பிக்கை வைக்கவும், சிவ சமய வழிபாட்டைப் பக்தியுடன் மேற்கொள்ளவும் வகை செய்தனர்.

ஊர்கள் தோறும் சென்று மக்களைத் தட்டி எழுப்பி அவர்களுக்கிடையே காணப்பட்ட பல்வேறு சாதி, சமயப் பூசல்களை ஒழித்து அனைவரும் சிவபெருமானின் முன் சமம் என்பதை வலியுறுத்தினர். "கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" எனும் அப்பரடிகளின் வாசகத்திற்கிணங்க ஒற்றுமையை வளர்த்தனர். தமது பாத யாத்திரை மூலம் சைவ மக்களை எழுச்சி கொள்ளச் செய்ததுடன், பழைய ஆலயங்களைப் புதுப்பித்தும், புதிய ஆலயங்களைக் கட்டுவித்தும், ஆலய பூசைகள் ஒழுங்காக நடைபெறச் செய்தும், சமூகப் பணிகள் பல புரிந்தும், இறையருளால் அற்புதங்கள் பல நிகழ்த்திக் காட்டியும் நம்பிக்கையையும் பக்தியையும் சிவ சமயத்தின்பால் வளர்த்தெடுத்தனர். சடங்குகள் முக்கியம் பெற்றிருந்த காலகட்டத்தில் நான் மார்க்கங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய ஆன்மீக நெறிகளில் அவரவர் பக்குவத்திற்கேற்ப வாழ்ந்து இறைவனை அடையலாமென உணர்த்தினர். தாமும் அத்தகைய நெறிகளைப் பின்பற்றி முத்தியடைந்தனர். காலத்தினால் அழிக்கமுடியாத சமய குரவர்களின் தேவார, திருவாசகப் பனுவல்கள் சைவ சமயத்திற்கும் தமிழ்மொழிக்கும் என்றென்றும் பெருமை சேர்ப்பன ஆகும். பன்னிரு திருமுறைகளில் முதல் எட்டுத் திருமுறைகளும் சமய குரவர் நால்வரின் தெய்வீகப் பாடல்களை உள்ளடக்கியனவாகும்.

## அ) திருஞான சம்பந்தர்


திருஞான சம்பந்தர்

1. தமிழ்நாட்டின் சீர்காழித் திருப்பதியில், அந்தணர் குலத்தில் சிவபாத விருதயருக்கும், பகவதி அம்மையாருக்கும் மகனாக ஆதிரை நட்சத்திர நன்னாளில் திருஞான சம்பந்தப் பெருமான் அவதரித்தார். இவரது காலம் கி.பி 6ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியாகும்.
2. சம்பந்தர், பாலறாவாயர், பரமசமயகோளரி, புகலியர்கோன், தோணிபுரத் தோன்றல், ஆளுடைய பிள்ளையார், ஞானக் குழந்தை என்பன இவரைச் சைவ சமயவுலகம் அழைக்கும் பல்வேறு பெயர்களாகும்.
3. மூன்று வயதாயிருக்கும்போது தந்தையுடன் திருக் கோயிலுக்குச் சென்ற குழந்தையைத் திருக்குளத்தின் படிக்கரையில் இருத்திவிட்டு சிவபாதவிருதயர் குளத்தில் இறங்கி மூச்சடக்கி நீராடினார். நீருட்சென்ற தந்தையாரைக் காணாத குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோவிலிலிருந்த சிவனையும், உமையம்மை யாரையும் நோக்கி “அம்மையே அப்பா” என வெம்பி வெம்பி அழுதது. குழந்தையின் அழுகுரல் கேட்டு இரங்கிய இறைவனும் இறைவியும் அம்மையப்பராகக் குழந்தைமுன் தோன்றினர். உமாதேவியார் பொற்கிண்ணத்தில் திருமுலைப்பாலைக் கறந்து குழந்தைக்குப் பருகக் கொடுத்தருளினார். பாலைப் பருகிய குழந்தையின் அழுகை நின்றது. அம்மையப்பர்கள் மறைந்தனர். நீராடி மீண்ட சிவபாதவிருதையர் பால்வடியும் வாயோடு நின்றிருந்த குழந்தையைப் பார்த்துக் கோபமுற்று “யார் தந்த பாலைப் பருகினாய்” என்று சிறு தடிகொண்டு அதட்டுகையில், அப்போது விண்ணிலே காட்சியளித்துக் கொண்டிருந்த அம்மையப்பரைக் குழந்தை சுட்டிக்காட்டி **தோடுடைய செவியன்** எனும் தேவாரப் பதிகத்தைப் பாடி அற்புதம் விளைவித்தது. தந்தையாரும் இறைவனின் அருளை வியந்து குழந்தையை அழைத்துச் சென்று தோணிபுரத்து ஈசனான தோணியப்பரை வணங்கினார்.



**உமையம்மையாரிடம் பால் குடித்தல்**

4. ஞானசம்பந்தர் திருக்கோலக்காத் திருத்தலத்தினை அடைந்து தமது பிஞ்சுக்கைகளினால் தாளம் போட்டு **மடையில் வாளை** என்னும் பதிகத்தைப் பாடினார். சம்பந்தரின் தளிர் போன்ற கைகள் வருந்தாமலிருக்க இறைவன் அருளினால் திருவைந்தெழுத்துப் பொறிக்கப்பட்ட பொற்றாளம் கிடைத்தது. அத்தாளத்தில் ஒலி எழாமையினால் இறைவியின் பேரருளால் ஓசை கிடைத்தது. இதனால் அத்தலத்திலுள்ள இறைவியை **ஓசை கொடுத்த நாயகி** என வழிபட்டனர்.

5. சிதம்பரத்திற்கு அருகிலுள்ள திருவெருக்கந்தம் புலியூரினைச் சேர்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் சீர்காழிக்கு வந்து சம்பந்தரை வணங்கிப் பாடல்களை யாழில் மீட்டிப் பாடினார். அதைக்கேட்ட சம்பந்தப் பெருமான், தாம் பாடும் பாடல்களை அவரையே யாழ் மீட்டிப் பாடுமாறு வேண்டினார். அன்றுமுதல் சம்பந்தரின் பதிகங்களை திரு நீலகண்ட யாழ்ப்பாணரே யாழில் மீட்டிப் பாடிவரலானார்.

6. சம்பந்தர் திருவரத்துறை இறைவனைத் தரிசிப்பதற்காகத் தந்தையாரின் தோழிலிருந்து இறங்கி நடந்து சென்றார் நடப்பதற்குச் சிரமப்பட்டபடி மெதுவாக நடந்து மாறன்பாடி என்னும் இடத்தை அடைந்து அன்றிரவு அங்கே துயில்கொண்டார். சம்பந்தரின் திருப்பாதங்கள் கொப்பளித்து வருந்துவதைப் பொறுக்காத திருவருட்டுறை நாதப் பெருமான் அவ்வூரின் அடியவர் ஒருவர் கனவில் தோன்றி “ஞானசம்பந்தன் நம்மிடம் வருகின்றான் அவனுக்குக் கொடுப்பதற்காக முத்துச் சிவிகையும் முத்துக்குடையும் முத்துச் சின்னங்களும் கோயிலில் வைத்திருக்கின்றோம் நீங்கள் அவற்றை அவன்பால் கொண்டு செல்லுங்கள்” என்று பணித்தார்.


அடியவர்கள் அவற்றைச் சம்பந்தரிடம் எடுத்துச் சேர்த்தனர். சம்பந்தரும் திருவைந்தெழுத்தோதிச் சிவிகையில் எழுந்தருளிச் சென்று திருவரத்துறை ஈசனை வணங்கி **எந்தை ஈசன் எம்பெருமான்** எனத் தொடங்கும் பதிகம் பாடினார். இறைவனால் வழங்கப்பட்ட இவ் விருதுகள் யாவும் ஆச்சாரியத் தகுதி பெற்றவருக்கே உரித்ததாகையால் சைவ சமயத்தின் முதற் குரவராகச் சம்பந்தப் பெருமான் விளங்கினார்.

7. சிவனடியார்களின் நோய், துன்பம் ஆகியவற்றையும் இறையருளால் சம்பந்தர் நீக்கியருளினார். விடம் தீண்டிய வணிகனை உயிர்ப்பித்தமை, பூம்பாவையை (சாம்பலை) பெண்ணாக்கியமை முதலானவை உதாரணங்களாகும். திருவீழிமிழலையில் நாவுக்கரசருடன் படிக்காசுபெற்று அடியவர்களின் பசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கியதும், திருமறைக்காட்டில் **சதுரம் மறைதான்** என்னும் பதிகம் பாடி திருக்கதவை மூடச் செய்ததும் சம்பந்தரின் அற்புதங் களாகும்.



வணிகனை உயிர்ப்பித்தமை

8. கூன்பாண்டிய மன்னன் சமண சமயஞ்சார்ந்து சைவ மக்களை வருத்துவதைக் கண்டு அம்மன்னனின் மனைவி மங்கையற்கரசியாரும் முதன் மந்திரி குலச்சிறையாரும் மனம் வருந்தினர். திருமறைக்காட்டில் சம்பந்தர் இருப்பதை அறிந்த பாண்டிமாதேவி குலச் சிறையாரை அங்கு அனுப்பி, சம்பந்தரை மதுரைக்கு வருமாறு அழைப்பித்தார். நாளும் கோளும் சரியில்லை என நாவுக்கரசர் தடுத்தபோதும் நாளும் கோளும் ஈசனடியார்க்கு ஒன்றும் செய்யாது எனக் கூறிப் பாண்டிநாடு சென்ற சம்பந்தர், மதுரைசென்று அங்குள்ள மடம் ஒன்றில் தங்கினார். சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்கு அரசன் ஒப்புதலுடன் சமணர்கள் தீயிட்டனர். இதைக்கண்ணுற்ற சம்பந்தர் பதிகமொன்றின்மூலம் "பையவேசென்று பாண்டியர்க்காகவே" எனப் பாடினார் பற்றிய தீ அணைந்து பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோயாக மாறியது. நடந்ததை அறிந்த பாண்டிமாதேவியும் முதன் மந்திரியும் பாண்டியனின் வெப்பு நோயை நீக்கும்படி சம்பந்தரை வேண்டினர். "யார் எனது நோயை நீக்குகின்றார்களோ அவர்களின் சமயமே மெய்ச்சமயம்" என மன்னன் கூறினான். சமணர்கள் தமது மந்திர தந்திரங்களால் எவ்வளவோ முயன்றும் நோய் தீராமல் அதிகரித்தது. இறுதியில் சம்பந்தர் திரு நீற்றினை எடுத்துப் பாண்டியனின் மேனியில் பூசி **மந்திரமாவது நீறு** எனும் திருநீற்றுப் பதிகத்தைப் பாட வெப்புநோய் நீங்கியது.

9. வெப்பு நோயை நீக்கியமையால் சைவ சமயம் மேன்மையடைய மாட்டாது. அனல்வாதம், புனல்வாதம் ஆகியவற்றிலும் வெல்ல வேண்டும் எனக் கூறிச் சமணர்கள் வாதிட்டனர். இரு பகுதியினரும் தத்தம் சமய உண்மைகளை ஏட்டில் எழுதித் தீயினுள் இட்டனர். சம்பந்தர் **தளிரிள வளரொளி** எனத் தொடங்கும் பதிகத்தினை எழுதியிட்டார். சமணரிட்ட ஏடு எரிந்து சாம்பராகச் சம்பந்தரின் ஏடு எரியாதிருந்தது. பின்னர் இரு பகுதியினரும் புனல்வாதத்தில் ஈடுபட்டனர். சமணர் வைகையாற்றிலிட்ட ஏடு கடலினுட் சென்றது. சம்பந்தர் **வாழ்க அந்தணர்** எனும் பதிகத்தை எழுதியிட்ட ஏடு கடலுட் செல்லாமல் எதிர்ப்பக்கமாகச் சென்று கரையேறியது. **வேந்தனும் ஓங்குக** என அவ்வேட்டில் எழுதப்பெற்றமையினால் கூன் பாண்டியனின் கூனும் நிமிர்ந்தது. அவன் நின்றசீர் நெடுமாறன் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றான். மீண்டும் சைவ சமயத்தவனாக சைவப்பணிகள் புரிந்தான்.

10. சம்பந்தப் பெருமான் தமிழ்நாட்டில் பல்வேறு தலங்களையும் தரிசித்துப் பதிகங்கள் பாடிச் சீர்காழியை மீண்டும் அடைந்தபோது அவரைத் திருமணஞ்செய்து கொள்ளுமாறு பெற்றோர் வற்புறுத்தினர். அவரும் சம்மதித்தார். திருமண நாளில் இறைவனை வணங்கிக் **கல்லூர்ப் பெருமணம்** என்னும் திருப்பதிகம் பாட "சம்பந்தா! நீயும் நின் மனைவியும் இத் திருமணங்காண வந்தவர் அனைவரும் இச் சோதியிற் கலந்து நம்மை வந்தடையுங்கள்" என்ற அசரீரி கேட்டது. அப்போது சோதியொன்று தோன்றியது. சம்பந்தர் **காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி** என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடியவாறு எல்லோரையும் சோதியினுட் கலக்கச்செய்து தமது பதினாறாவது அகவையில் தாமும் தம் மனைவியுடன் சோதியினுட் கலந்தார்.

11. சம்பந்தர் சிவ சோதியினுட் கலந்த தினம் வைகாசி மாத மூல நட்சத்திரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையால், இதுவே அவரது குருபூசைத் தினமுமாகும். திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் சற்புத்திர மார்க்கமான கிரியையில் நின்று சாமீப முத்தியைப் பெற்றவராவார்.

## ஆ) திருநாவுக்கரசு நாயனார்



திருநாவுக்கரசர்


1. திருநாவுக்கரசு நாயனார் சைவ சமயகுரவர்களில் இரண்டாவதாக இடம்பெறுபவர்.
2. இவர் பிறந்த இடம் தமிழகத்தின் திருமுனைப்பாடி நாட்டின் திருவாமூர்.
3. இவரது பெற்றோர் புகழனார், மாதினியார் ஆகியோர். வேளாள குலத்தவர். தமக்கையார் திலகவதியார்.
4. இயற்பெயர் மருணீக்கியார்; சமணர்கள் இட்டபெயர் தருமசேனர்; ஏனைய பெயர்களாக அப்பர், தாண்டக வேந்தர், உழவாரப் படையாளி, சொற்கோ, வாகீசர், வாக்கின் பெருவிறல் மன்னர் ஆகியனவும் உள்ளன.
5. கி.பி 6 ஆம் நூற்றாண்டு திருநாவுக்கரசர் வாழ்ந்த காலமாகும். இவர் 81 ஆண்டுகள் வாழ்ந்து திருப்பணி செய்துள்ளார்.
6. திருநாவுக்கரசர் சித்திரைச் சதய நட்சத்திரத்தில் முத்தி பெற்றவர். இவரது குருபூசைத் தினம் இதுவாகும்.
7. திலகவதியாருக்குப் பெற்றோரும் உறவினரும் இணைந்து வேளாண் குடியைச் சேர்ந்த கலிப்பகையாரைக் கணவனாக நிச்சயித்திருந்தனர். திருமணம் நடைபெறமுன்னர் அரசனின் ஆணைப்படி கலிப்பகையார் போர்க்களம் சென்று நீண்ட நாட்களாகி விட்டன. இதற்கிடையே புகழனார் காலமானார், கணவனையிழந்த மாதினியாரும் பிரிவு தாங்காது இறந்து விட்டார். மருணீக்கியார் இளவயதில் பெற்றோரை இழந்து தமக்கையாரான திலகவதியாருடன் வாழ்ந்து வந்தார். அப்போது தனக்கு நிச்சயிக்கப்பட்ட கணவன் போரில் இறந்து விட்ட செய்தியறிந்த திலகவதியார் தானும் உடன்கட்டையேறத் துணிந்த போது, தானும் கூடவேயிறப்பதாகத் தம்பியார் கதறியழக் கண்டு, அவருக்காக வாழ முனைந்தார். பின்னர் சிவத் தொண்டில் காலங்கழித்தார்.
8. கல்வி கேள்விகளில் வல்லவரான மருணீக்கியார். தமக்குத் தொடர்ச்சியாக ஏற்பட்ட துன்ப அனுபவங்களால் சமண சமயத்தின்பால் ஈர்க்கப்பட்டார். அச்சமயத்தைச் சேர்ந்து சமணக் கல்வியில் கைதேர்ந்தவராகி, சமண குருவாக உயர்ந்தார். திருப்பாதிரிப் புலியூர் (பாடலி புத்திரம்) மடத்தில் **தருமசேனர்** என்னும் பெயருடன் விளங்கினார்.
9. தம்பியாரைச் சமண சமயத்திலிருந்து மீட்டுத் திரும்பவும் சைவசமயத்திற்குத் தருமாறு திலகவதியார் திருவதிகை வீரட்டானேஸ்வரை வேண்டியதற்கு இறைவன் மனமிரங்கினார். கடுமையான சூலை நோயினைத் தரும சேனர் வயிற்றில் உண்டாகும்படி செய்தார். பல்வேறு முயற்சிகள் செய்தும் சமணர்களால் நோயைத் தீர்க்க முடியவில்லை. வேறு வழியின்றி யாரும் அறியாமல் நள்ளிரவு வேளையில் தமக்கையார் இருக்கும் திருவதிகை மடத்தை அடைந்து தன்னை நோயினின்றும்காப்பாற்றுமாறு கதறி அழுதார்.
10. திருவீரட்டானேஸ்வரப் பெருமானின் திருவிளையாடல் தான் இது என உணர்ந்த திலகவதியார் தம்பியாரை அழைத்துக்கொண்டு வீரட்டானப் பெருமான் சந்நிதியை அடைந்தார். கோயிலை வலம்வந்த மருணீக்கியாரைத் திருநீறுஅணியச் செய்து குருதீட்சையளித்தார். தம்பியாரும் பழைய நினைவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் கொந்தளிக்க இறைவனை வேண்டி மனமுருகிக் **கூற்றாயினவாறு விலக்ககலீர்** என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே சூலைநோய் நீங்கியதுடன், இன் தமிழால் பாடிய மருணீக்கியாரை நோக்கி "நாவுக்கரசா எழுந்திரு" என அசரீலி ஒலித்தது. அன்றுமுதல் நாவுக்கரசர் என்னும் நாமத்துடன் மருணீக்கியார் வாழத் தொடங்கினார்.

11. திருநாவுக்கரசர் மீண்டும் சைவ சமத்திற்கு மாறியதை அறிந்த சமணர்கள் மன்னனைத் தூண்டி விட்டு அவரை அழிக்க முயன்றனர். அமைச்சரைத் திருவதிகைக்கு அனுப்பி திநாவுக் கரசரை அழைத்து வரச்செய்தனர். அமைச்சரின் மூலம் தகவல் அறிந்த நாவுக்கரசர் **நாமார்க்கும் குடியல் லோம்** என்ற திருத்தாண்டகத்தைப் பாடியதுடன், சமணர்கள் இருக்குமிடம் சென்றார்.



திருநாவுக்கரசருக்கு இறைவன் அருள் புரிந்தமை

12. சமணர்கள் நாவுக்கரசரைப் பலவாறு துன்பப் படுத்தினர். ஏழு நாட்கள் நீற்றறையில் இட்டனர். அப்பொழுது **மாசில் வீணையும் மாலை மதியமும்** என்னும் பதிகத்தைப் பாடினார் நாவுக்கரசர். நீற்றறை குளிர்ச்சுனையாக மாறி இறையின்பத்தில் திளைக்கச் செய்தது.

13. மீண்டும் சமணர்கள் அவருக்கு நஞ்சு கலந்த பாற் சோற்றை உண்ணக் கொடுத்தனர். **நஞ்சும் அமுதாம்** என்னும் பதிகம் பாடி நலமுடனிருந்தார் நாவுக்கரசர். பின்னர் மதங்கொண்ட யானையை அவரைக் கொல்லுமாறு ஏவிவிட்டனர் **சுண்ண வெண்சந்தனச் சாந்தும்** என்னும் பதிகம் பாட, கொல்ல வந்த யானை ஏவியவனையே கொன்றொழித்தது.

14 சமணர்கள் இறுதியாக நாவுக்கரசரைக் கல்லோடு கட்டிக் கடலில் போட்டனர். அவர் இறைவனை நினைத்துச் **சொற்றுணை வேதியன்** என்னும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடினார். கல் தெப்பமாக மிதந்து அவரைத் திருப்பாதிரிப் புலியூர்த் திருத்தலக் கரையில் கொண்டு போய்ச் சேர்த்தது.

15. நாவுக்கரசரக்கு சமணர்கள் இழைத்த தீமைகளையெல்லாம் அவர் சிவனருளால் வெற்றி கண்டதையறிந்த பல்லவ மன்னன் மகேந்திர மன்னன் நாவுக்கரசரிடம் சென்று மன்னிப்புக் கேட்டதுடன், தானும் சைவனாக மாறினான். நாவுக்கரசரின் வேண்டுதலின் படி சமணப் பள்ளிகளை இடித்துக் குணசரவீச்சரம் என்னும் கோயிலையும் கட்டிச் சைவப் பணிகள் புரிந்தான்.

16. இதன் பின்னர் நாவுக்கரசர் தலயாத்திரைகளைத் தமிழ் நாடெங்கணும் மேற்கொண்டார். பல திருத்தலங்களிலும் புல், பூண்டு, கல் ஆகியவற்றைச் சுத்தம் செய்யும் உழவாரப் படையாளியாக விளங்கினார்.

17. திருத்தூங்கானை என்னும் சிவத்தலத்தில் வழிபடும் போது பிற சமயத் துடக்கினால் வருந்திய இப் பூதவுடலுக்கு உம்முடைய சூல, இடப இலச்சினை களைப் பொறித்தருள வேண்டுமென இறைவனிடம் கேட்டு **பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்** எனப் பதிகம் பாடினார். அப்பொழுது இறையருளினால் பூதமொன்று வந்து அவரது தோள்களில் சிவ இலச்சினைகளாகிய சூல, இடபக் குறிகளைப் பொறித்துச் சென்றது.

18. திருப்பைஞ்ஞீலி என்னும் திருத்தலத்தை நோக்கித் திருநாவுக்கரசர் செல்கையில் பசியினாலும், தாகத்தினாலும் மிக வருந்தினார். அவரது துன்பத்தைப் போக்கத் திருவுளம் கொணட சிவபெருமான் நாவுக்கரசர் வரும் வழியில் சோலையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளமும் உண்டாக்கியதுடன் தாமே சிவனடியார் வேடத்தில் வந்து பொதிச் சோறும் வைத்திருந்தார். அவ்விடம் வந்த அப்பரடிகளும் திருவமுதுண்டு களைப்பு நீங்கினார். அப்பருடன் திருப்பைஞ்ஞீலி வரை சென்ற சிவனடியாரும் திடீரென மறைந்து விட்டார்.

19. சிவனும் பார்வதியுமாய்த் திருக்கைலாய மலையில் எழுந்தருளியிருக்கும் காட்சியைக் காண ஆவல் கொண்ட நாவுக்கரசர் காசியை அடைந்தார். அதற்கு மேல் செல்ல முடியாமல் தவழ்ந்தும், ஊர்ந்து சென்றும் துன்பமுற்றார். தனது அடியார் துயர்கண்டு சிவ பெருமான் தவமுனிவர் வேடம் தாங்கி அவ்விடம் வந்து நாவுக்கரசரின் மனவுறுதியைச் சோதிப்பதற்காக "தேவர்களும் அடைய முடியாத கைலையங்கிரியை மனிதர்களால் அடைய முடியுமா? நீ திரும்பிச் செல்வதே நல்லது" என்றார். எம் பெருமானின் கைலாய தரிசனம் காணாமல் இந்த ஊனுடல் கொண்டு மீளேன் என நாவுக்கரசர் உறுதியுடன் கூறினார். முனிவராய் வந்த சிவபிராரும் நாவுக்கரசருக்குத் தரிசனம் கொடுத்ததுடன், அங்குள்ள தடாகத்திலே மூழ்கித் திருவையாற்றை அடைந்து அத் தலத்தில் தமது கைலாயத் திருக்கோலத்தைக் காணுமாறு கூறியருளினார். நாவுக்கரசரும் அவ்வாறே செய்து திருவையாற்றில் திருக்கைலாயத் திருக்கோலக் காட்சிகளைக் கண்டுகளித்து **மாதர்ப்பிறைக் கண்ணியானை** என்னும் பதிகம் பாடினார்.

20. சீர்காழிப் பதியில் திருநாவுக்கரசரும் சம்பந்தரும் சந்திததுக் கொண்டனர். சம்பந்தரின் சிவிகையைத் தாங்கி வந்த நாவுக்கரசரை நோக்கி "அப்பரே" என்று அழைத்தார் சம்பந்தர். அன்றுமுதல் அப்பர் எனுந்திருநாமமும் நாவுக்கரசருக்கு உரியதாயிற்று.

21. திருவீழிமிழலையில் மக்கள் பஞ்சத்தால் வாடிய போது அப்பரும் சம்பந்தரும் அங்கு சென்று அங்குள்ள இறைவனைத் துதித்துப் பதிகத்தாற் பாடி படிக்காசு பெற்று மக்கள் பசிப்பிணி அகற்றினர்.

22. அதேபோன்று இருவரும் திருமறைக்காடு என்னும் திருத்தலத்தில் வேதங்களால் பூட்டப் பட்ட திருக்கதவைத் திறப்பதற்காக அப்பர் **பண்ணினேர் மொழியாள்** என்னும் பதிகம் பாடித் திறக்கச் செய்தார். மீண்டும் திருக்கதவினைப் பூட்டச் செய்யச் **சதுரம் மறைதான்** என்னும் பதிகத்தைச் சம்பந்தரும் பாடியருளினார்.

23. இவ்வாறு தாசமார்க்கமாகிய சரியை நெறிநின்று சிவப் பணியாற்றிய திருநாவுக்கரசர் திருப்புகலூர் என்னும் திருத்தலத்தை அடைந்து தமக்கு முத்தி தருமாறு இறைவனை வேண்டி **எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ** என்னும் திருத்தாண்டகத்தைப் பாடித் துதித்தார் அவருக்குச் சித்திரை மாதச் சதய நட்சட்திரத்தில் 81 வது வயதில் முத்தியும் கிடைத்துச் . சாலோக முத்தியைப் பெற்றுக் கொண்டார்.

24 **என் கடன் பணி செய்து கிடப்பதே, நாம் யார்க்கும் குடியல்லோம், அஞ்சுவது யாதொன்று மில்லை,ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே** என்றெல்லாம் பாடிய அப்பரடிகளின் சிவப் பணிகள் எம்மை வழிநடத்துமெனலாம்.

## இ. சுந்தர மூர்த்தி நாயனார்

1. தமிழகத்தின் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூரில் பிராமணரான சடையனாருக்கும், இசைஞானியாருக்கும் மகவாகப் பிறந்தவர் நம்பியாரூரர்.

2. ஒருநாள் குழந்தை நம்பியாரூரர் நடு வீதியில் விளையாடிக் கொண்டிருக்கும் போது அந்நாட்டு அரசனான நரசிங்க முனையர் கண்டு ஆசைப்பட்டு அக்குழந்தையை வளர்க்க விரும்பியதால் பெற்றோரின் சம்மதத்துடன் அரண் மனையிலேயே நம்பியாரூரர் வளர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுந்தரமூர்த்தி நாயனார்

3. உரிய மணப்பருவம் வந்ததும் நம்பியாரூரருக்குப் புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைத் திருமணம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன.

4. திருமண நாளன்று முதிய வேதியர் ஒருவர் திருமணப் பந்தலினுள் நுழைந்து நம்பியாரூரர் தனக்கு அடிமை என வழக்குரைத்தார். இதனை மறுத்து நம்பியாரூரரும் அந்தணர்கள் வேறு ஒரு அந்தணர்க்கு அடிமையாவதும் உண்டோ எனக் கேட்டு அம்முதியவரைப் "பித்தா" என்று வன் சொல்லால் சாடினார். முதியவரோ சான்றாதாரமாக அடிமைச் சீட்டு எழுதப்பட்ட ஓலையைக் காண்பித்ததும் நம்பியாரூரர் அதனைப் பறித்துக் கிழித்தெறிந்தார். நம்பியாரூரரின் செய்கை தகாது என முதியவர் அங்கிருந்தோரை நோக்கிக் கூற, முனிவரே! நீர் எங்கு உள்ளீர்? என அவர்கள் திருப்பிக் கேட்டதும், தான் திருவெண்ணை நல்லூரில் உறைவதாக வேதியர் கூறினார். அபப்படியானால் உன் வழக்கை திருவெண்ணெய் நல்லூரில் பேசலாமே என்று சபையோர் கூறினர். ஆருரன் கிழித்தது படியோலை; மூலவோலை அங்கிருக்கிறது; வாருங்கள் எனக் கூறியபடி முதிய வேதியர் முன்செல்ல ஏனையோரும் அவரைப் பின்பற்றி அந்தணர்கள் வாழும் திருவெண்ணெய் நல்லூரை அடைந்தனர். இறுதியாக வேதியர் மூலவோலையைக் காண்பித்ததும் அங்குள்ள பிராமணர்கள் மூலவோலை யையும் அதிலுள்ள நம்பியாரூரரின் பாட்டனார் கையொப்பமும் ஒன்றெனக் கண்டு முதிய வேதியருக்கு நம்பியாரூரர் அடிமை என முடிவு செய்தனர். வழக்கினில் வெற்றிகண்ட முதியவரை அந்தணர்கள் நோக்கி, இவ்வூர் உமது இடமாயின் நீவிர் இருக்கும் இடம் எது என வினாவ, அம் முதியவரும் என்னை எவரும் அறிய வில்லையா எனக் கேட்டபடி திருவருட்டுறைக் கோயிலினுட் சென்று மறைந்தார்.

5. பின்னால் சென்ற நம்பியாரூரர் வேதியரைக் காணாது திகைத்தார். அப்பொழுது இடபவாகனத்தில் சிவபெருமான் எழுந் தருளி "நீ முற்பிறவியில் ஆலால சுந்தரன் என்னும் பெயருடன் திருக்கைலா யத்தில் எனக்குத் தொண்டு செய்கையில் அநந்தினி, கமலினி என்னும் எனக்குத் தொண்டு புரிந்த இரு சேடிப் பெண்கள் மீது விருப்பங் கொண்டதால், பூவுலகில் பிறக்கும் நிலை ஏற்பட்டது. உன் விருப்பப்படியே நீ பூவுலக பந்தத்தில் உழலாமல் தடுத்தாட்கொண்டேன். நம்மை வன்சொல் லால் வைதமையால் **வன்றொண்டன்** எனப் பெயர் கொண்டாய். "என்னை செந்தமிழாற் பாடுவா யாக" என்று அருளினார்.



தடுத்தாட்கொண்ட போது

6. "அடியேன் எப்படி உன்னைப் பாடுவேன்" எனக் கேட்ட ஆரூரரை நோக்கி எம்பெருமான், பித்தன் என்றே மொழிந்தனை; ஆதலால் பித்தன் என்றே பாடுக: என்றதும் நம்பியாரூரர் **பித்தா பிறைசூடி** எனத் தொடங்கும் தமது முதல் திருப்பதிகத்தினைப் பாடியருளினார்.

7. நம்பியாரூரர் திருவாரூரை நோக்கிச் செல்கையில் சீர்காழிப் பதியில் **சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை** என்னும் பதிகம் பாடிச் சிவபிரானை வழிபட்டுவிட்டுத் திருவாரூரை அடைந்தார். அங்குள்ள அடியவர்கள் பல்வகை வாத்திய முழக்கங்களுடன் நம்பியாரூரரை வரவேற்றனர். அவரும் **கரையுங் கடலும்** எனும் பதிகத்தால் அவர்களை வணங்கினார்.

8. திருமூலட்டானத்தைச் சூழ்ந்ததிருமாளிகை வாயிலிற் புகுந்து வான்மீக நாதரை வணங்கிய ஆரூரர் முன் "நாமும் உமக்குத் தோழரானோம்; நாம் உன்னைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்தாட்கொண்ட அந்த மணக்கோலத்துடன் நீ மண்மேல் விளையாடு "என அசரீரி ஒலித்தது. அன்று முதல் அடியார்கள் அவரைத் தம்பிரான் தோழர் என அழைக்கலாயினர்.

9. முற்பிறப்பில் திருக்கைலாயச் சேடியராயிருந்த இரு பெண்களில் ஒருவரான கமலினியார் திருவாரூரில் பரவையார் எனும் பெயரில் வாழ்ந்து திருவாரூர்க் கோயிலில் தொண்டு செய்து வரும் நாளில் சுந்தரர் அவரைக் கண்டார். இருவரும் மனம் விரும்பித் திருமணம் செய்து இல்வாழ்வில் ஈடுபட்டார்கள்.

10. திருவாரூர்த் திருக்கோயிலின் **தேவாசிரியன்** மண்டபத்தில் கூடியிருந்த அடியவர்களைப் பார்த்த நம்பியாரூரர் "இந்த அடியவர்களுக்கு நான் அடிமையாகும் நாள் எந்த நாள்" என இறைவனிடம் வேண்டினார். அப்பொழுது இறைவன் காட்சி தந்து அடியார்கள் பெருமையையும் வரலாற்றையும் உணர்த்தி அவர்களைப் பாடிப் பணியுமாறு **தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்** என்று அடியெடுத்துக் கொடுத்ததும் நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகையைப் பாடியருளினார். சுந்தரத் தமிழில் பாடல் பாடிய நம்பியாரூரருக்குச் சுந்தர மூர்த்தி எனும் நாமமும் வழங்கலாயிற்று.

11. திருவாரூர்த் திருக்கோயிலின் பங்குனி உத்தரத் திருவிழாவுக்குச் செலவு செய்யப் பொன்னில்லாமல் மிகவும் மனவருத்தத்துடன் செங்கட்டிகளைத் தலையணையாகக் கொண்டு நித்திரை செய்தார். கண்விழித்துப் பார்க்கையில் செங்கட்டிகள் பொன்கட்டிகளாக மாறியிருந்தன. இறைவனின் கருணையை நினைந்து **தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்** என்ற திருப்பதிகத்தைப் பாடினார்.

12. திருமுது குன்றம் சென்று அங்குள்ள இறைவனை வணங்கினார். சிவனருளால் அங்குள்ள பன்னீராயிரம் பொன் சுந்தரருக்குக் கிடைத்தது. அவற்றை அங்குள்ள மணிமுத்து ஆற்றில் போட்டுத் திருவாரூர்க் குளத்தில் தேடியபோது கிடைக்காமையால் **பொன் செய்த மேனி** எனும் பதிகம் பாடக் கிடைக்கப் பெற்றார்.

13. திருக்குருகாவூருக்குச் செல்லுகையில் வழியில் பசியினாலும் தாகத்தினாலும் வருந்தினார். சிவபெருமான் அடியவர் வடிவில் வந்து சுந்தரருக்குத் தண்ணீரும் பொதிசோறும் வழங்கிச் சிறிது நேரத்தில் மறைந்து விட்டார். அடியவரைக் காணாது வியப்படைந்த சுந்தரர் இறைவனை நினைந்து **இத்தனை யாமாற்றை அறிந்திலேன்** என்ற பதிகத்தைப் பாடியருளினார்.

14. தொண்டை நாட்டுத் தல யாத்திரை சென்ற சுந்தரர், திருவொற்றியூரில் முற்பிறப்பில் திருக் கைலையில் விருப்பமுற்ற மற்றொரு பெண்ணான அநிந்திதையார் அங்குள்ள இறைவனுக்குச் சங்கிலியார் எனும் பெயரில் தொண்டு செய்து வருவதைக் கண்டு அவரையும் திருமணம் செய்ய விரும்பினார். அவர் பரவையாரின் கணவனார் என்பதையறிந்த சங்கிலியார், தம்மை விட்டுப் பிரிவதில்லை என்ற சத்தியத்தைப் பெற்றபின் திருமணத்திற்கு உடன்பட்டார்.

15. சங்கிலியாருடன் வாழ்ந்திருந்த காலத்தில் சுந்தரருக்குத் திருவாரூர் பங்குனி உத்தரத் திருவிழாவைக் காணும் ஆவல் மேலிட, சத்தியத்தை மறந்து ஊர் எல்லையைத் தாண்டுகையில் இரண்டு கண்களும் பார்வையை இழந்து துன்பப் பட்டார். அடியார்கள் உதவியினால் திருவெண்பாக்கம் சிவத்தலத்தை அடைந்து **பிழையுளன பொறுத்திடுவீர்** என்னும் திருப்பதிகத்தினைப் பாட ஊன்றுகோல் கிடைத்தது.

16. ஊன்று கோலின் துணையுடன் தல யாத்தரையைத் தொடர்ந்த சுந்தரர் திருக்கச்சியேகம்ப நாதரை வணங்கி **கடையானேன் எண்ணாத** என்ற பதிகத்தினைப் பாடி இடக்கண் பார்வை பெற்றார். பின்னர் திருவாரூர் சென்று அங்குள்ள கோயிலில் திருவான்மீக நாதரின் திருக் கோலம் காண ஒரு கண் போதாமையால் மற்றக்கண் பார்வையையும் வேண்டி **மீளா அடிமை உமக்கே ஆளாய்** எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி வலக்கண் பார்வையையும் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. சுந்தரர் சங்கிலியாரைத் திருமணஞ் செய்ததை அறிந்த பரவையார் கடுங்கோப முற்றார். சுந்தரருக்காகச் சிவபெருமானே பரவையாரிடம் தூது சென்று இருவரையும் சமாதானப் படுத்தி வைத்தார்.

18. திருவஞ்சைக்களம் என்னும் இடத்திலிருந்து சேர நாட்டை ஆண்டுவந்த சேரமான் பெருமாளின் இயற் பெயர் கழறிற்றறிவார் என்பதாகும். இம் மன்னன் சுந்தரரின் பெருமை கண்டு அவருடன் நட்புக் கொண்டான். இதனால் சுந்தரருக்குச் **சேரமான் தோழர்** எனும் பெயரும் ஏற்பட்டது இருவரும் பல தலங்களுக்கும் யாத்திரை செய்தனர். இராமேஸ்வரத்தை அடைந்து அங்கிருந்தவாறே சுந்தரர் ஈழநாட்டுத் திருக்கேதீச்சரப் பெருமானை மானசீகமாக வணங்கி **நத்தார் படை ஞானன் பசு** எனத் தொடங்கும் திருக் கேதீச்சரப் பதிகத்தை பாடினார்.

19. சேரமான் பெருமாளின் விருப்பப்படி இருவரும் சேர நாடு செல்கையில் காவிரி ஆறு பெருக்கெடுத்தோடியது. சுந்தரர் இறைவனை வணங்கிப் பதிகம் பாட காவிரி ஆறு பிரிந்து வழிவிட்டது.

20. சேரநாட்டுத் தலங்களை இருவரும் வணங்கிய பின் ஒருநாள் சுந்தரர் திருவஞ்சைக் களக் கோயிலுக்குச் சென்று தமக்குப் பூவுலக வாழ்வை முடித்து முத்தியருளும் படி அங்குள்ள சிவபெருமானை வேண்டி **தலைக்குத் தலைமாலை** என்னும் பதிகத்தைப் பாடினார்.அப்பொழுது இறைவனின் ஆணைப்படி தேவர்கள் வெள்ளை யானையில் சுந்தரரை ஏற்றிக் கயிலைக்குக் கொண்டு சென்றனர். இதனையறிந்த சேரமான் பெருமாள் தமது வெள்ளைக் குதிரையில் ஏறிச் சுந்தரரைப் பின்தொடர்ந்து சென்றார்.

21. நம்பியாரூரருக்குச் சுந்தரர், வன்றொண்டர், தம்பிரான்தோழர், சேரமான் தோழர், ஆளுடைய நம்பி, ஆருரர் எனப் பல பெயர்கள் உள.

22 சுந்தர மூர்த்தி நாயனார் முத்தியடையும்போது அவருக்குப் பதினெட்டு வயது. ஆடிச்சுவாதி நட்சத்திரம் இவரது குருபூசைத் தினமாகும். இவர் யோக மார்க்கத்தில்(சக மார்க்கம்) நின்று சாரூப முத்தியை அடைந்தவராவார்.

23. சுந்தரர் தேவாரங்கள் ஏழாந் திருமுறையில் அடங்குவன. இவர் வாழ்ந்த காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டாகும்.

## ஈ) மாணிக்க வாசக சுவாமிகள்.

1. அமாத்தியப் பிராமண குலத்தைச் சேர்ந்த சம்புபாதாசிரியருக்கும் சிவஞான வதியாருக்கும் மகனாகத் திருவாதவூரில் பிறந்தவர்.

2. திருத் தொண்டர் புராணத்தில் (பெரிய புராணம்) இவரது வரலாறு கூறப்படவில்லை. திருவாதவூரடிகள் புராணம் முதலிய நூல்களால் இவர் வரலாறு விளங்குகிறது.


மாணிக்கவாசகர்

3. பிற்காலத்தில் மணிமணியான வாசகங்கள் கொண்ட திருவாசகப் பனுவல்களைத் தந்தமையால் மணிவாசகர் என்றும், மாணிக்கம் போன்ற வாசகங்களையுடைய தெய்வீகப் பாடல்களை அருளியதால் மாணிக்க வாசகர் என்றும் அழைக்கப் பட்டார்.

4. தென்னவன் பிரம்மராயர், பெருந்துறைப்பிள்ளை ஆகிய பெயர்களும் வாதவூரருக்குண்டு.

5. மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் ஆகிய நூல்கள் சைவத் திருமுறைகளில் எட்டாந் திருமுறையாக விளங்குபவை.

6. மாணிக்க வாசகர் வாழ்ந்த காலம் கி.பி. 8 ஆம் நூற்றாண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய வாதவூரர், மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டிய நாட்டு அரசன் அரிமர்த்தன பாண்டியனின் அரசவையில் அமைச்சராக நியமிக்கப் பட்டார். அவரது திறமையான பணிகள் கண்டு மகிழ்வுற்ற அரசன் **தென்னவன் பிரம்மராயன்** என்னும் பட்டம் வழங்கிப் பெருமைப் படுத்தினான்.



குருந்தர மர நிழலில் உபதேசம்

8. சமூக விடயங்களில் மதிநுட்பத்துடன் செயலாற்றிய போதிலும் வாதவூரர் இயல்பாகவே ஆன்மீக விசாரணைகளில் அக்கறை காட்டி வந்தார்.

9. கீழைக் கடற்றுறை முகத்தில் அராபியக் குதிரைகளுடன் மரக்கலங்கள் வந்திருப்பதை அறிந்த பாண்டிய மன்னன் அங்கு சென்று குதிரைகள் வாங்கி வருமாறு வாதவூரரைப் பணித்தான். அவரும் குதிரைகள் வாங்குவதற்காகப் பரிவாரங்களுடன் செல்லும் வழியில் திருப் பெருந்துறையை நெருங்கும்போது, தன் மனதில் உலக பந்தங்கள் விலகி ஆன்மீக நாட்டம் அதிகரிப்பதை உணர்ந்தார். அப்போது அங்கே ஒரு குருந்தர மர நிழலில் குருநாதர் ஒருவர் தமது சீடர்களுக்கு உபதேசமளித்துக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டார். தான் ஒரு அமைச்சர்; தனக்கிட்ட அரசனின் பணி இருக்கிறது என்பதை எல்லாம் மறந்து, தான் கொண்டுவந்த பொருட்கள், திரவியங்கள் அனைத்தையும் குருநாதரின் பாதங்களில் சமர்ப்பித்துத் தன்னையும் சீடனாக ஏற்குமாறு இரந்து வேண்டினார். குருநாதரும் வாதவூரரைச் சீடராக ஏற்றுபதேசித்தார். பல நாடகளாகியும் வாதவூரர் அவ்விடம் விட்டு அகலாத நிலையில், கூட வந்த பணியாளர்கள் நடந்த விடயமனைத்தையும் மன்னனிடம் சென்று முறையிட்டனர்.

10. வாதவூரரை உடனே அழைத்துவருமாறு பாண்டியன் ஏவலாளருக்குக் கட்டளையிட்டான். அவர்களும் வாதவூரருக்கு மன்னனின் ஆணையைத் தெரிவிக்க, வாதவூரர் குருவிடம் விடயத்தைக் கூறினார். அதற்குக் குருநாதர் "நீ மதுரைக்குப் போ; ஆவணி மூல நன்னாளில் குதிரைகள் வருமென மன்னனுக்குக் கூறு" எனக் கூறி விலை மதிப்பற்ற மாணிக்கக் கல்லொன்றையும் அரசனுக்குக் கொடுக்குமாறு கொடுத்தனுப்பினார். குருவின் சொற்படியே வாதவூரரும் மதுரைக்குச் சென்றார்.

11. மன்னனிடம் மாணிக்கத்தினைக் கொடுத்துக் குதிரைகள் வரும் நாளையும் கூறியவுடன் மன்னனும் கோபந் தணிந்தான். குறித்த தினத்தில் குதிரைகள் வரும் தடயங்கள் எதுவும் இல்லை என்பதை ஏவலாளர் மூலம் அறிந்து கோபமுற்று, வாதவூரரைச் சிறையிலடைத்துத் துன்புறுத்தினான்.

12. ஆனால் குறித்த நாளில் சொல்லி வைத்தாற் போல் குதிரைகள் வந்தன. சிவபெருமான் காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கித் தாமே தலைமை வணிகனாகக் குதிரைகளை மதுரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார். மன்னனும் மகிழ்ந்து வாதவூரரைச் சிறையிலிருந்து விடுவித்ததுடன் வருத்தமும் தெரிவித்துக் கொண்டான். அன்றிரவு பரிகளெல்லாம் நரிகளாகின. தொழுவத்தி லிருந்த பரிகளையும் கடித்துக் குதறின. இச் செய்தியறிந்த மன்னன் மீண்டும் வாதவூரரைக் கைது செய்து வைகைச் சுடுமணலில்



குதிரை வணிகனாய்ச் சிவபெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கவைத்து, நெற்றியின் மீது கல் வைத்துச் சூரியனைப் பார்க்கும்படி துன்புறுத்தினான்.

13. இறைவனின் திருவருளால் மழைபொழிந்து வைகையாறு பெருக்கெடுத்து மனைகளை யெல்லாம் அடித்துச் சென்றது. வாதவூரருக்குத் தான் இழைத்த தீங்கே இதற்குக் காரணமென உணர்ந்த மன்னன் அவரை விடுவித்தான். வைகையில் வெள்ளம் வற்றியது. மீண்டும் வெள்ளம் பெருகி ஊரை அழிக்கா வண்ணம் தடுப்பணை கட்ட உத்தரவிட்டான். அவரவர் பங்குகள் அளந்து விடப்பட்டன. பங்குக்குரியவர்கள் அணையைக் கட்டுவதில் தீவிரமாயிருந்தனர். பிட்டு விற்று வாழ்ந்து வந்த சிவ பக்தையான மூதாட்டி செம்மனச் செல்வி தனது பங்கினைக் கட்டுவதற்கு யாருமற்ற நிலையில் சிவபிரானிடம் முறையிட்டாள்.

14. செம்மனச் செல்விக்குத் துணை புரியவும், வாதவூரரின் பெருமையை உலகறியச் செய்யவும் உளங்கொண்ட சிவபெருமான் தோளில் மண்வெட்டியும் தலையில் கூடையுமாகக் கூலியாள் வடிவில் வந்து "கூலியாள் வேண்டுமா" எனக் கூவவும், மகிழ்ச்சியுடன் **செம்மனச் செல்வி** அவரை அழைத்து "என்னிடம் கூலிதரப் பணமில்லை, பிட்டுத் தருகிறேன்" என்று கூறக் கூலியாளாய் வந்த எம்பெருமானும் சம்மதித்தார். கிழவி அவித்துக் கொடுத்த உதிர்ந்த பிட்டினை உண்ணுவதும், ஒரு கூடை மண்ணை அள்ளிக் கொட்டுவதும் பின்னர் உறங்குவதுமாய் இருந்தார் எம்பெருமான்.

15. அணை கட்டுவதைப் பார்வையிட்ட பணியாளர்கள் செம்மனச் செல்வியின் பங்கு அடைபடாமலும், கூலியாளாய் வந்தவர் வேலை செய்யாது மர நிழலில் உறங்குவதையும் அரசனுக்குத் தெரிவித்தனர். அவ்விடம் வந்த அரசன் கூலியாளின் முதுகினில் பிரம்பினால் ஓங்கியடித்தான். என்ன அதிசயம்! கூலியாள் மறைந்து விட அடித்த அடி பேசிடும் சகல ஜீவராசிகளின் முதுகிலும் பட்டு வடுவுற்றது. அவ்வேளை சிவபெருமான் இடப வாகனத்தில் தோன்றி "வாதவூரன் பொருட்டே எனது இத் திருவிளையாடல்கள்" எனக் கூறி மறைந்தார். மன்னனும் மக்களும் வாதவூரரின் பெருமை கண்டு அவரைப் பணிந்தனர்.

16. அரசனிடம் விடைபெற்ற வாதவூரர் மீளவும் திருப் பெருந்துறையை அடைந்து அங்கு குருந்தர மர நிழலில் சீடர்களுக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்த குருநாதரின் பாதங்களைப் பணிந்து கண்ணீராற் கழுவினார். சில காலத்தின் பின்னர் குருநாதர் தமது சீடர்களுக்கு முத்தியளிக்கக் கண்டு தமக்கும் அப்பேறு கிட்ட வேண்டுமென வாதவூரர் வேண்ட, குருநாதர் சிவ பெருமானாகக் காட்சியளித்ததுடன் "நீ செய்ய வேண்டிய பணிகள் உண்டு. அவற்றை முடித்தபின் என்னிடம் வா" என்று கூறி மறைந்தார்.

17. இதன் பின்னர் ஊர் ஊராகச் சிவத் தலங்கள் பலவற்றிற்கும் சென்று வழிபட்ட வாதவூரர், தாம் இறைவனிடம் பெற்ற ஞானத்தையும், குருவைப் பிரிந்த ஆற்றாமையையும் மணிமணியான தெய்வீகப் பனுவல்களாய்த் திருவாய் மலர்ந்தருளினார்.

18. தென்னகச் சைவ சமயத்தவரிடையே வழங்கி வந்த நாட்டுப் பாடல் வடிவங்களையும், இசை வடிவங்களையும் ஞானமும் பக்தியும் மிளிரப் பல்வேறு பதிகங்களைப் பாடினார். திருவண்ணாமலையில் **திருவெம்பாவைப்** பாடல்களைப் பாடினார். **திருவம்மானை, திருச்சாழல், திருவுந்தியார், திருப்பொற்சுண்ணம், திருக் கோத்தும்பி** முதலானவை இத்தகைய பாடல்களில் அடங்குவன.

19. சிதம்பர நடராசப் பெருமானை வாதவூரர் தரிசனம் செய்திருக்கையில் ஓர் அந்தணர் அவர்முன் வந்து "நீர் பாடிய பாடல்களை ஓத விரும்பி அவற்றை உம்மிடம் கேட்டு எழுதுவதற்கு வந்தேன்" என்று கூறியதும், வாதவூரர் அப்பாடல்களை மீண்டும் சொல்ல, அந்தணர் ஏட்டில் எழுதிக் கொண்டார். பாவை பாடியவாயால் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவை பாடுமாறு அந்தணர் கேட்பவும் நானூறு கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களாலான திருக் கோவையாரையும் வாதவூரர் பாடினார். எழுதி முடித்த அந்தணர் மறைந்து விட்டார். மறுநாள் தில்லைப் பெருமானுக்குப் பூசை செய்ய வந்த பூசகர்கள், கோயிற் படிக்கட்டில் ஏட்டுக்கட்டு இருக்கக் கண்டு வியப்புடன் அதனைப் பிரித்துப் பார்த்தபோது "வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது" என்று எழுதப்பட்டு அழகிய சிற்றம்பலமுடையான் என்று கையொப்பமும் இடப்பட்டிருந்தது.

20. இதனைக் கேள்வியுற்ற தில்லை மூவாயிரவரில் பலர் மணிவாசகரிடம் சென்று நீர் பாடிய இப் பாடல்களின் பொருள்யாது? எனக் கேட்டனர். அவர்களை மணிவாசகர் உடன்வருமாறு அழைத்துச் சென்று சிதம்பர மூலஸ்தான நடராஜப் பெருமானைச் சுட்டிக் காட்டி "இவரே அதன் பொருள்" எனச் சொல்லியபடி சிதம்பர ரகசியத்துள் மறைந்து விட்டார். சிவபெருமானுடன் இரண்டறக் கலத்தலே தமது பாடல்களின் பொருளாகும் என்பதைக் குறிப்பால் உணர்த்தி விட்டார்.

21. மாணிக்கவாசக சுவாமிகள் தமது 32 வது அகவையில் ஆனிமாத மக நட்சத்திரத்தில் இறைவனுடன் இரண்டறக் கலந்து சாயுச்சிய முத்தியடைந்தார்.

## குறிப்புகள்

**1. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்**

i. பிறந்த இடம் - சீர்காழி

ii. பிறந்த நட்சத்திரம் - ஆதிரை

iii. இயற்பெயர் - சம்பந்தர்

iv. தாய் தந்தையர் - சிவபாதவிருதயர், பகவதி அம்மையார்

v. வாழ்ந்த காலம் - கி.பி 6 ஆம் நூற்றாண்டுப் பிற்பகுதி

vi. குலம் - பிராமணர்

vii. வாழ்ந்த வயது - 16 ஆண்டுகள்

viii. ஏனைய பெயர்கள் - ஆளுடைய பிள்ளையார், தோணிபுரத் தோன்றல், பரசமய கோளரி, பாலறாவாயர், கவுணியர்கோன், ஞானக் குழந்தை, வேதாகமக் களிறு

ix. பின்பற்றிய நெறி - கிரியை(சற்புத்திர மார்க்கம்(தந்தை மகன் உறவு)

x. அடைந்த முத்தி - சாமீபம்

xi. முத்தியடைந்த தினம் - வைகாசி மூலம்

xii. முதலில் பாடிய பதிகம் - "தோடுடைய செவியன்"

xiii. இறுதியாகப் பாடிய பதிகம் - "காதலாகி"

xiv. பாடல்கள் இடம்பெற்றுள்ள திருமுறைகள் - 1 ஆம், 2 ஆம், 3 ஆம் திருமுறைகள்

xv. தற்போது கிடைக்கும் பாடல்களின் எண்ணிக்கை - 385 பதிகங்களில் 4162 பாடல்கள்

**2. திருஞான சம்பந்தர் இறையருளால் செய்த அற்புதங்கள்.**

i. மூன்று வயதில் தேவாரம் பாடியமை(சீர்காழியில்)

ii. பொற்றாளம் பெற்றமை(திருக்கோலக்காவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. முத்துப்பல்லக்கு, முத்துக்குடை, முத்துச் சின்னம் பெற்றமை (திருவரத் துறையில்)

iv. படிக்காசு பெற்றமை(திருவீழி மிழலையில்)

v. திருக்கதவை மீண்டும் அடைக்கச் செய்தமை(திருமறைக் காட்டில்)

vi. கூன்பாண்டியனின் வெப்புநோயை நீக்கியமை(திருவாலவாயில்)

vii. அனல் வாதம் புனல்வாதம் ஆகியவற்றில் சமணர்களை வென்றமை (மதுரையில்)

viii. எலும்புருவான பூம்பாவையை உயிர்பெறச் செய்தமை(திருமைலாப்பூர்)

ix. விடந்தீண்டி இறந்த வணிகன் உயிரை மீட்டுத் தந்தமை(திருமருகலில்)

x. தமது திருமணத்திற்கு வந்த அனைவரையும் தம்முடன் சேர்த்துச் சிவசோதியுடன் கலக்கச் செய்தமை (சீர்காழியில்)

xi. முயலகன் என்னும் நோயால் வாடிய கொல்லிமழவன் மகளது நோயை நீக்கியமை (திருப்பாச்சிலாச்சிராமம்)

xii. தந்தை சிவபாத விருதயர் வேள்வி செய்வதற்காக இறைவனிடம் பொன் கேட்டு ஆயிரம் பொன் பெற்றமை (சீர்காழி)

## 3. பாடப்பரப்பிலுள்ள திருமுறைப் பாடல்களும் அவை பாடப்பட்ட சந்தர்ப்பங்களும்

| தேவாரங்க | பாடிய தலம் | பாடிய சந்தர்ப்பங்கள் |
|---|---|---|
| 1. தோடுடைய செவியன் | திருப்பிரமாபுரம் (சீர்காழி) | கோயிற் குளத்தில் மூழ்கிய தந்தையாரைக் காணாது அழுதபோது, இறைவனும் இறைவியும் தோன்றி, உமாதேவியார் திருமுலைப்பாலைக் கறந்து கிண்ணத்திலிருந்து சம்பந்தருக்கு ஊட்டி மறைந்தனர். நீராடி வந்த தந்தையார் பால்வடியும் முகத்தைப் பார்த்து யார் கொடுத்த பாலை அருந்தினாய் அதட்டித் தடியினை ஓங்குகையில் அம்மையப்பரைச் சுட்டிக்காட்டி மூன்று வயதில் பாடியது. |
| 2. மடையில் வாளை | திருக்கோலக்கா | ஞான சம்பந்தர் தமது பிஞ்சுக் கைகளினால் தாளம் போட்டு இறைவனைப் பாடுவது கண்டு இறையருளால் பொற்றாளம் கிடைக்கச் செய்த போது. |
| 3. எந்தை ஈசன் எம்பெருமான் | திருவரத்துறை | தன்னை வணங்குவதற்காகக் கால்கள் கொப்பளிக்க நீண்ட தூரம் சம்பந்தர் நடந்து துன்பப்படுவதைப் பொறுக்காத இறைவனால் அடியவர்கள் மூலமாய் முத்துச் சிவிகை, முத்துக் குடை, முத்துச் சின்னம் ஆகியன கிடைக்கப் பெற்ற போது |
| 4. சதுரம் மறைதான் | திருமறைக் காடு | வேதங்களால் பூட்டப்பட்ட திருக்கதவினை அப்பரடிகள் தேவாரம் பாடித் திறக்கச் செய்தபின் திரும்பவும் திரும்பவும் அடைக்கச் செய்வதற்காகச் சம்பந்தர் பாடியது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 5. செய்யனே திருவாலவாய் | திருவாலவாய்(மதுரை) | சம்பந்தர் பாண்டியநாடு சென்று மதுரை மடத்தில் தங்கிருப்பதை அறிந்து சமணர்கள், அரசனின் ஒப்புதலோடு அவர் தங்கியிருந்த கூடத்துக்குத் தீயிட்டபோது பாடியது |
| 6. மந்திரமாவது நீறு | திருவாலவாய்(மதுரை) | கூன் பாண்டியனின் வெப்பு நோயைத் திருநீறு பூசி நீக்கியபோது சம்பந்தர் பாடியது. |
| 7. தளிர் இளவளரொளி | திருவாலவாய்(மதுரை) | சமணர்களுடன் சம்பந்தர் அனல் வாதத்தில் ஈடுபட்டபோது சைவ சமய உண்மைகளைத் திருவாய் மலர்ந்து ஏட்டினில் எழுதித் தீயினுள் இட்டபோது பாடியது. |
| 8. வாழ்க அந்தணர் | திருவாலவாய்(மதுரை) | சமணர்களுடன் புனல் வாதத்தில் ஈடுபட்டு வைகையாற்றில் ஏடுகளை இட்டுப் பாடியது. |
| 9. கல்லூர்ப் பெருமணம் | சீர்காழி | சம்பந்தர் தமது திருமண நாளில் இறைவனை நினைந்து பாடியது. |
| 10. காதலாகிக் கசிந்து | சீர்காழி | சம்பந்தரின் திருமணத்தின் போது இறைவனின் கட்டளைப்படி தோன்றிய சிவசோதியினுள் அனைவருடனும் இரண்டறக் கலந்த போது பாடியது. |

## 1. திருநாவுக்கரசு நாயனார்

i. பிறந்த இடம் – திருமுனைப்பாடி நாட்டின் திருவாமூர்
ii. இயற்பெயர் – மருணீக்கியார்
iii. தாய் தந்தையர் – புகழனார், மாதினியார்
iv. தமக்கையார் – திலகவதியார்
v. வாழ்ந்த காலம் – கி.பி 6 ஆம் நூற்றாண்டு
vi. குலம் – வேளாளர்
vii. வாழ்ந்த வயது – 81 ஆண்டுகள்
viii. சமணர் இட்ட பெயர் – தருமசேனர்
ix. ஏனைய பெயர்கள் – வாகீசர், அப்பர், தாண்டக வேந்தர், உழவாரப் படையாளி, சொற்கோ, வாக்கின் பெருவிறல் மன்னர், ஆளுடைய அரசு.
x. பின்பற்றிய நெறி – சரியை(தாச மார்க்கம்)
xi. அடைந்த முத்தி – சாலோகம்
xii. முத்தியடைந்த தினம் – சித்திரைச் சதயம்
xiii. முதலில் பாடிய திருப்பதிகம் – "கூற்றாயினவாறு விலக்ககலீர்"
xiv. இறுதியாகப் பாடிய திருப்பதிகம் – "எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ"
xv. பாடல்கள் இடம்பெற்றுள்ள திருமுறைகள் – 4ஆம், 5ஆம், 6ஆம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xvi. தற்போது கிடைக்கும் பால்களின் எண்ணிக்கை - 312 பதிகங்களில் 3066 பாடல்கள்

## 2. திருநாவுக்கரசர் இறையருளால் செய்த அற்புதங்கள்.

i. சூலை நோய் நீங்கப் பெற்றமை(திரு வீரட்டானேஸ்வரம்)

ii. சமணர்கள் நீற்றறையில் இட்டு வருத்திய போது நீற்றறை குளிர்ச்சி பொருந்தியதாய் விளங்கச் செய்தமை.

iii. சமணர்கள் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டும் நலமேயிருந்தமை.

iv. சமணர்கள் மதங்கொண்ட யானையை ஏவிய போது யானை அவரை எதுவும் செய்யாது சமயரையே கொன்றொழிக்கச் செய்தமை.

v. சமணர்கள் கல்லோடு கட்டிக் கடலினுள் இட்டபோது, கல்லே தெப்பமாய் மிதந்து திருப்பாதிரிப் புலியூரைச் சேர்ந்தமை.

vi. இறைவனால் சூல, இடபக் குறிகள் வலது இடது தோள்களில் பொறிக்கப் பெற்றமை (திருத்தூங்கானை மாடம்)

vii. படிக்காசு பெற்று மக்களின் பஞ்சம் போக்கியமை(திருவீழிமிழலை).

viii. வேதங்களால் பூட்டப்பட்ட கதவைத் திறக்கச் செய்தமை(திருமறைக் காடு)

ix. அப்பூதியடிகளின் மூத்தமகன் பாம்பினாற் கடியுண்டு இறந்த போது உயிர் பிழைக்கச் செய்தமை( திங்களூர்)

## 3.பாடப்பரப்பிலுள்ள திருமுறைப் பாடல்களும் அவை பாடப்பட்ட சந்தர்ப்பங்களும்

| தேவாரங்கள் | பாடிய தலம் | பாடிய சந்தர்ப்பங்கள் |
|---|---|---|
| 1. கூற்றாயினவாறு விலக்ககலீர் | திருவதிகை வீரட்டானேஸ்வரம் | தனக்கேற்பட்ட கொடிய சூலை நோயினை நீங்கச் செய்யுமாறு வேண்டிப் பாடப்பட்டது. |
| 2. மாசில் வீணையும் மாலை மதியமும் | பொது | சமணர்கள் ஏழு நாட்கள் சுண்ணாம் பறையில் அடைத்து வருத்தியபோது பாடியது. |
| 3. துஞ்சிருள் காலை | பொது | சமணர்கள் நஞ்சு கலந்த பாற்சோற்றினை உண்ணக் கொடுத்தபோது பாடியது. |
| 4. சுண்ண வெண் சந்தனச் சாந்தும் | பொது | சமணர்கள் மதங்கொண்ட யானையை ஏவிக் கொல்ல நினைத்து யானையை ஏவிய போது பாடியது. |
| 5. சொற்றுணை வேதியன் | பொது | சமணர்கள் கல்லொடு கட்டிக் கடலினுள் போட்ட போது பாடியது. |
| 6. பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம் | திருத் தூங்கானை மாடம் | பிற சமயத்துடக்குண்ட தன் உடலில் சூல, இடபக் குறிகளைப் பொருத்தித் தருமாறு இறைவனை வேண்டிப் பாடியது. |
| 7. பண்ணினேர் மொழியா ளுமைப் பங்கரோ | திருமறைக் காடு | வேதங்கால் பூட்டப்பட்டிருந்த திருக் கதவைத் திறக்கப் பாடியது. |
| 8. எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ | திருப்புகலூர் | இறைவனிடம் முத்தியருளுமாறு வேண்டிப் பாடியது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. சுந்தர மூர்த்தி நாயனார்

i. பிறந்த இடம் - திருமுனைப்பாடி நாட்டின் திருநாவலூர்
ii. இயற்பெயர் - நம்பியாரூரர்
iii. தாய் தந்தையர் - சடையனார், இசைஞானியார்
iv. வளர்த்த அரசர் - நரசிங்க முனையர்
v. வாழ்ந்த காலம் - கி.பி 7 ஆம் நூற்றாண்டு
vi. குலம் - ஆதிசைவர்
vii. வாழ்ந்த வயது - 18 ஆண்டுகள்
viii. மனைவியர்கள் - பரவையார், சங்கிலியார்
ix. ஏனைய பெயர்கள் - வன்றொண்டர், சுந்தரமூர்த்தி, தம்பிரான் தோழர், சேரமான் தோழர், ஆளுடைய நம்பி, ஆரூரர்
x. பின்பற்றிய நெறி - யோகம்(சக மார்க்கம்)
xi. அடைந்த முத்தி - சாரூபம்
xii. முத்தியடைந்த தினம் - ஆடிச் சோதி
xiii. முதலில் பாடிய திருப்பதிகம் - "பித்தா பிறைசூடி"
xiv. இறுதியாகப் பாடிய பதிகம் - "தலைக்குத் தலைமாலை"
xv. பாடல்கள் இடம்பெற்றுள்ள திருமுறைகள் - 7ஆந் திருமுறை
xvi. தற்போதுள்ள பாடல்களின் எண்ணிக்கை - 100 பதிகங்களின் 1026 பாடல்கள்

## 2. சுந்தரர் இறையருளால் செய்த அற்புதங்கள்.

i. சுந்தரருக்காக பரவையாரிடம் இறைவனே தூது சென்றமை.
ii. செங்கட்டிகள் பொன் கட்டிகளாக மாறியமை(திருவாரூர்).
iii. ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தமை(திருவாரூர்).
iv. முதலை வாய்ப் பிள்ளையை மீட்டமை(திருப்புக்கொளியூர் அவிநாசி).
v. இறைவனிடம் ஊன்றுகோல் பெற்றமை(திருவெண்பாக்கம்).
vi. இறையருளால் இடக்கண் பார்வையும்(திருக்கச்சியேகம்பம்), பின்னர் வலக்கண் பார்வையும்(திருவாரூர்) பெற்றமை.
vii. காவிரியாறு பிரிந்து வழிவிடச் செய்தமை.
viii. வெள்ளையானை மீதேறித் திருக்கயிலைக்குச் சென்றமை (திருவஞ்சைக் களம்).
ix. குட்டையூர்க் கிழார் அனுப்பிய உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல இறைவனிடமிருந்து ஆட்களைப் பெற்றுக் கொண்டமை(குண்டையூர்).

## 3.பாடப்பரப்பிலுள்ள திருமுறைப் பாடல்களும் அவை பாடப்பட்ட சந்தர்ப்பங்களும்

| தேவாரங்கள் | பாடிய தலம் | பாடிய சந்தர்ப்பங்கள் |
|---|---|---|
| 1. பித்தா பிறை சூடி | திருவெண்ணெய் நல்லூர் | புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைத் திருமணஞ் செய்ய முயன்ற போது இறைவனால் தடுத்தாட் கொள்ளப் பட்டு திருவெண்ணெய் நல்லூருக்கு வழக்குரைக்க அழைத்து, மூலவோலையைக் காட்டிக் கோவிலினுள் மறைந்த இறைவன், "பித்தா" எனவே நம்மைப் பாடுக என உரைத்தபோது பாடியது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 2. சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை | சீர்காழி | திருவாரூர் செல்லும் வழியில் சீர்காழியை அடைந்து அங்குள்ள இறைவனை வணங்கியபோது பாடப்பட்டது. |
| 3. கரையுங் கடலும் | திருவாரூர் | திருவாரூரில் இறையருளால் ஆரூரரின் வருகையறிந்த அடியவர்கள் பல் வகை வாத்தியங்கள் முழங்க எதிர் கொண்டு வரவேற்ற போது. |
| 4. தில்லை வாழ் அந்தணர் தம் | திருவாரூர் | திருவாரூர்த் தேவாசிரியன் மண்டபத் திலுள்ள அடியார்களைப் பார்த்து "இந்த அடியார்களுக்கு நான் அடிமையாகும் நாள் எந்நாள்" என இறைவனை வேண்டுகையில் இறைவனே தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன் என அடியெடுத்துக் கொடுக் கப் பாடியது. |
| 5. தம்மையே புகழ்ந் திச்சை பேசினும் | திருவாரூர் | திருவாரூர் பங்குனி உத்தரத் திருவிழா வின் செலவுக்குப் பணமில்லாத வருத்தத்துடன் செங்கட்டிகள் மீது தலை வைத்துப் படுத்திருந்த போது அவை பொன் கட்டிகளாக மாறியி ருந்தது கண்டு பாடியது. |
| 6. பொன செய்த மேனி | திருமுதுக்குன்றம் | இறையருளால் கிடைக்கப் பெற்ற பன்னீராயிரம் பொன்னையும் மணி முத்து ஆற்றில் போட்டுவிட்டு திருவா ரூர்க் குளத்தில் தேடியபோது கிடைக்கா மையால் இறைவனை வேண்டிப் பாடியது. |
| 7. இத்தனையா மாற்றை அறிந்திலேன் | திருக்குருகாவூர் | திருக்குருகாவூருக்குச் செல்லும் போது பசியும் தாகமும் வாட்டி வதைக்க இறைவனே அடியவர் வேடத்தில் வந்து பொதிசோறும், தண்ணீரும் தந்து இளைப்பாறச் செய்து மறைந்த தைக் கண்டு வியந்து பாடியது. |
| 8. பிழையுளன பொறுத்திடு வீர் | திருவெண்பாக்கம் | சங்கிலியாருக்குச் செய்து கொடுத்த சத்தியத்தை மறந்து திருவாரூர் பங்குனி உத்தரத் திருவிழா பார்க்கப் புறப்பட்டு ஊர் எல்லையைத் தாண்டு கையில் இரு கண்களும் குருடாகி விட அடியவர்களின் உதவியுடன் திரு வெண்பாக்கம் திருத்தலமடைந்து தமது நிலைக்கு இரங்கிப் பாடியதும் ஊன்றுகோல் பெற்றதும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 9. கடையானேன் எண்ணாத | திருக்கச்சியேகம்பம் | ஊன்றுகோலின் உதவியுடன் திருக் கச்சியேகம்பம் அடைந்து அங்குள்ள இறைவனை வணங்கிப் பாடியதும் இடக்கண் பார்வை பெற்றதும். |
| 10. மீளா அடிமை உமக்கே ஆளாய் | திருவாரூர் | இடக்கண் பார்வை பெற்றபோதிலும் வான்மீகநாதரின் அழகைக் காண வலக்கண் பார்வையும் வேண்டு மெனக் கேட்டுப் பாடியது. |
| 11. தலைக்குத் தலை மாலை | திருவஞ்சைக் களம் | தமக்கு முத்தியருளி இவ்வுலக வாழ் வை முடித்தருளுமாறு இறைவனை வேண்டிப் பாடியது. |

**1. மாணிக்கவாசக சுவாமிகள்**

- i. பிறந்த இடம் - திருவாதவூர்
- ii. இயற்பெயர் - வாதவூரர்
- iii. தாய் தந்தையர் - சம்புபாதாசிரியர்,சிவஞானவதி
- vi. வாழ்ந்த காலம் - கி.பி 8 ஆம் நூற்றாண்டு
- vii. குலம் - அமாத்தியப் பிராமணர்
- viii. வாழ்ந்த வயது - 32 ஆண்டுகள்
- ix. வகித்த பதவி - அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சர்
- x. ஏனைய பெயர்கள் - மாணிக்கவாசகர், மணிவாசகர், தென்னவன் பிரம்மராயன், பெருந்துறைப் பிள்ளை
- xi. பின்பற்றிய நெறி - ஞானம்( சன மார்க்கம் – குரு சீட உறவு)
- xii. அடைந்த முத்தி - சாயுச்சியம்
- xiii. முத்தியடைந்த தினம் - ஆனி மகம்
- xiv. முதலில் பாடிய திருவாசகப் பனுவல் - சிவ புராணம்
- xv. இறுதியாகப் பாடிய திருவாசகப் பனுவல்- அச்சோப்பதிகம்
- xvi. பாடல்கள் இடம்பெற்றுள்ள திருமுறைகள் - 8ஆந் திருமுறை
- xvii. தற்போதுள்ள பாடல்களின் எண்ணிக்கை - திருவாசகம் 658 பாடல்களும், திருக்கோவையார் 200 பாடல்களும்

2. **மாணிக்கவாசகர் இறையருளால் செய்த அற்புதங்கள்.**

- i. நரிகளைப் பரிகளாக்கி இறைவனே தலைமை வணிகனாக ஓட்டிக் கொண்டுவரச் செய்தமை.
- ii. மீண்டும் பரிகள் நரிகளாக மாறச் செய்தமை.
- iii. வைகையாறு பெருகிவரச் செய்தமை.
- iv. இறைவனே கூலியாளாய் வந்து அரசனின் கைப்பிரம்பால் அடிவாங்கி அந்த அடி சகல சீவராசிகள் முதுகிலும் பட்டு வடுவுற்று வாதவூரரின் இறைபக்தியை உலகறியச் செய்தமை.
- v. புத்தரை வாதில் வென்றமை
- vi. தில்லையில் தாம் பாடிய பாடலை சிவ பெருமானே அந்தணர் வடிவில் வந்து கேட்டு எழுதவும், "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" எனக் கேட்டுத் திருக்கோவையாரை எழுதவும், எழுதிய ஏட்டுக் கட்டுகள் கோயிற் படிக்கட்டில் கிடக்கவும் அதில் **வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது** ஒப்பமும் இட்டிருக்கவும் செய்தமை.
- vii. தாம் பாடிய பாடல்களின் பொருள் இதுவேயென உணர்த்தித் தில்லையம்பல இறைவனுடன் இரண்டறக் கலந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. சந்தான குரவர்

1. சமய குரவர்கள் பக்தி மார்க்கத்தை வளர்த்தனர். சைவ சித்தாந்த தத்துவ நெறியினை வளர்த்தவர்கள் சந்தான குரவர்கள் ஆவர். இவர்கள் சைவ சித்தாந்த சாத்திர நூல்கள்(மெய்கண்ட சாத்திர நூல்கள்) பதினான்கினில் பன்னிரண்டை அருளியவர்கள்.

2. **சந்தானம்** என்பது தலைமுறையை அல்லது பரம்பரையைக் குறிக்கும். **குரவர்** என்பது குருமார் அல்லது ஞானசிரியர்கள் எனப்பொருள் தரும். குரு சீட பரம்பரையில் வந்து சைவ சித்தாந்த தத்துவத்தை வழங்கி, வளர்த்தெடுத்த ஞானிகளே சந்தான குரவர்கள். இவர்களை அகச் சந்தான குரவர், புறச்சந்தான குரவர் என இரு வகைப்படுத்துவர்.

3. திருக்கைலாயத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ கண்ட பரம சிவனிடம் ஞானோபதேசம் பெற்ற திரு நந்தி தேவர், சனற்குமார முனிவர், சத்திய ஞான தரிசனிகள், பரஞ்சோதி முனிவர் ஆகிய நால்வரும் **அகச் சந்தான குரவர்கள்** ஆவர்.

4. பரஞ்சோதி முனிவரிடம் ஞானோபதேசம் பெற்ற மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய நால்வரும் **புறச் சந்தான குரவர்கள்** ஆவர்.

## அ) மெய்கண்ட தேவர்



மெய்கண்டதேவர்

(i) மெய்கண்ட தேவர் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருப் பெண்ணாடகம் என்ற ஊரில் பிறந்தார்.

(ii) சிவ பக்தர்களான அச்சுதகளப்பாளரும், மங்களாம்பிகையும் இவரது தாய் தந்தையர் ஆவர்.

(iii) பலகாலம் குழந்தைப் பாக்கியம் இல்லாது வருந்திய இவரது பெற்றோர், குலகுருவான திருத்துறையூர் சகலாகமபண்டிதரின் ஆலோசனைப்படி திருவெண் காட்டிலுள்ள சுவேதவனப் பெருமானை வழிபட்டுத் தமது குறையிரந்ததன் பலனாக மெய்கண்டார் அவதரித்தார்.

(iv) மெய்கண்ட தேவரின் இயற்பெயர் சுவேதனப் பெருமாள் என்பதாகும்.

(v) சுவேதவனப் பெருமாள் மூன்று வயதிருக்கையில் ஏனைய குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கும் போது அவ்வழியால் வந்த பரஞ்சோதி முனிவர் குழந்தையின் ஆன்ம பக்குவ நிலையுணர்ந்து ஞான உபதேசஞ் செய்ததுடன், தமது குருவாகிய சத்திய ஞான தரிசனிகளின் ஞாபகார்த்தமாக மெய்கண்டார் எனும் திவ்விய நாமத்தைச் சூட்டியருளினார்.

(vi) தாம் பெற்ற மெய்ப்பொருள் பற்றிய உண்மைகளை மெய்கண்டார் தமது மாணவர்களுக்குப் போதித்து வந்தார்.49 மாணவர்கள் இவரிடம் பாடங் கற்றனர். அவர்களுள் மெய்கண்டாரின் தந்தைக்குக் குருவாகவும் மெய்கண்டாருக்கு மாணவராகவும் இருந்த அருணந்தி சிவாச்சாரியார், மனவாசகங்கடந்தார், சிற்றம்பல நாடிகள் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

(vii) தமது தத்துவ சிந்தனைகளைச் **சிவஞானபோதம் எ**ன்னும் நூலாக மெய்கண்டதேவர் ஆக்கியருளினார். சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் அனைத்திற்கும் முதல் நூலாக இந்நூல் விளங்குகிறது. பன்னிரண்டு சூத்திரங்களையும் எண்பதுக்கு மேற்பட்ட வெண்பாக் களையும் கொண்டு நான்கு பெரும் பிரிவுகளாக அமைந்தது இந்நூலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(viii) மெய்கண்டார் ஐப்பசி மாத சுவாதி நட்சத்திரத்தன்று முத்தியடைந்தார். இத் தினத்தினை இவரது குருபூசைத் தினமாக சைவ சித்தாந்திகள் கொண்டாடி வருகிறார்கள்.

## ஆ) அருணந்தி சிவாச்சாரியார்



அருணந்தி சிவாச்சாரியார்

(i) சதாசிவம் எனும் இயற்பெயரையுடைய அருணந்தி சிவாச் சாரியார் ஆதி சைவர் குலத்தில் பிறந்தவர்.

(ii) இவர் சமயக் கல்வியில் அழமான அறிவுடையவர்; ஆகம நூற் கல்வியில் வித்துவம் நிறைந்தவர்.

(iii) இவருக்குச் **சகலாகம பண்டிதர்** என்ற காரணப் பெயருமுண்டு.

(iv) மெய்கண்டார் சிறுவனாயிருந்து மாணவர்களுக்குப் போதிப் பதைக் கண்ட அருணந்தி சிவாச்சாரியார், தமது சீடனான அச்சுத களப்பாளரின் மகனுக்கு அப்படியென்ன ஞானமுண்டு என நினைத்துச் சோதித்துப் பார்க்கச் சென்றபோது மெய்கண்டார் ஆணவம் பற்றிப் போதித்துக் கொண்டிருந்தார். ஆணவத்தின் வடிவம் (சொரூபம்) யாதென அருணந்தியார் மெய்கண்டாரை வினவினார். மெய்கண்டார் மௌனமாகக் கேள்வி கேட்டவரை நோக்கிச் சுட்டுவிரலை நீட்டிக் காண்பித்தார். ஆணவத்தின் வடிவம் நீதான் என்பதே இதன் பொருளாகும். மெய்கண்டாரின் திருவருட் பார்வை பட்டதும் அருணந்தியார் ஓடிச்சென்று அவரது கால்களில் சாஸ்டாங்கமாக விழுந்து வணங்கினார். அப்போது சதாசிவனாருக்கு அருணந்தி சிவாச்சாரியார் என்னும் தீட்சாநாமம் வழங்கியதுடன் தனது சீடராகவும் மெய்கண்டார் ஏற்றுக் கொண்டார்.

(v) மெய்கண்டாரிடம் ஞான உபதேசம் பெற்ற அருணந்தி சிவாச்சாரியார், சிவஞான போதத்தின் வழிநூலாகச் **சிவஞான சித்தியார்** என்னும் நூலை இயற்றினார். சுபக்கம், பரபக்கம் என்னும் இரு பிரிவுகளையுடைய விரிவான நூல் இதுவாகும். அத்துடன் **இருபா இருஃபது** என்னும் நூலினையும் இயற்றியுள்ளார்.

## இ) மறைஞான சம்பந்தர்



மறைஞான சம்பந்தர்

(i) திருப்பெண்ணாடகம் ஊரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர் மறைஞான சம்பந்தர்.

(ii) வேத நெறியிலும் சைவசமயக் கல்வியிலும் இவர் துறைபோனவர்.

(iii) சிறிது காலம் ஞான மார்க்கத்திலிருந்து மௌன விரதம் காத்தவர்.

(iv) பரமானந்தசிவம் என்பது இவரது இயற்பெயராகும். மௌனமாய் இருந்ததால் மறைஞான சம்பந்தர் என இவர் அழைக்கப்பட்டார்.

(v) அருணந்தி சிவாச்சாரியாரிடம் சீடராயிருந்து உபதேசம் பெற்றவர்.

(vi) திருக்காளஞ்சேரி என்னும் இடத்தில் பிரம்புரேசர் சந்நிதியில் சீடர்களுக்கு ஞான போதனை செய்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(vii) இவரது முதன்மையான சீடராக உமாபதி சிவாச்சாரியார் விளங்கினார்.

(viii) இவர் நூல்களெதையும் இயற்றவில்லை. இருப்பினும் **சதமணித்திரட்டு** என்னும் நூலினை ஆக்கினாரெனக் கூறுவாரும் உளர். இதுபற்றி அறிஞர்களிடையே கருத்து பேதம் உண்டு.

(ix) ஆவணி மாத உத்தர நட்சத்திரத்தில் மறைஞான சம்பந்தர் முத்தியடைந்தார்.

## ஈ) உமாபதி சிவாச்சாரியார்



உமாபதி சிவாச்சாரியார்

(i) உமாபதி சிவாச்சாரியார் சிதம்பரத்திலுள்ள தில்லைவாழ் அந்தணர்களில் ஒருவர்.

(ii) இவர் வேதநெறி, சைவ சித்தாந்த நெறி ஆகிய இரண்டிலும் தேர்ச்சி பெற்றவர்.

(iii) இவர் சிதம்பரம் கோயிலுக்குச் சற்றுத் தொலைவிலுள்ள கொற்றவன் குடியில் (கொத்தங்குடி) வசித்தமையால் கொற்றவன் குடி முதலியார் எனவும் அழைக்கப்பட்டார்.

(iv) ஒருமுறை சிதம்பரம் நடராஜப் பெருமானுக்குப் பூசை முடித்த பின்னர் சிவிகையில் ஏறிக் கொடி, குடை, ஆலவட்டம், தீவர்த்தி முதலிய சின்னங்கள் புடைசூழத் தமது இருப்பிடத்துக்குச் சென்று கொண்டிருந்தார். அவ்வழியால் தமது சீடர்களுடன் வந்து கொண்டிருந்த மறைஞான சம்பந்தர் இவரைப் பார்த்து "பட்ட கட்டையில் பகற்குருடு போகின்றது பார்" என்று கூறினார். அதன் உண்மைப் பொருளை உணர்ந்து கொண்ட உமாபதியார் சிவிகையினின்றும் இறங்கி ஓடோடிச் சென்று மறைஞான சம்பந்தரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். அவரின் பக்குவ நிலை கண்ட மறைஞான சம்பந்தரும் தமது சீடராக ஏற்றுக் கொண்டார்.

(v) உமாபதியாரின் குருபக்தியை உலகுக்குணர்த்த விரும்பிய மறைஞான சம்பந்தர், நெசவாளர் இருப்பிடஞ்சென்று நெசவுக்குப் பசையிட வத்திருந்த கூழை வாங்கி அருந்தினார். பயபக்தியுடன் அவரருகில் நின்றுகொண்டிருந்த உமாபதியார், குருவின் முழங்கை வழியாக வழிந்த கூழினைக் கையால் ஏந்திப் பருகினார். இதனைக் கேள்வியுற்ற தில்லைவாழ் அந்தணர்கள் சிதம்பரத்தில் பூசை செய்ய விடாது உமாபதியாரைத் தடுத்தனர்.

(vi) உமாபதியாருக்குத் தீங்கிழைத்ததன் காரணமாகச் சிதம்பரம் ஆலயத்தின் கொடியேற்றத்தின் போது கொடி ஏறாமல் தடைப்பட்டது. உண்மையை உணர்ந்த தில்லைவாழ் அந்தணர்கள் உமாபதியாரிடம் சென்று தவறுக்கு வருந்திப் பிரார்த்தித்தனர். அவரும் ஏறாமல் நின்ற கொடி ஏறும்பொருட்டு நான்கு பாடல்களாலான **கொடிக்கவி**யைப் பாடியருளினார்.

(vii) உமாபதியார் செய்த அற்புதங்களில் ஒன்றாக விளங்குவது இறைவன் சீட்டு மூலம் அனுப்பிய தகவலின்படி **பெற்றான் சாம்பான்** என்ற அடியவருக்கு முத்தியளித்ததாகும். இதனை நம்ப மறுத்தவர்கள் முன் நயன தீட்சை மூலம் முள்ளிச் செடிக்கு முத்தியளித்து உண்மையை நிலை நாட்டினார். இதனால் முள்ளிச் செடிக்கு முத்திகொடுத்த நாயனார் எனப் புகழப்பட்டார்.

(viii) சைவ சித்தாந்த சாத்திரங்களில் எட்டு நூல்களைச் செய்தவர் உமாபதி சிவாச்சாரியார். இவை **சித்தாந்த அட்டகம்** எனப்பட்டது.

அவையாவன: **சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, கொடிக்கவி, போற்றிப் பஃறொடை, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ix) இவைதவிர **கோயிற்புராணம், சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராணம், திருமுறைகண்ட புராணம், திருப்பதிகக் கோவை** முதலான நூல்களையும் உமாபதி சிவாச்சாரியார் இயற்றியுள்ளார்.

(x) திருவாவடுதுறை ஆதீனத்தை நிறுவிய நமச்சிவாயத் தேவர் இவரது மாணவராவார்.

(xi) சந்தான குரவர்களின் பணியினைத் திருவாவடுதுறை ஆதீனம் தொடர்ந்து செய்து வருகின்றது.

(xii) உமாபதி சிவாச்சாரியார் முத்தியடைந்த தினம் சித்திரை மாத அத்த நட்சத்திரத்திலாகும்.

## குறிப்புகள்

**1. சைவ சித்தாந்த சாத்திர நூல்கள்(மெய்கண்ட சாத்திரங்கள்)**

1. திருவுந்தியார் - திருவியலூர் உய்யவந்த தேவனார்
2. திருக்களிற்றுப்படியார் - திருக்கடவூர் உய்யவந்த தேவனார்
3. சிவஞானபோதம் - மெய்கண்ட தேவர்
4. சிவஞான சித்தியார் - அருணந்தி சிவாச்சாரியார்
5. இருபா இருஃபது - அருணந்தி சிவாச்சாரியார்
6. உண்மை விளக்கம் - மனவாசகங்கடந்தார்
7. சிவப்பிரகாசம் - உமாபதி சிவாச்சாரியார்
8. திருவருட்பயன் - உமாபதி சிவாச்சாரியார்
9. வினாவெண்பா - உமாபதி சிவாச்சாரியார்
10. கொடிக்கவி - உமாபதி சிவாச்சாரியார்
11. போற்றிப் பஃறொடை - உமாபதி சிவாச்சாரியார்
12. நெஞ்சுவிடு தூது - உமாபதி சிவாச்சாரியார்
13. உண்மை நெறி விளக்கம் – உமாபதி சிவாச்சாரியார்
14. சங்கற்ப நிராகரணம் - உமாபதி சிவாச்சாரியார்

**2.**

| **அகச் சந்தான குரவர்கள்** | **புறச் சந்தான குரவர்கள்** |
|---|---|
| ஸ்ரீ நந்தி தேவர் | மெய்கண்ட தேவர் |
| சனற்குமார முனிவர் | அருணந்தி சிவாச்சாரியார் |
| சத்திய ஞான தரிசனிகள் | மறைஞான சம்பந்தர் |
| பரஞ்சோதி முனிவர் | உமாபதி சிவாச்சாரியார் |

● ● ● ● ● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சந்தான குரவர் | பிறந்த இடம் | தாய், தந்தையர் | இயற் பெயர் | குரு | மாணவர்கள் | இயற்றிய நூல்கள் | முத்தியடைந்த தினம் |
|---|---|---|---|---|---|---|---|
| மெய்கண்ட தேவர் (வேளாளர்) | திருப்பெண்ணாடகம் | அச்சுதகளப்பாளர் மாங்களாம்பிகை | சுவேதவனப் பெருமாள் | பரஞ்சோதி முனிவர் | அருணந்தி சிவாச்சாரியார், மனவாசகங் கடந்தார், சிற்றம்பல நாடிகள், உட்பட 49 பேர் | சிவஞானபோதம் | ஐப்பசி சுவாதி |
| அருணந்தி சிவாச்சாரியார் (சகலாகம பண்டிதர்) (அந்தணர்) | திருத்துறையூர் | — | சதாசிவம் | மெய்கண்ட தேவர் | மெய்கண்டாரின் தந்தை அச்சுதகளப்பாளர், மறைஞான சம்பந்தர் | சிவஞான சித்தியார் இருபா இருஃபது | புரட்டாதிப் பூரம் |
| மறைஞான சம்பந்தர் (அந்தணர்) | திருப்பெண்ணாடகம் | — | பரமசிவானந்தம் | அருணந்தி சிவாச்சாரியார் | உமாபதி சிவாச்சாரியார் | சதமணித்திரட்டு (சித்தாந்த சாஸ்திர நூல்களில் இடம்பெறவில்லை) | ஆவணி உத்தரம் |
| உமாபதி சிவாச்சாரியார் (அந்தணர்) | சிதம்பரம் | — | உமாபதி சிவம் | மறைஞான சம்பந்தர் | நமச்சிவாயத் தேவர் | சிவப்பிரகாசம்<br>திருவருட்பயன்<br>வினாவெண்பா<br>போற்றிப் பஃறொடை<br>கொடிக்கவி -<br>நெஞ்சுவிடுதூது<br>உண்மைநெறி - விளக்கம்<br>சங்கற்ப - நிகாரணம் | சித்திரை அர்த்தம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. திருமூலர்

## அ. சித்தர்கள்.

(I) சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள் சித்தர்கள் ஆவர். உள்ளத்திலே கொண்டுள்ள தெய்வ பக்தியினால் அருட்சக்தியை வளர்த்து, ஆன்மீக வளர்ச்சியினால் மக்களிடையே மானுட வடிவில் உலவும் தெய்வங்களாக விளங்கும் மகாபுருஷர்களே சித்தர்கள்.

(ii) சித்துக்கள் வாய்க்கப் பெற்றவர்கள் என்பதே சித்தர்கள் என்பதன் பொருளெனலாம். இவர்கள் அட்டமா யோகங்களில் தேர்ச்சி பெற்று அட்டமா சித்திகள்கைவரப் பெற்றவர்கள். நீரிலும், நெருப்பிலும், வான்வெளியிலும் நடக்கக்கூடியவர்கள். கூடுவிட்டுக் கூடுபாயும் வல்லமை நிறைந்தவர்கள். யதார்த்த வாழ்க்கைக்கு முரணான செயல்களை அடிக்கடி புரிவார்கள்.

(iii) சித்தர்கள் தங்களின் யோக சித்திகளினால் உலகிற்கு ஒளியூட்டி வாழச் செய்பவர்கள்.

(iv) நமது உடலின் மூலாதாரங்களான ஆறுமையங்களிலும் எவ்வாறு சக்தியூட்டுவது, விலங்கிலிருந்து வேறுபடும் மனிதன் மன ஆற்றலைப் பெருக்கிப் பேண வேண்டிய யோக முறைமைகள் ஆகியவற்றை எடுத்துக்கூறி வாழ்ந்து காட்டியவர்கள். ஒழுக்கமான தவ வாழ்வினுக்குரிய உளப் பயிற்சிகள் பற்றி விளக்கியுள்ளனர்.

(v) **யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்** (திருமூலர் கூற்று) - இதுவே சித்தர்களின் வாழ்க்கை ஆதாரமெனலாம்.

(vi) தமது ஆன்ம பக்குவத்தினால் வெளிச்சடங்குகள், வெளிச் செயல்கள் போன்ற வற்றினை உதறிவிடும் போக்கினைச் சித்தர்களிடம் காண முடிகிறது.

(vii) தமிழ்நாட்டில் சித்தர் மரபொன்று நீண்டகாலமாய் நிலைத்து வந்துள்ளது. அந்த மரபினராகப் பதிணெண் சித்தர்களைக் குறிப்பிடுவர். அகத்தியர், திருமூலர், திருவாக்கியர்,பட்டினத்தார், பத்திரகிரியார், அகப்பேய்ச்சித்தர், குதம்பைச்சித்தர், கடுவெளிச்சித்தர், அழுகுணிச்சித்தர், கொங்கணச்சித்தர், பாம்பாட்டிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், கருவூர்ச்சித்தர், மதுரை வாலைசாமி, கணபதிதாசர், உரோமரிஷி, சட்டைமுனி, இராமதேவர் முதலா னோர் இதில் அடங்குவர்.

(viii) ஈழத்திலும் சித்தர் பரம்பரையினர் வாழ்ந்துள்ளனர். கடையிற்சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர்சுவாமிகள், பெரியானைக் குட்டிச்சுவாமிகள், சிந்தானைக்குட்டிச் சுவாமிகள், நவநாத சித்தர், மகாதேவ சுவாமிகள் எனப் பலரையும் குறிப்பிட முடியும்.

(ix) சித்தர்களில் முதன்மை பெற்றவரான திருமூலர் பற்றி இனி நோக்குவோம்.

## ஆ. திருமூலர்

(i) திருமூலரின் இயற்பெயர் சுந்தரநாதர் என்பதாகும்,

(ii) சுந்தரநாதர் திருக்கைலாயத்தில் இருக்கும்போது தமிழ்நாட்டிலிருந்து அங்கு சென்றிருந்த திருமாலங்க தேவர், தமிழ்நாட்டில் நல்வழிகாட்டுவோரின்றி மக்கள் சரியான பாதையில் செல்ல முடியவில்லை. அவர்களுக் குத் தாங்கள்தான் வாழும் நெறியை உணர்த்த வேண்டுமென வேண்டிக் கொண்டார். அவரின் வேண்டு கோளை ஏற்ற சுந்தரநாதர் சிதம்பரத்தை அடைந்தார். பின்னர் இவர் திருவாவடுதுறையில் யோக நிட்டையில்



திருமூலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்தார். தம்மை இறைவன் படைத்த நோக்கத்தையும் தமக்கு இட்ட பணியையும் மெய்ஞ்ஞானத்தினால் உணர்ந்துகொண்டார்.

(iii) திருமூலர் சித்தர் பரம்பரையின் தலைமைச் சித்தராவார். மூவாயிரம் ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து, ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்களை இயற்றியவர். இவர் மெய்ஞ்ஞானப் பாடல்களின் தொகுதி திருமந்திரம் என்னும் நூலாகும். இது சைவத் திருமுறைகளில் பத்தாவதாக இடம்பெற்றுள்ளது. **மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்** எனப் போற்றப் பட்டுள்ளது.

(iv) சேக்கிழாரின் பெரியபுராணம், திருமூலநாயனாரின் வரலாற்றைக் கூறுகிறது. அதில் திருக்கைலாசத்தில் திருநந்தி தேவரின் அருள்பெற்ற மாணாக்கருள் ஒருவராகிய சிவயோகி திருவாவடுதுறையை அடைந்தபோது, ஒரு புல்வெளியில் பல பசுக்கள் சூழ்ந்து நின்று கதறுவதையும், சாத்தனூர் என்னும் கிராமத்து மூலன் என்னும் அப்பசுக்களை மேய்க்கும் இடையன் அங்கு இறந்து கிடப்பதையும் கண்டார். பசுக்களின் துன்பம் நீக்கத் திருவுளங்கொண்ட சிவயோகியார், கூடுவிட்டுக் கூடுபாயும் சித்தின் மூலம் இறந்து கிடந்த மூலனின் உடலிற்புகுந்து, அவனை உயிர்பெறச் செய்ததுடன், மகிழ்ச்சியில் மிதந்த பசுக்களையும்அதனதன் இல்லங்களுக்கு ஓட்டிச் சென்று சேர்ப்பித்தார்.

(v) மூலன் உடலிற் கூடுவிட்டுக் கூடுபாயும்போது சிவயோகியார் உயிரற்ற தமது உடலை வனத்திற் கிடத்திவிட்டுச் சென்றிருந்தார். திரும்பி வந்து பார்க்கையில் அந்த உடலைக்காணாது திகைத்தார். சிவபெருமானின் விருப்பப்படியே ஆகமங்களின் பொருளினைத் தமிழில் திருமந்திரமாகப் பாடுவதற்காகவே இப்படியான செயல் நடந்திருக்கிறது என்பதை ஞான திருஷ்டியினால் உணர்ந்துகொண்டார்.

(vi) திருவாவடுதுறை ஆலயத்தின் மேற்குப் பிரகாரத்தில் காணப்பட்ட அரச மர நிழலில் சிவயோக நிட்டையில் அமர்ந்த திருமூலர், இறைவனால் இடப்பட்ட திருமந்திரம் பாடும் பணியை நிறைவு செய்தபின் மீண்டும் திருக்கைலாயத்தை அடைந்தார்.

(vii) மூலன் உடலில் வாழ்ந்ததினால் திருமூலர் எனப்பட்டார். மூலப்பொருளை உணர்ந்ததாலும் அப்பெயரைப் பெற்றாரென்பர்.

**இ. திருமந்திரம்**

(i) பத்தாந் திருமுறையாகவும், ஒன்பது தந்திரங்கள் கொண்டதாகவும், மூவாயிரம் பாடல்களை உடையதாகவும், குருவாகிய திருநந்தி தேவரையே சிவனாகக் காண்பதாகவும், விஞ்ஞான பூர்வமான கருத்துக்களையும், ஒழுக் கக் கருத்துக்களையும், ஆன்மீகக் கருத்துக்களையும் எடுத்துக் கூறுவதாகவும் திருமந்திரம் அமைந்துள்ளது.

(ii) சைவாகமங்கள் இருபத்தெட்டும் இறைவனால் ஆக்கப்பட்டவை. ஆனால் நந்தியெம்பெருமான் ஸ்ரீகண்ட உருத்திரரிடம் பெற்றுக்கொண்ட ஒன்பது ஆகமங்களையும், முதலில் திருமூலர் எட்டுச் சீடர்களுக்கு உபதேசித் தருளினார். அவற்றின் சாரத்தினையே ஒன்பது தந்திரங்களாகத் தமிழில் திருமந்திரமாகப் பாடியருளினார்.

(iii) **முதலாந்திருமந்திரம்**(காரண ஆகமத்தின் சாரம்)

1) பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் உண்மை விளக்கல்.
2) யாக்கை நிலையாமை
3) செல்வம் நிலையாமை
4) இளமை நிலையாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) உயிர் நிலையாமை

6) கொல்லாமை

7) புலால்மறுத்தல்

(iv) **இரண்டாந் திருமந்திரம்** (காமிக ஆகமத்தின்சாரம்)

1) சிவபெருமானே உண்மைப் பொருளென உணர்தல் வேண்டும் எனல்.

2) இறைவனின் அட்ட வீரட்டச் செயல்கள் உண்மையை உணர்த்தும் புனையுருவங்கள் ஆகும் எனல்.

3) முப்புரங்களை எரித்தழித்தமை சிவனின் திருவுள்ளக் குறிப்பேயாகும் எனல்.

4) சிவனின் அருவுருவத் திருமேனியே வழிபாட்டுக்குரியதெனல்.

(v) **மூன்றாந் திருமந்திரம்**(வீரராகமத்தின் சாரம்)

1) சிவன், சிவை ஆகியோரது தன்மைகளை உலகியலோடு ஒப்பிட்டுக் காட்டல்.

2) ஆன்மாக்களுக்கு இன்பமளிப்பது இல்வாழ்க்கையாகிய தவநிலை யாகும். அதற்கு அட்டாங்க யோகங்களும் துணை நிற்கும் எனல்.

(vi) **நான்காந் திருமந்திரம்**(சிந்தியாகமத்தின் சாரம்)

1) ஆன்மா தன்னைச் சிவனுக்கு அடிமையாக்கல் வேண்டும் எனல்.

2) அதற்கு உறுதுணையாகும் திருவைந்தெழுத்தின் மகிமைகளைக் கூறல்.

3) அம்மையும், அப்பனும் உயிரும், அறிவும் போன்ற ஒன்றே எனல்.

(vii) **ஐந்தாந் திருமந்திரம்**(வாதுள ஆகமத்தின் சாரம்)

1) நாற்பொருட்கள்(அறம், பொருள், இன்பம், வீடு)

2) நால்வகைச் சைவம்

3) நால்வகை நெறிகள்(சரியை, கிரியை, யோகம், ஞானம்)

4) நால்வகைத் தொண்டுகள்

5) தொண்டுகளால் அடையும் பயன்கள்

(viii) **ஆறாந் திருமந்திரம்**(வியாமள ஆகமத்தின் சாரம்)

1) சிவநெறியை அடைய விரும்புவோருக்கு உறுதுணையாவது குருவடிவாய் வரும் திருவருள்.

(ix) **ஏழாந் திருமந்திரம்**(காலோத்திராகமத்தின் சாரம்)

1) சிவலிங்க வழிபாடு

2) சிவனடியார் சங்கம வழிபாடு

(x) **எட்டாந் திருமந்திரம்**(சுப்பிரபேத ஆகமத்தின் சாரம்)

1) பக்தியின் முதிர்ந்த நிலை முத்தியாகும்.

2) முத்தியின் முடிவுநிலை செயலற்ற நிலை

(xi) **ஒன்பதாந் திருமந்திரம்**(மகுடாகமத்தின் சாரம்)

1) அணைந்தோர்(சீவன் முத்தர்) இயல்பு

2) சித்தாந்த சைவர் உறைகின்ற இடம் மடம்.

3) குருமடம் கண்டவரே குருவினைக் கண்டவராவார்.

4) குருநெறியே சிறப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(xii) **ஒன்றே குலம் ஒருவனே தேவன்** என்றவர் திருமூலர். இதன்மூலம் மனித குலம் முழுவதையும் ஒன்றாகவே நோக்கினார். உயிருள்ளவற்றிலும் உயிரற்றவற்றிலும் இறைவனைத் தரிசித்தார். உலக இன்பங்களில் ஈடுபட்டவருக்கு ஒளிகாட்டியதுடன் பக்தியால் இறைவனை அடையலாமென உணர்த்தினார். உடல் சார்ந்த வாழ்க்கையில் இருந்து ஆன்மீக வாழ்க்கையின் உச்ச நிலையை அடைவதற்கான முயற்சிகளை எடுத்துக் கூறியுள்ளார்.

(xiii) திருமந்திரப் பாடல்கள் இரண்டு வருமாறு:

**நடுவு நின்றார்க்கன்றி ஞானமும் இல்லை**
**நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை**
**நடுவு நின்றார்நல்ல தேவரும் ஆவார்**
**நடுவு நின்றார்வழி நானும் நின்றேனே**

**சொற்பொருள்:**

இடகலை, சுழுமுனை, பிங்கலை என்ற மூவகை நாடிகளுள் நடு நாடியாகிய சுழு முனையில் நின்று இயங்குபவர்களுக்கு அன்றி ஏனையோருக்கு யோகம் வாய்க்கப் பெற்று மெய்ஞ்ஞானம் பிறவாது. அந் நாடியினூடு மூச்சை இயக்குவோருக்கு நரகத் துன்பமும் கிடையாது. அவர்கள் தேவர்களாக விளங்குவார்கள். அத்தகையவர்களின் வழியில் நானும் நிற்கிறேன்.

**என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்**
**பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்**
**அன்போடு உருகி அகம்குழை வார்க்கன்றி**
**என்போல் மணியினை எய்த வொண்ணாதே**


**சொற்பொருள்:**

தமது எலும்புகளை விறகாக்கித் தசைகளைத் தகதகக்கும் நெருப்பினில் பொரியும்படி வறுத்தெடுத்தாலும், மெய்யன்போடு உள்ளம் உருகி இறைவனை வழிபடுவோருக்கல்லாமல், வேறு எவரும் என்னைப் போன்று பொன்மணியாகிய சிவத்தினை அடைய முடியாது.

(முதலிரண்டு அடிகளிலும் குண்டலினியோகம் கூறப்பட்டுள்ளது. அன்பே சிவமாகையால் அன்பினாலே அது சிவயோகமாதல் வேண்டும் என்பது பின்னிரு அடிகளிலும் கூறப்பட்டுள்ளது).

## குறிப்புகள்

1.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. சுவாமி விபுலாநந்தர்



சுவாமி விபுலாநந்தர்

1. ஈழத்துத் தமிழ்ப் பெரியார்களுள் ஒருவரான சுவாமி விபுலாநந்தரின் இயற்பெயர் மயில்வாகனன்.
2. இவர் பிறந்த இடம் ஈழத்தின் கிழக்கு மாகாணத்துத் தென்கோடியிலுள்ள காரைதீவு.
3. இவரது பெற்றோர் சாமித்தம்பி, கண்ணம்மை ஆகியோர்.
4. இவர் பிறந்த திகதி; 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் திகதி.
5. விபுலாநந்தரின் இளமைக்கால ஆசிரியர்களாக திரு. க. குஞ்சித்தம்பி, புலோலி வைத்திலிங்க தேசிகர் ஆகியோர் விளங்கினர்.
6. இவர் கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலை, மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி, ஆகியவற்றில் கல்வி கற்றவர்.
7. விபுலாநந்தர் பாடசாலைக் கல்வியுடன் மேபிரிட்ஜ் ஜூனியர், கேம்பிரிட்ஜ் சீனியர், கொழும்பு ஆசிரிய கலாசாலை விஞ்ஞான ஆசிரிய டிப்ளோமா, மதுரை தமிழ்ச் சங்கப் பண்டிதர்(1916இல்), இலண்டன் விஞ்ஞான மாணிப்பட்டம்(1920இல்) ஆகிய பரீட்சைகளில் சித்தி பெற்றவர்.
8. இவர் தமிழ், ஆங்கிலம், வடமொழி, கிரேக்கம் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர்.
9. கல்முனை கத்தோலிக்க மிஷன் பாடசாலை, மட்டக்களப்புப் புனித மிக்கேல் கல்லூரி, யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றினார்.
10. மானிப்பாய் இந்துக் கல்லூரி, திருகோணமலை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம் ஆகியவற்றின் அதிபராய்க் கடமையாற்றினார்.
11. துறவு வாழ்க்கையே உள்ளம் நாடி நின்றதால் மயில்வாகனன் 1922 இல் சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தில் இணைந்து கொண்டார்.
12. இவருக்குச் சுவாமி சிவானந்தர் **பிரபோத சைதன்யர்** என்ற பிரம்மச்சரிய நாமத்தைக் கொடுத்தார்.
13. 1924 இல் ஞான உபதேசம் பெற்று **சுவாமி விபுலாநந்தர்** எனும் தீட்சா நாமத்தைப் பெற்றுக் கொண்டார்.
14. விபுலாநந்தரின் பணிகள் பன்முகத் தன்மை வாய்ந்தவை. சமயம், கல்வி, கலை, இலக்கியம், சமூகம் என்பவற்றின் வளர்ச்சிக்காக இவர் அரும்பாடு பட்டு உழைத்ததுடன், தன் வாழ்நாளையும் அர்ப்பணிப்புடன் தியாகஞ் செய்தார்.

**15. சமயப் பணிகள்**

**அ)** சமய நூல்களை எழுதி வெளியிட்டமை.

**ஆ)** சமயப் பிரசங்கங்கள் செய்தமை.

**இ)** சமய மாநாடுகள், கருத்தரங்குகள் ஆகியவற்றுக்குத் தலைமை தாங்கியமை.

**ஈ)** வேதாந்த மரபுசார்ந்த கவிதைகளை எழுதி வெளியிட்டமை.

**உ)** சமயப் பெரியார்களை மதித்துப் போற்றியமையுடன் அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்ந்தமை.

**ஊ) கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப்பிள்ளை இரட்டை மணிமாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டை மணிமாலை, உமாமகேஸ்வரன் கணேச தோத்திர பஞ்சகம், நடராச வடிவம், குமாரவேல் நவமணிமாலை** ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளையும், கலிப்பா, விருத்தப்பா, வஞ்சிப்பா வகைகளையும், கண்ணிகள், சிந்துகள் ஆகிய வகைகளையும் கையாண்டு நான்மணி மாலை, தோத்திரம் முதலான சமய நூல்களையும் எழுதியமை.

**எ)** இலங்கையில் அத்வைத வேதாந்த மரபின் முன்னோடியாக விளங்கியதுடன், அதன் தத்துவங்களைப் பாமரரும் விளங்கும் வண்ணம் போதித்தமை.

**ஏ)** இராமகிருஷ்ண சங்கத்தின் கிளை நிறுவனமொன்றை இலங்கையில் நிறுவி அதன் ஆதரவில் முப்பதுக்கு மேற்பட்ட கல்விக் கூடங்கள் அமைத்தும், முகாமை செய்தும், மாணவர் இல்லங்களை அமைத்தும், திருமடங்கள் கட்டியும் தருமபரிபாலனம் செய்தமை.

## 16. இலக்கியப் பணிகள்:

**அ)** விபுலாநந்தரின் இலக்கியப் பணிகள் எழுத்தாளர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், பத்திரிகையாசிரியர், மொழிபெயர்ப்பாளர் என்ற வகையில் அமைந்துள்ளன.

**ஆ)** தமிழர்தம் பழம்பெருமைகளைப் பற்றி **செந்தமிழ்ச் செல்வி, கலைமகள், ஈழகேசரி** போன்ற இந்திய, இலங்கை ஏடுகளில் எழுதி வெளியிட்டார்.

**இ)** **வேதாந்த கேசரி, இராம கிருஷ்ண விஜயம், பிரபுத்த பாரத**(ஆங்கிலம்) ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராக விளங்கினார்.

**ஈ)** பல்வேறு கவிதைகளை யாத்ததுடன், அவற்றில் ஓசைநயம், உணர்ச்சி வெளியீடு, கருப்பொருள், மொழிச்செம்மை, அணிச்சிறப்பு, ஆகியன மிளிரச் செய்தார்.

**உ)** உரைநடை நூல்களில் செந்தமிழ் வழக்கினை அதிகம் பேணியதுடன், கவிதை நடைபோன்று உரைநடையையும் எழுதினார்.

**ஊ)** இவரது உரைநடை நூல்களில் விஞ்ஞானக் கட்டுரைகள், கலைச் சொற்கள், விஞ்ஞான தீபம், மொழிபெயர்ப்பு ஆகியன அடங்குவன. **சுவாமி விபுலாநந்தர் சம்பாஷணை, விவேகானந்த தீபம், விவேகானந்தரின் சொற்பொழிவு** நூல்கள் ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

## 17. கல்விப்பணிகள்:

**அ)** கல்வி மூலம் இந்துக்களும் தமிழர்களும் உயர்வுகாண உழைத்தவர் சுவாமி விபுலாநந்தர்.

**ஆ)** தமிழ் மாணவர்கள் உயர்கல்வி பெறும்பொருட்டுச் சிதம்பரத்தில் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டுமென வலியுறுத்திச் சென்னை மாகாண அரசின் கல்விக் குழுவுக்குச் சிபாரிசு செய்ததுடன்ச அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உருவாவதற்கு வித்திட்டவர்.

**இ)** அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

**ஈ)** இந்து மரபுக் கல்வியில் மேனாட்டுக் கல்வியை இணைத்தவர்.

**உ)** "கற்ற கல்வி பிறரைப் பாதிக்கக் கூடாது; அது உயிர்ப்பூட்டுவது; உண்மையைக் காட்டுவது; தன் னம்பிக்கையைத் தருவது" என்ற கொள்கையைக் கடைப்பிடித்தவர்.

**ஊ)** இராம கிருஷ்ண மிஷனுக்குரிய கல்விச் சட்டத்தை "இந்து போட்" இராசரத்தினத்துடன் இணைந்து உருவாக்கியவர்.

**எ)** 1925 இல் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளுக்கான முகாமைத்துவப் பொறுப்பினை ஏற்று நடத்தியவர்.

**ஏ)** இராமகிருஷ்ண மிஷனுடன் இணைந்து கல்லடி சிவானந்தா ஆண்கள் பாடசாலை, ஆனைப்பந்தி இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைதீவு சாரதா வித்தியாலயம், திருகோணமலை இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளை நிறுவி ஏழை மாணவர் கல்வி பெற உதவியவர்.

**ஐ)** முதன்முதல் இராமகிருஷ்ணமிஷன் முகாமையின் கீழுள்ள பாடசாலையாக நாகமுத்து என்பவரால் தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தை பொறுப்பேற்றுச் செயற்படுத்தியவர்.

**ஒ)** மாணவர் நலன்கருதி கலைச் சொல் அகராதியை உருவாக்கியவர். **யாழ்ப்பாணம் ஆரிய, திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தை** நிறுவுவதில் முன்னின்று செயற்பட்டவர்.

**ஓ)** யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலும், கல்லடி உப்போடையிலும் அநாதை ஆசிரமங்களை நிறுவி ஆதரவற்ற சிறுவர்களின் கல்வியை மேம்படுத்தியவர்.

**ஔ)** பாடசாலைகளில் வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனை நடத்துதல், பக்திப் பாடல்களைப் பாராயணம் செய்தல், பண்ணிசைப் பயிற்சிகளில் ஈடுபடுதல் முதலான செயற்பாடுகளில் முன்னோடியாகச் செயற்பட்டவர்.

## 18. கலை சமூகப் பணிகள்:

**அ)** இசைத் தமிழில் அதீத ஈடுபாடு கொண்டு பழந்தமிழ் இலக்கிய நூல்களை ஆய்வு செய்து, இயலும் இசையும், ஒன்றுக்கொன்று ஆதாரமானவை என்னும் கொள்கையின் அடிப்படையில் இசைத்தமிழ் ஆராய்ச்சி நூலான **யாழ்நூல்** என்பதை 1947 ஆம் ஆண்டு உலகுக்கு அறிவித்தவர்.

**ஆ)** செந்தமிழ் நடையில் இனிய கவிதைகளாகக் **குருதேவர் வாக்கியம், விவேகானந்த பஞ்சகம், ஆறுமுக நாவலர், கங்கையில் விடுத்த ஓலை** ஆகியவற்றை உள்ளத்து உணர்வின் அனுபவங்களாக வெளியிட்டவர்.

**இ)** **மதங்கசூளாமணி** என்னும் நாடக நூலினை வடமொழி மூல நூலினைப் பின்பற்றி எழுதித் தமிழ் மொழிக்கு அணி செய்தவர்.

**ஈ)** இயல், இசை, நாடகம் ஆகிய துறைகளில் பணியாற்றியதனால் "முத்தமிழ் வித்தகர்" எனப் பாராட்டப் பெற்றவர்.

**உ)** எல்லா மக்களையும் தமது அன்பினால் சமமாக நேசித்தவர். இதனால் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் இணைந்து பாடுபட்டவர்.

**ஊ)** அநாதை இல்லங்களின் வளர்ச்சிக்காகக் கிராமங்கள் தோறும், அறக் கொடைத் திட்டங்களை ஏற்படுத்தியவர்.

**எ)** ஏழை மாணவர் வாழ்வில் கூடிய அக்கறை காட்டி உழைத்தவர்.

19. சுவாமி விபுலாநந்தர் அவர்கள் 1947 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதி சமாதியடைந்தார். அவரது சமாதி மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் அமைந்துள்ளது. இன்றும் இந்து மக்களின் கலங்கரை விளக்காக அது திகழ்கிறது. மக்கள் சென்று அஞ்சலியும் பிரார்த்தனையும் செய்து வருகின்றார்கள்.

20. இலங்கையின் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய மட்டத் தமிழ்த்திறன் போட்டியானது விபுலாநந்த அடிகளின் நினைவு நாளை மையப்படுத்தியே நீண்டகாலம் நடைபெற்று வந்தது.



**விபுலாநந்தர் சமாதியில் அஞ்சலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. இறைவனும் ஆன்மாவும்

1. உலகிலுள்ள பொருள் அனைத்தும்

   (1) அறிவிக்காமலே அறியும் பொருள்

   (2) அறிவிக்காவிடில் அறியமாட்டாத பொருள்

   (3) அறிவித்தாலும் அறிய மாட்டாத பொருள் என மூன்று வகைப்படும்

2. சைவ சித்தாந்தம் இம் மூன்று பொருள்களையும் முறையே **பதி, பசு, பாசம்** எனக் கூறுவதுடன், இவை என்றுமுள்ள உண்மைப் பொருள்கள் என்கின்றது.

3. இவை வெவ்வேறானவை ஆயினும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை. பதி வியாபகம்; பசு வியாப்பியம்; பாசம் வியாப்தி என்னும் வகையில் இவற்றின் தொடர்பு அமைந்துள்ளது.

4. பாசம் - கட்டுவது; பசு - கட்டுண்டிருப்பது.

## 5. பதி:



**பதியின் ஐந்தொழில் விளக்கம்**

**(அ)** இறைவன், கடவுள், பதி என்பன சைவ சித்தாந்தத்தில் ஒரு பொருளையே சுட்டுவன.

**(ஆ)** இறைவனுக்கு **சொரூப இலட்சணம்**(சிறப்பியல்பு), **தடத்தலட்சணம்**(பொதுவியல்பு) ஆகிய இருவித நிலைகள் உண்டு.

**(இ)** சொரூப இலட்சணத்தின் போது பதியானது குணங்குறிகளற்று மனம், வாக்கு, காயம், ஆகிய திரிகரணங்களுக்கு எட்டாமல் பரமசிவன் என்னும் பெயருடன் விளங்கும்.

**(ஈ)** இங்ஙனம் கட்டற்றதும், கட்டப்படாததும் குணம் குறியற்றதுமாகிய சுத்தசிவம்(பதி) ஆன்மாக்கள் மேல் வைத்த எல்லையற்ற கருணையினால் தன் சொரூப நிலையினின்றும் பல படிகள் இறங்கிப் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்கிறது. பதியின் இந் நிலையினைத் தடத்த இலட்சணம் எனக் கூறப்படும். இது பொதுவியல்பாகும்.

**(உ)** பொதுவியல்பின்போது இச்சாசக்தி ஞான சக்தி என்பவற்றின் தொடர்பினால் அருவத்திருமேனி, உருவத் திருமேனி, அருவுருவத் திருமேனி ஆகிய திருமேனிகள் மூன்றும் தோன்றுகின்றன. சிவமும் சக்தியும் மணியும் ஒளியும் போலவும், நகமும் சதையும் போலவும் பிரிவின்றிக் கலந்துள்ளன. இவற்றினை உபசாரமாக இறைவன் இறைவி, நாயகன் நாயகி எனக் கூறுவர்.

**(ஊ)தடத்த நிலையில் சிவபெருமான் எட்டுக் குணங்களைக் கொண்டுள்ளார்.**

(i) தன்வயத்தனாதல்
(ii) தூய உடம்பினனாதல்
(iii) இயற்கை உணர்வினனாதல்
(iv) முற்றும் உணர்தல்
(v) பேரருள் உடைமை
(vi) அளவில் ஆற்றலுடைமை
(vii) வரம்பிலின்பமுடைமை
(viii) இயல்பாகவே பாசங்களில் நீங்குதல்

**(எ)** ஐந்தொழில் புரியும் திருமேனிகளாகப் பிரம்மா (படைத்தல்), விஷ்ணு (காத்தல்), உருத்திரன் (அழித்தல்), மகேசுரன் (மறைத்தல்), சதாசிவன் (அருளல்) ஆகிய ஐந்தும் விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. பசு:

**(அ)** பசு, உயிர், ஆன்மா என்பன ஒரு பொருட் சொற்களாகும்.

**(ஆ)** ஆன்மாக்கள் அநாதியானவை; எண்ணிக்கை அற்றவை.

**(இ)** ஆன்மாக்கள் சகலர் (மும்மலங்களும் உடையவை), பிரளயாகலர் (இருமலங்களை உடையவை) விஞ்ஞானகலர்(ஒருமலம் மட்டும் உடையவை என மூவகைப் படுவன.

**(ஈ)** ஆன்மாக்கள் அநாதியாகவே ஆணவத்தினாற் கட்டுண்டு வருந்துவன.

**(உ)** ஆணவத்தின் வலிமையைக் கெடுப்பதற்காக மாயையினாலாகிய தனு. கரண, புவன போகங்களை ஆன்மாக்கள் பெற்றுக் கொள்கின்றன.

**(ஊ)** ஆன்மாவானது பதியைச் சார்ந்து சத்தாகவும்(அறிவுள்ளபொருள்), ஆணவத்தைச் சார்ந்து அசத்தாகவும்(அறிவற்ற பொருள்), சதசத்தாக (சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் பொருள்) விளங்குகிறது.

**(எ)** ஆன்மாக்கள் நற்செயல்கள் காரணமாக இருவினையொபபு, மலபரிபாகம், சத்திநிபாதம் ஆகிய படிநிலைகளில் பக்குவப்பட்டு இறுதியில் முத்தி நிலையை அடைகின்றன. முத்தி நிலையில் **தாடலை போற் கூடு நெறி** யினதாக இறைவனுடன் இரண்டறக் கலந்து பேரானந்தம் அடைகின்றன.

## 7. பாசம்:

**(அ)** மலம், பாசம் என்பன ஒருபொருள் தருவன.

**(ஆ)** ஆணவம், கன்மம், மாயை என்பன மும்மலங்களாகும். இவற்றுள் ஆணவ மலம் மூலமலமாகவும், இருண்மலமாகவும், ஆன்மாவை அநாதிமுதல் பீடித்ததாகவும் விளங்குவது.

**(இ)** ஆன்மாவின் சுக துக்கங்களுக்குப் பாசங்களே நிமித்த காரணம், முதற்காரணம், துணைக்காரணம் என இருப்பவை.

**(ஈ)** ஆன்மாவின் அறிவை மறைத்து மயக்குதல், தன்னைக் காட்டாமல் மறைத்துக் கொள்ளல் ஆகியவை, ஆணவத்தின் இயல்பாகும்.

**(உ)** ஆணவமானது ஞானிகளிடத்தில் வலியிழந்து கிடக்கும். முத்திநிலையில் வலியிழந்து சூக்கும வடிவில் அடங்கிக் கிடக்கும்.

**(ஊ)** கன்மமானது நல்வினை, தீவினை ஆகிய இரண்டுமாகி மனம், வாக்கு, காயம் ஆகியவற்றாற் செய்யப்படுவது. உயிரோடு தொடர்புடைய வினை பசுவினை என்றும், சிவத்தோடு தொடர்புடைய வினை சிவவினை என்றும் இரு வகைப்படும். பற்றற்ற வினை என்பது பயன்கருதாது செய்யப்படுவதாகும். இது நல்வினையை விட மேலானது.

**(எ)** பற்றற்ற வினைக்கு மோட்சமே பலனாகக் கிடைப்பதால், அத்தகைய வினை செய்யும் ஆன்மாவுக்குப் பிறவியெடுக்கும் துன்பம் கிடையாது. நல்வினை செய்வதால் புண்ணியமும், தீவினை செய்வதால் பாவமும் கிடைக்கும். புண்ணியப்பலன் இன்பத்தையும் பாவப்பலன் துன்பத்தையும் விளைவிக்கும்.

**(ஏ)** ஆன்மாக்கள் செய்த பழைய வினை **சஞ்சிதம்** எனப்படும். இது கட்டாயம் ஆன்மாஅனுபவித்தே தீர வேண்டியதாகும். சஞ்சிதம் - சேர்க்கப்பட்டது; (வினைகளின் தொகுதி) பல பிறவிகளிலும் செய்யப்பட்ட வினை இவை.

**(ஐ)** வினையானது அனுபவிக்கும் போது **பிராரர்த்தம்** எனப்படும். இது நிகழ்கால அனுபவிக்கும் வினையாகும்.

**(ஒ)** வினையை அனுபவிக்கும் போதே புதிதாய்ச் செய்யப்படும் வினை **ஆகாமியம்** ஆகும்.

**(ஓ)** வினைப் பயனை அனுபவிக்க ஆன்மா மீண்டும் மீண்டும் பிறவியெடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(ஔ)** மாயை(மாயா) என்பது தோன்றுதலுக்கும் ஒடுங்குதலுக்கும் உரியதென்று பொருள் தரும். மாயை 36 தத்துவங்களும், 60 தத்துவிகங்களும் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் இடமாயுள்ள மூலப் பொருளாகும். 36 மாய தத்துவங்களுள் கீழேயுள்ள 24 ஆன்ம தத்துவங்களும், நடுவினுள் ஏழு வித்தியா தத்துவங்களும். மேலேயுள்ள 05 சிவதத்துவங்களும் அடங்குகின்றன.

**(க)** மாயைமுறையே சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என மூன்று வகைப்படும். மாயையிலிருந்தே ஆன்மாக்களின் வினைப் பயன்களுக்குத் தக்கதாக தனு, கரண, புவன, போகங்கள் கிடைக்கின்றன.

## 8. மறுபிறப்பு

**(அ)** ஆன்மாக்களின் பிறவித் தொடர்ச்சி முடிவுறும் வரை அவை பிறந்தும், இறந்தும் வினைப் பயனை அனுபவிக்கின்றன. பிறவிகள் பல எடுக்கின்றன. **புல்லாகிப் பூடாய்** எனத் தொடங்கி **எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்** என்று மாணிக்க வாசக சுவாமிகள் கூறியவாறு முத்தியடையும்வரை பிறவிகள் ஆன்மாக்களால் எடுக்கப்படுகின்றன.

**(ஆ)** முற்பிறவியிலும் பார்க்க உயர்ந்த அல்லது தாழ்ந்த பிறப்பாக மானுடப்பிறவி அமையக்கூடும். மீண்டும் பிறப்பது முன்னுடலை நீத்த பின்னும் நிகழலாம்; காலாந்திரத்திலும் நிகழலாம்.

**(இ)** முத்தியடைந்த ஆன்மாக்கள், முத்தியடையும் பொருட்டு மௌன சமாதியடைந்த ஆன்மாக்கள், முத்திநிலைக்குரிய கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகிய ஞான நிலையில் நின்ற ஆன்மாக்கள் ஆகிய மூவகையுமே மீண்டும் பிறவாத ஆன்மாக்களாகும்.

**(ஈ)** மலங்களினின்றும் நீங்கி முத்தியடைய விரும்பும் ஆன்மாவானது அதற்குரிய சைவ சாதனங்களைக் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டுமெனச் சைவ சித்தாந்த நூல்கள் எடுத்துக் கூறியுள்ளன.

## 9. முத்திநிலை:

**(அ)** முத்தியென்பது நீக்கம் எனப் பொருள் தருவதாகும். நீக்கம் என்பது துக்க நிவர்த்தி ஆகும். பாசம்(மலம்) துக்கரூபமாகையால் பாசம் நீங்குவதால் சுகம் கிடைக்கும். சிவனோடு அத்துவிதப்படுதலால் (இரண்டறச்சேர்தலால்) சிவானந்தம் கிடைக்கும். இடையில் நீங்காத இந்த ஆனந்தம் சதானந்தம் எனப்படும். சதானந்த வடிவமாகிய இம் முத்தி நிலையினை **இரும்புண்ட நீரிற் றிரும்பாத வீடு** என ஆன்றோர் போற்றுவர். இரும்பானது உறிஞ்சிக் கொண்ட நீர் திரும்பி வராதது போல, இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட ஆன்மாவும், இறைவனை விட்டு நிங்காது என்பது இதன் கருத்தாகும்.

**(ஆ)** ஆன்மா சிவத்தோடு இரண்டறக் கலந்துள்ள முத்தி நிலையினைச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் உதாரணங்கள் பலவற்றால் விளக்கியுள்ளன.

(i) **தாடலை போற் கூடு நெறி**; தாள் + தலை = தாடலை என்பதில் தாளும் உண்டு; தலையும் உண்டு; ஆனால் இன்னொரு விதத்தில் இரண்டும் ஐக்கியப்பட்டதைக் காணலாம்.

(ii) **அப்பினிடையே உப்பு**; அப்பு(நீர்)ம் உப்பும் கலந்தாற் போல என்பது இதன் பொருள். உப்பு தன்னுருவம் மாறி நீருடன் கலந்தாற்போல் ஆன்மாவும் சிவத்துடன் கலந்துள்ளது எனலாம். பொருளால் இரண்டாகியும் கலப்பினால் ஒன்றாகியும் இவை காணப்படுகின்றன. ஒருபடி நீரும் ஒருபடி உப்பும் சேர்ந்து ஒருபடியளவே காணப்படுவதும் குறிப்பிடத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) **பால் + நீர் = பானீர்;** இதுவும் இரண்டுங் கலந்த நிலையினை உணர்த்துவதாகும். பாலும் நீரும் ஒன்று கலந்தது போல் சிவமும் ஆன்மாவும் ஒன்று கலந்துள்ளன என்பதாகும். பாலின் வெண்மை நிறம் போன்று ஆன்மாவும் சிவத்தினது அனுபவத்தைப்பெறும்.

(iv) **தேன் + நீர் = தேனீர்**; என்பதையும் இதுமாதிரியாகவே கொள்ள முடியும். உபநிடதங்களிலும் இந்தக் கருத்துக் காணப்படுகின்றது.

## குறிப்புகள்

1. பதி, பசு, பாசம்
2. ஆன்மாக்களின் மறுபிறப்பு
3. ஆன்மாக்களின் முத்திநிலை




**ஆன்ம விடுதலைக்கான உபதேசம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. திருவருட்பயன்




**திருவருட்பயன் நூல்**

சைவ சித்தாந்த சாத்திர நூல்களுள் திருவருட்பயனும் ஒன்றாகும். சித்தாந்த அட்டகம் என அழைக்கப்படும் எட்டு நூல்களுள் இதுவும் அடங்கும். இவற்றை உமாபதி சிவாச்சாரியார் இயற்றி அருளினார். இவர் மறைஞான சம்பந்தரின் மாணவர். கொற்றவன்குடி முதலியார் என அழைக்கப்பட்டவர். புறச்சந்தான குரவர் வரிசையில் நான்காவதாகக் குறிப்பிடப் படுபவர்.

**திருவருட்பயன்** என்பதன் பொருள் திருவருளையும், திருவருளின் பயனையும் விளக்கும் நூலென்பதாகும். இந்நூலில் காப்புச் செய்யுள் தவிர்ந்த நூறு குறள் வெண்பாக்கள் அமைந்துள்ளன. அவை பத்துப் பத்துப் பாக்களாகப் பத்து அதிகாரங்களாக விளங்குகின்றன. **பதிமுதுநிலை** தொடக்கம் **அணைந்தோர் தன்மை** ஈறாக இப் பத்து அதிகாரங்களும் காணப்படுகின்றன. முதல் ஐந்து அதிகாரங்களும் **பொது** என்றும், இறுதி ஐந்து அதிகாரங்களும் **சிறப்பு** எனவும் அழைக்கப்படும். திருவருட் சக்தியுடன் பிரிவின்றி நிற்கும் இறைவனின் இயல்பு, உயிர்களின் இயல்பு, மும் மலங்களின் இயல்புகள், திருவருளின் இயல்பு, திருவருள் தாங்கிவரும் குருவடிவத்தின் இயல்பு, ஆன்மா குருவிடம் உண்மைப் பொருளை உணரும் முறைமை, ஆன்மா ஆணவ மலம் நீங்கித் திருவருள் வசப் படுதல், ஆன்மா பேரானந்தமடையும் முறைமை, திருவைந்தெழுத்தினை ஓதும் முறைமை, சீவன் முத்தர்களின் இயல்பு ஆகியவை திருவருட்பயன் நூலில் அதிகாரங்களினூடு விளக்கப்பட்டுள்ளன.

ஆன்மாக்களுக்குத் திருவருளின் பயனாகக் கிட்டுவது சிவப்பிரகாசமாகும். சிவப்பிரகாசம் சேர்தலினால் சிவஞான சக்தியைப் பெற முடிகிறது. சிவஞான சித்தி பெற்ற ஆன்மாக்கள் சிவஞான போதத்தினை (மெய்யறிவு)ப் பெற முடிகிறது. எனவே திருவருளின் பயனாலேயே ஆன்மாக்களுக்குச் சிவப்பிரகாசமும் சிவஞான போதமும் கிட்டுகிறது எனலாம்.

இங்கு திருவருட்பயன் நூலிலுள்ள முதல் ஐந்து அதிகாரங்களும் தரப்பட்டுள்ளன.

**காப்பு**

**நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்**
**கற்குஞ் சரக்கன்று காண்**

### சொற்பொருள்

நற்குஞ்சரம் - நல்லருளைப் பொழியும் யானை முகத்தையும்; கன்று - என்றும் அழிவில்லாத இளமையையும் உடையவராகிய விநாயகக் கடவுளை; நண்ணில் - (ஒருவர் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும்) வழிபடுவாராகில் (அவருக்கு); கலைஞானம் - மெய்ப் பொருளாகிய ஞான சாஸ்திரம்; கற்கும் சரக்கு அன்று - வருந்திக் கற்க வேண்டிய பொருளல்ல.

### பொழிப்புரை

நல்லருள் பொழியும் யானை முகமும், என்றும் அழிவில்லா இளமையும் உடைய விநாயகக் கடவுளை மனம், மொழி, மெய்களால் ஒருவர் வழிபடுவாராகில் அவருக்கு உண்மைப் பொருளாகிய ஞான சாத்திரம் வருந்திக் கற்கவேண்டிய பொருளல்ல( தானாகவே கைகூடி விடும்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்கம்

விநாயகக் கடவுளை வழிபடின் ஞான சாத்திரம் திருவருட்டுணையினால் கைகூடும் என்பது இக்குறளின் பொருள். குஞ்சரம் என்பது - யானை; நண்ணில் - வழிபட்டால், அடைந்தால்; சரக்கு - பண்டம், பொருள்.

# முதல் அதிகாரம் – பதிமுது நிலை

### (மேலாகிய கடவுளின் இயல்பு)

### 1. கடவுளின் இயல்பு

**அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்**
**நிகரிலிறை நிற்கும் நிறைந்து**

## சொற்பொருள்

அகர உயிர்போல் - "அ" என்னும் உயிர் ஒலியானது ஏனைய எழுத்துகளுக்கு முதலாய், அவற்றில் வேறறக் கலந்து நிற்பது போல; நிகரில் இறை - ஒப்பற்ற தலைவனாகிய இறைவன்; எங்கும் நிறைந்து - அறிவுள்ள, அறிவற்ற பொருட்கள் அனைத்திலும் நீங்காமல் நிறைந்து; அறிவாகி - அறிவே வடிவமாகி; நிற்கும் - தொடக்கமும் முடிவுமின்றி நிற்பான்;

## பொழிப்புரை

"அ" என்னும் உயிரொலியானது ஏனைய எழுத்துக்களில் வேறறக் கலந்து நிற்பது போல, ஒப்பற்ற இறைவனும் உலகப் பொருட்கள் அனைத்திலும் அறிவு வடிவமாகி நீங்காது, தொடக்கமும் முடிவுமின்றி நிற்பான்.

## விளக்கம்

உலகிலுள்ள உயிருள்ள, உயிரற்ற பொருட்களில் பிரிவின்றி இறைவன் கலந்திருப்பதை "அகர உயிர்போல" என்னும் உவமை மூலம் இங்கு விளக்கப் பட்டுள்ளது. அகர வுயிர் - உவமானம்; இறைவன் - உவமேயம்; நீக்கமற விளங்குதல் - பொதுத் தன்மை; நிகரில் - எல்லையில்லாத, ஒப்பில்லாத; இறை - இறைவன், பதி, தலைவன்.

### 2. சிவ சக்தியின் இயல்பு

**தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி**
**பின்னமிலா னெங்கள் பிரான்**

## சொற்பொருள்

தன்னிலைமை - (மனம், வாக்குக்கு எட்டாததும், மலபந்தம் இல்லாததும், பேரானந்த மானதும் ஆகிய) தனது ஒப்பற்ற தன்மையை; மன் உயிர்கள் - நிலைபெற்ற ஆன்மாக்கள்; சாரத் தரும் சத்தி - பொருந்தக் கூடியவாறு அருளுகின்ற திருவருட் சக்தியுடன்; பின்னமிலான் - இரண்டறக் கலந்து, விட்டு நீங்காதவன்; எங்கள் பிரான் - எங்கள் இறைவனாகிய சிவபெருமான்.

## பொழிப்புரை

மனம், வாக்குக்கு எட்டாத, மல பந்தமில்லாத, பேரானந்தமான தனது ஒப்பற்ற தன்மையை, நிலைபெற்ற ஆன்மாக்கள் பொருந்துமாறு அருளுகின்ற திருவருட் சக்தியுடன் பிரியாது கலந்து நிற்பவன், எங்கள் இறைவனாகிய சிவபெருமான்.

## விளக்கம்

திருவருளாகிய தனது சக்தியின்றும் இறைவன் வேறாகாதவர் என்பது இக் குறட்பா மூலம் சுட்டப்படுகின்றது. தன்னிலைமை என்பது இறைவனின் எண்குணங்களால் அறிய முடியும். இறைவனுடன் பிரிவின்றிக் கலந்து நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருளின் துணை கொண்டே ஆன்மாக்கள் இறைவனுடன் இரண்டறக், கலக்க முடியும் என்க. மன் - நிலைபெற்ற; பின்னமிலான் - பிரிவில்லாதவன், வேறாகாதவன்.

### 3.சிவத்தின் பெருமை

**பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்**
**அருமைக்கு மொப்பின்மை யான்**

#### சொற்பொருள்

(சிவபெருமான்) பெருமைக்கும் - குறைவில்லாத நிறைவினாலும்; நுண்மைக்கும் - அறிதற்கு அருமையினாலும்; பேரருட்கும் - மிகுந்த அருளினாலும்; பேற்றின் அருமைக்கும் - ஒருவரால் பெறுதற்கு அருமையினாலும்; ஒப்பு இன்மையான் - தமக்குப் பிறிதொருவரை ஒப்பாகக் கூற முடியாதவர் (தமக்கு ஒப்பில்லாதவர்).

#### பொழிப்புரை

சிவபெருமான், குறைவில்லா நிறைவினாலும், அறிதற்கு அருமையாலும், ஒருவரால் பெறுதற்கு அருமையாலும் தமக்கு ஒப்பில்லாதவர்.

#### விளக்கம்

இறைவன ஒப்பற்றவன் என்பது இக் குறட்பாவின் பொருளாகும். அனைத்துயிர்களும் குறையுடையவை; இறைவன் ஒருவனே நிறைவான பெருமையுடையவன். அதுபோல் ஐம்பூதத்தாலான பொருட்களையே எம்மால் அறிய முடியும். இறைவன் அதற்கப்பாற்பட்டவன். ஒப்பின்மை - ஒப்பிட்டுக் கூற முடியாமை; பேரருள் - மிகுதியான கருணை.

### 4. சிவத்தின் அருட் செயல்கள்

**ஆக்கி யெவையும் அழித்தா சுடனடங்கப்**
**போக்குமவன் போகாப் புகல்**

#### சொற்பொருள்

எவையும் ஆக்கி - உயிர்கள் எல்லாவற்றையும் தோற்றுவித்து; அழித்து - காத்து; ஆசுடன் அடங்கப் போக்குமவன் - (சர்வ சங்கார காலத்தில்) ஒடுங்கி நிற்கும் ஆணவ மலத்தோடு ஏனைய மலங்களையும் ஒருங்கே போக்கி அருள வல்ல இறைவன்; போகாப் புகல் - எக்காலமும் உயிர்களுக்கு நீங்காத ஆதாரமாய் உள்ளவன்.

#### பொழிப்புரை

உயிர்கள் எல்லாவற்றையும் தோற்றுவித்து, காத்து, சர்வ சங்கார காலத்தில் ஒடுங்கி நிற்கும் ஆணவ மலத்தோடு ஏனைய மலங்களையும் ஒருங்கே போக்கி அருள வல்ல இறைவன், எக்காலமும் உயிர்களுக்கு நீங்காத் துணையாய் உள்ளவன்.

#### விளக்கம்

இறைவன் தனது மூவகைத் திருமேனிகளையும் கொண்டு ஆன்மாக்களுக்காகச் செய்கின்ற ஐந்தொழில்களையும் உணர்த்துவது இச்செய்யுள். "அழித்து" என்பதில் காத்தலும் அருளலும் அடங்கியுள்ளன. பிரம்மா மூலம் படைத்தலையும், உருத்திரன் மூலம் மறைத்தலையும், அழித்தலையும், திருமால் மூலம் காத்தல், அருளல் ஆகியவற்றையும் உயிர்களின் நன்மைக்கு நிகழ்த்தினார் என்க. ஆசு - குற்றம், மாசு; புகல் - ஆதாரம், அடைக்கலம், சரண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5. அருட் செயல்களை நடத்தும் திருமேனிகள்

**அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம்.**
**உருவு முடையா னுளன்**

**சொற்பொருள்**

அருவும் - சிவம், சக்தி, நாதம், விந்து ஆகிய நால்வகை அருவத் திரு மேனிகளும்; உருவும் - மகேசுரன், உருத்திரன், மால், அயன் முதலான நான்கு உருவத்திரு மேனிகளும்; அருவும் உருவும் - சதாசிவன் என்னும் அருவுருவத் திருமேனியும்: அறிஞர்க்கு - ஞான மார்க்கத்தவர்க்கு; அறிவாம் உருவும் - ஞான வடிவமும்; உடையானுளன் - எமது தலைவராகிய சிவபெருமான் உடையவர்.

**பொழிப்புரை**

சிவம், சத்தி, நாதம், விந்து ஆகிய நான்கு அருவுருவத் திருமேனிகளையும், மகேசுரன், உருத்திரன், மால், அயன், ஆகிய நான்கு உருவத் திரு மேனிகளையும், சதாசிவன் என்னும் அருவுருவத் திரு மேனியையும், ஞான மார்க்கத்தவர்க்குரிய ஞான வடிவத்தையும் எமது இறைவனாகிய சிவபெருமான் கொண்டுள்ளார்.

**விளக்கம்**

இறைவனின் மூவகைத் திருமேனிகள் பற்றிய செய்யுளிது. அருவம் - வெளித் தோற்றம் தெரியாதது; உருவம் - வெளிப்பட்டுத் தோன்றும் தோற்றம்; அருவுருவம் - அருவம், உருவம் ஆகிய இரண்டையும் கொண்ட சிவலிங்க வடிவம்; பக்குவமுடைய ஆன்மாக்களாகிய ஞானிகளுக்கு அவர்களினுடைய உள்ளிநின்று உணர்த்தியருளும் அறிவாகிய ஞான வடிவம் எனப்பட்டது.

### 6. அத் திருமேனிகளைத் தோற்றுவிப்பவர் சிவனே

**பல்லா ருயிருணரும் பான்மையென மேலொருவன்**
**இல்லாதா னெங்க ளிறை**

**சொற்பொருள்**

பல் ஆர் உயிர் - அளவில்லாதனவாய் எங்கும் நிறைந்திருக்கும் ஆன்மாக்கள்; உணரும் பான்மை என - இறைவனால் அருளப் பட்ட தனு, கரண, புவன போகங்களைக் கொண்டு அறியும் தன்மைபோல்; மேலொருவன் இல்லாதான் - (தமக்கு அறியும் கருவிகளைக் கொடுத்து அறியச் செய்யும்) மேலானதொரு தலைவன் இல்லாதவர்; எங்கள் இறை - எங்கள் தலைவனாகிய சிவபெருமான்.

**பொழிப்புரை**

எல்லா ஆன்மாக்களும் இறைவனால் அருளப்பட்ட தனு, கரண, புவன, போகங்களைக் கொண்டு அறியும் தன்மைபோலத் தமக்கு மேலான ஒருவன் இல்லாதவர் எங்கள் தலைவராகிய சிவபெருமான்.

**விளக்கம்**

மூவகைத் திருமேனிகளும் பிறரால் இறைவனுக்குக் கொடுக்கப் பட்டவை அல்ல. அவர் இயற்கை உணர்வினர். அவரே உயிர்கள் யாவற்றுக்கும் தலைவராகிய பரமபதி. ஆனால் சாதாரண ஆன்மாக்கள் சரீரத்தின் துணை கொண்டே பொருட்களை அறிகின்றன. பான்மை - தன்மை, இயல்பு; இறை - தலைவன்.

### 7. அருட் செயல்களின் பயனாக ஆன்மாவிற் சிவம் பிரகாசித்தல்

**ஆனா அறிவா யகலா னடியவர்க்கு**
**வானாடர் காணாத மன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொற்பொருள்**

வானாடர் காணாத மன் - தேவர்களாலும் காணமுடியாத சிவபெருமான்; ஆனா அறிவாய் - எவ்விடத்திலும் நிறைந்து நீங்காத பேரறிவாய்; அடியவர்க்கு - மெய்யடியார்க்கு; அகலான் - வெளிப்பட்டு நின்று பேரின்பத்தைக் கொடுப்பவர்.

**பொழிப்புரை**

தேவர்களாலும் காணமுடியாத சிவபெருமான் பேரறிவாய்த் தனது மெய்யடியார்களுக்கு வெளிப்பட்டு நின்று பேரின்பம் அருளுபவர்.

**விளக்கம்**

இறைவன் எவ்விடத்தும் இருப்பவராயினும், தம்மை மெய்யன்போடு வழிபடும் அடியவர்க்குத் தோன்றியும், ஏனையோர்க்கு மறைந்தும் காணப் படுபவர் என்பது இச் செய்யுளின் கருத்தாகும். வானாடர் - தேவர்கள்; மன் - இறைவன், சிவபெருமான்; ஆனா - எவ்விடத்துமாகி; அறிவாய் - ஞானமாய், பேரறிவாய்.

### 8. சிவத்தின் வியாபகம்

**எங்கு மெவையு மெரியுறுநீர் போலேகந்**
**தங்குமவன் றானே தனி**

**சொற்பொருள்**

அவன் - சிவபெருமான்; எங்கும் - எல்லா உலகங்களிலும்; எவையும் எல்லா உயிர்களிலும்; எரி உறு நீர் போல் - சூடு பொருந்திய நீர் போல்; தங்கும் - வேறற்று நிற்பர்; தானே - அவற்றோடு சேர்ந்து நின்ற போதிலும் அவற்றின் தன்மையைச் சாராமல்; தனி - அவற்றைக் கடந்து தனித்தும் நிற்பர்.

**பொழிப்பு**

சிவ பெருமான், எல்லா உலகங்களிலும், எல்லா உயிர்களிலும் சூடு பொருந்திய நீர் போல வேறறக் கலந்து நிற்பர். அவற்றோடு சேர்ந்து நிற்பினும் அவற்றின் தன்மையைச் சாராமல் அவற்றைக் கடந்து தனித்தும் நிற்பர்.

**விளக்கம்**

இறைவனின் சர்வ வியாபகத்தை இச் செய்யுள் உணர்த்துகிறது. அனைத்துப் பொருட்களிலும் சேர்ந்து நின்றாலும், அவற்றின் இயல்பைச் சாராமல் தனித்து நிற்கும் இறைவனின் செயலைக் காண முடிகிறது. எரியுறு நீர் - உவமானம்; இறைவன் - உவமேயம்; நீக்கமற நிறைந்திருத்தல் - பொதுத் தன்மை;

### 9. திருவருளை நுகரும் வழி

**நலமில னண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்**
**சலமிலன் பேர் சங்கரன்**

**சொற்பொருள்**

(சிவபெருமான்) நண்ணார்க்கு நலமிலன் -தம்மை அடைந்து வழிபடாதவர்க்கு பேரின்பத்தைக் கொடாதவர்; நண்ணினர்க்கு நல்லன் - மெய்யன்போடு வழிபடுவோருக்குப் பேரின்பத்தைக் கொடுப்பவர்; சலமிலன் - தம்மை வழிபடுதலால் விருப்பேனும், வழிபடாமையினால் வெறுப்பேனும் இல்லாதவர்; பேர் சங்கரன் - "சங்கரன்" என்னும் திருநாமம் உடையவர்.

**விளக்கம்**

விருப்பு வெறுப்பற்ற இறைவனைச் சலமிலன் எனப்பட்டது. எல்லா உயிர்களுக்கும் சுகத்தைச் செய்பவராதலால் சங்கரன்(சம் + கரன்) எனப்பட்டது. இறைவனை நாடுவதும், நாடாமல் இருப்பதும் ஆன்மாக்களின் செயல். ஆதலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கேற்ப இறையருளும் கிட்டும் என்க. நலன் - நன்மை; நண்ணார் - அடையாதவர்; நண்ணினார் - அடைந்தவர்; (சலம் + இலன்) சலமிலன் - விருப்பு வெறுப்பு இல்லாதவன்; சங்கரன் - சுகமளிப்பவன்.

### 10. திருவருளை அடையும் வழியில் ஆன்மாவைச் செலுத்துதல்

**உ ன்னுமுள தைய மிலதுணர்வா யோவாது**
**மன்னுபவந் தீர்க்கும் மருந்து**

#### சொற்பொருள்

உணர்வாய் - ஞான வடிவாய் நின்று; மன்னுபவம் - அநாதியான பிறவிக்குக் காரணமான ஆணவம் என்னும் நோயினை; தீர்க்கும் மருந்து- (திருவருளாகிய மருந்தினை ஊட்டித்)தீர்க்கும் சிவபெருமானை; ஓவாது உன்னும் - இடைவிடாமல் அன்போடு நினைந்து வழிபடுங்கள்; உளது - இதனால் வரும் முத்தியின்பமே நிலையான செல்வம்; ஐயம் இலது - அவரை அன்போடு வழிபட்டால் அந்த முத்தி இன்பத்தை அடைவதில் சந்தேகமில்லை.

#### பொழிப்பு

அறிவுக்கு அறிவாய் நின்று பிறவிப் பிணியாகிய ஆணவத்தைத் தனது திருவருளாகிய மருந்தினை ஊட்டித் தீர்க்கும் சிவபெருமானை அன்போடு வழிபட்டால் கிடைக்கும் முத்தியின்பமே நிலையான செல்வமாகும். அன்போடு வழிபட்டால் அது கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

#### விளக்கம்

ஆணவம் அறிவை மறைக்கும். அதைக் கெடுத்து உண்மையை உணர வைப்பது திருவருள். ஆதலால் "உணர்வாய்" எனப்பட்டது. பிறவிப் பிணிக்கு மருந்தாக விளங்குவதால் வைத்தியநாதன் எனும் பெயரும் சிவ பெருமானுக்குண்டு. இறைவனை அன்போடு வழிபட்டோர்க்கு முத்தியின்பம் கிட்டும் என்பதில் சந்தேகமில்லை எனக் கூறுவதனூடாக இந்த அதிகாரமாகிய பதிமுது நிலையின் பொருள் முடிவாக இச் செய்யுள் அமைந்துள்ளது. உன்னும் - அன்போடு வழிபடுங்கள்; ஐயம் - சந்தேகம்; ஓவாது - இடைவிடாது; மன்னுபவம் - பிறவித் துன்பம், பிறவிநோய்.

## 2. உயிரவை நிலை

இது, பலவாக விளங்கும் உயிர்களது தன்மை எனப் பொருள்படும். அவை - கூட்டம்; எனவே உயிர்கள் எண்ணில்லாதவை எனக் கருதப்படும்.

### 1. ஆன்மாக்கள் எண்ணில்லாதன

**பிறந்தநாள் மேலும் பிறக்கு நாள் போலுந்**
**துறந்தோர் துறப்போர் தொகை**

#### சொற்பொருள்

துறந்தோர் தொகை - ஆன்மாக்களுள் முத்தியடைந்தோர் தொகை; பிறந்த நாள் போலும் - அவ் ஆன்மாக்கள் பல பிறவிகளில் பிறந்து வாழ்ந்த நாட்களின் தொகைக்குச் சமமாகும்; துறப்போர் தொகை - இதுவரை முத்தியடையாதிருக்கும் ஆன்மாக்களின் தொகை; மேலும் பிறக்கும் நாள் போலும் - அவ் ஆன்மாக்கள் முன்னர் பிறந்து வாழ்ந்த நாட்களுடன் இனிமேல் பல பிறவிகளில் பிறந்து வாழும் நாட்களும் சேர்ந்த தொகைக்குச் சமமாகும்.

#### பொழிப்புரை

ஆன்மாக்களில் முத்தியடைந்தோர் தொகை, அவை பல பிறவிகளில் பிறந்து வாழ்ந்த நாட்களின் தொகைக்குச் சமமாகும். இதுவரை முத்தியடையாதோர் தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வான்மாக்கள் முன்னர் பிறந்து வாழ்ந்த நாட்களுடன் இனிமேல் பிறந்து வாழும் நாட்களும் சேர்ந்த தொகைக்குச் சமமாகும்.

**விளக்கம்**

துறந்தோரும், துறப்போரும் எண்ணிறந்தவர்களாதலால், பிறந்தோரும், பிறப்போரும் எண்ணிறந்தவராதலால் ஆன்மாக்களும் எண்ணிறந்தன என்பது விளங்கும். துறந்தோர் - மலபந்தத்திலிருந்து நீங்கியோர்; துறப்போர் - மலபந்தமுடையோர். "துறந்தோர் துறப்போர் தொகை" யானது "பிறந்த நாள், மேலும் பிறக்கு நாள் போலும்" எனப் பொருள் கொள்ளல் வேண்டும். "போலும்" என்பது இரண்டுக்கும் பொதுவானதாகும். "மேலும் பிறக்கு நாள்" என்பது முன்னர் பிறந்து வாழ்ந்த நாட்களுடன் இனிமேல் பிறந்து வாழும் நாட்களையும் சேர்த்த தொகை எனக் கருதுக.

## 2. மூவகை ஆன்மாக்கள்

**திரிமலத்தா றொன்றதனிற் சென்றார் களன்றி**
**யொருமலத்தா ராயு முளர்**

**சொற்பொருள்**

திரி மலத்தார் - ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களையுடைய சகலராயும்; அதனில் ஒன்று சென்றார்கள் - மும் மலங்களில் ஒன்றாகிய மாயை நீங்கி ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களையுமுடைய பிரளயாகலராயும்; அன்றி - இவர்கள் தவிர; ஒரு மலத்தாராயும் - மாயை, கன்மம் ஆகியவை நீங்கிய ஆணவ மலம் மட்டுமுள்ள விஞ்ஞான கலராயும்; உளர் - மூவகை ஆன்மாக்கள் காணப்படுகின்றனர்.

**பொழிப்புரை**

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையுடைய சகலராயும், மாயை நீங்கிய இரு மலங்களையுடைய பிரளயாகலராயும், ஆணவம் மட்டுமுள்ள விஞ்ஞானகலராயும் மூவகை ஆன்மாக்கள் உளர்.

**விளக்கம்**

மூவகை ஆன்மாக்கள் பற்றி இச் செய்யுளில் கூறப்பட்டுள்ளது. பிரளயத்தில் கலை நீங்கியவர்கள் பிரளயாகலர் என்றும், விஞ்ஞானத்தாற் கலை நீங்கியவர்கள் விஞ்ஞானகலர் என்றும் அழைக்கப் படுவர். சகல மலங்களையும் கொண்டவர்கள் சகலர் ஆவர். சகலரிடத்தே ஆணவ மலம் தூலதரமாயும், பிரளயாகலரிடத்தே தூலமாயும், விஞ்ஞான கலரிடத்தே சூக்குமமாயும் உள்ளது. தூலம் - பெரியது; சூக்குமம் - கண்ணுக்குத் தெரியாத நுண்ணியது; தூலதரம் - மிகுந்த பருமனுடையது; திரி - மூன்று; அன்றி - தவிர.

## 3. மூவகை ஆன்மாக்களின் வேறுபாடு

**மூன்றுதிறத் துள்ளாரு மூலமலத் துள்ளார்கள்**
**தோன்றலர் தொத்துள்ளார் துணை**

**சொற்பொருள்**

மூன்று திறந்து உள்ளாரும் - மூவகை ஆன்மாக்களும்; மூல மலத்து உள்ளார்கள் - அனாதியே ஆணவ மலம் சம்பந்தமுடையோராய் உள்ளார்கள்; துணை உள்ளார் - பிரகிருதி மாயையைத் துணையாக உள்ள சகலர்; தொத்துத் தோன்றலர் - மலத்தினால் பிணிக்கப் பட்டிருக்கும் தமது நிலையை அறியாதவர்கள்.

**பொழிப்புரை**

மூவகை ஆன்மாக்களும் அநாதியே ஆணவமலம் சம்பந்தமுடையோராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றார்கள். பிரகிருதி மாயையைத் துணையாகவுள்ள சகலர் மலத்தினாற் பிணிக்கப்பட்ட தமது நிலையை அறியார்கள்.

**விளக்கம்**

மூலமலம் - ஆணவமலம்; மூன்று திறம் - மூன்று வகை; துணை - பிரகிருதி மாயையாகிய துணை; தொத்து - மலபந்தம்; தோன்றலர் - அறியாதவர்; மூவகை ஆன்மாக்களும் அநாதியாகவே ஆணவத்தால் பீடிக்கப்பட்டவர்கள் என்பதும், சகலர் மலப் பிணிப்பினை அறியார் என்பதும் இச் செய்யுளால் விளங்கும். மூல மலமாகிய ஆணவத்தினால் பீடிக்கப்பட்டவை பெத்தான்மாக்கள் எனவும் அழைக்கப்படும்.

### 4. ஆன்மா வல்லமை அற்றது

**கண்டவற்றை நாளுங் கனவிற் கலங்கியிடுந்**
**திண்டிறலுக் கென்னோ செயல்**

**சொற்பொருள்**

நாளுங் கண்டவற்றை - நனவிலே நாள்தோறும் கண்ட பொருள்களை; கனவில் கலங்கியிடும் - கனவிலே மாறிக் காண்கின்ற; திண் திறலுக்கு - வல்லமையற்ற ஆன்மாக்களுக்கு; செயல் என்னோ - தாமாகச் செய்யக்கூடிய செயல் யாது? (சுதந்திரமாகச் செயல் புரியும் வல்லமை கிடையாது).

**பொழிப்புரை**

நனவிலே நாள்தோறும் கண்ட பொருள்களைக் கனவிலே மாறிக் காண்கின்ற வல்லமையற்ற ஆன்மாக்களுக்குச் சுதந்திரமாகச் செய்யும் செயல் ஏது? ஒன்றுமில்லை.

**விளக்கம்**

"திண்திறல்" என்பது இகழ்ச்சிக் குறிப்பு. ஆன்மாக்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியாதவை. திருவருள் அறிந்து அறிவித்தாலே அறிந்து செயற்படக் கூடியவை. கலங்கியிடும் - மாறிக் காணும்; திண் திறல் - மிகுந்த ஆற்றல், வலிய ஆற்றல். இங்கு இகழ்ச்சியாகக் கூறப்பட்டது.

### 5. ஆன்மா அறிவிக்க அறிவது

**பொறியின்றி யொன்றும் புணராத புந்திக் (கு)**
**அறிவென்ற பேர்நன் றற.**

**சொற்பொருள்**

பொறியின்றி - ஐம்பொறிகளில் ஏதேனும் ஒன்றில்லாமல்; ஒன்றும் புணராத புந்திக்கு - ஒரு விடயத்தையும் அறிய மாட்டாத ஆன்மாவுக்கு; அறிவு என்ற பேர் - அறிவுடைய பொருள் என்று அழைத்தபெயர்; அறநன்று - (பிழையானதாகும்) மிகவும் நல்லதாகும் (இகழ்ச்சிக் குறிப்பு).

**பொழிப்புரை**

ஐம்பொறிகளின்றி எதனையும் அறிய முடியாத ஆன்மாவுக்கு அறிவுடைய பொருள் என்று அழைத்த பெயர் மிகவும் நல்லதாகும் (பிழையானதாகும்) – (இகழ்வாக நல்லது எனப்பட்டது).

**விளக்கம்**

புந்தி - புத்தி; ஆகுபெயராகி ஆன்மாவை உணர்த்தியுள்ளது; நன்று - நல்லது; ஆனால் இகழ்ச்சிக் குறிப்பாக அமைந்துள்ளது. வஞ்சப் புகழ்ச்சி போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிகளின் துணையின்றி ஆன்மாக்கள் மலங்களால் கட்டுண்ட நிலையில் எதனையும் அறிய மாட்டாதன. பொறி - ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியன.

### 6. ஆன்மா இயல்பாக அறிவுப் பொருள்

**ஒளியு மிருளு முலகு மலர்கட்**
**டெளிவில் எனில் என்செய.**

### சொற்பொருள்

ஒளியும் - சூரியன் நெருப்பு முதலான சுடர்களும்; இருளும் - மயக்கந்தரும் இருளும்; உலகும் - பல்வகைப்பட்ட பொருள்களுடனான உலகமும்; அலர்கண் தெளிவு இல் எனில் - விழித்திருக்கும் கண்ணிற்குக் காணும் தன்மை இல்லையாயின்; என் செய - என்ன பயனை உடையன?(அதுபோல் ஆணவ மலத்தால் பீடிக்கப்பட்ட அறியாமை மிக்க ஆன்மாவும் திருவருளை அறிய மாட்டாது).

### பொழிப்புரை

சூரியன் நெருப்பு ஆகிய ஒளிச் சுடர்களும், மயக்கம் தரும் இருளும், உலகமும் விழித்திருக்கும் கண்ணில் காணும் தன்மை இல்லையாயின் என்ன பயனை உடையன? அதுபோல் ஆணவ மலத்தால் பீடிக்கப்பட்ட அறியாமை மிக்க ஆன்மாவும் திருவருளை அறிய மாட்டாது

### விளக்கம்

ஒளியாகிய சிவமும், இருளாகிய ஆணவ மலமும், உலகமாகிய மாயையும், கண்ணாகிய ஆன்மாவுக்கு அறியும் ஆற்றல் இல்லையாயின் அறியப்படா. ஆனால் அவற்றை ஆன்மா அறியக் கூடியதாய் இருத்தலால், அது அறிவுப் பொருளாகும். ஆகவே அறிவுடைய ஆன்மாவுக்கு இச்சை(விருப்பம்), தொழில் போன்றவையும் உண்டு. அலர் கண் - விழித்திருக்கும் கண், மலர்ந்திருக்கும் கண்; தெளிவில் (தெளிவு + இல்) - காணுந் தன்மையில்லாவிடில்.

### 7. ஆன்மா சதசத்து

**சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணிவை**
**உற்றசத சத்தா முயிர்**

### சொற்பொருள்

சத்து அசத்தைச் சாராது - நிலைபெற்ற ஞானமாகிய சிவம், நிலையற்ற மாயைப் பொருள்களைப் புதிதாகச் சுட்டி அறிய வேண்டியதில்லை; அசத்து அறியாது - சடப் பொருட்களொன்றையும் (பாசம்) அறிய மாட்டா; அங்கண் இவை - அப்படி இருத்தலால் இவை; உற்ற - இரண்டையும் பொருந்தி நின்று அறியக் கூடியவை(சிவம், பாசங்கள் ஆகியவற்றை); சதசத்தாம் உயிர் - சத சத்துக்களாகிய (சிவத்தைச் சார்ந்து சிவமாயும், மலங்களைச் சார்ந்து மலமாயும்) ஆன்மாக்களே ஆகும்.

### பொழிப்புரை

சிவம், பாசங்களாகிய மாயப் பொருட்களைச் சுட்டி அறிய வேண்டியதில்லை. பாசப் பொருட்களும் ஒன்றையும் அறியமாட்டா. இவை இரண்டையும் பொருந்தி நின்று அறியக் கூடியவை சத சத்துக்களாகிய ஆன்மாக்களே ஆகும்.

### விளக்கம்

சத்து - நிலையான ஞானம் உள்ளதும் புதிதாக எதையும் அறிய வேண்டிய தேவை இல்லாததுமாகிய சிவம். தானாகவே எதையும் அறியக் கூடியது. அசத்து என்பது அறிவற்ற சடப் பொருட்களாகிய மும் மலங்களையும் குறிக்கும். சதசத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது ஆன்மாவாகும். சிவம், மலம் ஆகியவற்றைச் சார்ந்து நிற்கும்போது அதனதன் இயல்புடன் விளங்கும். சிவத்தைச் சார்ந்து சிவமாயும் மலத்தைச் சார்ந்து மலமாயும் விளங்குவதால் சத்து + அசத்து = சதசத்து எனப்பட்டது. சத்து - அறிவுள்ள பொருள்; அசத்து - அறிவற்ற பொருள்; சதசத்து - அறிவுள்ளதும் அறிவற்றதுமான பொருள். சார்ந்ததன் வண்ணமாய் நிற்பது.

### 8. ஆன்மா தன்வயமில்லாதது

**இருளில் இருளாகி யெல்லிடத்தில் எல்ஆம்**
**பொருள்க ளிலதோ புவி.**

#### சொற்பொருள்

இருளில் இருளாகி - இருள் வந்த காலத்தில் இருள்மயமாகியும்; எல்லிடத்தில் எல் ஆம் பொருள்கள் - ஒளி வந்த போது ஒளிமயமாகியும் நிற்கும் பொருள்களை; புவி இலதோ - பூமியுடையதன்றோ?(ஆன்மாவும் இத்தகையது தான்).

#### பொழிப்புரை

இருளில் இருள்மயமாகியும் ஒளியில் ஒளிமயமாகியும் நிற்கும் பொருட்களைப் பூமி உடையதன்றோ? அதுபோன்றதே ஆன்மாவும்.

#### விளக்கம்

படிகம் முதலான பொருட்கள் இருளில் இருள் தன்மையையும் ஒளி படும்போடு ஒளித் தன்மையையும் காட்டி நிற்பன. ஆன்மாக்களும் அவை போன்று சிவத்தோடு சிவமாயும், மலத்தோடு சேர்ந்து மலமாகியும் நிற்பன. எனவே ஆன்மா தன்வயமற்றது; சுதந்திரமற்றது. எல் - ஒளி; இலதோ - இருக்கின்றனவன்றோ?

### 9. ஆன்மா சிவத்தைக் காணாமைக்குக் காரணம்

**ஊமன் கண் போல வொளியு மிகவிருளே**
**ஆமன் கண் காணா தவை.**

#### சொற்பொருள்

ஊமன் கண்போல - கூகையினது(ஆந்தை) கண்ணுக்குச் சூரியனது ஒளி தோன்றாதிருப்பதைப் போல; மன்கண் காணாதவை - சிவ பெருமான் அருளுகின்ற ஞானத்தைக் கொண்டு காணாத உயிர்களுக்கு; ஒளியும் மிக இருளே ஆம் - சிவமாகிய ஞான ஒளி தோன்றாமல் நிற்கும்.

#### பொழிப்புரை

கூகையின் கண்களுக்குச் சூரிய ஒளி தோன்றாமல் இருப்தைப்போல, சிவபெருமான் அருளுகின்ற ஞானத்தைக் கொண்டு உண்மையைக் காணாத உயிர்களுக்குச் சிவமாகிய ஒளியும் தோன்றாது நிற்கும்.

#### விளக்கம்

ஊமன் - கூகை, ஆந்தை; மிக இருளே ஆம் - மிகவும் இருளாகி இருப்பதாம்; ஆம், மன் கண் எனக் கொள்ள வேண்டும். கூகையின் கண்ணுக்குச் சூரிய ஒளி தென்படாமை - உவமானம்; உயிர்களின் கண்களுக்குச் சிவஞான ஒளி தென்படாமை - உவமேயம்; இருளாயிருத்தல் - பொதுத் தன்மை.

### 10. ஆன்மா அருளைப் பெற முயலல் வேண்டும்

**அன்றளவும் ஆற்றுமுயி ரந்தோ அருள்தெரிவ (து)**
**என்றளவொன் றில்லா இடர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### சொற்பொருள்

அன்று அளவும் - அநாதியாகவே; அளவொன்றில்லா இடர்(பிறந்து இறந்து) - அளவில்லாத துன்பங்களை; ஆற்றும் உயிர் - தாங்கி நிற்கும் உயிர்கள்; அந்தோ - ஐயோ!; அருள் தெரிவது என்று - (ஆணவம் நீங்கித்) திருவருளாகிய சிவஞானத்தைப் பெற்றுப் பேரின்பத்தை அடைவது எக்காலம்?

#### பொழிப்புரை

அனாதியாகவே அளவில்லாத பிறவித் துன்பங்களைத் தாங்கி நிற்கும் உயிர்கள், ஆணவம் நீங்கித் திருவருளாகிய சிவஞானம் பெற்றுப் பேரின்பத்தை அடைவது எக்காலத்தில்? (ஆன்மா முயன்று பெறல் வேண்டும்).

#### விளக்கம்

இதுவரை திருவருளோடு இணைந்து நின்றும் அதை உணர்ந்து சிவ ஞானம் பெற மாட்டாத ஆன்மாக்களுக்கு விடிவு எப்போது? அவற்றின் பிறவிப் பிணி நீங்குதல் எப்போது? என்ற கழிவிரக்கம் இப்பாடலில் தெரிகிறது. எனவே ஆன்மா முயன்று திருவருளைப் பெற வேண்டும் என்பது இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

## 3. இருண்மல நிலை

ஆன்மாவின் அறிவை மறைத்து இருள்போல நிற்கும் ஆணவ மலத்தினது இயல்பினைக் கூறுவதால் இருள்மல நிலை எனப்பட்டது. ஆனால் ஆணவத்தினால் உண்டாகும் கன்மத்தின் இயல்பு ஆணவத்தை நீக்குவதற்குக் கருவியாகவுள்ள மாயையினுடைய இயல்பு ஆகியவற்றையும் இணைத்து ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களின் இயல்புகளையும் இவ் அதிகாரம் கூறுகிறது.

### 1. முப்பொருளும் இன்பதுன்பம் உள்ள பொருள்கள்

**துன்றும் பவத் துயரும் இன்புந் துணைப் பொருளும்**
**இன்றென்ப தெவ்வாறு மில்**

#### சொற்பொருள்

துன்றும் பவத்துயரும் - நெருங்கிய பிறவித் துன்பமும்; இன்பும் - முத்தியாகிய பேரின்பமும்; துணைப் பொருளும் - பிறவித் துன்பத்திற்குக் காரணமாகிய மும் மலமும், முத்திக்குக் காரணமாகிய சிவமும்; இன்று என்பது - இல்லாத பொருள்கள் என்று சொல்லுவது; எவ்வாறு இல் - எந்த விதத்திலும்(சுருதி, யுக்தி, அனுபவம் முதலான அளவைகளாலும்) இல்லை.

#### பொழிப்புரை

நெருங்கிய பிறவித் துன்பமும், முக்தியாகிய பேரின்பமும், பிறவித் துன்பத்துக்குக் காரணமான மும் மலங்களும், முக்திக்குக் காரணமான சிவமும் இல்லாத பொருள்களென்று சொல்லுவது எந்த விதத்தாலும் இல்லை.

#### விளக்கம்

கடவுள் இருப்பதை அனுமானத்தால் அறிய முடியும். பிறவி எடுப்பதும், அதன் பயனை அனுபவிப்பதும், அவை இன்பதுன்பமாய் இருப்பதும் நாமறிவோம். இறைவனை வழிபட்டாலே பிறவிப் பயன் நீங்கும் என்பதையும், அதுவரை மலங்களால் பீடிக்கப்பட்டுத் துன்பத்தில் உழல வேண்டியிருக்கும் என்பதையும் இப்பாடல் உணர்த்துகிறது.

#### அருஞ்சொற்கள்

துன்றும் - நெருங்கும்; பவத்துயர் - பிறவித் துன்பம்; இன்பும் - முத்தியின்பமும்; துணைப் பொருளும் - மும் மலங்களும், சிவமும்; இல் - இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. ஆணவத்தின் உண்மை அனுமானத்தால் அறியப்படும்

**இருளான தன்றி யிலதெவையு மேகப்**
**பொருளாகி நிற்கும் பொருள்**

### சொற்பொருள்

எவையும் - உலகிலுள்ள பல்வகைப் பொருள்களும்; ஏகப் பொருளாகி நிற்கும் பொருள் - அவற்றின் இயல்பு தோன்றாமல் ஒரே பொருளாகத் தோன்றும் படி செய்யும் பொருள்; இருளானது அன்றி இலது - இருளுருவான பொருளன்றி வேறு பொருள் எதுவும் இல்லை(ஆணவமும் இது போன்றதே ஆகும்).

### பொழிப்புரை

உலகிலுள்ள பல்வகைப் பொருள்களும், அவற்றின் இயல்பு தோன்றாவண்ணம் செய்யும் பொருள், இருளன்றி வேறு எப்பொருளும் இல்லை.(ஆணவம் இது போன்றது தான்);

### விளக்கம்

இருள், எவ்வாறு ஏனைய பொருள்களை மறைத்துத் தன்னுயிரை மட்டும் காட்டுகின்றதோ, அதுபோன்று ஆணவமும் ஆன்மாக்களின் நல்லறிவை மறைத்து தனது அறியாமையாகிய குணத்தைக் காட்டுகிறது என இப் பாடல் உணர்த்துகிறது. ஆனால் இருளைப் பற்றிக் கூறிவிட்டு, ஆணவம் பற்றிக் கூறாமல் உய்த்தறியுமாறு விடப்பட்டுள்ளது.

### அருஞ்சொற்கள்

ஏகப் பொருள் - தனிப் பொருள்; இருள் - இருள்காலம், ஆணவம்;

## 3. ஆணவம் இருளினுங் கொடியது

**ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டும்**
**இருபொருளுங் காட்டா திது**

### சொற்பொருள்

இருள் - இருளானது; ஒரு பொருளும் காட்டாது - மற்றைய பொருள்களைக் காட்டாது (ஆயினும்); உருவம் காட்டும் - தன்னுடைய உருவத்தை மட்டும் காட்டும்; இது - இந்த ஆணவ மலமானது; இருபொருளும் காட்டாது - பிற பொருள்களைக் காட்டாததுடன், தன்னுடைய உருவையும் மறைத்துள்ளது(ஆகவே இருளினும் கொடியது).

### பொழிப்புரை

இருளானது பிற பொருள்களை மறைத்தாலும் தன்னுருவத்தினைக் காட்டும். ஆனால் ஆணவமோ பிற பொருட்களுடன் தன்னையும் மறைத்து நிற்கும். எனவே ஆணவம் இருளினுங் கொடியது.

### விளக்கம்

ஆணவம் இருளினுங் கொடியது என்பதை விளக்கும் பாடலிது; இருள் பிற பொருட்களை மறைப்பது போல் ஆணவமும் ஆன்மாக்களின் நல்லறிவை மறைக்கிறது. ஆனால் இருள் தன்னுருவை வெளிக்காட்டுவது போல் ஆணவம் தனது வடிவை வெளிக் காட்டுவதில்லை. இதனாலேயே அதனை இருளினும் பார்க்கக் கொடியது எனப் பட்டது.

### அருஞ்சொற்பொருள்

இது - ஆணவம்; ஒரு பொருளும் - எந்தப் பொருளையும்; காட்டா - காண்பிக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4. ஆணவம் அநாதியாகவே ஆன்மாவுடன் உள்ளது.

**அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடையடங்கி**
**இன்றளவும் நின்ற திருள்**

**சொற்பொருள்**

அன்று அளவி - அநாதியாக ஆன்மாவோடு உள்ளதாய்; உள் ஒளியோடு ஆவியிடை அடங்கி - அந்த ஆன்மாவுக்கும் உயிராகிய சிவமும் அதனோடு நிற்கவும் அதனைச் சாராமல், ஆன்மாவைச் சார்ந்து; இருள் - ஆணவமானது; இன்றளவும் - இன்றுவரையிலும்; நின்றது - நீங்காது நின்றது.

**பொழிப்புரை**

அநாதி முதல் ஆன்மாவுடன் உள்ள ஆணவம், ஆன்மாவின் உயிராகிய சிவத்தைச் சாராது, ஆன்மாவையே சார்ந்து இன்று வரையிலும் நீங்காமல் நிற்கின்றது.

**விளக்கம்**

ஆணவம் அநாதி முதலே ஆன்மாவைப் பீடித்துள்ளதை இப் பாடல் காட்டுகின்றது. ஆன்மாவுடன் சிவமும் இருந்தாலும், ஆணவம் ஆன்மாவை மட்டுமே பற்றிப் பீடித்துள்ளது. ஆன்மா, தன்னுடன் இருக்கும் சிவத்தை உணரும் காலம் வரை இந்த அறியாமை நிலையே நீடிக்கும் எனலாம்.

**அருஞ்சொற்பொருள்**

அன்று -அநாதியாய்; அளவி - ஆன்மாவைச் சேர்ந்து; உள்ளொளி - உயிருக்குயிரான சிவம்; ஆவி - உயிர்.

### 5. ஆணவம் அனேக சக்திகளையுடையது

**பலரைப் புணர்ந்துமிருட் பாவைக்குண் டென்றுங்**
**கணவர்க்குந் தோன்றாத கற்பு**

**சொற்பொருள்**

பலரைப் புணர்ந்தும் - எண்ணில்லாத ஆன்மாக்களைப் பொருந்திக் கலந்து நின்றும்; இருட்பாவைக்கு - ஆணவமாகிய பெண்ணுக்கு; கணவர்க்கு என்றும் தோன்றாத கற்பு உண்டு - தனது நாயகர்களாகிய ஆன்மாக்களுக்கு எக்காலத்திலும் தன்னை வெளிக்காட்டாதிருக்கும் இயல்பு உண்டு.

**பொழிப்புரை**

எண்ணில்லாத ஆன்மாக்களோடு பொருந்திக் கலந்து நின்றும், ஆணவமாகிய பெண்ணுக்குத் தனது நாயகர்களாகிய ஆன்மாக்களுக்கு எக்காலத்திலும் தன்னை வெளிக் காட்டாத இயல்பு உண்டு.

**விளக்கம்**

கற்புடைய பெண்கள் தமது சொந்த நாயகர்களுக்குத் தம்மைக் காட்டி நிற்பர். இதற்கு மாறாக தன்னைக் காட்டாத தன்மை ஆணவமாகிய பெண்ணுக்குண்டென இப் பாடல் கூறுகிறது. ஒரே ஆணவம் தான் பல சக்திகளை உடையதாகப் பல்வேறு ஆன்மாக்களையும் பிணித்து நிற்கும். அந்த ஆணவத்தைத் தலைவியாக, அதுவும் இருளாகிய பெண்ணாக உருவகித்ததுடன், அது பிணித்து நிற்கும் ஆன்மாக்களைக் கணவர்களாகவும்(தலைவர்களாகவும்) உருவகிக்கப் பட்டுள்ளது. இருட்பாவை என்பது உருவக அணியாகும்.

**அருஞ்சொற் பொருள்**

பாவை - பெண்; பலர் - பல ஆன்மாக்கள்; கற்பு - கற்பு நெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஆணவம் மெய்யுணர்வைத் தடுப்பது

**பன்மொழிக ளென்றுணரும் பான்மை தெரியாத**
**தன்மையிரு ளார்தந் தது**

### சொற்பொருள்

பன் மொழிகள் என் - வேறுபல காரணங்களைப் பேசிப் பயனென்ன?; உணரும் பான்மை தெரியாத தன்மை - ஆன்மாவானது உண்மையினை உணர்ந்தறிய முடியாத அறியாமை மயக்கத்தை; இருளார் தந்தது - இருள் மலமாகிய ஆணவ மலமே தந்ததாகும்.

### பொழிப்புரை

பல்வேறு காரணங்களைப் பேசுவதால் பயனென்ன? ஆன்மாவானது உண்மைகளை அறிந்து கொள்ள முடியாத அறியாமை மயக்கத்தை ஆணவ மலமே தந்ததாகும்.

### விளக்கம்

"இருளார்" என்று இதனை உயர்திணையாகக் கூறினும் அது இழிவு நோக்கியேயாகும்; அஞ்ஞானத்துக்குக் காரணமாக மாயை, கன்மங்கள் அமைய மாட்டா. ஆணவமே அதனைத் தருவது என்பது இப் பாடலின் மையக் கருத்தாகும். உண்மைப் பொருள் என்பது இறைவனை அறிவதாகும்.

### அருஞ்சொற்பொருள்

பன்மொழி - பலவாறான பேச்சுக்கள்; உணரும் - மெய்யுணர்வு; பான்மை - இயல்பு.

## 7. ஆணவம் ஆன்மாவின் குணமன்று

**இருளின்றேற் றுன்பே னுயிரியல்பேற் போக்கும்**
**பொருளுண்டே லொன்றாகப் போம்**

### சொற்பொருள்

இருள் இன்றேல் - ஆணவம் என்னும் பொருள் இல்லையாயின்; துன்பு ஏன் - பிறவித் துன்பம் இராது; உயிர் இயல்பேல் - இந்த ஆணவம் ஆன்மாவின் இயல்பான குணமாயின் ; போக்கும் பொருள் உண்டேல் - ஆணவத்தைக் கெடுக்கத்தக்க பொருள் ஒன்று உள்ளதாயின்; ஒன்றாகப் போம் - (அப்பொருள் ஆணவத்தைக் கெடுக்கும் போது) அக் குணத்தையுடைய ஆன்மாவும் ஒருங்கே கெட்டுப் போய்விடும்.

### பொழிப்புரை

ஆணவம் என்னும் பொருள் இல்லையாயின் ஆன்மாவுக்குப் பிறவித் துன்பம் இராது. ஆணவம் ஆன்மாவின் இயல்பான குணமாயின் ஆணவத்தைக் கெடுக்கத்தக்க பொருள் ஒன்று உளதாயின், அந்த ஆணவத்துடன் ஆன்மாவும் கெட்டுப் போய்விடும்.

### விளக்கம்

உயிர்களுக்கு ஆணவத்தினாலேயே பிறவித்துன்பம் ஏற்படுகிறது என்பதைச் சுட்டும் பாடலிது. ஆணவம் இயற்கையான உயிரின் குணமாயிருப்பின் கெட்ட குணம் அழியும் போது ஆணவத்துடன் ஆன்மாவும் அழிந்து விட வேண்டும். அப்படியில்லையாதலால் அது உயிரின் இயல்பான குணமன்று எனப்பட்டது. நெருப்பின் குணமாகிய சூடு இல்லாமற் போகும் போது நெருப்பும் இல்லாமல் போய் விடுவது போல் அமைந்து விடும். ஆனால் இங்கு முத்தி நியைில் ஆணவம் ஒடுங்கி விட ஆன்மா சிவத்துடன் கலந்து விடுகிறது. எனவே அது உயிரின் குணமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருஞ்சொற்பொருள்**

இருள் – ஆணவமலம்; உயிரியல் – உயிரின் இயல்பு; துன்பு – துன்பம்.

### 8. ஆணவம் ஆன்மாவுடன் அநாதியாகவே உள்ளது

**ஆசாதி யேலணைவ காரணமென் முத்திநிலை**
**பேசா தகவும் பிணி**

**சொற்பொருள்**

ஆசு ஆதியேல் – ஆணவமானது ஆன்மாவை இடையில் வந்து சேர்ந்ததாயின்; அணைவ காரணம் என் – அது அப்படி உயிரைச் சேர்வதற்கான காரணம் என்ன?; முத்தி நிலை – (ஆன்மா அறிவுள்ள பொருளாயிருக்கும்) முத்தி நிலையிலும்: பிணி பேசாது அகவும் – ஆணவம் யாதொரு காரணமின்றி, முன் போலவே ஆன்மாவைத் திரும்பவும் பிடித்தல் கூடும்.

**பொழிப்புரை**

ஆணவம் ஆன்மாவை இடையில் வந்து சேர்ந்ததாயின் அதற்கான காரணம் என்ன? அப்படியாயின் முத்தி நிலையிலும் அது காரணமின்றி ஆன்மாவைப் பீடித்தல் கூடும்.

**விளக்கம்**

ஆணவமானது ஆன்மாவுடன் அநாதியாகவே பீடித்துள்ளது என்பதைக் காட்டும் செய்யுள் இதுவாகும். அது இடையில் வந்து சேர்வதற்கான காரணம் எதுவுமில்லை. விரும்பியவாறு இடையில் வந்து ஆன்மாவைப் பற்றக் கூடியதாயின் முத்தி நிலையிலும் பற்றி நிற்கும். ஆனால் திருவருள் கூடிய அந் நிலையில் ஆணவம் வலியிழந்து ஒடுங்கிக் காணப்படும். எனவே ஆணவம் இடையில் வந்து ஆன்மாவைச் சேர்ந்ததாகாது. நெல்லில் உமிபோல், செம்பிற் களிம்பு போல் ஆன்மாவிற் தொன்றுதொட்டே காணப்படுவதாகும்.

**அருஞ்சொற்பொருள்**

ஆசு – ஆணவம்; ஆதியேல் – இடையில் வந்ததாகில்; பிணி – ஆணவம், நோய்; அகவும் – பற்றும், பீடிக்கும், பிணிக்கும். சில நூலாசிரியர்கள் அகவும் என்பதைக் கவ்வும் என்றும் பொருள் கூறுவர்.

### 9. ஆணவத்தைக் கெடுக்கும் ஒரு கருவி மாயை

**ஒன்று மிகினு மொளிகவரா தேலுள்ளம்**
**என்று மகலா திருள்**

**சொற்பொருள்**

உள்ளம் – ஆன்மாவானது; ஒன்று மிகினும் – மாயையினால் உண்டாகிய உடம்பு முதலியவற்றைப் பெற்ற போதிலும்; ஒளி கவராதேல் – திருவருளின் துணைகொண்டு மெய்யறிவைப் பெறமாட்டாதாயின்; இருள் என்றும் அகலாது – ஆணவமலம், ஆன்மாவை விட்டு ஒரு பொழுதும் நீங்காது.

**பொழிப்புரை**

ஆணவமானது மாயையினால் உண்டாகிய உடம்பு முதலியவற்றைப் பெற்றபோதிலும் திருவருள் ஞானத்தைப் பெற மாட்டாதாயின், ஆணவமலம் ஆன்மாவை விட்டு ஒரு காலமும் நீங்காது.

**விளக்கம்**

மாயையினாலாகிய தனு(உடம்பு), கரணம்(அறிபொருள்கள்), புவனம்(உலகம்), போகம்(நுகர்ச்சிப் பொருள்) ஆகியவை கிடைத்த போதிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைப் பயன்படுத்தித் திருவருளை நுகர்ந்து முத்தியடைதலே ஆன்மாவின் இலட்சியமாக அமைதல் வேண்டும். அதற்கேற்ற பக்குவ நிலையினை ஆன்மா அடைய முயற்சிக்காவிடில் ஆணவத்தின் பிடியிலிருந்து ஒரு போதும் விலக முடியாது. அதன் வீடு பேறாகிய இலட்சியமும் கைகூட மாட்டாது என்பதே இச் செய்யுளின் அடிப்படைக் கருத்தாகும். மாயையானது சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை, என மூன்று வகைப் படும். மாயாதத்துவங்கள் முப்பத்தாறு வகைப்படும்.

### அருஞ்சொற்பொருள்

*ஒன்றும் - உடம்பினை; மிகினும் - பெற்ற போதிலும்; கவராதேல் - ஞானத்தைப் பெறாவிடில்; அகலா - நீங்கா.*

### 10. மாயை கன்மம் ஆகியவற்றின் இயல்பு

**வீடிவா மளவும் விளக்கனைய மாயை**
**வடிவாதி கன்மத்து வந்து**

### சொற்பொருள்

*மாயை வடிவு ஆதி - மாயையினாலாகிய தனு, கரண, புவன, போகங்கள்; கன்மத்து வந்து - ஆன்மாக்கள் செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்கதாகத் தோன்றி; விடிவு ஆம் அளவு விளக்கு அனைய - விடியும் வரை ஒருவாறு இருளை நீக்கத் தக்க விளக்குப் போல ஆன்மா சிவ ஞானமாகிய பேரொளியைப் பெறும் முத்தி நிலை வரையும்ஆணவமாகிய இருளை ஒருவாறு நீக்கத் தக்க அறிவைக் கொடுக்கும் கருவிகளாக நிற்கின்றன.*

### பொழிப்புரை

*மாயையினாலாகிய தனு, கரண, புவன, போகங்கள் ஆன்மாக்கள் செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்கதாகத் தோன்றி, விடியும் வரை ஒருவாறு இருளைப் போக்கத் துணை செய்யும் விளக்குப் போல ஆன்மா சிவஞானமாகிய பேரொளியைப் பெற, ஆணவ இருளையகற்றத் துணைசெய்கின்றன.*

### விளக்கம்

விடியும்வரை இருளை ஓரளவு அகற்ற விளக்குத் துணை செய்கிறது. அதுபோல ஆன்மா சிவஞான ஒளி பெற்று முத்தியடையும் வரை ஓரளவு நல்லறிவு பெறுவதற்கு மாயையினாலாகிய தனு, கரண, புவன, போகங்கள் துணை செய்கின்றன. எனவே விடியும் வரை ஒளிதரும் விளக்கு -உவமானம்; மாயையினாலாகிய பொருட்கள் -உவமேயம்; ஓரளவுக்குத் துணைசெய்தல் - பொதுத் தன்மை; இங்கு கரணம் என்பது இந்திரியம் முதலிய புறக் கருவிகளும் மனம் முதலிய உட் கருவிகளுமாகும். தனு - உடம்பு; போகம் - அனுபவிக்கும் பொருட்கள்; புவனம் - உலகம்; இவை கன்மப் பலனின் பெறுபேறுகளாகக் கிடைப்பவை. இவற்றைப் பயன்படுத்தி நல்வினை தீவினை இரண்டையும் செய்யமுடியும்.

### அருஞ்சொற்பொருள்

*விடிவாமளவும் - விடியும் வரை; அனைய - போன்று; மாயை வடிவு - மாயையினாலாகிய; ஆதி - பொருட்கள்.*

## 4. அருளது நிலை

*திருவருளினது தன்மை எனப் பொருள் படுவது அருளது நிலையாகும். "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சத்தி" என்பதனூடாக இறைவனுடன் இரண்டறக் கலந்துள்ள திருவருட் சக்தியானது, ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அவற்றுள் கலந்து நின்று அருள் புரிகிறது எனலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. திருவருளின் பெருமை

**அருளிற் பெரிய தகிலத்து வேண்டும்**
**பொருளிற் றலையிலது போல்**

### சொற்பொருள்

அகிலத்து வேண்டும் பொருளின் - பூமியிலே ஆன்மாக்கள் அவ்வக் காலங்களில் விரும்பும் பொருளில்; தலை இலது போல் - மேலான பொருள் இல்லாதது போன்று; அருளில் பெரியது - திருவருளுக்கு மேலானதும் நிகரானதுமான பொருள் இல்லை.

### பொழிப்புரை

பூமியில் ஆன்மாக்கள் அந்த அந்தக் காலத்தில் விரும்பும் பொருளிலும் மேலான பொருள் இல்லாததைப் போன்று, திருவருளுக்கு மேலானதும் நிகரானதுமான பொருள் இல்லை.

### விளக்கம்

ஒருவருக்கு, அவர் விரும்பிய காலத்தில் இன்றியமையாத பொருளைப் போல, ஆன்மாக்களுக்குத் திருவருளை விட மேலான பொருள் கிடையாது என்பது இச் செய்யுளின் கருத்தாகிறது. பாலைவனத்தில் தாகத்தால் தவிப்பவனுக்குத் தண்ணீர் மேலான பொருளாகிறது. காற்றில்லாத இடமொன்றில் மூச்சு விடச் சிரமப்படும்போது அங்கு காற்று மேலான பொருளாகிறது. அதுபோல் உயிர்களின் பிறவிப் பிணி தீரத் திருவருளே மேலானதாக அமைகிறது. அகிலத்து வேண்டும் பொருள் - உவமானம்; திருவருள் - உவமேயம்; எல்லாவற்றிலும் மேலானது - பொதுத் தன்மை.

### அருஞ்சொற்பொருள்

அகிலம் - பூமி; தலை - மேலானது.

## 2. திருவருளின் பயன்

**பெருக்கம் நுகர்வினை பேரொளியா யெங்கும்**
**அருக்கனென நிற்கும் அருள்**

### சொற்பொருள்

அருக்கன் என - (உலக உயிர்களுக்கு ஆதாரமான ஒளிகொடுக்கும்) சூரியனைப் போல; அருள் - திருவருளானது; பெருக்கம் - கர்மங்களாலாகும் வினைப்பயனை வளர்ப்பதாய்; நுகர்வினை - இன்ப துன்பங்களை அனுபவிப்பதாய்; பேரொளியாய் - (ஆணவத்தின் வலிமையைக் குறைத்து திருவருட் சக்தியாகிய) மேலான ஒளியை விளக்குவதாய்; எங்கும் நிற்கும் - எல்லா ஆன்மாக்களிடத்திலும் நிற்கும்.

### பொழிப்புரை

சூரியனைப் போலத் திருவருளானது கர்ம வினைப் பயனை வளர்ப்பதாய் , இன்ப துன்பங்களை அனுபவிப்பதாய், ஆணவத்தின் வலியடக்கி ஞான சக்தியாகிய பேரொளியை விளங்கிடச் செய்வதாய் ஆன்மாக்கள் யாவிலும் நிற்கும்.

### விளக்கம்

சூரியனானது உலகுயிர்கள் பொருட்களை ஆக்கவும், உண்ணவும் உதவுகின்றது. திருவருளும் ஆன்மாக்கள் கன்மங்களைச் செய்யவும், கன்மப் பலனை அனுபவிக்கவும், ஆணவத்தை வலிகெடச் செய்து ஞான சக்தியை விளக்கவும் செய்கிறது. நுகர்வினை - வினைத் தொகை; முக்காலத்திற்கும் உரிய அனுபவிக்கும் வினை. சூரியன் - உவமானம்; திருவருள் - உவமேயம்; உயிர்களுக்குத் துணையாதல் - பொதுத் தன்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அருஞ்சொற்பொருள்

பெருக்கம் - கன்ம வினைகளின் அதிகரிப்பு; நுகர் வினை - அனுபவிக்கும் வினைப் பயன்கள்; பேரொளி - மேலான ஞான ஒளி; அருக்கன் - சூரியன்.

### 3. ஆன்மா, அருளன்றி அறிவு பெற மாட்டாது

**ஊனறியா தென்று முயிரறியா தொன்றுமிது**
**தானறியா தாரறிவார் தான்**

### சொற்பொருள்

ஊன் என்றும் அறியாது - உடல் ஒரு காலமும் ஒன்றையும் அறிய மாட்டாது; உயிர் ஒன்றும் அறியாது - ஆன்மா (ஆணவத்தினால் பிணிக்கப்பட்டிருத்தலால்) ஒன்றையும் தானாக அறிய மாட்டாது; இது தான் அறியாது - இத் திருவருளானது அறிந்து அறிவித்தாலன்றி; ஆர் அறிவார் தான் - தானாக அறிவைப் பெறக் கூடிய ஆன்மா எது? (ஒன்றுமில்லை).

### பொழிப்புரை

உடல் எக்காலத்திலும் எதனையும் அறிய மாட்டாது. உயிரும் ஒன்றையும் தானாக அறியாது. திருவருள் அறிந்து அறிவித்தாலன்றி அறிவைப் பெறக் கூடிய ஆன்மா எதுவுமில்லை.

### விளக்கம்

அசேதனப் பொருளான உடம்பும், ஆணவத்தாற் கட்டுண்ட ஆன்மாவும், தானாக எதனையும் அறிய மாட்டா என்பதையும், திருவருளின் துணையினாலேயே ஆன்மா எதனையும் அறிய முடியும் என்பதையும் இந்தச் செய்யுள் காட்டுகின்றது. எனவே திருவருளை உணர ஆன்மா செய்யும் முயற்சியே முத்திக்கு வழிகாட்டுமெனலாம்.

### அருஞ்சொற்பொருள்

ஊன் - உடம்பு; இது - திருவருள்.

### 4. ஆன்மாக்கள் திருவருளை அறியாமைக்குக் காரணம்

**பாலாழி மீனாளும் பான்மைத் தருளுயிர்கள்**
**மாலாழி யாழு மறித்து**

### சொற்பொருள்

உயிர்கள் -ஆன்மாக்கள்; அருள் மறித்து - திருவருளின் துணை கொண்டு சிவானந்தத்தை அடைதலைத் தவிர்த்து; மால் ஆழி ஆழும் - மயக்கந்தரும் உலக இன்பமாகிய சமுத்திரத்தில் ஆழ்ந்து நிற்கும்(அப்படி நிற்றல்); பால் ஆழி மீன் - பாற் கடலில் வாழும் மீன்கள்; ஆளும் பான் மைத்து - அங்கே நிறைந்திருக்கும் பாலைப் பருகாமல், அங்கே காணப்படும் சிறிய பிராணிகளைத் தேடியுண்ணும் முறைமை போன்றதாகும்.

### பொழிப்புரை

ஆன்மாக்கள் திருவருளின் துணையினால் சிவானந்தம் அடையாமல், உலக இன்பமாகிய சமுத்திரத்தில் ஆழ்ந்து கிடக்கின்றன. இது பாற்கடலில் வாழும் மீன்கள், அங்குள்ள பாலைப் பருகாமல், சிறிய பிராணிகளைத் தேடியுண்ணுதல் போன்றதாகும்.

### விளக்கம்

பாற்கடல் மீன்கள் - உவமானம்; ஆன்மாக்கள் - உவமேயம்; தேவையானதை விலக்கி தேவையற்றவையை நாடல் - பொதுத் தன்மை. பாற்கடலில் வாழும் மீன்களின் செயலை உலக நாட்டத்தில் சிக்குண்ட ஆன்மாக்களுக்கு உவமிப்பதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் செய்யுள் அமைந்துள்ளது. மீன்கள் பாலைப் பருகுவதும் ஆன்மாக்கள் திருவருளை உணர்வதும் இங்கு வலியுறுத்தப் படுகின்றது. இதனால் கிடைப்பது நன்மையென உணர்த்தப்பட்டுள்ளது.

### அருஞ்சொற்பொருள்

ஆழி - சமுத்திரம்; ஆளும் - வாழும்; பான்மை - இயல்பு, தன்மை, மு... றமை; மால் - மயக்கம்; மறித்து - தவிர்த்து.

## 5. இதுவுமது

**அணுகு துணையறியா ஆற்றோனி னைந்தின்**
**உணர்வை யுணரா துயிர்**

### சொற்பொருள்

அணுகு துணை அறியா ஆற்றோனில் - தனக்குப் பின்னால் அருகிலே துணையாக வருபவனை அறியாத வழிப் போக்கனைப் போலவும்; ஐந்தின் - தனது புலனறிவுக்குத் துணையாக நிற்கும் ஆன்மாவை அறியாத ஐம்பொறிகளைப் போலவும்; உயிர் உணர்வை உணராது - ஆன்மாவும் தனக்குத் துணையாக நிற்கும் ஞானமாகிய திருவருளை உணர்வதில்லை.

### பொழிப்புரை

தனக்குத் துணையாகப் பின்னே வருபவனை அறியாத வழிப் போக்கனைப் போலவும், தமது புலனறிவுக்குத் துணையான ஆன்மாவை அறியாத ஐம்பொறிகளைப் போலவும், ஆன்மாவும் தனக்குத் துணையாக நிற்கும் ஞானமாகிய திருவருளை உணர்வதில்லை.

### விளக்கம்

இதுவும் ஆன்மாக்கள் திருவருளை அறியாமைக்கான காரணம் பற்றிக் கூறும் செய்யுளாகும். திருவருளை அறியாத ஆன்மாவுக்கு உவமைகளாக;அணுகு துணை அறியாத ஆற்றோனும், ஆன்மாவை அறியாத ஐம் பொறிகளும் கூறப் பட்டுள்ளன.

**ஐம்பொறிகளாவன : மெய், வாய், கண், மூக்கு, செவி**

### அருஞ்சொற்பொருள்

அணுகு துணை - நெருங்கி வருகின்ற துணை; ஆற்றோன் - வழிப்போக்கன்; ஐந்தின் - ஐம் பொறிகள்; உணர்வை - ஞானமாகிய திருவருளை.

## 6. இதுவுமது

**தரையை யறியாது தாமே திரிவார்**
**புரையை யுணரா புவி**

### சொற் பொருள்

தரையை அறியாது - தமக்கு ஆதாரமென்று பூமியை உணராமல்; தாமே திரிவார் - தாமே தமக்கு ஆதாரமென்று கருதிப் போக்குவரவு செய்பவரின் அறியாமையைப் போன்று; புரையை - தமது அறிவீனத்தை; புவி உணரா - பூமியிலுள்ள ஆன்மாக்கள் உணர மாட்டா(இவைகளும் தமக்குத் தாமே ஆதாரமென்று நினைப்பதாலும், ஆதாரமான திருவருளை அறியாதிருப்பதாலும்).

### பொழிப்புரை

பூமி தமக்கு ஆதாரமென்று உணராமல், தாமே தமக்கு ஆதாரமெனக் கருதி பூமியில் நடந்து திரிபவர்களின் அறியாமை போன்று, திருவருளே தமக்கு ஆதாரமென்பதை அறியாமல், தாமே தமக்கு ஆதாரம் எனக் கருதும் ஆன்மாக்கள் தமது அறியாமையை உணர மாட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கம்**

ஆணவம், ஆன்மாக்கள் திருவருளை உணராதபடி மறைக்கிறது. அதன் காரணமாக தமக்கு ஆதாரமான திருவருளை அறியாமல் தாமே தமக்கு ஆதாரமென ஆன்மாக்கள் அறியாமையால் நினைக்கின்றன. இது தரையின் ஆதாரத்தை அறியாத, தரைமீது செல்லுபவர்களின் அறிவீனத்தைப் போன்றது. இச் செய்யுளின் பிரதான கருத்து இதுவாகும். தரையை யுணராமலே தரையின் மீது நடப்பவர்கள் - உவமானம்; திருவருளை அறியாத ஆன்மாக்கள் - உவமேயம்; அறியாமை - பொதுத் தன்மை.

**அருஞ்சொற்பொருள்**

தரை - பூமி; புரை - அறிவீனம்; புவி - உலக ஆன்மாக்கள்.

**7. அருளை நாடாதோரின் அறியாமை**

**மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத்தோர் ஞானத்**
**தலைகெடுத்தோர் தற்கேடர் தாம்**

**சொற்பொருள்**

மலை கெடுத்தோர் - மலையின்மேல் நின்று கொண்டு மலையைத் தேடுபவர்களும்; மண் கெடுத்தோர் - நிலத்தின் மேல் நின்றுகொண்டு நிலத்தினைத் தேடுபவர்களும்; வான் கெடுத்தோர் - உலவுகின்ற ஆகாயத்தில் நின்றுகொண்டு ஆகாயத்தைத் தேடுபவர்களும்; ஞானத் தலைகெடுத்தோர் - ஞானமாகிய திருவருளிலே தங்கி நின்று கொண்டு அதனைத் தேடுபவர்களும்; தற்கேடர் தாம் - தம்மைக் காணாமல் தம்மைத் தேடும் அறிவிலிகளை ஒத்தவர்கள்.

**பொழிப்புரை**

மலையில் நின்று மலையைத் தேடுவோரும், நிலத்தில் நின்று நிலத்தைத் தேடுவோரும், ஆகாயத்தில் உலவியபடி ஆகாயத்தைத் தேடுவோரும், ஞானமாகிய திருவருளில் தங்கி நின்று திருவருளைத் தேடுவோரும், தம்மைக் காணவில்லையே என்று தம்மைத் தேடும் அறிவிலிகளை ஒத்தவர்கள்.

**விளக்கம்**

மலை, மண், ஆகாயம் ஆகியவற்றுடன் திருவருளையும் இணைத்து, இவற்றினை அறியாமல் தேடுபவர்களை (அவற்றுடனிருந்து கொண்டே)த் தம்மைத் தாமே தேடும் அறிவிலிகளைப் போன்றவர்கள் என இச் செய்யுள் காட்டுகின்றது. திருவருளுடன் கூடியிருந்தும். அதனை அறிய முடியாத அறிவீனம் இங்கு உணர்த்தப் பட்டுள்ளது. அறியாமை மிக்க ஐந்து வகையினரும் ஒத்தவர்கள் எனக் கூறப் பட்டுள்ளது. எளிதாகப் பெறத் தக்கதைப் பெறமுடியாத இயல்பு இங்கு காட்டப்பட்டுள்ளது.

**அருஞ்சொற்பொருள்**

கெடுத்தோர் - தேடுபவர்கள்; ஞானத் தலை - திருவருள்; தற்கேடர் - அறிவிலிகள்.

**8. இதுவுமது**

**வெள்ளத்துள் நாவற்றி யெங்கும் விடிந்திருளாம்**
**கள்ளத் திறைவர் கடன்**

**சொற்பொருள்**

கள்ளத்து இறைவர் கடன் - (திருவருளோடு கலந்து நின்றும் அதனால் வரும் பேரின்பத்தை அனுபவியாமல்) பொய்யான வழியில் தலைமை பெற்று நிற்கும் ஆன்மாக்களுடைய தன்மை; வெள்ளத்துள் நாவற்றி - நிறைந்த நன்னீரிலே நின்றும் அதனைப் பருகாது நாவறண்டும்; எங்கும் விடிந்து இருளாம் - எவ்விடத்திலும் இருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கி விடிந்த பின்பும் கண்ணைப் பயன்படுத்தாது நிலை தடுமாறியும் நிற்பதைப் போன்றதாகும்.

### பொழிப்புரை

திருவருளோடு கூடியிருந்தும் பேரின்பத்தை அனுபவியாமல் பொய்யாமை வழியில் தலைமை பெற்று நிற்கும் ஆன்மாக்களின் இயல்பானது, நிறைந்த நன்னீரில் நின்றும் அதனைப் பருகாது நாவறண்டும், எவ்விடத்திலும் இருள் நீங்கி விடிந்த பின்பும் கண்ணைப் பயன்படுத்தாது நிலை தடுமாறியும் நிற்பதைப் போலாகும்.

### விளக்கம்

வெள்ளத்துள் நாவறண்டு நிற்பதும், விடிந்து இருள் நீங்கிய பின்பும் கண்ணைப் பயன்படுத்தாது தடுமாறுவதும், திருவருளோடு கூடி நின்றும் பேரின்பத்தை அனுபவியாத பொய்மையில் நிலைபெற்ற ஆன்மாக்களுக்கு உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன. தேவையான பொருள் அருகிலிருந்தும் அதனை அறியவோ, பயன்படுத்தித் துன்பம் நீங்கவோ முடியாத அறியாமை பற்றி இங்கு உணர்த்தப் பட்டுள்ளது. அறியத்தக்க ஆன்மா அறியாமையால் பொய்மையில் மூழ்கிக் கிடக்கிறது என்க.

### அருஞ்சொற்பொருள்

வற்றி – வறண்டு; கள்ளத்திறைவர் – வஞ்சகத்தில் தலைபட்டு நிற்பவர்.

## 9. திருவருளை அடையும் வழி

**பரப்பமைந்து கேண்மினிது பாற்கலன்மேற் பூனை**
**கரப்பருந்த நாடுங் கடன்**

### சொற்பொருள்

பரப்பு அமைந்து கேண்மின் – (ஞான நூல்களைக் கேட்கும் போது) பரபரப்பில்லாமல் நிறைந்த ஊக்கத்தொடு கேளுங்கள்; (அப்படிக் கேட்காவிட்டால்)இது – மன அமைதியின்றிக் கேட்டல்; பாற்கலன் மேற் பூனை – உறியிலுள்ள பாற்குடதின் மேல் நிற்கும் பூனையானது; கரப்பு அருந்த நாடும் கடன் – முகட்டில் ஓடும் கரப்பான் பூச்சியைப் பிடித்துண்ணுவதற்காகப் பாற்குடத்தில் நின்றும் பாய்ந்தோடும் தன்மை போன்றதாகும்.

### பொழிப்புரை

ஞான நூல்களை பரபரப்பின்றி மன அமைதியுடன் கேளுங்கள். அப்படியில்லையாயின் அது, பாற்குடத்தின் மீதுள்ள பூனையானது அப்பாலினை விட்டு விட்டு, முகட்டு வளையில் ஓடும் கரப்பான் பூச்சியைப் பிடிக்கப் பாய்வதைப் போன்றதாகும்.

### விளக்கம்

பரப்பு – உலக விடயங்களில் மனம் பரந்து செல்லுதல்; அமைந்து – அடங்கி, ஒடுங்கி; மன ஒருமைப்பாட்டுடன் ஞான நூல்களைக் கற்க வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது. பாற்கலன் மேற் பூனை – உவமானம்; பரப்பு அமைந்து கேட்காதவர்கள் – உவமேயம்; மனவொருமைப்பாடு இன்மை – பொதுத்தன்மை;

### அருஞ்சொற்பொருள்

கேண்மின் – கேளுங்கள், கேட்பீராக; பூஞை – பூனை; கரப்பு – கரப்பான் பூச்சி, கடன் – செயல் போன்றது, தன்மை போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 10. திருவருளை அறியாதார் சிறுமை

**இற்றை வரையியைந்து மேதும் பழக்கமில்லா**
**வெற்றுயிர்க்கு வீடு மிகை**

**சொற்பொருள்**

இற்றை வரை இயைந்தும் - இவ்வளவு காலமும் திருவருளோடு கலந்து நின்றும்; ஏதும் பழக்கமில்லா - இத் திருவருளினைச் சிறிதேனும் உணர முடியாத; வெற்று உயிர்க்கு - அறிவில்லாத ஆன்மாவுக்கு; வீடு மிகை - வீடு பேறாகிய முத்தியின்பம் தகுந்ததாயிராது.

**பொழிப்புரை**

இவ்வளவு காலமும் திருவருளோடு கலந்து நின்றும், அதனை உணர முடியாத அறிவற்ற ஆன்மாவுக்கு வீட்டின்பம் தகுந்ததாயிராது.

**விளக்கம்**

அநாதி முதல் திருவருளோடு கூடியுள்ள ஆன்மாவானது, இது வரையிலும் அதனை உணர மாட்டாதாயின், அதற்கு வீடுபேறு என்பது கிட்டாது; பிறவித் துன்பத்திலிருந்து விடுபடாது; அதன் முயற்சி போதாது; என்ற கருத்துக்கள் இங்கு வெளிப்படுத்தப் பட்டுள்ளன. எனவே ஆன்மாவானது அஞ்ஞானம் நீங்கித் துணையாயுள்ள திருவருளை உணர்ந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தப் பட்டதென்க.

**அருஞ்சொற்பொருள்**

இற்றை வரை - இன்று வரை, இது வரையிலும்; இயைந்து - திருவருளோடு கலந்து; பழக்கமில்லா - திருவருளை உணராத; வெற்றுயிர்(வெறுமை ¸ உயிர்) - அறிவற்ற ஆன்மா; வீடு - வீடு பேறு, முத்தி; மிகை - கிட்டாதது, தகுந்ததல்ல, தகுதியற்றது.

## 5. அருளுரு நிலை

ஞான வடிவாகிய குருவினுடைய தன்மை என்பதே அருளுரு நிலையாகும். சிவ ஞான வடிவமாகிய திருவருளானது, பக்குவமுள்ள ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுக் குருவடிவில் எழுந்தருளி ஆட்கொள்கின்றது. வினை நீங்கிய ஆன்மாக்களின் பரிபக்குவமறிந்து அவர்களின் அறிவுக்கறிவாய் நின்று சிவ ஞானப் பேறெய்த வழிகாட்டுகின்றது.

### 1. குருவடிவாய் வருவது திருவருள்

**அறியாமை யுண்ணின் றளித்ததே காணும்**
**குறியாகி நீங்காத கோ**

**சொற்பொருள்**

அறியாமை உள்நின்று அளித்ததே - கண்ணாற் காணப்படாமல் ஆன்மாக்களில் நின்று(படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கு தொழில்களையும் செய்து) இரட்சித்து வந்த அதுவே; காணும் குறியாகி - (எஞ்சியதாகிய அருளலைச் செய்வதற்காக) கண்ணாற் காணக் கூடிய குருவடிவினைத் தாங்கி; நீங்காத கோ - உடனாய் நின்று ஆட்கொள்ளும் திருவருளாகும்.

**பொழிப்புரை**

கண்ணுக்குத் தெரியாமல் ஆன்மாக்களில் நின்று படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் ஆகிய நான்கு தொழில்களையும் செய்து காத்து வந்த திருவருளானது எஞ்சிய அருளலைச் செய்வதற்காக பக்குவமுடைய ஆன்மாக்கள் முன் கண்ணுக்குத் தெரியக் கூடிய குரு வடிவினை எடுத்து வந்து ஆட்கொள்ளு கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கம்**

ஆன்மாக்களின் பந்த நிலையில் (மலங்களால் பிணிப்புற்ற) மறைந்து நின்று அருள் செய்த திருவருள், பக்குவ நிலையில் வெளிப்பட்டுக் குருவடிவாகி நின்று அருள் புரிவதை, இச் செய்யுள் காட்டுகின்றது. மலங்கள் வலி கெட்டபோது ஆன்மா ஞானத்தைப் பெறுகின்றது. அந்த ஞானம் தானாக விளங்க மாட்டாது. அதனை விளங்கச் செய்வதற்கு ஞானா சாரியன்(குரு) வேண்டும். அதற்காகவே திருவருள் குருவடிவாய்த் தோன்றுகிறது என்க.

**அருஞ்சொற்பொருள்**

அறியாமை - அறியாமல்(கண்ணுக்குத் தெரியாமல்); உள் நின்று - ஆன்மாவினுள் மறைந்து நின்று; அளித்ததே - அருள் செய்ததே; காணும் - வெளிப்படையாகக் காணத்தக்க; குறியாகி - குருவடிவாகி; நீங்காத - விட்டு விலகாத; கோ - திருவருள்.

### 2. திருவருளே ஆணவத்தைப் போக்க வல்லது

**அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி யதனைச்**
**சகத்தவருங் காண்பரோ தான்**

**சொற்பொருள்**

அகத்து உறு நோய்க்கு - ஒரு வீட்டிலிருக்கும் ஒருவனுக்கு வந்த பிணியினை; உள்ளினர் அன்றி - அந்த வீட்டிலுள்ளவர்கள் அறிவார்களேயன்றி; அதனை - அந்த நோயினை; சகத்தவரும் காண்பரோ தான் - தூரத்திலுள்ளவர்களும் அறிவார்களோ? அறிய மாட்டார்கள்(அதுபோல ஆன்மாவிலுள்ள மலமாகிய நோயினைத் திருவருளன்றி வேறொன்றும் அறிய மாட்டாது).

**பொழிப்புரை**

ஒரு வீட்டில் ஒருவர்க்கு ஏற்பட்ட நோயினை, அவ் வீட்டாரன்றி தூரத்திலுள்ள எவரும் அறிய மாட்டார். அதுபோல் ஆன்மாவின் மலமாகிய நோயை, அதனுடன் கலந்து நிற்கும் திருவருளன்றி வேறெதுவும் அறியாது.

**விளக்கம்**

திருவருள் குருவாகி வந்து ஆணவ மலமாகிய நோயினைப் போக்கினாலன்றி ஆன்மாவிலுள்ள ஆணவ மலம் நீங்க மாட்டாது என்பது இச் செய்யுளால் விளங்குகிறது. வீட்டிலுள்ள ஒருவர்க்கு உற்ற நோயினை வீட்டாரேயறிதல் - உவமானம்; ஆன்மாவிற்கு உற்ற ஆணவ மலத்தை திருவருளறிதல் - உவமேயம்; உடனிருப்பவரே அறியக் கூடியதாயிருத்தல் - பொதுத் தன்மை.

**அருஞ்சொற்பொருள்**

அகத்துறு - வீட்டிலிருப்பவருக்கு; உள்ளினர் - வீட்டிலேயே வாழ்பவர்கள்; சகத்தவர் - தூர உள்ளவர்கள்.

### 3. குருவினைச் சீடனேயன்றிப் பிறரறியார்

**அருளா வகையா லருள்புரிய வந்த**
**பொருளா ரறிவார் புவி**

**சொற்பொருள்**

அருளா வகையால் - படைத்தல்,காத்தல், அழித்தல், மறைத்தல் ஆகிய நாற்றொழில்களையும் மறைத்து நின்று செய்தது போல; அருள் புரிய வந்த - (மானுட வடிவமாகிய குருவடிவினால் தன்னை மறைத்து) அருளைச் செய்ய வந்த; பொருள் - குருவடிவத்தை; புவி ஆர் அறிவார் - (பக்குவமுள்ள சீடனேயன்றிப்) பூமியில் வேறு யார் அறியத் தக்கவர்?(எவரும் அறிய மாட்டார்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொழிப்புரை**

நான்கு தொழில்களையும் மறைந்து நின்று செய்தது போல, தன்னை மறைத்து குருவடிவமாய் அருளவைச் செய்ய வந்த திருவருளைப் பக்குவமுள்ள சீடனேயன்றிப் பூமியில் வேறெவரும் அறிய மாட்டார்கள்.

**விளக்கம்**

திருவருளானது பக்குவமுள்ள ஆன்மாக்களுக்கு அருள்புரியும் பொருட்டாக குருவின் வடிவெடுத்து வருவதை, பக்குவம் பெற்ற மாணவனே அன்றி வேறெவராலும் உணர முடிவதில்லை என்பது இச் செய்யுளால் புலனாகிறது. மேலும் இதுவரையில் மறைவாக நின்று அருள் செய்த திருவருளானது, பக்குவம் கண்டோர்க்கு மானுட வடிவில் வெளிப்பட்டு அருளலைச் செய்கின்றது எனலாம்.

**அருஞ்சொற்பொருள்**

அருளா வகையால் -மறைந்து நின்று அருள்புரிதல்; பொருள் - திருவருள்; அருள்புரிய - அருளலைச் செய்ய;

**4. பக்குவமில்லாதாரின் அறியாமைக்குக் காரணம்**

**பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் போதமாம்**
**மெய்யிரண்டுங் காணார் மிக**

**சொற்பொருள்**

பொய் - நிலையற்ற உலக இன்பங்களில் நாட்டமுடையவராய்; இருண்ட சிந்தை - ஆணவ மலத்தால் மறைக்கப்பட்ட அறிவினையுடையார்; பொறியிலார் - ஞானமாகிய ஒளியினைப் பெறாதோர்; போதமாம் மெய்யிரண்டும் - அறிவு மயமாகிய திருவருளையும் அது தாங்கி நிற்கும் குரு வடிவத்தையும்; காணார் மிக - சிறிதளவும் அறியமாட்டார்.

**பொழிப்புரை**

நிலையற்ற உலக இன்பங்களில் நாட்டமுற்ற ஆணவத்தால் மறைக்கப்பட்ட அறிவினை உடைய, ஞானமாகிய ஒளியினைப் பெறாதோர், அறிவுமயமாகிய திருவருளையும், அது தாங்கி நிற்கும் குருவடிவையும் சிறிதும் அறிய மாட்டார்.

**விளக்கம்**

ஞானக்கண் இல்லாத ஊனக்கண் உடையோர் பக்குவம் இல்லாதவர்கள். இவர்கள் திருவருளையும் குருவடிவத்தையும் அறிய மாட்டார் என்பதுஇச் செய்யுளின் பிரதான கருத்தாகும். மலப் பிணிப்புக் காரணமாக அவர்களால் உண்மைப் பொருளினை உணர முடிவதில்லை என்க.

**அருஞ்சொற்கள்**

பொய் - நிலையற்ற உலக இன்பங்கள்; இருண்ட சிந்தை - மலப்பிணிப்புற்ற அறிவு; பொறியிலார் - ஞான ஒளி பெறாதோர்; போதம் - அறிவு; மெய்யிரண்டு - திருவருளும் குருவடிவும்; மிக - சிறிதும்.

**5. திருவருள் குருவாய் வருதலின் நோக்கம்**

**பார்வையென மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்**
**போர்வையெனக் காணார் புவி**

**சொற்பொருள்**

பார்வை என - அந்த அந்த இனத்துப் பழக்கப்பட்ட மிருகங்களின் துணையைக் கொண்டு பழக்கப்படாத வன விலங்குகளைப் பிடிப்பது போல; மாக்களை முன் பற்றிப் பிடித்தற்காம் - (மனித உருவமாகிய குருவடிவத்தை திருவருள் தாங்கி வருவது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்நின்று வசப்படுத்தி ஆட்கொள்வதற்காம்; புவி - பக்குவமில்லாதோர்; போர்வையெனக் காணார் - அது, திருவருளானது போர்த்துக் கொண்ட குருவடிவம் என்பதை அறியார்.

### பொழிப்புரை

பழக்கப்பட்ட விலங்குகளைக் கொண்டு பழக்கப்படாத வன விலங்குகளைப் பிடித்தல் போலத் திருவருளும் மானுட வடிவைத் தாங்கி வருவதைப் பக்குவமில்லாத ஆன்மாக்கள் அறிய மாட்டா.

### விளக்கம்

பழக்கப்பட்ட விலங்குகள் - உவமானம்; குருவடிவைத் தாங்கிய திருவருள் - உவமேயம்; பழக்கப்படாதவைகளைப் பிடித்தல் - பொதுத் தன்மை; திருவருளானது ஞானாசிரிய வடிவில் வந்து பக்குவமுள்ள ஆன்மாவை ஆட்கொள்ளும் என்பதை இச் செய்யுள் உணர்த்துகிறது. பக்குவ ஆன்மா திருவருளின் குருவடிவை அறிந்து கொள்ளும். பக்குவமற்றது அறியமாட்டா. திருவருளானது குருவாகி வந்து நயனம், பரிசம், மானசம், வாசகம், சாத்திரம், யோகம்,ஔத்திரி ஆகிய ஏழு வகைத் தீட்சைகள் மூலம் ஆன்மாக்களை ஆட்கொள்ளுகிறது. தீட்சை என்பது மலத்தை(பாசத்தை) நீக்கிச் சிவத்தை(ஞானத்தை)க் கொடுப்பதாகும்.

### அருஞ்சொற்பொருள்

பார்வை - பழக்கப்பட்ட தனூடாகப் பழக்கப் படாததைப் பிடித்தல்; மாக்களை - ஆன்மாக்களை; போர்வை - வேறுருவம் ஏற்றது; புவி - பக்குவமற்றோர்.

## 6. குரு சாத்திர தீட்சைக்கு இன்றியமையாதவர்

**எமக்கெ னெவனுக் கெவைதெரியு மவ்வத்**
**தமக்கவனை வேண்டத் தவிர்**

### சொற்பொருள்

எமக்கு என் - குருவினால் எமக்கு என்ன பயன் என்று கேட்டால்; எவனுக்கு எவை தெரியும் - எவனுக்கு ஞான நூற்பொருட்களை உள்ளபடி தெரியுமோ; அவ் அத் தமக்கு அவனை வேண்ட - அந் நூற்பொருள்கள் தமக்கு அவனைக் குருவாக வேண்டி நிற்றலால்; தவிர் - குருவின் இன்றியமையானமையை நீ உணர்வாயாதலால்,"எமக்கு என்" எனுங் கேள்வியை விடுவாயாக.

### பொழிப்புரை

குருவினால் எமக்கு என்ன பயன் என்று கேட்டால், எவனுக்கு ஞான நூற் பொருள்கள் உள்ளபடி தெரியுமோ, அப் பொருள்கள் தமக்கு அவனைக் குருவாக வேண்டி நிற்றலால், குருவின் தேவையை நீ உணர்ந்து, "எமக்கு என்" என்ற கேள்வியை விடுவாயாக.

### விளக்கம்

குருவின் தேவையை உணர்த்தும் இச் செய்யுளூடாக ஆன்மாக்களின் பாச வினையகலக் குருவடிவான திருவருளின் தேவை வலியுறுத்தப் பட்டுள்ளது."குருவில்லா வித்தைபாழ்" என்பதற்கிணங்க குருவின்மூலமே மெய்ப்பொருளின் உண்மை விளக்கம் பெற முடியும் என்க. திருவருள் அறிந்து அறிவித்தாலன்றி ஆன்மாக்கள் எதையும் அறியமாட்டா என்பதையும் கருத்தில் கொள்க.

### அருஞ்சொற்பொருள்கள்

எமக்கு என் - எமக்கு என்ன பயன் ; தவிர் - விலக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. நயன தீட்சை

**விடநகுல மேவினுமெய்ப் பாவகனின் மீளுங்**
**கடனிலிருள் போவதிவன் கண்**

### சொற்பொருள்

விடம் - (ஒருவன் விஷத்தினால் தீண்டப்பெற்றால் அந்த) விடமானது; நகுலம் மேவினும் - (பாம்புக்குப் பகையான) கீரி எதிரே வந்து அவன்மேல் புரண்டு தழுவி நிற்பினும் நீங்காது; பாவகனின் மீளும் -கீரியாகத் தன்னைப் பாவிக்கும் மாந்திரிகனால் நீங்கும்; கடனில் - இந்த முறைமைபோல; இருள்போவது இவன் கண் - மலங்களாகிய இருள் நீங்குவது திருவருளின் திருநோக்கினால் (நயன தீட்சையால்) ஆகும்.

### பொழிப்புரை

பாம்பினால் தீண்டப்பட்ட ஒருவனின் விடமானது பாம்புக்குப் பகையாகிய கீரி வந்து அவன் மேல் புரண்டு தடவினாலும் நீங்காது. ஆனால் கீரியாகத் தன்னைப் பாவிக்கும் மாந்திரிகனால் நீங்கும். அது போலவே திருவருளும் நேரடியாகத் தன்னைக் காணபியாது குருவடிவில் எழுந்து கண்களால் நோக்கியருளும் நயன தீட்சையினூடாக ஆன்மாக்களின் மல இருளை நீக்குகிறது.

### விளக்கம்

நயன தீட்சை என்பது குரு, சிஷ்யனுடைய சாரீரம் முழுவதையும் கண்களால் பார்த்து, அவனைச் சிவ சொரூபமாகப் பாவிப்பதாகும். திருவருள் பக்குவ ஆன்மாக்கள் மீது திரு நோக்கம் செய்து மலங்களை இல்லாமல் செய்கிறது.

### அருஞ்சொற்பொருள்

விடம் - விஷம், நஞ்சு; நகுலம் - கீரி; மேவினும் - புரண்டு தடவினாலும்; பாவகன் - மாந்திரிகன்; மீளும் - நீங்கும்; கடன் - முறைமை; இருள் - ஆணவ மலம்; இவன் கண் - திருவருளின் கண்நோக்கு;

## 8. மூவகை ஆன்மாக்களுக்கும் அருள் செய்யும் முறை

**அகலத் தருமருளை யாக்கும் வினைநீக்குஞ்**
**சகலர்க்கு வந்தருளுந் தான்**

### சொற்பொருள்

அகலத்து தரும் அருளை ஆக்கும் - விஞ்ஞான கலர்க்கு அவர்களது அறிவில் அறிவாய் நின்று அருள் செய்து மலத்தை நீக்கும்; வினை நீக்கும் - பிரளயாகலரிற் பக்குவமுடையோர்க்கு அவர்களைப் போல முன்னிலையாய் நின்று ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களையும் நீக்கும்; சகலர்க்கு தான் வந்து அருளும் - சகலரில் பக்குவமுடையோர்க்கு குருவடிவாய் வந்து மும் மலங்களையும் நீக்கி அருளும்.

### பொழிப்புரை

ஒரு மலமுடைய விஞ்ஞானகலர்க்கு அறிவில் நின்றும் இருமலங்களையும் உடைய பிரளயாகலர்க்கு முன்னிலையாய் நின்றும், மும் மலமுடைய சகலர்க்கு குருவடிவாய் நின்றும் மலங்களைத் திருவருளானது நீக்கும்.

### விளக்கம்

அகலம் - கலை நீங்கின ஆன்மா; விஞ்ஞான கலரில் மலமானது சூக்கும சக்தியாய் நிற்றலால் அவருக்குள் அறிவாய் நின்று உணர்த்தப்படும். பிரளயாகலரில் மலமானது தூலமாய் இருப்பதால் திருவருள் நேர் நின்று நயனம், பரிசம், வாசகம் ஆகிய தீட்சைகளினால் மலங்களை நீக்கும். சகலரிலும் தூலமாயுள்ள மலங்களைக் குருவடிவில் எழுந்து ஞான நூற் போதனையினாலும், அனுபவ சாட்சியினாலும் உணர்த்தி நீக்குகின்றது. இது ஆதார தீட்சை எனப்படும். நேராகச் செய்யப்படும் தீட்சை நிராதாரத் தீட்சை எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரும்பொருட்சொற்கள்**

*அகலம் – கலை நீங்கிய விஞ்ஞான கலர்; ஆக்கும் – தீர்க்கும், நீக்கும்.*

### 9. இறைவனே குருவாதல் வேண்டும்

**ஆரறிவா ரெல்லா மகன்ற நெறியருளும்**
**பேரறிவான் வாராத பின்**

**சொற்பொருள்**

*எல்லாம் அகன்ற – மந்திரம், வர்ணம், பதம், தத்துவம், புவனம், கலை ஆகிய அத்துவாக்களைக் கடந்த; நெறியருளும் – வீடுபேறு ஆகிய நெறியை வெளிப்படுத்தி அருளும்; பேரறிவான் வாராத பின் – பேரறிவினராகிய சிவ பெருமானே (இறைவனே) குருவடிவில் வந்து அருள் செய்யாவிட்டால்; ஆரறிவார் – அவ்வீடுபேற்று நெறியினை அறிய வல்லவர் யார்? (ஒருவருமிலர்).*

**பொழிப்புரை**

*மந்திரம் முதல் கலையீறான ஆறு அத்துவாக்களைக் கடந்த வீட்டின்ப நெறியை வெளிப்படுத்தி அருளும் பேரறிவினரான சிவ பெருமான் குருவாக வந்து அருள் புரியாவிட்டால், அவ் வீட்டின்ப நெறியினை அறிய வல்லவர் யார்? ஒருவருமிலர்.*

**விளக்கம்**

*மாயையினாலாய முப்பத்தாறு தத்துவங்களையும், ஆறு அத்துவாக்களையும் கடந்தே ஆன்மாவானது முத்தியடைய வேண்டும். அவை அனைத்தையும் கடந்தவராகிய இறைவனே அவற்றைக் கடக்க வேண்டியவர்களுக்குத் துணைசெய்ய முடியும். அவரின்றி எதுவும் நடவா என்பது இச் செய்யுளால் விளங்குகிறது. "அத்துவம்" என்பது வழி எனப்படும். ஆன்மாக்கள் கடந்து செல்ல வேண்டிய பாதைகளாகும். இதே போன்றதே உள் பொருளாகிய மாயா தத்துவங்களும் ஆகும்.*

**அருஞ்சொற்பொருள்**

*பேரறிவான் – இறைவன், சிவபெருமான்; அகன்ற – ஆறு அத்துவ நெறிகள்.*

### 10. குருவே ஞானம் அளிப்பவர்

**ஞான மிவனொழிய நண்ணியிடும் நற்கலனல்**
**பானு வொழியப் படின்**

**சொற்பொருள்**

*பானு ஒழிய – சூரிய ஒளி இல்லாமல்; நற் கல் அனல் படின் – சூரிய காந்தக் கல்லில் நெருப்புத் தோன்றுமாயின்; இவன் – ஒழிய அருள் வடிவான குருவின்றி; ஞானம் நண்ணியிடும் – எவ்வாறு ஆத்தும தத்துவ ஞானம் தோன்றும்? (தோன்றாது).*

**பொழிப்புரை**

*சூரிய ஒளி இல்லாமல் சூரிய காந்தக் கல்லில் நெருப்புத் தோன்றுமாயின், அருள் வடிவான குருவின்றி ஆத்தும தத்துவ ஞானம் எவ்வாறு தோன்றும்? தோன்றாது. (குருவின் துணையாலேயே தோன்றும்).*

**விளக்கம்**

*சூரிய ஒளி இல்லாவிடில் சூரிய காந்தக் கல்லில் நெருப்புத் தோன்றாது. அதுபோல குருவடிவான திருவருளின்றி, ஆன்மாக்கள் முத்தியடைய மாட்டா என்பதை இச் செய்யுள் காட்டுகிறது. ஆனால் சூரிய ஒளியின்றிச் சூரிய காந்தக் கல்லில் நெருப்புத் தோன்றுமா? குருவடிவான திருவருட்டுணையின்றி ஆன்மாக்கள் மலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கி முத்தியடையுமா? ஆகிய இரு வினாக்களையும் கேட்பதாகவும் அவற்றுக்கான விடை "இல்லை" என்பதை மறைமுகமாக உணர்த்துவதாகவும் அமைந்துள்ளது. பானு - சூரியன்; அதன் கதிர்களுக்காகி ஆகுபெயராய் வந்துள்ளது. ஒரு பொருளைப் பொய்யாக்குவதற்கு - இன்னொரு பொருளைப் பொய்யாகக் கூறுவதால் இச் செய்யுளில் "பொய்த்தற் குறிப்பணி" கையாளப் பட்டுள்ளது.

**அருஞ்சொற்பொருள்**

ஒழிய - இல்லாமல்; இவன் - குரு; படின் - உண்டாகுமானால்; நண்ணியிடும் - தோன்றுதல்; நற்கல் - சூரிய காந்தக் கல்; அனல் - நெருப்பு.

**சூரியகாந் தக்கல்லி னிடத்தே செய்ய**
**சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோல்**
**சூரியனாம் ஆசானைந் தருளால் தோன்ற**
**அடிஞானம் ஆன்மாவில் தோன்றும் தோன்றத்**
**தூரியனாம் சிவன்தோன்றும் தானும் தோன்றும்**
**தொல்லுலக மெல்லாந்தன் னுள்மீளு தோன்றும்**
**நேரியனாய்ப் பாரியனுமாய் உயிர்க்குயிராய் எங்கும்**
**நின்னிலை யெல்லாமுன் நிகழ்ந்து தோன்றும்**

**- சிவஞான சித்தியார் -**

**பொருள்**

சூரிய காந்தக் கல்லில் சிவந்த சுடரானது ஒளி வீசுவது போல் குருவடிவாய் வந்த திருவருளால்ஆத்ம ஞானமானது தோன்றும். அதனால் சிவனுடன் ஆன்மா ஐக்கியப்பட்டுத் தோன்றும். பழைமையான உலகமெல்லாம் திரும்பவும் தோன்றும். எங்கும் உயிர்க்குயிராக வியாபித்து நிற்கும் சிவஞான நிலை ஆன்மாவிடம் காணப்படும்.

**சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே**
**சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா**
**சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்**
**ஆரியன் தோற்றமன மற்ற மலங்களே**

**- திருமந்திரம் -**

**பொருள்**

சூரிய காந்தக் கல்லானது பஞ்சினில் நெருப்பு மூளச் செய்யாது. ஆனால் சூரியனினொளி சூரிய காந்தக் கல்லிற் பட்டுப் பஞ்சினில் நெருப்பு மூளச் செய்யும். அதுபோல திருவருள் தாங்கிவரும் குருவின் பார்வையினால் பக்குவ ஆன்மாக்களின் ஆணவ மலம் நீங்கும்

## குறிப்புகள்

**1. திருவருட்பயன் நூலில் கூறப்படும் கடவுளின்(பதியின்) இயல்புகள்:**

- "அ" என்னும் எழுத்து ஏனைய எழுத்துக்களில் வேறறக் கலந்து இருப்பதைப் போல் உலக உயிர்களில் நிறைந்திருப்பவர்.
- திருவருட் சக்தியினின்றும் வேறாகாது கலந்திருப்பவர்.
- பெருமை,நுண்மை, பேரருள், அறிதற்கு அருமை ஆகியவற்றால் ஒப்பற்று விளங்குபவர்.
- படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்களினூடாக ஆன்மாக்களுக்கு ஆதாரமா யுள்ளவர்.
- அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூவகைத் திருமேனிகளைக் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☞ தனக்கு மேலானதொரு தலைவன் இல்லாதவர்.
- ☞ தேவர்களாலும் காண முடியாதவராயினும் அடியவர்கள் அன்புக்கு அகப்படுபவர்.
- ☞ வெந்நீரில் உள்ள சூடு போல உலக உயிர்களில் கலந்திருப்பவர். ஆயினும் அவற்றினின்றும் தனித்து விளங்குபவர்.
- ☞ தம்மை வழிபடுவோர்க்குப் பேரின்பத்தைக் கொடுத்தும், வழிபடாதோர்க்குக் கொடாமலும் இருப்பவராயினும் ஆன்மாக்களுக்குச் சுகத்தைச் செய்பவராதலால் "சங்கரன்" எனும் பெயருடையவர்.
- ☞ ஆன்மாக்களின் பிறவிப் பிணிக்கு மருந்தாய் விளங்குபவர்.

**2. திருவருட்பயன் நூலில் கூறப்படும் உயிர்களின்(பசு) நிலை:**

- ☞ ஆன்மாக்கள் உண்மைப் பொருளாகும். அவை எண்ணில்லாதன.
- ☞ சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர், என மூவகை ஆன்மாக்கள் உள.
- ☞ மூவகை ஆன்மாக்களும் மூல மலமாகிய ஆணவ மலத்தினாற் கட்டுண்டு காணப்படுவன.
- ☞ ஆன்மாக்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியாதவை.
- ☞ ஐம்பொறிகளின் துணையின்றி எதனையும் ஆன்மாக்கள் அறிய மாட்டா.
- ☞ ஆன்மாக்களுக்கு உணர்த்த உணரும் தன்மை உண்டு.
- ☞ ஆன்மா சிவத்தைச் சார்ந்து சிவமாயும், மலத்தைச் சார்ந்து மலமாயும் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் சதசத்து ஆகும்.
- ☞ ஆன்மா ஆணவத்தோடு சேர்ந்து அதன் இயல்பையும், திருவருளோடு சேர்ந்து அதன் இயல்பையும் கொள்ளுவதாகும்.
- ☞ ஆணவத்தால் மறைப்புற்ற அறியாமை மிக்க ஆன்மாவுக்குச் சிவமாகிய ஒளி தென்படாது.
- ☞ அநாதி தொடங்கி ஆணவப் பிணிப்பினால் துன்பமுறும் ஆன்மாவானது திருவருளைத் தன் பக்குவத்தால் உணர்ந்தாலே முத்தியடைய முடியும்.

**3. திருவருட்பயன் நூலில் காணப்படும் இருண்மல நிலை பற்றிய கருத்து:**

- ☞ தொன்றுதொட்டுத் தொடர்ந்து வரும் பிறவித் துன்பமும் அதற்குக் காரணமான மும் மலங்களும், வீடுபேறும் அதற்குக் காரணமான இறைவனும் இல்பொருள்கள் எனக் கூற முடியாது.
- ☞ இருளானது கண்களை மறைத்து உலகப் பொருள்களைக் காண முடியாதவாறு செய்தல் போல, ஆணவ மலமும் உயிர்களின் அறிவை மறைத்து உண்மைப் பொருளை உணர முடியாதவாறு செய்கின்றது.
- ☞ ஆணவமலம் உலகப் பொருட்களுடன் தன்னையும் காட்டாது மறைப்பதாகும்.
- ☞ ஆணவமலமானது அநாதி தொடங்கி ஆன்மாவைச் சார்ந்து நிற்பது.
- ☞ எண்ணில்லாத ஆன்மாக்களைப் பொருந்தி நிற்கும் ஆணவமாகிய பெண், தனது கணவர்களுக்கும் தன்னுருவத்தைக் காட்டாத இயல்புடையது.
- ☞ ஆன்மா உண்மையான அறிவைப் பெற முடியாத மயக்கத்தை ஆணவமே தந்தது.
- ☞ ஆணவமாகிய பொருளில்லா விடில் ஆன்மாவுக்குப் பிறவித் துன்பம் ஏற்படாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவத்தை நீக்கக் கூடிய பொருளொன்று உளதாயின் ஆணவம் நீங்கும் போது ஆன்மாவும் உடன் கெட்டுவிடும். எனவே ஆணவம் ஆன்மாவின் குணமன்று; குற்றமேயாகும்.

- ☞ ஆணவம் உயிரை இடையிற் சேர்ந்ததாயின், முத்தி நிலையிலும் பற்றிப் பிடிக்க முயலும். எனவே ஆணவம் அநாதியானது.
- ☞ மாயையினாலான உடம்பைப் பெற்ற போதும், அதனுதவியால் திருவருள் ஞானத்தைப் பெற முடியா விட்டால், ஆன்மாவை விட்டு ஆணவ மலம் ஒருபோதும் நீங்காது.
- ☞ விடியும் வரை இருளைப் போக்கும் விளக்குப் போல மாயையினாலாகிய தனு, கரண, புவன, போகங்கள் ஆன்மா சிவ ஞானத்தைப் பெறுவதற்குக் கருவிகளாகத் துணை செய்கின்றன.

**4. திருவருட்பயன் நூலின் அருளது நிலை எனும் அதிகாரத்தில் உமாபதி சிவாச்சாரியார் கூறுவன:**

- ☞ உலகில் ஒருவர்க்கு அவ்வப்போது தேவைப்படும் இன்றியமையாத பொருளிலும் மேலான பொருள் இல்லாதது போலத் திருவருளிலும் மேலான பொருள் கிடையாது.
- ☞ திருவருளானது கர்ம வினைகளைப் பெருக்கவும், இன்ப துன்பங்களை அனுபவிக்கவும், ஆன்மாவின் அறிவை விளக்கும், பேரொளியாய் ஆன்மாக்களிடத்தில் நிற்கின்றது.
- ☞ சடப் பொருளாகிய உடம்பு எதனையும் அறியாது; ஆன்மாவானது தானாக ஒன்றையும் அறியாது; திருவருள் அறிந்து அறிவித்தாலே அறியக் கூடியது.
- ☞ கூடவேயிருக்கும் திருவருளை உணராத ஆன்மாக்கள், பாற்கடலிலுள்ள மீன்கள் பாலைப் பருகாது சிறிய பிராணிகளைப் பிடித்து உண்ணுதலைப் போன்ற செயலுடையன.
- ☞ தரையே தமக்கு ஆதாரமென்பதை அறியாது திரிபவர்களைப் போலவே, திருவருளே தமக்கு ஆதாரமென்பதை அறியாத ஆன்மாக்கள் உள்ளன.
- ☞ மலையிலிருந்து மலையைத் தேடுபவர்களும், நிலத்திலிருந்து நிலத்தைத் தேடுபவர்களும், ஆகாயத்தில் உலாவியபடி அதனைத் தேடுபவர்களும், திருவருளுடன் தங்கியிருந்து அதனை உணராத ஆன்மாக்களும் தன்னைத் தானே தேடுவதைப் போன்றவர்கள்.
- ☞ திருவருளை அறியாது பொய்யான வழிகளிலே முதன்மை பெற்று நிற்பவர்கள் வெள்ளத்தில் நின்று கொண்டே தாகத்தால் தவிப்பவர்களையும், இருள் விடிந்த பிறகும் ஒளியைக் காணாது தடுமாறுபவர்களையும் ஒத்தவர்கள்.
- ☞ தனக்குத் துணையாக பின்னே வருபவனை அறியாத வழிப்போக்கன் போலவும், ஆன்மாவின் துணையறியா ஐம்பொறிகள் போலவும், தனக்குத் துணையாக நிற்கும் திருவருளை ஆன்மா அறிவதில்லை.
- ☞ திருவருள் பற்றிய ஞான நூல்களைப் பரபரப்பின்றி மனவொருமைப் பாட்டுடன் கேட்பீராக. அப்படிக் கேட்காவிட்டால் அது, பாற்குடத்தின் மெலிருக்கும் பூனை, பாலை அருந்தாது முகட்டில் திரியும் கரப்பான் பூச்சியை பிடிக்கப் பாய்ந்த முறைமை போலாகி விடும்.
- ☞ அநாதி தொடங்கித் திருவருளோடு கலந்து நின்றும் இதுவரையில் அதனை உணராத ஆன்மாக்களுக்கு வீடுபேறு என்பது பொருத்தமற்றதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. திருவருட் பயன் கூறும் அருளுரு நிலை பற்றிய கருத்துக்கள்:**

- இதுவரையிலும் மறைந்து நின்று படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் ஆகிய நாற்றொழில்களையும் செய்து வந்த திருவருளானது, அருளலைச் செய்வதற்காக கண்ணாற் காணக் கூடிய குருவடிவம் தாங்கி வந்துள்ளது.
- ஒரு வீட்டிலுள்ள ஒருவர்க்கு ஏற்பட்டுள்ள நோயை அவ்வீட்டிலுள்ளாரன்றி வேறெவரும் அறிய மாட்டார்கள். அதுபோல் ஆன்மாக்கள் உற்ற மலமாகிய நோயைத் திருவருளன்றி வேறெதுவும் அறியா.
- பக்குவமுடைய சீடர்களாகிய ஆன்மாக்களன்றி, வேறெவரும் குருவடிவாய் எழுந்தருளிய திருவருளை அறிய மாட்டார்கள்.
- நிலையற்ற உலக இன்பப் பற்றுடைய, ஆணவ மலத்தால் மறைக்கப்பட்ட உணர்வுடைய ஞானம் இல்லாதவர்கள், அறிவு மயமான திருவருளையும், அது தாங்கி வந்துள்ள குரு வடிவையும் அறிய மாட்டார்கள்.
- பழக்கப்பட்ட விலங்குகளைக் கொண்டு பழக்கப்படாத விலங்குகளைப் பிடித்தல் போல மானுட வடிவாகிய குரு வடிவில் திருவருள் வந்துள்ளதை பக்குவமில்லாதார் அறிய மாட்டார்கள்.
- ஞான நூற் பொருட்களை உள்ள படி, யார் அறிந்துள்ளாரோ, அந் நூற் பொருட்கள் அவனுக்குக் குருவாக வேண்டி நிற்பனவாதலால் குருவினால் என்ன பயன் என்று கேட்பதைத் தவிர்க்க வேண்டும்.
- பாம்பினால் கடியுண்ட ஒருவனின் மேல் பாம்புக்குப் பகையாகிய கீரி வந்து புரண்டு தடவினாலும் அவ்விஷம் நீங்காது, மாந்திரிகனின் பாவனை மூலம் நீங்கி விடும். அது போல் நேரடியாக வராது திருவருளாகிய குருவின் கண்பார்வையின் மூலம் ஆன்மாக்களின் ஆணவ மலம் நீங்கி விடும்.
- விஞ்ஞானகலர்க்கு அறிவாய் நின்றும், பிரளயாகலர்க்கு முன்னிலையாய் நின்றும், சகலரில் பக்குவமுடையோர்க்குக் குருவடிவாய் வந்தும் மலங்களைத் திருவருள் நீக்கி விடுகின்றது.
- சிவ சக்தியாகிய திருவருள் துணைவராவிட்டால் ஆறு அத்துவாக்களைக் கடந்த வீடுபேறாகிய பேரின்பத்தை ஆன்மாக்கள் அடைய முடியாது.
- சூரிய ஒளியின்றிச் சூரிய காந்தக் கல்லில் நெருப்பு மூளாதது போன்று, திருவருளாகிய குருவின் துணையின்றிச் சிவஞானம் ஆன்மாக்களுக்குக் கிட்டமாட்டாது.

---

1. *உலகுயிர்களில் இறைவன் நீக்கமற நிறைந்திருப்பதற்கான உவமானமாகக் கூறப்படுவது:*

   *அகர ஒலியானது ஏனைய எழுத்துக்களில் பொருந்தி இருப்பது.*

2. *திருவருட் சக்தியின் தன்மை:*

   *தனது ஒப்பற்ற நிலையை நிலைபெற்ற உயிர்கள் பொருந்தச் செய்வது.*

3. *இறைவனின் ஒப்பற்ற தன்மை விளங்குவது:*

   *பெருமையால், நுண்மையால், மிகுந்த கருணையால், அறிதற்கு அருமையால்*

4. *இறைவனின் அருட் செயல்களாவன:*

   *படைத்தல், காத்தல், அழித்தல்*

5. *வானாடர் காணாத மன் எனப்பட்டவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான்(இறைவன்)

6. இறைவனின் வியாபகமானது

சூடு பொருந்திய நீரில் கலந்துள்ள சூடு போன்றது.

7. சலமிலன் என்பதன் கருத்து:

விருப்பு வெறுப்பு இல்லாதவன்

8. சங்கரன் என்பதன் கருத்து

ஆன்மாக்களுக்குச் சுகத்தைச் செய்பவன்.

9. மன்னுபவம் தீர்க்கும் மருந்தாக விளங்குபவன்:

இறைவன்

10. துறப்போர் தொகையின் அளவாக அமைவது

இதுவரை பிறந்தோர் தொகையுடன் இதுவரை பிறப்போர் தொகையை கூட்டி வருவது

11. மூலமலம் எனப்படுவது:

ஆணவமலம்

12. கண்டவற்றை நாளுங் கனவில் கலங்கியிடுந் திண்டிறல்

ஆன்மா

13. ஆன்மாவுக்கு அறிவு என்ற பெயர் பொருந்தாமைக்குக் காரணம்

பொறியின்றி ஒன்றும் அறிய மாட்டாதாகையால்

14. ஆன்மா சதசத்து எனப்படுவன் காரணம்

சிவத்தைச் சார்ந்து சிவமாயும், மலத்தைச் சார்ந்து மலமாயும் சார்ந்ததன் வண்ணமாய் நிற்பதால்

15. இருளிலும் ஒளியிலும் பொருட்கள் காணப்படுவதை ஆன்மாவுக்கு ஒப்பிட்டதன் நோக்கம்

சிவம், ஆணவம் ஆகிய இரண்டுடனும் சேரும்போது அதனதன் இயல்பினைக் கொண்டிருப்பதால்.

16. இரு பொருளும் காட்டாதது

ஆணவம்

17. மூவகை ஆன்மாக்களாவன

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்

18. கணவர்க்கும் தோன்றாத கற்புடையது

ஆணவ மலம்

19. உணரும் பான்மை தெரியாத தன்மையை ஆன்மாவுக்குக் கொடுத்தது

இருண்மலமாகிய ஆணவ மலம்

20. ஆணவமலம் ஆன்மாவை இடையில் வந்து சேரவில்லை என்பதன் காரணம்

ஆணவத்தைக் கெடுக்கக் கூடிய பொருளிருப்பின் ஆன்மாவும் கெட்டுவிடும். ஆனால் ஆணவம் வலிகெடும்போது ஆன்மா கெடுவதில்லை. எனவே ஆன்மா கெடுவதில்லை. எனவே ஆன்மாவுடன் ஆணவம் அநாதியாகவே உள்ளது.

21. விடிவாமளவும் விளக்கனையது

மாயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. ஆன்மா பிறவியெடுக்கும் போது மாயையினால் பெற்றுக் கொள்வன.

தனு, கரண, புவன, போகங்கள்.

23. சூரியனைப் போன்று திருவருளும் விளங்குவதற்குக் காரணம்

வளரச் செய்தலால்(வினைகளை), அனுபவிக்கச் செய்தலால்(சுக துக்கங்களை), விளங்கச்செய்தலால்(அறிவை).

24. ஆன்மா அறிவைப் பெறும் வழி

திருவருள் அறிந்து அறிவித்தலால்

25. திருவருளை உணராத ஆன்மாக்களுக்கான உதாரணங்கள்

பாற்கடலில் வாழும் மீன்கள்
தமக்காதாரமான தரையை அறியாது திரிபவர்கள்

26. தன்னைத் தாகே தேடுபவர்களுக்கு ஒப்பாகக் கூறப்பட்ட நால்வகையினர்,

மலையிலிருந்து கொண்டே மலையைத் தேடுபவர்கள்
நிலத்திலிருந்து கொண்டே நிலத்தைத் தேடுபவர்கள்
ஆகாயத்தில் உலவியபடி ஆகாயத்தைத் தேடுபவர்கள்
திருவருளோடு இருந்து கொண்டே அதனை உணராது தேடுபவர்கள்

27. கள்ளத்திறைவர் எனப்பட்டது

பொய்யான உலக இன்பங்களில் தலைமை பெற்று நிற்கும் ஆன்மாக்களை

28. பாற்கலன் மேற் பூஞை கரப்பருந்த நாடுங்கடன் போன்றது.

பரபரப்பின்றி மன ஒருமைப்பாடின்றி ஞான நூல்களைக் கேட்பவர் செயல்

29. குருவடிவில் வந்து அருள்புரிவது

திருவருள்

30. ஆணவ மலத்தால் பீடிக்கப்பட்ட ஆன்மாவின் மனநோயை அறிய வல்லது

அன்மாவுடன் கூடவேயிருக்கும் திருவருள்

31. ஐந்தொழில்களில் ஒன்றாகிய அருளலைச் செய்வதற்காக குருவடிவம் தாங்கி வந்த திருவருளை அறியக் கூடியவர்கள்

பக்குவமுடைய ஆன்மாக்கள்

32. பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் எனப்பட்டது

ஆணவத்தால் அறிவு மறைப்புற்ற ஆன்மாக்களை

33. போதமாம் மெய்யிரண்டும் எனக் கூறப்பட்டது

திருவருளும், அது தாங்கி நிற்கும் குருவடிவும்

34. திருவருள் குருவடிவத்தைத் தாங்கி வந்ததன் நோக்கம்.

பழக்கப்பட்ட விலங்குகளைக் கொண்டு பழக்கப்படாத விலங்ககளைப் பிடித்தல் போல, ஆன்மாக்களுக்கு பழக்கப்பட்ட மானிடவடிவம் தாங்கி வந்து பக்குவமுள்ள ஆன்மாக்களை ஆட்கொள்வதற்காக

35. குருவினால் எமக்கு என்ன பயனெனக் கேட்கக் கூடாது என்பதற்கான காரணம்

எவனுக்கு எள்ளது உள்ளபடி நூற்பொருள்கள் தெரியுமோ, அவனையே குருவாக அவை வேண்டி நிற்றலால்

36. திருவருள் மல இருளை அகற்றும் விதம்

நயன தீட்சையாகிய குருவின் திருநோக்கத்தின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. மூவகை ஆன்மாக்களுக்கும் திருவருள் அருள்செய்யும் முறை

சகலரில் பக்குவமுடையோர்க்குக் குருவடிவாயும், பிரளயாகலர்க்கு முன்னிலையாய் எழுந்தருளியும், விஞ்ஞானகலர்க்கு அறிவுக்கறிவாய் நின்று அருள் புரிகிறது.

38. அகன்ற நெறி எனக் கூறப்பட்டது

மந்திரம் முதல் கலை ஈறான ஆறு அத்துவாக்களைக் கடந்த மோட்ச நெறியினை

39. குருவடிவிலான திருவருளின் துணையின்றி ஆன்மாவானது வீடுபேறு அடைய மாட்டாது என்பதற்க உவமையாகக் கூறப்பட்டது.

சூரிய ஒளியின்றிச் சூரிய காந்தக் கல்லில் நெருப்பு மூளாது என்பதாகும்.

40. திருவருட்பயன் என்பதன் கருத்து

ஆன்மாக்களுடன் கலந்து நிற்கும் திருவருளும் அதனால் ஆன்மாக்கள் அடையக் கூடிய பயன்களும் என்பதாகும்.



**பரம்பொருள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. குருலிங்க சங்கம வழிபாடு

1. ஆன்ம விடுதலைக்காகச் சைவ நெறி காட்டும் மார்க்கங்களில் **குருலிங்க சங்கம** வழிபாடும் ஒன்றாகும்.
2. குருவை வழிபடுதல். சிவலிங்கத்தை வழிபடுதல், சிவனடியார் கூட்டத்தினை (சங்கமம்) வழி படுதல் ஆகியவற்றை எமக்கு ஏற்றதாக அமைந்துள்ள முறையில் கடைப்பிடிப்பதால் சிவனருள் கிட்டும்.
3. வழிபடுதல், போதித்தல், மதிப்பளித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் குருலிங்க சங்கம வழிபாடு இடம்பெறல் வேண்டும்.
4. சிவனடியார்களுக்குச் செய்யும் சேவை சிவபெருமானுக்குச் செய்யும் சேவையாகும்.

### அ) குருவழிபாடு



குருவழிபாடு

(i) குரு என்பதனால் அஞ்ஞானத்தை(அறியாமையை)ப் போக்குபவர் அல்லது பாசத்தை நீக்குபவர் எனக் கருதப்படும்.

(ii) சைவ சமய சாத்திரங்களைப் போதிப்பவர்; சமயாசாரக் கிரியைகளை நடத்துபவர்; ஆன்மீகத் துறையில் எழக்கூடிய சந்தேகங்களை அகற்றி நல்வழிகாட்டியாக விளங்குபவர் குரு ஆவார்.

(iii) பிறவித் துன்பத்தைப் போக்கும் பொருட்டு, ஆன்மாக்களுக்குப் பழக்கப்பட்ட மானுட வடிவத்தில் குருவாக எழுந்தருளிச் சிவ பெருமானின் திருவருள் ஆட்கொள் கிறது.இதனையே திருவருட் பயன் நூலும்,

**'பார்வைஎன மாக்களைப் பற்றிப் பிடித்தற்காம்**
**போர்வைஎனக் காணார் புவி'**

என்று கூறியுள்ளது.

(iv) நன்னெறியை உணர்த்தும் குருவினைச் சிவன் எனக் கருதி மனம், வாக்கு, காயம், ஆகியவற்றால் வழிபட வேண்டும்.

(v) குருவழிபாட்டின் மூலம் வீடுபேறு அடைந்தோருள் திருமூலர், மங்கையற்கரசியார், குலச்சிறையார், அப்பூதியடிகள் போன்றோர் சிலராவர்.

(vi) குருவை வணங்குவதுடன் சமய குரவர், சந்தான குரவர் போன்றோரது குருபூசைத்தினங்களைக் கொண்டாடுவதும் சைவ சமயத்தவரின் இன்றியமையாத கடமையாகும்.

### ஆ) இலிங்க வழிபாடு:



சிவலிங்கம்

(i) ஆன்மாக்களும் உலகமும் ஒடுங்குவதற்கும், தோன்றுவதற்கும் இடமாயுள்ளது **"லிங்கம்"** எனப்படும். லி - ஒடுங்குதல்; கம் - தோன்றுதல்.

(ii) திருக்கோயிலில் காணப்படும் விக்கிரகங்களில் சிவ லிங்கமே முதன்மையானது.

(iii) சிவலிங்கத்தின் அடிப்பாகம் உடுக்குப்போன்ற பீடமாயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கும். இது ஆவுடையார் எனப்படும். சிவலிங்கத்தின் மேற்பாகம் உருண்டு திரண்ட முனையற்ற தண்டுபோல் அமைந்திருக்கும். இது பாணம் அல்லது இலிங்கம் எனப்படும்.

(iv) சிவலிங்க வடிவம் இறைவனின் அருவுருவத் திருமேனியைக் குறிப்பதாகும்.

(v) சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகை மார்க்கத்தினரும் அவரவர்க்கேற்ற முறையில் தமது பக்குவத்திற்கமைவாக வழிபடுவர்.

(vi) சிவலிங்கமானது

1. **பரார்த்தலிங்கம்**
2. **இட்டலிங்கம்**

என இருவகைப்படும். பரார்த்தலிங்கம் தாவரலிங்கம் எனவும் அழைக்கப்படும். இது சுயம்புலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம் என ஐந்து வகைப்படும்.

(vii) இலிங்க வழிபாடு செய்த முத்தியடைந்த நாயன்மார்களுள் சேரமான் பெருமாள் நாயனார், சாக்கிய நாயனார், கலிங்காம நாயனார், பூசலார் நாயனார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

### இ) சங்கம(சிவனடியார் கூட்ட) வழிபாடு:

(i) சிவபெருமானிடம் மெய்யன்பு பூண்டொழுகுவோரைச் சிவனடியார் என்பர். இவர்களது திருக்கூட்டம் சங்கமம் எனப்படும்.

(ii) சிவனடியார்களின் இயல்புகளாவன:

சிவபெருமானை நினைத்தல், சிவனைப்பற்றிய செய்திகளைக் கேட்டு இன்புறுதல், சிவனுக்குத் திருத் தொண்டுகள் செய்தல், சிவபெருமானின் புகழைப் பாடிப் பரவல், திருவைந்தெழுத்தினை ஓதி இன்புறுதல்.

(iii) சிவனடியார்கள் சிவனாகக் கருதி வழிபடற்குரியவர்கள். அவர்களது தோற்றமும் செயலும் சிவனை உணர்த்துபவை. மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார் வேடத்தில் தன்னைக் கொல்ல வந்த மன்னித்து வணங்கியது இதற்காகத்தான்

(iv) **அடியார் நடுவிலிருக்கும் அருளைப் புரியாய்** என்று மணிவாசகப் பெருமான் இறைவனை வேண்டுகின்றார்.

(v) **ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே** என்கிறார் அப்பரடிகள்.

(vi) சிவனடியார் வழிபாடானது எமது உள்ளத்தின் கீழ்த்தர எண்ணங்களை நீக்கி உயர்ந்த எண்ணங்களை வளர்த்துத் தூய்மையாக்குகிறது. உலகப்பற்றை நீக்கித் தெய்வப் பற்றை வளர்க்கிறது.

(vii) சிவனடியாருக்குச் செய்யும் திருத் தொண்டும், சிவனடியார் வழிபாடும் எம் உள்ளத்தில் பக்தி, தூய்மை, அன்பு ஆகியவற்றை வளர்க்கும் இறைபணிகளாகும்.

## குறிப்புகள்

**சிவ வழிபாடு**

**குரு வழிபாடு** | **இலிங்க வழிபாடு** | **சங்கம வழிபாடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. நாட்டார் தெய்வங்கள்

1. உலகின் பல படிநிலைகளில் வாழும் மக்களிடையே சடங்குகள் இடம்பெறுவது வழமையாகும். மனித குலத்தில் பிறப்பு முதல் இறப்பு வரை சடங்குகள் பின்பற்றப் படுகின்றன. ஆனால் அவற்றுள் அனைவருக்கும் பொதுவான சடங்குகளும் சாதி, சமயம், இனம், குலம் முதலானவற்றால் வேறுபட்ட நிலையில் அவரவர் சமுகத்துக்குரித்தான சிறப்பான சடங்குகளும் காணப்படுகின்றன.

2. நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த சடங்கு முறைகள் நாட்டுப்புறப் பண்பாட்டை எடுத்துக் காட்டுவன. சடங்குகளால் சமுகத்து மக்கள் இணைக்கப் படுகின்றனர். குறித்ததொரு சமுகத்தின் தொன்மையான பண்பாட்டை நிலைநிறுத்தவும் சடங்குகள் உதவுகின்றன.

3. பழந் தமிழர் நூல்களிலும், வேதங்களின், பகுதிகளிலும் சடங்குகள் பற்றிக் கூறபட்டுள்ளன.

4. சடங்குகள் பலவகையானவை. சமயச் சடங்குகள் பிறப்பு சம்பந்தமான சடங்குகள், திருமணச் சடங்குகள், வேளாண்மைச் சடங்குகள், ஈமச்சடங்குகள் இவற்றுட் சிலவாகும்.

**5. சமயச் சடங்குகள்**

**(அ)** ஒவ்வொரு சமயியும் நாள் தோறும் மூன்று நேரங்களிலும் பலவிதமான சடங்குகளைச் செய்வதற்கு இந்து மதம் வழிகாட்டியுள்ளது.

**(ஆ)** மனித குலத்தின் ஆரம்பம் தொட்டு சமய நெறிகள் பின்பற்றப்பட்டன. அவற்றுடன் இணைந்ததாகச் சடங்குகளும் இடம்பெற்றன. அவை மந்திரச் சடங்குகள் ஆகும். இன்றும் நாட்டார் தெய்வ வழிபாடுகளில் இச் சமயச் சடங்குகள் கடைப்பிடிக்கப் படுகின்றன. ஆகம முறைப்படி பூசைகள் நடைபெறும் மேல்நிலைப்பட்ட ஆலயங்களில் மந்திரச் சடங்கு முறைகள் குறைவாகக் காணப்படும். அங்கே பூசகர் சடங்குகளைச் செய்பவராகவும், பக்தர்கள் பார்வையாளராகவும் இருப்பர். ஆனால் நாட்டார் தெய்வ வழிபாட்டில் ஆகம முறைகள் அதிகம் பின்பற்றப்பட மாட்டா. அங்கே மக்கள் நேரடியான பங்களிப்பினை வழங்குவர்.

**(இ)** நாட்டார் தெய்வ வழிபாட்டு முறைகளில் (1) பண்டம் எடுத்தல், (2) மடைபரவுதல், (3) தூளி பிடித்தல், (4) கதவு திறத்தல், (5) சந்தனக் காப்பிடல், (6) பலியிடுதல், (7) கலையாடுதல், (8) சூனியம் வெட்டுதல், (9)கச்சு நேருதல், (10) உருவம் நேர்ந்து விடுதல் (11) குழந்தைப் பேறற்ற பெண்கள் சிறு மரத் தொட்டில்களைச் செய்து நேர்த்திக் கடனாகத் தருதல், (12) தீப்பந்தம் ஏற்றுதல், (13) சொற்பொழிவு நிகழ்த்தல் ஆகியன இடம்பெறுவதைக் காணலாம். இவை அனைத்தும் ஒரே ஆலயத்தில் இடம்பெறுமெனக் கூற முடியாது. இடத்திற்குத் தகுந்தாற் போல் இவற்றுள் சிலவோ, பலவோ நடைபெறும்.

**6. திரௌபதை அம்மன் சடங்குகள்**

**(அ)** நாட்டார் சடங்குகளில் பழைமையான சிலவற்றையும் புதியவை சிலவற்றையும் இணைத்ததாக ஈழநாட்டின் திரௌபதை அம்மன் ஆலயச் சடங்குகள் அமைந்துள்ளன.

(ஆ) ஈழத்தில் கிராமியப் பெண் தெய்வங்களான காளி, மாரி, பேச்சி, வராகி, பிடாரி, கொத்தி, சன்னாசி, கண்ணகி, நாச்சிமார், சீதை, திரௌபதை என்பன சடங்கு களை அடிப்படையாகக் கொண்டு வழிபடப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) திரௌபதை அம்மன் வழிபாடானது தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்து மக்களால் கடைப்பிடிக்கப் பட்டதாக இருக்க முடியும். ஏனெனில் பல்லவர் காலத்தில் திரௌபதைக்கு ரதக் கோயில் எடுத்து வழிபட்டதும், விஜயநகர நாயக்கர் காலத்தில் இவ் வழிபாட்டோடு களியாட்டமும் இணைந்து விளங்கியதும் குறிப்பிடத் தக்கது.



திரௌபதையம்மன்

(ஈ) ஈழத்தில் மட்டக்களப்புப் பிரதேசங்களில் தான் திரௌபதை அம்மன் ஆலயங்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன. பாண்டிருப்புத் திரௌபதை அம்மன் ஆலயம், ஆரையம்பதி திரௌபதை அம்மன் ஆலயம், பழுகாமம் திரௌபதை அம்மன் ஆலயம், புதூர் திரௌபதை அம்மன் ஆலயம், புளியந்தீவு திரௌபதை அம்மன் ஆலயம், மட்டக்குழி திரௌபதை அம்மன் ஆலயம் என்பன குறிப்பிடக் கூடியவை.

(உ) புத்தளம் மாவட்டத்தில் உடப்புக் கிராமத்திலுள்ள திரௌபதை அம்மன் ஆலயம் புகழ் பெற்றதாகும்.

(ஊ) திரௌபதை அம்மன் ஆலயங்களில் சடங்குகளைச் செய்பவர்கள் **பூசாரி** என்று அழைக்கப்படுவர். ஆனால் பழுகாமம் ஆலயச் சடங்குகளை மேற்கொள்வோரை **நம்பியார்** என்று அழைக்கின்றனர்.



உடப்பு திரௌபதையம்மன் ஆலயம்

(எ) திரௌபதை அம்மன் வழிபாடானது மகாபாரதக் கதையுடன் தொடர்புடையது. வைணவ சமய நெறியைப் பரப்பும் நோக்குடன் அறிமுகப் படுத்தப் பட்டது. மகாபாரதத்துப் பதினெட்டுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டே திரௌபதை அம்மன் ஆலயங்களில் பல்வேறு சடங்குகளும் நடைபெறு கின்றன.

## 7. பாண்டிருப்புத் திரௌபதை அம்மன் ஆலயச் சடங்குகள்:

(அ) வட இந்தியாவின் கொங்கு நாட்டிலிருந்து வந்த தாதன் என்பவனால் பாண்டிருப்புத் திரௌபதை அம்மன் ஆலயம் கட்டப்பட்டது.

(ஆ) சிறு தெய்வ வழிபாட்டைப் பற்றிக் கூறும் நூற்றொகுதியாகிய **பத்ததிகள்** கூற்றுப்படி சிங்கள, பௌத்த மன்னனான விமல தர்ம சூரியன் என்பவன் இவ்வாலயத்தைப் புனரமைப்புச் செய்தமை பற்றி அறிய முடிகின்றது.



பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலயம்

(இ) பாமர மக்களும் மகாபாரதக் கதையை அறிந்து கொள்ளும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆலயத்தில் பாடல்களும், கூத்துக்களும் பெருவழக்குப் பெற்றதுடன், இப் பிரதேசத்திலும் அவை செல்வாக்கடைந்தன.

(ஈ) திரௌபதை அம்மன் வழிபாட்டுச் சிறப்புப் பற்றித் தாதன் கல்வெட்டுப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆவினங்கள் வாழ அறமுயர்ந்து சாலிஎழப்**
**பாவலர் பாடப் பல்லுயிரெல்லாம் வாழ**
**மாதத்தில் மூன்றுமழை மட்டுநகர் பெய்துவா!**

*பசுவினங்கள் வாழவும் தருமநெறி ஓங்கி நாட்டில் விளைச்சல் பெருகவும், புலவர்கள் பாடல் இசைக்கவும், எல்லாவுயிர்களும் இன்புற்று வாழவும், மாதம் மும்மாரி மட்டுநகரில் பெய்து வரவும் திரௌபதை அம்மனை வேண்டுவதாக இக்கல்வெட்டுக் கூறுகிறது.*

**(உ)** *பூசாரி இக் கோயிற் சடங்குகளைச் செய்கிறார். நோய் நீங்க, பிள்ளைப் பேறு கிடைக்க, வேளாண்மை பெருக, பட்டிச் செல்வம் (மாடுகள்) பெருக இவ் வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது.*

**(ஊ)** *நாடகத் தன்மை வாய்ந்ததாக இவ் ஆலயச் சடங்குகள் நடைபெறுகின்றன. பாண்டவர் விக்கிரகங்கள் கொலு வைக்கப்படும். பதினெட்டுத் தினங்கள் சடங்குகள் நடைபெறும்.* ***வந்தனை*** *எனப்படும் வேண்டல் வழிபாடே இங்கு நடைபெறுகின்றது. பாண்டவராக வேடம் தரித்து நிற்கும் ஐவர் கொலுவிருக்க அவர்களுக்கே இச்சடங்குகள் நடைபெறுகின்றன. இதன் மூலம் மனிதனும் தெய்வமாகலாம் எனும் தத்துவம் உணர்த்தப் படுகின்றது.*

**(எ) பாண்டிருப்புத் திரௌபதை அம்மன் ஆலயத்தின் பிரதான சடங்குகளாவன:**

1) *திருக்கதவு திறத்தல்*
2) *கொடியேற்றம்*
3) *சுவாமியை எழுந்தருளப் பண்ணல்*
4) *கலியாணக் கால் வெட்டுதல்*
5) *பாண்டவர்கள் வனவாசம் செல்லல்*
6) *அருச்சுனன் தவறுதலும் தொடர்ந்து பன்றி மறித்தலும்*
7) *கமலக்கன்னி*
8) *அருச்சுனன் தவம்*
9) *அரவான் களப்பலி*
10) *அருச்சுனனின் மகன் தீக்குளிப்பு (தீப்பள்ளயம்)*



**பாண்டவர் வனவாசம்**

**(ஏ)** *ஈழத்தில் அதிகூடிய நீள அகலங்களைக் கொண்ட தீக்குழி இதுவாகும். பதினெட்டு நாட்கள் பக்குவமாய் விரதம் அனுட்டித்துப் பாண்டவர்களுடன் தேவர்களும் இறங்குவது கண்கொள்ளாக் காட்சியாகும்.*

**(ஐ)** *பாண்டிருப்புத் திரௌபதை அம்மன் ஆலயத் தீ மிதிப்பில் பெண்கள் ஈடுபடுவதில்லை. ஆண்கள் ஆலயத்திற்கு வந்து தங்கியிருந்து விரதம் இருந்து தீ மிதிப்பில் ஈடுபடுவார்கள்.*

*தீ மிதிப்பு நடந்த மறுநாள் தீக்குளிப்பு, பால்வார்த்தல் சடங்கு நடைபெறும். அப்போது தெய்வம் ஏறப்பெற்ற கலையாடுவோர் (தேவராளர்) காணப் படுவர். அவர்கள் பாரம்பரிய நாடகப் பாணியில் ஆடுவது சிறப் பானதாகும். தெய்வமாடுதல், உடுக் கடித்தல், சிலம்பொலித்தல், பறையடித்தல் ஆகியவற்றுடன் மந்திர உச்சாடனங்களும் பூசாரியால் மேற்கொள்ளப் படுகின்றன. தெய்வமாடுபவரால் ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கு அருள் வாக்குச் சொல்லுதல், காப்புக் கட்டுதல் (நூல் கட்டுதல்) போன்றவைகளும் இடம்பெறும்.*



**தீ மிதிப்புச் சடங்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஓ) ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் இவ்வாலயச் சடங்குகள் இடம்பெற்றுக் கொடியிங்கத்துடன் பூர்த்தியாகும். ஈழத்தின் முதல் திரௌபதை அம்மன் ஆலயமாக பாணடிருப்பிலுள்ள ஆலயமே விளங்குகின்றது.

**8. வைரவர் வழிபாடு:**

(அ) சிவ மூர்த்தங்கள் அறுபத்து நான்கு. அவற்றுள் முக்கியமானவை இருபத்தைந்து. முக்கியமான மூர்த்தங்களுள் வைரவர் மூர்த்தமும் ஒன்றாகும்.



வைரவர்

(ஆ) வைரவ மூர்த்தத்தின் றோற்றம் பற்றி ஆகமங்களும் புராணங்களும் கூறியுள்ளன. வடுகலை வைரவர், காலவைரவர், மகாவைரவர், உக்கிர வைரவர், சுவர்ணக வைரவர், நரசிம்ம வைரவர், ஞானவைரவர் என வைரவ மூர்த்தங்ககளை இலக்கியங்கள் வகைப் படுத்தியுள்ளன.

(இ) எல்லா ஆலயங்களிலும் ஞான வைரவ மூர்த்தமே காணப்படுகிறது.

**(ஈ) ஆகமங்களும் புராணங்களும் கூறும் வைரவ மூர்த்தம் பற்றிய செய்திகள்:**

(i) பிரம்மனின் ஆணவத்தை அடக்குவதற்காகச் சிவனின் அம்சமாகத் தோன்றியவர்.

(ii) பிரம்மனின் ஐந்தாவது தலையைத் தன் விரல் நகத்தால் கொய்த போது, விரலை விட்டுத் தலை அகலாததால் காசிக்குச் சென்று அருள்பெற்று ஒட்டிய தலையை விரலிலிருந்து அகற்றியவர்.

(iii) காசியிலே காவல் தெய்வமாக எழுந்தருளியவர்.

(iv) பல்வேறு ஆயுதங்களை ஏந்திய அகோர வடிவத்தினர்.

(v) நிர்வாண கோலத்தினர்.

(vi) அச்சந் தரும் தோற்றமுடையவர். மூன்று கண்களைக் கொண்டவர்.

(vii) நீல நிறமேனியையுடையவர்.

(viii) சிலம்பொலிக்கும் திருவடிகளை யுடையவர்.

(ix) பாம்புடன் கூடிய திருஅரை உடையவர்.

(x) தலைமாலைகள் புரளும் திருமார்பில் சர்ப்பப் பூணூலைத் தரித்தவர்.

(xi) சூலம். மழு. பாசம். தீச்சுடர், கபாலம், உடுக்கு ஆகியவற்றை ஏந்திய திருக்கர முடையவர்.

(xii) இரு கோரப் பற்களுடன் கொந்தளிக்கும் முகத்தையும், அச்சமூட்டும் சிரிப்பையும உடையவர்.

(xiii) நாயை வாகனமாகக் கொண்டு காட்சி தருபவர்.

(xiv) இராசதம். சாத்வீகம், தாமசம் ஆகிய மூன்று குணங்களுடன் எழுந்தருளியிருப்பவர்

(xv) சங்கார ருத்திர மூர்த்தி என்ற சிறப்புப் பெயரால் போற்றப்படுபவர்.

(உ) வைரவ மூர்த்த இலட்சணங்கள் பற்றிய கருத்துக்கள் ஆன்மாக்களை உலக பந்தங்களிலிருந்தும் ஈடேற்றும் தன்மை கொண்டவையாகும். உலகப் பற்றை விடினும் உடற்பற்றை விடுதல் கடினம். உடற் பற்றிருந்தால் உலகப் பற்றிருக்கும். எனவே அந்தப் பற்றையும் விடு என்பதே வைரவ மூர்த்தத் தத்துவமாகும். வினை ஒழியும் போதுதான் உடற்பற்றும் அழியும். எனவே அவைகளை (உடல், உலகப் பற்றுகளை) அழிக்கும் கோலமாகத் தாமச குணத்தைக் காட்டும் வடிவினராகக் காட்சி தருகிறார் வைரவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) வைரவர் வழிபாடானது ஆகமம் சார்ந்த, ஆகமஞ்சாராத முறைகளில் இடம்பெறுவதைக் காணலாம். போத்துக்கேயர் ஆட்சிக் காலத்தின்போது அவர்கள் சமயப் பொறுமையின்றி நடந்து கொண்டதால் ஈழத்தின் வடக்கு, கிழக்கு, வடமேல் பகுதி மக்களிடையே மறைமுகமாக வைரவர் வழிபாடு கடைப்பிடிக்கப்பட்டது. வீடுகள், மரத்தடிகள் ஆகிய இடங்களில் சூலங்களை நட்டு, ஆகமம் சாரா முறையில் வழிபட்டனர். அந்நியரால் அபாயம் ஏற்படக் கூடிய கட்டங்களில் மக்கள் சூலத்தை நிமிர்த்திச்சிலுவையாக மாற்றித் தப்பிக் கொண்டதாகவும் வரலாறு கூறுகிறது.

(எ) வைரவர் வழிபாட்டின் வளர்ச்சியாக சைவத் தமிழ் மக்கள் வாழும் நாடளாவிய இடங்களில் எல்லாம் சிறியதும், பெரியதுமான வைரவர் ஆலயங்கள் அமைந்துள்ளன. இவை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் சிறப்பாகவும் அதிக அளவிலும் காணப்படுகின்றன.

## 9. ஞான வைரவர் ஆலயங்கள்

(அ) கொக்குவில் தலையாழி ஞானவைரவர் ஆலயமானது யாழ்ப்பாணத்தில் தலை சிறந்த வைரவர் ஆலயமாகவும், இலங்கையிலும் குறிப்பிடத்தக்க பெருமை வாய்ந்த ஆலய மாகவும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் புராண படனம் செய்த ஆலயமாகவும், யோகர் சுவாமி கள் தரிசித்த ஆலயமாகவும் விளங்குகிறது


கொக்குவில் தலையாழி ஶ்ரீ ஞான வைரவர் ஆலயம்

(ஆ) யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஞான வைரவர் கோயில், பசுமையான மரங்களால் சூழப் பெற்றுக் கம்பீரமான இராஜகோபுரங்கள் கலை யழகு மிக்கதாகவும், பழைமையும் புதுமையும் நிறைந்த பொலிவுடனும் விளங்குகிறது.

(இ) யாழ்ப்பாணம் காரை நகரிலுள்ள திண்ணைக்களி வைரவர் ஆலயமும், தினகரன் பிட்டி வைரவர் ஆலயமும், குறிப்பிடத் தக்கவை.

(ஈ) திருகோணமலையில் பாலையூற்று, உவர்மலை, பெருந்தெரு, செங்கலடி ஆகிய இடங்களிலுள்ள வைரவர் ஆலயங்களும் சிறப்பானவை.

(உ) கொட்டாஞ்சேனை வைரவர் ஆலயம் அலங்காரத் திருவிழாக்களைக் கொண்டது. நித்திய, நைமித்தியப் பூசைகள் இங்கு நடைபெறுகின்றன. அர்த்த ஜாமப் பூசையின்போது ஆலயத்திறப்புக்கள் வைரவர் முன் வைக்கப்பட்டு நைவேத்தியத்துடனான பூசை இடம்பெறும்.

(ஊ) பல ஆலயங்களில் (வீதிகளில், சந்திகளில், நீர் நிலைக் கரைகளில், காடுகளில் தனியிடங்களில்) வைரவரைக் குறிக்கும் சூலத்தினை மாத்திரம் பிரதிஸ்டை செய்து வழிபடும் வழக்கம் அதிகளவில் காணப்படுகிறது. சைவ சமயிகள் வாழுகின்ற எந்தவொரு கிராமத்திலும் கூட வைரவர் வழிபாடு இல்லாமல் இல்லை என்று கூறத்தக்கதாக எளிய முறையில் சூலம் நாட்டப்பட்ட சிறு கோயில்கள் காணப்படுகின்றன.


(எ) வைரவருக்குரிய விரத நாட்களாக சித்திரைப்பரணி, ஐப்பசிப் பரணி, தைமாதத்து முதல் செவ்வாய்க் கிழமை ஆகிய நாட்கள் கருதப் படுகின்றன. இந்நாட்களில் விரதமிருந்து சிவப்புப் பட்டு, சிவப்பு மாலை, வடைமாலை ஆகியன சாத்தி வைரவரை மக்கள் வழிபடுதல் மரபாகும்.

(ஏ) ஆகமம் சாராத முறையில் வைரவர் வழிபாடு நடக்கும் ஆலயங்களில் 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு கோணாவளை வைரவர் கொயில் சிறப்பானதாகும். இது தவிர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரும்பிராய்க் காட்டு வைரவர் கோயில், சங்கானை நிகர வைரவர் கோயில், இணையிலி வைரவர் கோயில், வன்னியில் துணுக்காய் அனிச்சியங்குளம் நரசிம்ம வைரவர் கோயில் என்பனவும் முக்கியமானவை.



கொக்குவில் கோணாவளை ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்

(ஐ) வைரவர் கோயில்களில் ஆண்டுதோறும் வைகாசி மாதத்து விசாகத்தை மையமாகக் கொண்டு நடைபெறும் பொங்கலன்று பண்டம் எடுத்தல், மடைபரவுதல், தூளிபிடித்தல், பரிகலம் அழைத்தல், பலியிடுதல், கலையாடுதல், கட்டுச் சொல்லுதல் போன்ற சடங்குகளைப் பூசாரி ஒருவர் மேற்கொள்வார்.

(ஒ) மட்டக்களப்புப் பிரதேசத்தில் அருள் நேசபுரம், தாண்டவன்வெளி, பட்டிப்பளை, பாலமீன்மடு, மட்டக்களப்பு, விவேகானந்தபுரம், கிரான், கிரான்குளம், கூழாவடி போன்ற இடங்களில் ஆகமம் சாராத வைரவர் கோயில்கள் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. இவ்விடங்களிலுள்ள வீட்டு வாசல்களில் வைரவர் பந்தல்கள் அமைத்திருப்பது சிறப்பைத் தருவதாகும். இங்குள்ள ஆலயங்களில் கதவு திறத்தல், மடைபரவுதல், காவியம் பாடல், நூல்கட்டுதல், திருநீறு போடுதல், தண்ணீர் ஓதிக் கொடுத்தல், கதவு அடைத்தல் முதலான சடங்குகள் பூசாரிமாரால் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் வயல்வெளிகளில் கதிர்கண்ட சடங்கும் நடைபெறும். மேலும் இப்பிரதேச மக்களது நாட்டார் தெய்வ வழிபாட்டு முறைகளில் ரொட்டி, கரும்பு, பழவகைகள் ஆகியவற்றுடன், மதுவும் படையலில் இடம்பெறுவதுடன், பலியிடுதல் போன்றனவும் நடைபெறுவது குறிப்பிடத் தக்கதாகும்.

(ஔ) ஈழத்துச் சைவர்களிடையே நிலைபெற்றுள்ள வைரவர் வழிபாடானது ஆகமஞ் சார்ந்த முறையிலும் ஆகமம் சாராத முறையிலும் நடைபெறுகின்றது. இறைவன் மீது பேரன்பு கொண்டு வழிபாடு செய்வதனால் அவனது கருணையைப் பெற்று உய்வடைகின்ற மக்கள், தங்களது சைவசமயத்தின் வளர்ச்சிக்கு வைரவர் வழிபாடும் துணைபுரிவதாக நம்புகின்றனர்.

## குறிப்புகள்

**நாட்டார் தெய்வங்கள்**

**வைரவர் வழிபாடு**

**கொக்குவில் தலையாழி ஞானவைரவர்**
**கொக்குவில் கோணாவளை ஞானவைரவர்**
**கொழும்பு கொட்டாஞ்சேனை ஞானவைரவர்**
**உரும்பிராய் காட்டுவைரவர்**

**திரௌபதையம்மன் சடங்கு**

**பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலயம்**
**உடப்பு திரௌபதையம்மன் ஆலயம்**
**ஆரையம்பதி திரௌபதையம்மன் ஆலயம்**
**பழுகாமம் திரௌபதையம்மன் ஆலயம்**
**புதூர் திரௌபதையம்மன் ஆலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. நாட்டார் கலைகள்

1. இந்துமத வழிபாட்டு முறைகள் இரண்டு வகைப்படும். அவையாவன : ஆகமம் சார்ந்தவை, ஆகமம் சாராதவை. இன்றும் இந்த இருமரபுகளும் பின்பற்றப் படுவதைக் காணலாம். நாட்டுப் புறங்களில் (கிராமப் பிரதேசங்களில்) கூடியளவுக்கு ஆகமம் சாராத முறைகளே காணப்படுகின்றன. இந்த வழிபாட்டு முறைகளில் இடத்துக்கிடம் வேறுபாடுகளும் உள்ளன. இத்தகைய நாட்டார் வழக்காற்று மரபில் இடம் பெறும் கலைகளை "நாட்டார் கலைகள்" என அழைக்கின்றனர்.

2. கலை என்பது மனிதனின் உள்ளத்துணர்வை வெளிப்படுத்தும் சாதனமாகும். கலை கலைக்கானதன்று: சமயத்துக்கானது. அது சமயத்தின் சடங்காசாரங்களைப் பறை சாற்றி நிற்பது. இக் கலையின் கூறுகள் பலவகைப்படும். அவற்றுள் கோலாட்டம், கும்மி, கூத்து. வில்லிசை என்பன சிலவாகும். "ஆய கலைகள் அறுபத்து நான்கு" என நூல்கள் கூறுகின்றன. இக் கலைகள் யாருக்காக நிகழ்த்தப் படுகின்றன என்பதைப் பொறுத்து பொதுவியற் கலை, வேத்தியற் கலை என இரண்டு வகைப்படும். தொன்று தொட்டு வரும் இந்த மரபில் பொது மக்களுக்காக நிகழ்த்தப் படும் கலைகள் **பொதுவியற் கலைகள்** என்றும். அரசர்களுக்காக நிகழ்த்திக்காட்டப் படுபவை **வேத்தியற் கலைகள்** எனவும் அழைக்கப்பட்டன. உயர் அந்தஸ்துப் பெற்றிருந்த கலைகள் யாவும் படிப்படியாகக் காலமாற்றங்களுக்கு இசைவு பட்டுச் சாதாரண மக்களும் பார்த்துச் சுவைக்கத் தக்கவையாக இன்று மாற்றம் பெற்றுவிட்டன. இவற்றுள் அநேகமானவை நாட்டுப் புற மக்களின் வாழ்வியலோடு இணைந்து நாட்டார் கலைகளாகி விட்டன.

3. நாட்டார் கலைகள், பொழுது போக்குக்கு ஏற்றவையாய் இருப்பதுடன் தெய்வ பக்தி, அழகுணர்ச்சி, நல்லொழுக்கம் முதலானவற்றையும் மக்களுக்குப் புகட்டுகின்றன.

4. ஈழத்து நாட்டார் கலைகளை நான்கு வகையாகப் பிரித்து நோக்குவர்.
   - (i) அவைக்காற்றுக் கலை(கூத்து, நடனம், வில்லிசை போன்றவை)
   - (ii) இலக்கியக் கலை (நாட்டார் பாடல்கள், பழமொழிகள்)
   - (iii) விளையாட்டு (நாட்டுப்பற விளையாட்டுக்களான கிட்டிப் புள், கபடியாடுதல், பல்லாங்குழியாடுதல், பசுவும் புலியும் விளையாடுதல் போன்றவை)
   - (iv) ஒப்பனை (கதாபாத்திங்களுக்கும். வேடங்களுக்கும், பொருத்தமாக ஒப்பனை செய்தல்: உதாரணமாக வடமோடி, தென்மோடிக் கூத்துக்களுக்கான ஒப்பனை)

5 பழைய காலத்தில் ஈழத்தில் கூத்தானது வட்டக்களரி (வட்ட வடிவமான திறந்த மேடையில் நான்கு பக்கங்களிலிருந்தும் மக்கள் பார்க்கத் தக்கவாறு ஆடுதல்) முறையில் ஆடப்பட்டது. இன்று மூன்று பக்கம் மூடிய படச்சட்ட அரங்கில் ஆடப்படுகிறது.

6. ஈழத் தமிழ்க் கூத்துக் கலையை அழிய விடாது மறுமலர்ச்சியுடன் வாழச் செய்தவர் **பேராசிரியர் சு. வித்தியானந்தன்** ஆவார். ஈழத் தமிழர்களின் தனித்துமான கலையாக விளங்குவது கூத்துக் கலையே யாகும்.



**மட்டக்களப்பு நாட்டுக்கூத்து**

7. ஈழத்தமிழர்கள் செறிந்து வாழும் யாழ்ப் பாணம், வவுனியா, மன்னார். முல்லைத்தீவு, சிலாபம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களில் கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இக்கூத்துக்களை வடமோடி, தென்மோடி,சிந்துநடை,விலாசம் ஆகிய பிரிவுகளுக்குள் அடக்கிக் கூறுவர்.

9. கூத்துக்கள் சமய அடிப்படையிலான கதைகளைக் கொண்டவை. வடமோடி, தென்மோடி கூத்துக்களில் மகாபாரதம், இராமாயணம், கந்தபுராணம் முதலிய புராணக் கதைகள் செல்வாக்குப் பெற்றுள்ளன. அருச்சுனன் தவம், வாலிவதை. வள்ளி திருமணம், கர்ணன் போர் என்பன இதிகாச புராணங்களில் இடம் பெற்ற கிளைக் கதைகளாகும். இவை கூத்துக்களில் பெருவழக்குப் பெற்றுள்ளன. இக்கூத்துக்களில் மத்தளம், சல்லரி, உடுக்கு, பறைமேளம், நாதஸ்வரம் முதலான இசைக் கருவிகள் பயன்படுத்தப் படுவது வழக்கமாகும்.

**10. வசந்தன் கூத்து.**



**வசந்தன் கூத்து**

**அ.** ஈழத்துத் தமிழ் நாட்டார் கலைகளில் வசந்தன் கூத்தும் ஒன்றாகும்.

**ஆ.** வசந்த காலத்தில் ஆடப் படுவதாலும், வசந்த கால இன்பத்தைப் பார்ப் போருக்கு அளிப்ப தாலும் இருபொருள்பட இக் கூத்தானது வசந்தன் கூத்து அல்லது வசந்தன் ஆட்டம் எனப்படுகிறது.

**இ.** இதனைப் **பிள்ளையார் வசந்தன், அனுமார் வசந்தன், அம்மன் பள்ளு வசந்தன் ஆட்டம்** என வகைப்படுத்திக் கூறுவர்.

**ஈ.** வசந்தன் கூத்து முருகன், கண்ணகியம்மன், முத்துமாரியம்மன் ஆலயங்களில் ஆடப்படும்.

**உ.** இதிகாசக் கதைகளின் அடிப்படையிலே இக் கூத்து அமைந்திருக்கும்.

**ஊ.** ஆடல்களில் தனிச்சிறப்பு வாய்ந்ததாகவும், ஆலயங்களின் சடங்குகள், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி முதலான பண்டிகைக் காலங்களில் இவ் வசந்தன் கூத்து பெரிதும் நடைபெறுகிறது.

**எ.** எட்டு அல்லது பத்துப் பேர் கொண்ட குழுவே இதில் பங்குபற்றுகிறது.

**ஏ.** கூத்தின் ஆரம்பத்தில் தரு இடம்பெறும். இதனைக் கட்டியம் கூறுதல் என்பர். கட்டியம் கூறுபவர் காலில் சலங்கை அணிந்து வடமோடி அல்லது தென்மோடிக் கூத்துக்குரிய உடையணிந்து தரு பாடி வருவார். வட்டமாகக் கயிறு கட்டி மேடை அமைத்து இக்கூத்து ஆடப்படும் போது, பார்ப்பவர்கள் பரவசமடைவார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ. மட்டக்களப்பில் இக்கூத்து செல்வாக்குடையது. சிறுவர்களும் இளைஞர்களும் இதனைப் பேணி வருகின்றனர். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கட்டுவன் ஊரைச் சேர்ந்தவர்கள் வசந்தன் கூத்தினைப் பேணி வருகின்றனர். பெரிதும் மழை வேண்டிப் பாடும் கட்டுவனூர் வசந்தன் பாடல்கள் குறிப்பிடத் தக்கவை.

ஒ. சமய முக்கியம் வாய்ந்த வசந்தன் கூத்தானது கொம்பு முறி வழிபாட்டின் போதும் ஆடப் படுகிறது. இக்கூத்தில் வசந்த தாசன் என்பவன் தனக்காகவும் பிறருக்காகவும் கண்ணகி, பத்திரகாளி ஆகிய தெய்வங்களை வேண்டுவதாலும், ஆலயங்களில் ஆடப்பட்டு பக்தியை ஊட்டுவதாலும், சமூகத்தின் அழகியற் கலைக்குரிய செல்வமாக விளங்குவதாலும் சைவ சமய நெறி வளர்ச்சிக்குத் துணை செய்கிறது. இவ்வரிய கலைப் பொக்கிஷத்தைப் பேணி பாதுகாப்பது எமது கடமையாகும்.

## குறிப்புகள்




• • • • • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. இலங்கைச் சைவ மரபின் தொன்மையை விபரிக்கும் இதிகாசங்கள்.

1. இலங்கையில் சைவ சமயமானது வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட தொன்மையை உடையது.
2. பௌத்த மதம் இலங்கையில் பரவுவதற்கு முன்னரே செழிப்புற்று வளர்ச்சி கண்டு வந்துள்ளது.
3. **இலங்கையில் சைவ சமயத்தின் வளர்ச்சிப் போக்கு நிலைகளை அறிவதற்கு உதவுவன:**

   **அ)** இராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசங்கள்.

   **ஆ)** கந்தபுராணம், விட்டுணு புராணம் முதலான புராணங்கள்.

   **இ)** மகாவம்சம், தீபவம்சம் போன்ற பாளி நூல்கள்

   **ஈ)** யாழ்ப்பாண வைபவ மாலை, கைலாய மாலை, வையாபாடல், கோணேசர் கல்வெட்டு முதலான தமிழில் தோன்றிய நூல்கள்.

   **உ)** இபன்பத்துத்தா, மக்கன்சி, பாகியன் போன்ற தேச சஞ்சாரிகளின் (தேச யாத்திரிகர்களின்) குறிப்புக்கள்.

   **ஊ)** வரலாற்று அறிஞர்களின் ஆராய்ச்சி முடிவுகள்.

   **எ)** புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் மூலம் பெறப்பட்ட தொல்பொருட் சின்னங்கள்.

   **ஏ)** சிங்கள மொழியில் அமைந்துள்ள தூதுப் பிரபந்தங்கள்.
4. வடமொழியில் இராமனின் சரிதையை எழுதியவர்கள் வால்மீகி, வசிட்டர், போதாயனர் ஆகியோர்.
5. வால்மீகி எழுதிய இராமாயணத்தைப் பின்பற்றி கம்ப நாட்டாழ்வார் தமிழில் கம்பராமாயணத்தை எழுதியுள்ளார்.
6. வடமொழியில் ஒரு இலட்சத்து இருபதாயிரம் சுலோகங்களால் வேத வியாசரால் எழுதப்பட்ட மகாபாரதத்தினை வில்லிபுத்தூராழ்வார் தமிழில் பாடியுள்ளார்.

## 7. இராமாயணம்:

**அ)** இராமாயணம் கூறுகின்ற இலங்கை வேந்தனான இராவணன் சிவபக்தன்.

**ஆ)** இவன் பதினாறாயிரம் ஆண்டுகள் தவஞ்செய்து சிவபெருமானிடம் பல வரங்களைப் பெற்றான். அவனது கையில் விளங்கும் வீரவாளும் சிவபிரானால் இராவணனின் சிவ பக்தியை மெச்சி வழங்கப்பட்டது.

**இ)** இராவணனிடம் காணப்பட்ட சிவபக்தி போன்றதாகவே அவனது தாயார் கைகேசியிடத்திலும் அவனுக்குப் பக்தியும் அன்பும் இருந்தது.

**ஈ)** இராவணனின் தாயார் சிவபக்தி மிக்கவர். நாள்தோறும் மாவினால் சிவலிங்கங்கள் செய்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தாயார் வழிபடுவதற்காகத் திருக்கைலாய மலையில் வீற்றிருக்கும் சிவபெருமானிடம் சிவலிங்கங்களைப் பெற்றுக் கொடுக்க விரும்பிய இராவணன் திருக்கைலாயம் சென்று தமது கோரிக்கையைச் சிவபிரானிடம் கூறி நீண்ட நாட்கள் காத்திருந்தும் சிவன் சிவலிங்கங்களைக் கொடுக்கவில்லை.


**இராவணன் சாமகானம் பாடி அருள் பெற்றமை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐ)** கோபங்கொண்ட இராவணன் கைலாய மலையைப் பெயர்க்க முயன்றவேளை சிவபெருமான் தனது வலதுகால் பெருவிரலால் மலையை அமிழ்த்தினார். மலையின் கீழ் நசியுண்ட இராவணன் தன் தவறை உணர்ந்து சிவபெருமானைமகிழ்விக்கும் பொருட்டுத் தனது பத்துத் தலைகளில் ஒன்றை ஒடித்து வீணையாக அமைத்துச் சாமகானம்பாடினான்.

**ஊ)** தன் தவறுணர்ந்த தன் பக்தனான இராவணனை விடுவித்து அவனது தாயார் வழிபடச் சிவலிங்கமும் கொடுத்தருளினார் சிவபெருமான். இப் புராணச் செய்தியையே திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருக் கோணேஸ்வரப் பதிகத்தில்


**எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்**
**ஏத்திட ஆத்தமாம் பேறு**
**கொடுத்தவர்க் கருளும்** எனப் பாடியுள்ளார்.

( எடுத்தவன் - திருக்கைலாய மலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற இராவணன்;தருக்கை - செருக்கை; விரலால் இழித்தவர் - கால்விரலால் அழுத்தியவர்; ஏத்திட - தவறுணர்ந்து வணங்கிட; ஆத்தமாம் பேறு - உய்யும் வழியான நற்கதியினை; கொடுத்தவர் - கொடுத்தருளிய சிவபெருமான்)



**திருக்கோணேஸ்வரம்**

**எ)** இன்றும் திருக்கோணேஸ்வரத்தில் காணப்படும் கடலோடு கூடிய இராவணன் வெட்டுப்பற்றியும் கதையொன்றுள்ளது. திருக்கோணேஸ்வரப் பெருமானை அனுதினமும் வழிபட்டு வந்த இராவணனின் தாயார், ஒரு சமயம் நோயுற்றதனால் அங்கு செல்ல முடியாமல் மனம் வருந்தியதைக் கண்ட இராவணன், கோணேசர் ஆலயத்தினைத் தாயின் இருப்பிடத்திற்கு கொண்டு சேர்க்கும் நோக்குடன் வாளினால் ஓங்கி மலையினை வெட்டினான் என்றும், வெட்டுண்ட பகுதியே இராவணன் வெட்டு எனப் பெயர் பெற்றதென்றும் கூறப்படுகிறது.



**இராவணன் வெட்டு**

**ஏ)** திருகோணமலையிலுள்ள கன்னியாய் என்னும் இடத்திலுள்ள ஏழு வெந்நீர்க் கிணறுகளும் இராவணனால் அமைக்கப்பட்டவை. திருக்கோணேசர் ஆலயத்தைப் பெயர்க்கும் முயற்சியில் அவன் ஈடுபட்டிருக்கையில் இராவணனின் தாயார் இறந்து விட அவரின் அந்தியேட்டிக் கிரியை களை நிறைவு செய்வதற்காக இக் கிணறுகள் அவனால் அமைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ) இராவணனின் சிவபக்தியை வியந்து திருஞான சம்பந்தப் பெருமான் **இராவணன் மேலது நீறு** எனப்பாடியுள்ளார்.



**கன்னியா வெந்நீரூற்று**

ஒ) இராவணன், இராவணனின் தாயார் கைகேசி ஆகியோர் மாத்திரமன்றி இராவணன் மனைவி மண்டோதரியும் சிறந்த சிவ பக்தையாவாள். மண்டோதரியின் தந்தையாகிய மயன் என்பவனால் திருக்கேதீச்சர ஆலயம் பரிபாலிக்கப்பட்டதாகவும், திருக்கோணேஸ்வரப் பெருமானை அவள் வழிபட்டதாகவும், அவளது வேண்டுகோளை ஏற்று சிவபெருமான் சிறுகுழந்தையாக அவளது மடியில் தவழ்ந்ததாகவும், அதனை இராவணன் தூக்கி உச்சி மோந்ததாகவும், அதனால் பெருமகிழ்ச்சி கொண்டதாகவும் **உத்தர கோச மங்கை தல புராணம்** குறிப்பிடுகின்றது.

ஓ) மண்டோதரியின் சிவ பக்தியை வியந்த மாணிக்க வாசக சுவாமிகள் தமது திருவாசகத்தின் **குயிற்பத்து** இரண்டாம் பாடலில் மண்டோதரிக்குச் சிவ பெருமான் அருள்புரிந்த விதத்தினை எடுத்துக் கூறியுள்ளார். அத்திருவாசகப் பனுவல் வருமாறு;

**ஏர்தரும் ஏழுல கேத்த**
**எவ்வுரு வுந்தன் னுருவாய்**
**ஆர்கலி சூழ்தென் னிலங்கை**
**அழகமர் வண்டோ தரிக்குப்**
**பேரரு ளின்ப மளித்த**
**பெருந்துறை மேய பிரானைச்**
**சீரிய வாயாற் குயிலே**
**தென்பாண்டி நாடனைக் கூவாய்.**

**பொருள்:**

அழகுடன் விளங்கும் ஏழு உலகங்களும் வணங்குகின்ற, எல்லாப் பொருட்களிலும் நீக்கமற நிறைந்து காணுகின்ற, கடல் சூழ்ந்த தென்னிலங்கையின் அழகு பெற்றுத் திகழ்ந்த மண்டோதரிக்குத் தமது பேரருளினைக் கொடுத்தருளிய, திருப் பெருந்துறையில் வீற்றிருக்கும் பெருமைக்குரிய சிவபெருமானை, தென்பாண்டித் திருநாட்டானை உனது சிறந்த நல்வாயினாற் குயிலே கூவி அழைப்பாயாக.

ஔ) சிவபக்தனான இராவணனைப் போரில் அழித்தமையால் இராமனைப் பிரம்மஹத்தி தோசம் பீடித்தது. அந்தத் தோசம் நீங்குவதன் பொருட்டு இராமன் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் முதலிய சிவத் தலங்களை வழிபட்டதாகவும், அப்போது பிரம்மஹத்தி தோசம் முழுமையாக நீங்கியதாகவும், முன்னேஸ்வரத் தலத்தின் மகிமையை அறிந்த இராமன் அங்கு சென்று சிவலிங்கத்தினைப் பிரதிஷ்டை செய்து பூசை செய்து வழிபட்டதாகவும் அறிய முடிகின்றது.

க) இராமாயண இதிகாசத்தில் கூறப்பட்ட செய்திகளுடன் தொடர்புடையனவாக இலங்கையின் மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயம், யாழ்ப்பாணம் வில்லூன்றிப் பிள்ளையார் ஆலயம், மாதகல் திருவடிநிலை சம்புநாத ஈஸ்வரம், ஹக்கல சீதையம்மன் ஆலயம், இறம்பொட ஆஞ்சநேயர் ஆலயம் ஆகியன விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயம்



மாதகல் திருவடிநிலை சம்புநாத ஈஸ்வர ஆலயம்



ஹக்கல சீதையம்மன் ஆலயம்



இறம்பொடை ஆஞ்சநேயர் ஆலயம்



யாழ்ப்பாணம் வில்லூன்றிப் பிள்ளையார்ஆலயம்



யாழ்ப்பாணம் வில்லூன்றித் தீர்த்தம்

## 8. மகாபாரதம்:

**அ)** இராமாயணத்தைப் போன்று நேரடியான தொடர்புகள் இல்லாவிடினும் மகாபாரதத்தில் வரும் செய்திகளினூடாகப் பண்டைய இலங்கையின் சைவ சமய வளர்ச்சி மரபுகளை அறிய முடிகின்றது.

**ஆ)** பஞ்ச பாண்டவருள் மூன்றாவதாக விளங்குபவனும், சிறந்த வில் வீரனும் ஆகிய அருச்சுனன், பாசுபத அஸ்திரத்தைப் பெறுவதற்காகப் பல தீர்த்தங்களுக்கும் யாத்திரை சென்று தீர்த்தமாடினான் என்றும், அவ்வாறு செல்கையில் இலங்கையின் வடபகுதியிலுள்ள பாலாவித் தீர்த்தத்திலும் நிராடிச் சிவபிரானை வழிபட்டதாகவும், இங்குள்ள அல்லிராணி என்னும் அரசியை மணம் முடித்ததாகவும் பாரத இதிகாசம் கூறியுள்ளது.

**இ)** மகாபாரதம் குறிப்பிடும் திரௌபதைக்கு ஆலயம் அமைத்து வழிபடும் நாட்டுப்புறப் பண்பாடு இலங்கையில் வளர்ச்சி பெற்றுள்ளது. உடப்பு திரௌபதை அம்மன் ஆலயம், பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயம் என்பன புகழ் பெற்றவையாகும்.

**ஈ)** இதிகாசம் என்பது "இது இப்படி முன்னர் நிகழ்ந்தது" என்னும் பொருளைத் தருவதாகும். இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம் ஆகிய மூன்று நூல்களும் இதிகாசங்களாகும். இவற்றுள் தத்துவக் கருத்துக்கள் மிகுதியாகக் காணப்பட்ட சிவரகசியம் மக்களின் செல்வாக்கைப் பெறத் தவறிவிட்டது. ஏனைய இராமாயணமும், மகாபாரதமும் கதைவடிவில் அமைந்து மக்களின் வாழ்வியலோடு பொருந்திச் சுவைமிகுந்து காணப்பட்டதால் இந்து சமயத்தவர் மத்தியில் - சைவ சமயத்தவர் மத்தியில் என்றைக்கும் பண்பாட்டுச் செல்வங்களாக மிளிர்கின்றன.

**உ)** எனவே இவ்விரண்டு இதிகாசங்கள் கூறுகின்ற செய்திகளினூடாக இலங்கையின் சைவ சமயத் தொன்மை பற்றி அறிய முடிகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புகள்

- இதிகாசங்கள்
  - இராமாயணம்
    - இராவணன் பற்றிய செய்திகள்
  - மகாபாரதம்
    - அருச்சுனன் பற்றிய செய்திகள்
  - சிவரகசியம்



திருக்கேதீஸ்வரம் ஆலயம்



முன்னேஸ்வரம் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. இலங்கையிலுள்ள சைவ ஆலயங்கள்

## 01. விநாயகர் ஆலயம் –

**களுதாவளைப் பிள்ளையார் ஆலயம்**

(i) தென்கைலாயம் எனச் சிறப்பிக்கப்படுவது இலங்கைத்தீவு.

(ii) இலங்கையிலுள்ள களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் சுயம்பு லிங்கமாகத் தோன்றியதும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியன ஒருங்கே அமையப் பெற்ற சிறப்புடையதும் ஆகும்.

**அ. அமைவிடம்.**

(i) களுதாவளைப் பிள்ளையார் ஆலயமானது கிழக்கிலங்கையின் மட்டக்களப்புக்குத் தெற்கே கல்முனை பிரதான வீதியில் சுமார் பதினைந்து மைல் தொலை தூரத்தில் அமைந்துள்ளது.



**களுதாவளைப் பிள்ளையார் ஆலயம்**

(ii) வெற்றிலையின் விளை நிலமான களுதாவளையில், மேற்கே மட்டக்களப்பு வாவியையும், கிழக்கே தாமரைத் தடாகத்தையும், தீர்த்தக் கேணியையும், வடக்கிலும் தெற்கிலும் வயல்வெளிகளையும் கொண்டதான இயற்கை அழகுமிக்க சூழலில், வில்வம், மா, தெங்கு, மருதம், அரசு போன்ற நெடு மரங்கள் நிறைந்து விளங்கும் மரத் தோப்புகளின் மத்தியில் விநாயகப் பெருமானின் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

**ஆ. ஆலய வரலாறு**

(i) இவ்வாலயம் தொன்மையான வரலாற்றுச் சிறப்புடையது. இதன் தோற்றம் பற்றிய தகவல்களைக் கல் வெட்டுக் கூறியுள்ளது

(ii) இவ்வாலம் அமைந்துள்ள இடமானது முன்னர் அடர்ந்த காட்டுப் பகுதியாக இருந்தது. வேடுவர் தலைவனான களுவன் என்பவன் வேட்டையாடுவதற்காக அங்குவந்ததுடன், வெற்றிகள் கிடைக்கவும், வந்தகாரியம் நிறைவேறவும் வெற்றிலைச் சடங்கினைச் செய்யும் பொருட்டு (வெற்றிலைகளைக் கொண்டு செய்யப் படும் சடங்கு) இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்துச் சடங்கினைச் செய்து அருள் பெற்றான். களுவன் வழிபட்ட இடமாகையால் களுதேவாலம் என அழைக்கப்பட்டது. பின்னர் மருவி களுதாவளை ஆயிற்று. இது களுதேவாலயக் கல்வெட்டு கூறும் செய்தியாகும்.

(iii) இன்னொரு செய்தியையும் கல்வெட்டுக் கூறுகிறது. அக்காலத்தில் கதிர்காம முருகனைத் தரிசிப்பதற்குக் கால்நடையாகச் செல்லும் யாத்திரியர்கள் தங்கிச் செல்லும் இடமாக இவ்விடம் விளங்கியது. இலிங்க வழிபாட்டினர் தம்முடன் கொண்டுவந்த சிவலிங்கத்தினை நிலத்திற்குமேல் உயர்த்தி வைக்க முயன்றபோது, அந்த இலிங்கம் வளர்ந்து நிலத்தின் அடிவரை சென்று நிலைபெற்றது. அதனை எடுக்க முடியாமல் அடியவர்கள் திகைத்து நின்றபோது, இதனைக் கேள்வியுற்ற ஊர்மக்கள் திரண்டுவந்து கொத்துப் பந்தலிட்டு சிவலிங்கத்தினை வழிபாடு செய்தனர் என அறிய முடிகிறது.

(iv) இவ்வற்புத இலிங்கத்தின் மகிமையைக் கேள்வியுற்ற மணியகாரன் பூபால வன்னிமை என்பவர், அச்சிவலிங்கத்தில் பிள்ளையாரின் அம்சம் இருப்பதைக் கண்ணுற்று, அதனைப் பிள்ளையாராக வழிபடுமாறு மக்களைக் கேட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். அதற்கமைய மக்களும் அத்திருவுருவத்தைச் சுயம்புலிங்கப் பிள்ளையாராக வழிபட்டு வருகின்றனர்.

## இ. ஆலய அமைப்பும் கலைமரபும்

(i) களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம் ஒரு மடாலயமாகும்.

(ii) இத் திருத்தலம் கருவறை, மகா மண்டபம், அலங்காரம், பஞ்சரம், அதிஸ்டானம், விதானம், வாகனசாலை, யாகசாலை, சிற்பங்கள் ஆகிய பல கலையம்சங்களையும் கட்டிட அமைப்புக்களையும் கொண்டுள்ளது.

(iii) கருவறையில் உள்ள பீடத்தில் தாமிரத்தினாலான விநாயகர் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

(iv) பரிவாரத் தெய்வங்களுக்காக வடமேற்கில் முருகனுக்கும், தென்மேற்கில் நாகதம்பிரானுக்கும் ஆலயங்கள் அமைந்துள்ளதோடு, வைரவர் சந்நிதி, நவக்கிரக சந்நிதி ஆகியனவும் அமைக்கப் பெற்றுள்ளன.

(v) கருவறையை அடுத்துள்ள மண்டபத்தில் முன்னர் பலிபீட நந்தி அமைந்திருந்தது. தற்போது அதனை மாற்றி மூஷிகம்(பெருச்சாளி) தாபிக்கப் பட்டுள்ளது.

(vi) ஆலய முன்புறத்தில் அழகிய தீர்த்தக்குளமும், சுவாமி இளைப்பாறும் மண்டபமும், கலியாண மண்டபமும் அமைந்துள்ளன.

(vii) ஆலய மண்டப வாயிலின் இருபுறங்களிலும் துவாரபாலகர் சிற்பங்கள் விளங்குகின்றன. ஆலயத் திருக்கதவுகளுக்கு மேற்புறச் சுவரில் புராதனக் கதைகளை விளக்கும் சிற்பங்களும், சிவன், பார்வதி, விநாயகர், முருகன், நாரதர் முதலியோரின் சிற்பங்களும் காணப்படுகின்றன. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகியோரது திருவுருவங்கள் இருபக்கச் சுவர்களிலும், சிற்பங்களாக அமைக்கப் பட்டுள்ளன.

(viii) ஆலய மண்டபங்களின் சுற்றுப் பிரகாரச் சுவர்களில் புராணக் கதைகள் கூறும் சிற்பங்களும், ஆலய மண்டப மேற்றளச் சுவர்களில் சிவனது திருக்கைலாயக் காட்சி, மாம்பழக் கதை, சுந்தரர், சேரமான் பெருமாள், ஔவையார் ஆகியோரது திருவுருவங்கள், சிவன் பிட்டுக்கு மண் சுமந்த வரலாறு ஆகியனவும் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுக் கலை அழகுடன் காட்சி தருகின்றன.

(ix) ஆலயத்தின் ஆகம சாலையின் இருபக்கங்களிலும் எழிலுடைய பல சிற்பங்கள் உள்ளன. நைமிசாரணி மடத்தில் சூத முனிவர் புராணங்களை உபதேசித்தல், வியாச முனிவர் பாரதக் கதையினைக் கூற விநாயகப் பெருமான் தனது ஒற்றைக் கொம்பினை ஒடித்து எழுதுதல், ஆலயத்துச் சுயம்புலிங்கத்தின் வெளிப்பாடு, இலிங்கதாரிகள் சிவலிங்கத்தை வழிபடும் காட்சி ஆகியன இவற்றுள் அடங்குபவையாகும்.

(x) சிவபெருமானது அழகிய நடராச வடிவமும் இங்கு சிற்பமாக இடம்பெற்றுள்ளது. ஆலயச் சுற்றுச் சுவர்களிலும் வாயிற்புறுத்திலும் திருஞான சம்பந்தப் பெருமான் ஞானப்பால் உண்ட வரலாறு, சுந்தரர் முதலை வாயினின்றும் பிள்ளையை மீட்ட வரலாறு என்பன சிற்பங்களாக உள்ளன. ஆலய மண்டபத்தின் மேற்றளத்தில் விநாயகர் ஞானப்பழம் பெற்ற காட்சி அழகுற அமைந்துள்ளது.

(xi) ஆலயத் தூண்களில் தூண் அலங்காரங்கள், போதிகைச் சிற்பங்கள், யாளி வடிவங்கள், மலர் மொட்டுக்கள் ஆகியன செதுக்கப்பட்டுள்ளன.

(xii) ஆலயத்தில் சிவபார்வதி, விநாயகர், வள்ளி தெய்வானை சமேத முருகன் ஆகியோருக்கான எழுந்தருளி விக்கிரகங்களும் சிறப்புற உருவாக்கப் பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ. சோடச கணபதி வடிவங்களும் சிற்பங்களும்

(i) சோடச கணபதி வடிவங்களும் அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருவுருவங்களும் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளமை இவ்வாலயத்தின் தனிச் சிறப்பாகும்.



சோடச கணபதி

(ii) ஆகமங்கள் 32 விநாயக வடிவங்களைக் குறிப்பிடினும் அவற்றினுள் 16 வடிவங்கள் முக்கியமானவை. அந்தப் பதினாறு சோடச கணபதி வடிவங்களும் இவ்வாலயத்தில் பிம்பஸ்தானம் செய்யப்பட்டுள்ளன. அவையாவன பக்தி கணபதி, விக்ன கணபதி, ஊர்த்துவ கணபதி, தருண கணபதி, மகா கணபதி, பால கணபதி, க்ஷிப்ர கணபதி, ஏரம்பகணபதி, நிருத்த கணபதி, துவஜ கணபதி, உச்சிஷ்ட கணபதி, பிங்கள கணபதி, இலக்குமி கணபதி, சக்தி கணபதி. வீர கணபதி, விஜய கணபதி என்பவையாகும்.

(iii) சோடச கணபதி வடிவங்கள் யாவும் ஆகமப் பிரமாணங்களுக்கு அமைவாகவும். கலைவனப்புடனும் உருவாக்கப்பட்டுள்ளன. இவை திருவுருவ வழிபாட்டினுக்கு உகந்தவையாக விளங்குகின்றன. எந்த வடிவ கணபதியை வேண்டுகின்றோமோ அந்தக் கணபதிக்குரிய திருநாமங்களை உச்சரித்து வழிபட்டுப் பயன்பெறலாமென ஆகமங்கள் குறிப்பிடுகின்றன.

(iv) **ஏரம்ப கணபதி வடிவம்**

இது பஞ்சமுக விநாயகர் வடிவமாகும். ஐந்து திருமுகங்களையுடைய விநாயகப் பெருமான் தமது திருக்கரங்களில் ஒன்றை அபய கரமாகவும், மற்றொன்றை வரத கரமாகவும், ஏனைய கரங்களில் பாசம்(ஆயுதம்), பரசு (கலப்பை), தந்தம், அட்சமாலை ஆகியவற்றை ஏந்தியவராகவும், பசுமை நிறைந்த கருமை நிறமுடைய சிங்க வாகனத்தில் அமர்ந்த திருக்கோல முடையவராகவும் காட்சிதருவதைக் காணலாம். இதுபோன்றதாகவே ஒவ்வொரு சோடச கணபதி வடிவமும் மாறுபட்ட தோற்றங்களுடன் காட்சி தருகின்றதைக் காணலாம்.

(v) இலங்கையின் எத்தலத்திலும் காணக் கிடையாத கட்டட சிற்ப அலங்காரங்களின் சிறப்பு களுதாவளைச் சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் காணப்படுகின்றது.

## உ. மூர்த்திச் சிறப்பு

(i) இத்திருத்தலத்தின் மூல மூர்த்தியான சுயம்புலிங்கப் பிள்ளையார் அருளாட்சி புரிபவராகவும், பேசாத பிள்ளைகள் பேசவும், நடவாத பிள்ளைகள் நடக்கவும், கேளாத செவிகளைக் கேட்கவும் செய்த கருணை மிக்கவராகவும் விளங்குகின்றார்.

(ii) குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களின் குறைகளை அகற்றும் வல்லமை உடைய வராகவும் கருதப்படுகிறார்

(iii) ஆலயத் திருப்பணிக்காக மரங்கள் தேவைப்பட்டபோது அவை கடலிலே கிடைக்கும் எனக் கனவிலே கூறியபடி கடலிலிருந்து மரங்கள் கிடைத்தமை விநாயகப் பெருமானின் திருவருளே ஆகும்.

(iv) 1978 ஆம் ஆண்டு கிழக்கிலங்கையில் வீசிய கொடிய சூறாவளியின் போது இத்திருத்தலம் எவ்வித சேதமுமின்றிக் கம்பீரமாகக் காட்சியளித்தமை பிள்ளையாரின் கருணையே ஆகும்.

(v) இன, மத, பேதமற்று அனைத்து மக்களும் வழிபட்டு அருள் பெற்றுய்யும் ஆலயமாக இது விளங்குகிறது.

(vi) களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையாரின் அம்சமாக மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள கல்லடிப் பிள்ளையார் ஆலயம் விளங்குகிறது. அவ்வழியால் செல்வோர் நம்பிக்கையுடன் அங்கு வழிபாடு செய்வது நாள்தோறும் நடைபெறுகிறது.

**ஊ. தலச்சிறப்பு**

(i) நாள் தோறும் நூற்றுக்கணக்கான அடியார்கள் பொங்கி செய்வதால் பொலிவு பெறும் ஆலயம் இதுவாகும்.

(ii) அடியார்கள் தங்களின் நேர்த்திக் கடனாக பெறுமதி மிக்க ஆபரணங்களையும் குத்து விளக்குகள் போன்ற கோயிற் பொருட்களையும் வழங்குவார்கள். 108 சங்குகளுடன் கூடிய சங்காபிஷேகமும், உருத்திராபிஷேகம், ஸ்நபனாபி ஷேகம் ஆகியவற்றையும் நிறைவேற்றுவார்கள்.

(iii) குழந்தைகளுக்குச் சோறூட்டல், குழந்தைகளைப் பிள்ளையாருக்கு விற்று விலைகொடுத்து வாங்கல் ஆகிய சடங்குகளுடனான நேர்த்திகளும் இங்கு நிறைவேற்றப் படுகின்றன. இவை நாள்தோறும் மத்தியானப் பூசையின் போது நடைபெறுகின்றன.

(iv) இவ்வாலயத்தின் தல விருட்சமாக வில்வமரம் காணப்படுகிறது. ஓங்கியுயர்ந்து ஆலய வடதிசையில் இம்மரம் நிற்கிறது.

(v) வெள்ளிக்கிழமைகளில் அதிகாலை, மதியம் மாலை என மூன்று வேளைப் பூசைகள் நடைபெறுகின்றன.

(vi) இவ்வாலயத்தில் விநாயக சதுர்த்தி, விநாயக சஷ்டி, சிவராத்திரி, கேதார கௌரி விரதங்கள் சிறப்பாக அனுட்டிக்கப் படுகின்றன. இவற்றுடன் தைப்பிறப்பு, சித்திரை வருடப்பிறப்பு திருக்கார்த்திகை, திருவாதிரை முதலான காலங்களிலும் சிறப்பான பூசைகளும் வழிபாடுகளும் இடம்பெறுகின்றன.

(vii) விநாயக சஷ்டி முடிவில் காப்பறுப்பு(காப்புக் கயிற்றினை அகற்றுதல்), கட்டிய காப்பை நீக்கித் தீர்த்தமாடல், தீர்த்தோற்சவம் ஆகியன இடம்பெறும்.

(viii)பெருங்கதை விரத காலத்தின் போது( விநாயக சஷ்டி) பிள்ளையார் கதை படிக்கப்படும். திருவாதிரை நாளில் சமுத்திரத் தீர்த்தோற்சவம் சிறப்பாக இடம்பெறும். திருக்கார்த் திகையின் போதும் விஷேட பூசைகள் ஆலயத்தில் நடைபெறும்.

(ix) சனீஸ்வரர் ஹோமம்(புரட்டாதிச் சனி), பங்குனி உத்தரம், வைகாசி அத்தம் (கும்பாபிஷேக நினைவு நாள்) என்பனவும் இவ்வாலயத்தின் சிறப்புப் பூசைக்குரிய காலங்களாகும்.

(x) அறுபத்து மூன்று நாயன்மார்களின் குருபூசைகளும் உரிய காலங்களில் இவ்வாலயத்தில் சிறப்பாக நடைபெறுகின்றன.

**எ. தீர்த்தச் சிறப்பும் திருவிழாக்களும்**

(i) இவ்வாலய வருடாந்த மகோற்சவம் ஆனி உத்தரத்தில் தீர்த்தம் இடம்பெறும் வகையில் பத்து நாட்கள் நடைபெறும். திருவிழாக் காலங்களில் சுவாமி வீதி வலம் வரும் காட்சி பக்திப் பரவசமானது.

(ii) இவ்வாலய நிர்வாகமானது ஆறு குடும்பங்களின் தலைவர்களான வண்ணக்கர் களுக்கு உரியது. இவர்கள் திருவிழாக்களை முன்னின்று நடத்துவார்கள்.

(iii) திருவிழாக் காலங்களில் சமயச் சொற்பொழிவுகள், கூட்டுப் பிரார்த்தனைகள், பாற்குடப் பவனி, முத்துச் சப்பரப் பவனி, மேளக் கச்சேரிகள், கரகம், பாற்காவடி, பறவைக்காவடி, தூக்குக் காவடி ஆட்டங்கள், வசந்தன் கூத்து, கும்மி, கோலாட்டம், கற்பூரச் சட்டி ஏந்துதல், அங்கப்பிரதட்சணம் செய்தல் முதலான சிறப்பு நிகழ்ச்சிகளும். நேர்த்திக்கடன் நிறைவேற்றுதல்களும் இவ்வாலயத்தில் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) திருவிழாக்களில் ஒன்பதாம் நாள் இடம்பெறும் மாம்பழத் திருவிழா ஆலய முன்றலில் நடைபெறும். உலகத்திற்கு கர்த்தாவானவர்கள் அன்னையும் பிதாவும் என்னும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டதாக நாடகம் போன்று நடித்துக் காண்பிப்பது மாம்பழத் திருவிழாவின் தனிச்சிறப்பாகும். நாரத முனிவரால் சிவபெருமானிடம் கொடுக்கப்பட்ட அரிய மாங்கனியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் முதலில் உலகினைச் சுற்றி வருபவருக்கே கிடைக்குமென பிள்ளையார், முருகன் ஆகிய இரு பிள்ளைகளிடம் சிவ பெருமான் கூறினார். மயில் மீது ஏறி உலகைச் சுற்றிவரப் புறப்பட்ட முருகப் பெருமான் திரும்பி வருவதற்குள், தாய் தந்தையரை வலம் வந்து வணங்கிய பிள்ளையாருக்கு மாங்கனி கிடைத்து விடுகிறது. அம்மையப்பனே இவ்வுலகம் என்பது உணர்த்தப்படுகிறது. கனி கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்த முருகன் ஆண்டி வேடமுற்றுப் பழனி மலையில் சென்றமர்ந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. இதனையே மாம்பழத் திருவிழா மையமாகக் கொண்டு ஆலயங்களில் நடத்தப்படுகிறது.

## ०२. சிவாலயங்கள்

### கொக்கடிச்சோலை தான்தோன்றீச்சரம்

தானாகத் தோன்றிய(சுயம்புவாக) சிவலிங்கத்தை மூல மூர்த்தியாகக் கொண்டு அமைக்கப்பட்ட சிவத் தலங்களைத் தான்தோன்றியீச்சரங்கள் என்பர். கொக்கட்டிச் சோலை, ஒட்டு சுட்டான் ஆகிய இடங்களிலுள்ள இத்தகைய சிவத்தலங்கள் ஈழநாட்டில் புகழ் பெற்றவையாக விளங்குகின்றன. அவற்றுள் ஒன்றான கொக்கட்டிச் சோலை தான்தோன்றியீச்சரம் பற்றி நோக்குவோம்.

#### அ. அமைவிடம்

i) இலங்கையின் கிழக்கு மாகாணத்து மட்டக் களப்பு மாவட்டத்தில், மட்டக்களப்பு நகரத்தி லிருந்து தெற்கே மண்முனை வழியாகப் பதின்மூன்று கிலோமீற்றர் தொலைவில் இத் தலம் அமைந்துள்ளது.


கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம்

ii) கொக்கட்டி மரங்கள் சூழ்ந்து சோலையாக விளங்கிய காரணத்தால் கொக்கட்டிச் சோலை எனப் பெயர் பெற்ற கிராமத்தில், தானாகத் தோன்றிய ஈஸ்வரர் ஆலயமாக இது காணப்படுகிறது.

iii) இத்தலம் இலங்கையின் புராதன சிவாலயங்களில் ஒன்றாகவும், தேசத்துக் கோயில்கள்(மட்டக்களப்புக் கோயில்கள்) ஏழினுள் ஒன்றாகவும் விளங்குகின்றது.

iv) இப்பிரதேச மக்கள் அனைவருக்கும் பொதுக் கோயிலாக விளங்கும் இதற்குப் பண்டைய அரசர்களின் மானியமும், சீர்வரிசையும் கிடைக்கப் பெற்றதாகும்.

#### ஆ. ஆலய வரலாறு

i) **மட்டக்களப்பு மான்மியம்** என்னும் நூலின் திருப்படைப் பத்ததி, திருவேட்டைக் காவியம், ஆகிய பகுதிகளில் பழமையான இவ்வாலயம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

ii) ஆலயத்தின் தோற்றம் பற்றிய ஐதீகக் கதைகள் இரண்டினை மட்டக்களப்பு மான்மியத்தின் மூலம் அறிய முடிகின்றது.

iii) மட்டக்களப்பின் மண்முனைப் பகுதியை உலகநாச்சி என்னும் அரசி ஆண்டுவந்த போது, தேன் தேடிச் சென்ற வேடர்கள் இப்பகுதியிலுள்ள கொக்கட்டி மரமொன்றில் தேன் இருக்கக் கண்டு வெட்டியபோது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மரத்திலிருந்து உதிரம் பெருகக் கண்டு அதிசயித்தனர். வேடுவர் தலைவனான திகடன் உலக நாச்சியிடம் இதனைத் தெரிவிக்க, உலகநாச்சி தன் பரிவாரங்களுடன் சென்று பார்த்த போது அவ்விடத்தில் சிவலிங்கம் ஒன்று புதையுண்டிருக்கக்கண்டு அங்கே ஆலயம் அமைத்தாள். அவளது ஆலயத் திருப்பணிக்கு மட்டக்களப்பை ஆண்ட தரும சிங்கன் என்பவன் உதவிசெய்தான். இவ்வாறு மட்டக்களப்பு மான்மியம் கூறியுள்ளது.



ஆலயத்தில் காணப்படும் வரலாற்று ஓவியங்கள்

iv) அடுத்த ஐதீகக் கதையானது பண்டைக்காலத்தில் இந்தியாவிலிருந்து கதிர்காம முருகனைத் தரிசிக்க வந்த முத்துலிங்கர், கொக்கட்டியார் என்னும் இரு சித்தர்கள் மட்டக்களப்பினூடாகச் செல்கையில் இவ்வாலயமுள்ள இடத்தில் கொக்கட்டியார் சமாதியடைந்தார். அவரது சமாதியுள்ள இடத்தில் சிவலிங்கம் ஒன்று தோன்றியிருக்கிறது. அதனைக் கொக்கட்டி மரமொன்று மறைத்து நின்றது. அதனை வேடர்கள் வெட்டும்போது உதிரம் வடிந்த செய்தியைக் கனவின் மூலம் அறிந்து கொண்ட வேறொரு கதிர்காம யாத்திரிகரான செட்டியார் அவ்விடஞ்சென்று ஆலயம் அமைத்ததாகவும், பல திருப்பணிகள் செய்ததாகவும்கூறுகிறது.

v) இலங்கையின் சோழராட்சிக் காலத்தில் சோழ மன்னர்கள், பிரதானிகள், பலரின் ஆதரவை இவ்வாலயம் பெற்றது. திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்த குளக்கோட்டு மன்னன், இவ்வால யத்தையும் புனரமைத்ததாக களுதேவாலயக் கல்வெட்டுக் கூறுகிறது. அக் கல்வெட்டுச் செய்தி பின்வருமாறு;

**திருமனு நீதிகண்ட குளக்கோட்டு ராமன்**
**நிதிவளர சந்நிதி தான்தோன்றுமீசன் ஆலயம்**
**பதிவளர நடத்திவரும் நாளையலே விற்பரமாம்**
**குருலிங்க சங்கமம் குருவொடு பண்டாரம்**
**இருவருமாய் கதிரை நகர் நடந்தவாறே**

vi) பொலநறுவையை ஆட்சிசெய்த கலிங்க மாகன், மாகோன் எனும் பெயரில் இத்திருத்தலப்பணிகளில் பங்கெடுத்தானெனவும் அவனது ஆட்சிக் காலத்தில் வீர சைவ வழிபாட்டுமுறை இங்கு அறிமுகமானது எனவும் **திருப்படைப் பத்ததி** மூலம் அறிய முடிகிறது.

vii) சமயப் பொறையற்ற போர்த்துக்கேயர் எல்லா ஆலயங்களையும் அழித்தது போன்று வளர்ச்சி கண்டிருந்த இவ்வாலயத்தையும் அழிக்க முயன்றும் இறையருளால் அது நிறைவேறாமல் போயிற்று. போர்த்துக்கேயத் தளபதி அசலிடோ ஆலயத்தை அழிக்க வந்தபோது ஆலய நந்தியைப் பார்த்ததும், ஆலயப் பூசகரிடம் “இது புல் தின்னுமோ?” என ஏளனமாகக் கேட்டதும், நந்தியானது புல் தின்று சாணம் போட்டதுடன் போர்த்துக்கேயரைத் துரத்தவும் தொடங்கியது. தப்பியோடிய அந்நியர்கள் மீண்டும் அந்தப்பக்கம் திரும்பவில்லை. இறையருளால் ஆலயமும் அழிவிலிருந்து தப்பியது.

viii) மட்டக்களப்பு மான்மியத் தகவலின்படி அழிவிலிருந்து தப்பிய ஆலயத்திற்குக் கண்டி மன்னனான விமலதர்ம சூரியன், இராஜசிங்கன் ஆகியோர் தமது ஆதரவை வழங்கியதாகத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இ. ஆலய அமைப்பு

i) கிழக்குத் திசை நோக்கிய இவ்வாலயத்தின் மூலஸ்தானம்(கருவறை) பெரியது. கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்குரிய கட்டடக் கலை வடிவத்தைக் கொண்டுள்ளதாக அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ii) பழைமையான மூலஸ்தானம் 1978 ஆம் ஆண்டு மட்டக்களப்பைத் தாக்கிய சூறாவளியினால் பாரிய சேதத்துக்குள்ளானது. புதிய மூலஸ்தானம் அமைக்கப்பட்டு 1998 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

iii) தானாகத் தோன்றிய சிவலிங்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஆலயம் உருவானதால் சுயம்புலிங்கம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதன்மேல் பஞ்ச உலோகத்தினாலான சிவலிங்கம் தாபிக்கப்பட்டுள்ளது.

iv) மகா மண்டபத்தின் சுவாமி சந்நிதிக்கும் அம்மன் சந்நிதிக்குமிடையிலுள்ள கருங்கல்லினாலான நந்தியே போர்த்துக்கேயரை விரட்டியதாக நம்பப்படுகிறது.

v) பிள்ளையார், அருணாச்சலேஸ்வரர், விஷ்ணு, நாகதம்பிரான், முருகன், சண்டேஸ்வரர், நவக்கிரகங்கள், வைரவர் ஆகிய கடவுளர்க்கும் இவ்வாலயத்தில் தனித்தனியான சந்நிதிகள் காணப்படுகின்றன.

vi) இலங்கையில் மிக உயரமானதும் 60 அடிகள் உயரமுடையதுமான கொடித்தம்பம் இவ்வாலயத்துக்குரியதாகும்.

vii) இரு வீதிகளையுடைய இவ்வாலய முகப்பில் இராஜகோபுரமும் அதனிரு பக்கங்களிலும் காண்டாமணிகளும் காணப்படுகின்றன.

### ஈ. ஆலய பரிபாலனம்

i) இந்த ஆலயத்தின் பரிபாலகர்களை வண்ணக்கர் என அழைப்பது மரபு.

ii) கலிங்காகுடி, உலகிப்போடிக்குடி, படையாண்டகுடி ஆகிய மூன்று குடிகளில் இருந்து தெரிவு செய்யப்படும் வண்ணக்கர்கள் மூவர் பரிபாலனத்துக்குப் பொறுப்பாயிருப்பர். பொறுப்புக்கள் தாய்வழி உரிமை மூலம் மாற்றஞ் செய்யப்படும்.

### உ. பூசைகளும் விழாக்களும்

i) மூன்று வேளைப் பூசைகள் இக்கோயிலில் நடைபெறும். அவற்றைச் சங்கமர் எனப்படும் சைவக்குருமார் செய்வார்கள்.

ii) இந்தியாவின் கலிங்க நாட்டிலுள்ள நாகார்ச்சனபுரம் என்னும் இடத்திலிருந்து குளக்கோட்ட மன்னனால் அழைத்துவரப்பட்டுக் குடியேற்றப்பட்டவர்களே சிவனடியார்களாகிய இப் பூசகர்கள் ஆவர்.

iii) இங்கு இப் பூசகர்கள் மேற்கொள்ளும் பூசை முறையானது வீர சைவ முறையைச் சார்ந்ததும் வீரராகமத்தை அடிப்படையாகக் கொண்டதுமாகும். பிற சைவக் கோயில்களில் நடைபெறும் பூசை முறைகளிலிருந்து சற்று வேறுபட்டது.

iv) இக்கோயில் மகோற்சவமானது ஆவணி மாதத்து வளர்பிறையின் முதலாம் நாள் கொடியேற்றத்துடன் தொடங்கும். பௌர்ணமியை அடுத்துவரும் ஞாயிறு, திங்கட்கிழமைகளில் முறையே தேர்த் திருவிழாவும், தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். மகோற்சவம் பதினைந்து நாட்கள் நடைபெறுவதாயினும் சில சந்தர்ப்பங்களில் நீடிப்பதும் உண்டு.



தேர் வீதிவலம் வருதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v) இன்றைய மட்டக்களப்புப் பிரதேசத்தில் தேர்த்திருவிழாவானது ஆலயங்கள் பலவற்றில் நடைபெறுகிறது. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வாலயத்தில் மட்டுமே தேரோட்டம் இடம்பெற்றது. இரண்டு தேர்கள் இங்கு வலம்வருவதைக் காணலாம். அவை காலத்தால் முந்தைய தேர்களாகும். மட்டக்களப்புப் பகுதியிலுள்ள தேர்களுக்கெல்லாம் முன்னோடி யானவை. மட்டக்களப்பை ஆண்ட தருமசிங்கன் சோழநாட்டுச் சிற்பிகளை வரவழைத்துத் தேர்களைச் செய்வித்ததாகவும் அவற்றில் ஒன்று தேரோட்டத்தின் போது சிதைந்து விட்டதாகவும் மட்டக்களப்பு மான்மியக் குறிப்புக் கூறுகிறது. இன்றுவரை இறையருள் மகத்துவத்தினால் அவை பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

vi) பெரிய தேர் சித்திரத்தேர் எனவும், சிறியதேர் பிள்ளையார் தேர் எனவும் அழைக்கப்படும். தேரோட்டத்தின் போது சித்திரத்தேரில் சோமாஸ்கந்தரும், பிள்ளையார் தேரில் பிள்ளையாரும், முருகனும் வலம்வருவர்.

vii) தேர்த்திருவிழாவன்று இரவில் திருச்சூகர வேட்டை(சூகரம் - பன்றி) இடம்பெறும். அதனையடுத்துக் குடுக்கை கூறுதல் நடைபெறும். திருவிழாவில் பங்குபற்றிய அனைவரையும் கௌரவிக்கும்வகையில் குடுக்கை கூறும் நிகழ்வு வாசிக்கப்படும்.

viii) தீர்த்தோற்சவம் ஆலய வீதியிலுள்ள புராதனக் கிணற்றில் இடம்பெறும்.

**ஊ. ஆலயம் பற்றிய நூல்கள்.**

i) இவ்வாலயம் பற்றிப் பல பிரபந்த நூல்கள் காலந்தோறும் எழுந்துள்ளன.

ii) சின்னப்புலவர், புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் ஆலயம் பற்றிப் பதிகங்கள் பாடியுள்ளனர்.மகிழை மகேசன், பண்டிதர் செ. சிவப்பிரகாசம் ஆகியோர் திருவூஞ்சற் பாடல்களைப் பாடியுள்ளார்.

# 03. அம்மன் ஆலயங்கள்

## நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்

**அ. அமைவிடம்**

(i) இலங்கைத் தீவின் வடபகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தென்மேற்குத் திசையிலுள்ள சப்த தீவுகளில் நயினாதீவும் ஒன்று. யாழ்ப்பாண நகரிலிருந்து 20 கிலோ மீற்றர் தூரத்தில் இது அமைந்துள்ளது. இத்தீவின் சுற்றளவு சுமார் ஏழு கிலோ மீற்றர் ஆகும்.

(ii) நாகதீவு, மணிபல்லவம், மணித்தீவு, பிராமணத்தீவு ,நாகதீவு முதலான பெயர்கள் நயினாதீவுக்குண்டு.

(iii) இத்தீவின் வடகிழக்குக் கடற்கரையில் நாகபூசணி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

**ஆ. ஆலயவரவாறு**

(i) இலங்கையின் பூர்வீகக் குடிகளான நாகர்களது காலந்தொட்டு வழிபடப்பட்ட தொன்மையான ஆலயம் இதுவாகும்.

(ii) இந்த ஆலயம்பற்றி கர்ணபரம்பரைக் கதையானது ஆலய வரலாற்றுடன் தொடர்புடையது. நயினா தீவுக்கு வடபுறத்திலும் மிகஅண்மையிலுள்ள அனலை தீவுடன் இணைந்துள்ள புளியந்தீவில் இருந்து நாகபாம்பொன்று தினமும் பூவெடுத்துக்கொண்டு சமுத்திரத்தினூடாக சென்று நயினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையை வழிபட்டதாகவும், ஒருமுறை அவ்வாறு கடலில் வரும்போது கருடன் வழிமறித்து அதனைக் கொல்ல முயன்றபோது, கடற்கலத்தில் அவ்வழியால் வந்த வணிகனொருவன் நாகத்தைக் கொல்லாது விடுமாறு கருடனை வேண்டவும் "உனது செல்வங்கள் அனைத்தையும் ஆலயம் அமைப்பதற்கு வழங்குவாயானால் நான் இந்த நாகத்தைக் கொல்லாது விடுவேன்" எனக் கருடன் கூறியதாகவும் வணிகனும் அதற்கு இசைந்தானென்றும், அன்றிரவு வணிகனின் வீட்டில் பாரிய ஒளி ஏற்பட்டதைப் பார்த்த வணிகன், அங்கே நாகரத்தினக் கற்கள் குவிந்து கிடக்கக் கண்டானென்றும் ,அவற்றை வைத்து நாக பூசணி அம்மன் ஆலயம் அமைக்கப்பட்டதாகவும், நயினாப்பட்டர் என்னும் பூசகரைப் பூசைகள் செய்வதற்காக நியமித்ததாகவும் கூறப்படுகிறது.



நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம்

(iii) நாகர்களாலும் நாகத்தினாலும் வழிபடப்பட்ட அன்னையை நாகேஸ்வரி, நாகபூசணி, நாகராஜேஸ்வரி, நாகம்மாள் எனப் பலபெயர்களாலும் அடியவர்கள் அழைக்கின்றனர்.

(iv) மணிமேகலைக் காப்பியத்தில் கூறப்படும் மணிபல்லவம் இத்தீவே என்றும் இங்கு உறையும் அன்னையைப் புவனேஸ்வரி, நாகபூசணி அம்மன் என்றும் வழிபடுகின்றனர்.

(v) பண்டைக் காலத்தில் முக்கியத்துவம் பெற்ற இடமாக இவ்வாலயப் பகுதி விளங்கியதை கி.பி 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் பராக்கிரம பாகுவின் கல்வெட்டும், சீனச்சாடிகளும் சான்று பகருகின்றன. கடல் வாணிபம் மூலம் ஆலயத்துக்கும் நல்ல வருமானம் கிடைத்து வளர்ச்சி பெற்றிருந்தது.

(vi) கடல்வணிகரின் காவல் தெய்வமாகவும் நயினை அன்னை விளங்கினார்.

(vii) தேவிமகாத்மியம் என்னும் நூலில் குறிப்பிடப்படும் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடம் ஆகவும் இவ்வாலயம் விளங்குகிறது.

(viii)யாமள தாண்டவம் நூலில் குறிப்பிட்டுள்ள திரிபுரபைரவி பீடம் ஆகவும் இத்திருத்தலம் காணப்படுகிறது.

(ix) போத்துக்கேயர் ஆட்சியின்போது வரலாற்றுப் பெருமை மிக்க இத்தலம் அழிக்கப் பட்டதாகவும், இங்கிருந்த செப்பு. பவளம் ஆகியவற்றாலான தேர்கள் கடலுள் மூழ்கடிக்கப்பட்டதாகவும் அறியமுடிகிறது. ஆலயத்தை அழிப்பதற்காகப் போர்த்துக்கேயர் வருவதையறிந்த அந்தணர்கள் அம்பாளின் விக்கிரகத்தை எடுத்துப்போய் மேற்குக் கடற்கரையோரமாக நின்ற ஆலமரப் பொந்தொன்றில் ஒளித்து வைத்து வழிபட்டதாகவும் கூறப்படுகிறது. இன்றும் அவ்விடத்தில் ஆலமரத்து அம்மன் ஆலயம் அமைந்துள்ளதைக் காணலாம்.



நாகமும் அம்பாளும்

(x) அழிப்புக் காலத்தின் போது ஆலயத்திலிருந்து அனலைதீவு, புளியந்தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட சிவலிங்கமே அங்கு புளியந்தீவு நாகேஸ்வரர் ஆலயமாக வளர்ச்சி காண ஏதுவாயிற்று.

(xi) மீளவும் ஒல்லாந்தராட்சியின் போது 1788ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயம் இன்று இலங்கையிலுள்ள சக்திபீடங்களில் முதன்மை பெற்று விளங்குகின்றது. சர்வ மத மக்களும் வழிபடும் இடமாகப் பெருமை கண்டுள்ளது.

**இ. ஆலய அமைப்பு**

(i) கிழக்கு நோக்கி அமைந்துள்ள இவ்வாலயத்தின் கருவறையில் சுயம்பாகத் தோன்றிய நாகமும் நாகேஸ்வரியும் இணைந்த திருவுருவம் காணப்படுகிறது.

(ii) சிற்ப சாஸ்திரி எம். நரசிம்மன் என்பவர் இது பற்றிக் கூறுகையில், நாகவழிபாட்டோடு தொடர்புடைய மிகவும் பழைமை வாய்ந்த சுயம்பு (தானாகத் தோன்றிய) மூர்த்தம் இதுவென்றும், ஏனைய எவ்விடத்திலும் காணமுடியாத அளவுக்கு இது அபூர்வமான நாகவழிபாட்டுச் சின்னமென்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

(iii) இவ்வாலயத்தின் உள்வீதியில் பரிவாரக் கடவுளர்களான விநாயகர், புவனேஸ்வரி, முருகன், சண்டேஸ்வரி, நவக்கிரகங்கள், நால்வர், சூரியன், சந்திரன் ஆகியோருக்குப் பிரகாரங்கள் அமைந்துள்ளன.

(iv) வெளிவீதியில் சந்தான கோபாலர், ஸ்ரீ நாகேஸ்வரி சமேத நாகேஸ்வரர். ஸ்ரீ அறம் வளர்த்த நாயகி சமேத ஏகாம்பரர், தேரடிவைரவர் ஆகிய தெய்வங்களுக்குப் பிரகார ஆலயங்கள் அமைந்துள்ளன.

(v) இந்த ஆலயத்தின் கிழக்கு, மேற்கு வாசல்களில் இராஜ கோபுரங்கள் காணப்படுகின்றன. ஆலய நுழைவாயிலில் அமைந்துள்ள 108 அடி உயரமான நவதள இராஜ கோபுரம் சப்ததீவு அடியவர்கள் எங்கிருந்தும் கைகூப்பித் தொழும் விதமாகவும், ஏராளமான சிற்பங்கள் நிறைந்த கலை நயத்துடனும் கம்பீரமாகக் காணப்படுகிறது.

**ஈ. பூசைகளும் விழாக்களும்**

(i) இவ்வாலயத்தில் தினமும் நான்கு வேளைப் பூசைகள் இடம்பெறுகின்றன.

(ii) நாள்தோறும் நாக சாந்திப் பூசைகள் நடைபெறுகின்றன.

(iii) நாள்தோறும் நண்பகல் பூசையின் பின் எழுந்தருளி அம்மன் உள்வீதி வலம்வருதல் இடம்பெறும்.

(iv) இவ்வாலய மகோற்சவம் ஆனிமாதப் பூரணையைத் தீர்த்தோற்சவ நாளாகக் கொண்டு பதினைந்து நாட்கள் நடைபெறும்.

(v) மகோற்சவ காலத்தில் சிறப்பான திருவிழாக்களாக திருக்கைலைக் காட்சி, மஞ்சம், சப்பறம், தேர், தீர்த்தம், தெப்பத்திருவிழா ஆகியவை விளங்குகின்றன.

(vi) இங்கு மூன்று தேர்கள் தேர்த் திருவிழாவின்போது வீதிவலம் வருகின்றன. இலங்கையிலுள்ள அழகிய தேர்களில் அம்பிகையின் தேர் முதன்மை பெற்றது. கலைநயமும் நேர்த்தியும் மிக்க சிற்பங்கள் இதில் அமைந்துள்ளது.

(vii) அம்பிகையின் தேருடன் பிள்ளையார், முருகன் ஆகியோரது தேர்களும் சிறப்பாக உருவாக்கப் பட்டுள்ளன.

(viii) இவ்வாலயத்தின் தீர்த்தத்திருவிழா மேற்குக் கரையோரமுள்ள சித்தாமிர்த புட்கரணி தீர்த்தக் குளத்தில் நடைபெறும். ஈழநாட்டின் எந்த ஆலயத்திலும் காணமுடியாத சிறப்பு வாய்ந்ததாக இவ்வாலயத்தில் இடம்பெறும் தெப்பத் திருவிழா காணப்படுகிறது. அலைகடலின் நடுவில் அலங்கரிக்கப்பட்ட படகில் அம்பாள் எழுந்தருளி வலம் வருதல் கண்கொள்ளாக் காட்சியாகும்.

(ix) இங்கு மாதம் தோறும் ஸ்ரீ சக்கர பூசையும் சிறப்புடன் நடைபெறுவது வழக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(x) நயினை அம்பாள் ஆலயத்தின் தலவிருட்சம் வன்னிமரமாகும். விஜய தசமிநாளில் இதற்குச் சிறப்பான பூசை நடைபெறும்.

(xi) ஆலயத்தின் சுற்று மண்டப மேற்கு உட்புறமாக அறுபத்து மூன்று நாயன் மார்களின் திருவுருவங்களும் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளன.


தேரில் அம்பாள் வீதிவலம்

(xii) ஒவ்வொருநாளும் பல்வேறு நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற அடியார்கள் இவ்வாலயத்திற்கு வந்த வண்ணமே உள்ளனர். ஆழ்க கடல் நடுவில் ஓர் அற்புதமாய் நாகம்மாள் விளங்குவதால். குழந்தை வரம் கேட்டல், திருமணத் தடைநீக்கப் பிரார்த்தித்தல், நாகதோச நிவர்த்தி, உடல் அங்கங்களின் நோய் தீரவேண்டுதல், வெளிநாட்டுப் பயணம் கைகூடுதல், வணிக வெற்றிகள், கல்வி மேன்மை, தொழில் வாய்ப்பு முதலான பலவிதமான வேண்டுதல்களும் நேர்த்திகளும் அன்னையிடம் நிகழ்ந்தவாறே உள்ளன. இதற்காகத் தங்கத் தொட்டில், தங்கத்தாலி, அள்ளுகாசு, தென்னம்பிள்ளை, கண்மடல், காது மடல், கைமடல், கால் மடல், கரும் பாம்பு, செம்பாம்பு ஆகியவற்றை அன்னையிடம் நேர்த்திக்காகக் காணிக்கை அளித்து மனத்திருப்தி அடைகின்றனர். முடியிறக்கலும் காணிக்கையாகக் கொடுக்கப்படுகிறது.

(xiii) வெளிநாடுகளில் வசிக்கும் புலம்பெயர்ந்த மக்களும் அம்பாள் ஆலயப் பிரம்மோற்சவ காலத்தில் வந்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதுடன், ஆலயத்திருப்பணிக்கான பேருதவிகளையும் புரிகின்றனர்.

(xiv) இந்த ஆலயத்தில் நித்திய அன்னதானம் வழங்கப் படுகிறது. மகோற்சவ காலங்களில் நண்பகல், இரவு வேளைகளிலும் ஏனைய காலங்களில் நண்பகலிலும் வழங்கப்படுகிது. அமுதசுரபி அன்னாத சபையினர் உலகம் வியக்கும் வண்ணம் இம் மாகேசுர பூசைத் தொண்டினைப் பல ஆண்டுகளாக நிறைவேற்றி வருகின்றனர்.

**உ. நயினை ஆலயம் பற்றிய நூல்கள்**

(i) நயினை அம்பாள் ஆலயத்தின் மீது காலந்தோறும் பல்வேறு பிரபந்தங்கள் பலராலும் பாடப்பட்டுள்ளன. அவற்றுள் சில வருமாறு:

1) அட்டாவதானம் வீராச்சாமிச் செட்டியார் 1861ஆம் ஆண்டு பாடிய தனிப் பாடல்கள் (காலத்தால் முற்பட்டவை)

2) வேலணை தம்பு உபாத்தியாயர் பாடிய நாகை திருவிரட்டை மணிமாலை, திருநாக தீபப்பதிகம் ஆகியவை.

3) நயினாதீவுச் சாமியார் முத்துக் குமார சுவாமி பாடிய நாகபூசணி அந்தாதி மாலை.

4) நயினை வரகவி நாகமணிப் புலவர் பாடிய நயினை வழிநடைச்சிந்து. நயினைமான்மியம்

5) தியாகராசா இராமச்சந்திரர் (ஆத்ம ஜோதி இராமச்சந்திரா) பாடிய நாகேஸ்வரி அம்மை பதிகம்.

6) அராலியூர் ம. அமரசிங்கப்புலவர் பாடிய நயினை ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) நயினை கவிஞர் நாக. சண்முகநாத பிள்ளை இயற்றிய நயினை நாகம்பாள் பதிகம்.

## மட்டக்களப்பு - புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம்.

### அ. ஆலய அமைவிடம்

இலங்கையின் கிழக்கு மாகாணத்து மட்டக்களப்பு நகரிலிருந்து எட்டுக் கிலோமீற்றர் தொலைவில் இவ்வாலயம் அமைந்துள்ளது. புன்னை மரங்கள் அதிகமாய் இருந்தமையால் இப்பெயரால் அழைக்கப்பட்டது. அரசமரம், ஆலமரம், வேப்பமரம் என்பன நிறைந்த பசுமைச் சூழலில் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

### ஆ. ஆலய வரலாறு


புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம்

(i) இவ்வாலயம் காலத்தாற் பிற்பட்டதாயினும் கீர்த்தி மிக்கதாய் வளர்ச்சி கண்டுள்ளது.

(ii) 1932ஆம் ஆண்டின் முன்னர் புன்னைச்சோலைக் கிராமத்தின் பெரும் பகுதி குடிசனமற்ற காடாகக் கிடந்தது. காட்டு வழிகளால் சென்ற அடியவர் ஒருவருக்கு அம்பாள் காட்சி கொடுத்ததாகவும் அம்பிகையைக் கண்ட அவர் மயங்கி வீழ்ந்ததாகவும், பின்னர் மயக்கம் தெளிந்து எழுந்து பார்க்கையில் அம்பிகை மறைந்து விட்டாரென்றும், தனக்கு அருட்காட்சி வழங்கிய இடத்திலேயே ஆலயமொன்றை அமைத்து அவர் வழிபடத் தொடங்கினாரென்றும், இதனைக் கேள்விப்பட்டு நாளடைவில் மக்கள் இவ்வாலயத்திற்கு அதிகமாக வரத்தொடங்கினர் என்றும், அவர்களது திருப்பணிக்கொடைகள் மூலமாய் ஆலயம் விரைவில் பெரிதாக வளர்ச்சிகண்டது எனவும் பத்திரகாளி ஆலய வரலாறு கூறப்படுகிறது.

### இ. ஆலய அமைப்பு

(i) நேர்த்தியாக அமைந்த விமானத்துடன் கூடிய கர்ப்ப கிருகத்தில் பத்திரகாளி அம்மனின் திருச்சூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

(ii) சுற்றுப்பிரகாரங்ளில் பிள்ளையார், திரௌபதை, மாரியம்மன், கம்பகாமாட்ஷி பிரத்தியங்கிரிகாளி ,முருகன், வைரவர் ஆகியோருக்கான சந்நிதிகள் உள்ளன.

(iii) வாயிற் கோபுரத்துடன் நுழைவாயில் காணப்படுகிறது.

### ஈ. பூசைகளும் விழாக்களும்

(i) பாரம்பரிய பூசை மரபுகளை இன்றுவரை பேணிப் பாதுகாத்துவரும் ஆலயம் இதுவாகும்.

(ii) ஆண்டுக்கு ஒரு முறைதான் இவ்வாலயத்தின் மூலஸ்தானக் கதவு திறக்கப்பட்டு பூசைகள் நடைபெறுகின்றன.

(iii) பூசைகளை நடத்தும் பூசாரியார் ஆனி மாதத்தில் இடம்பெறும் தீ மிதிப்புச் சடங்குக் காலங்களில் மாத்திரம் ஆலய மூலஸ்தானக் கதவினைத் திறந்து பூசைகளை நடத்துவார்.

(iv) இவ்வாலயத்தில் தினமும் ஒருவேளைப் பூசை மட்டும் நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(v) இங்கு மகோற்சவம் இடம்பெறுவதில்லை. தீ மிதிப்புச் சடங்கே பிரதான உற்சவமாக நடக்கிறது. அது ஆனி மாதத்தில் ஆறுநாட்கள் இடம்பெறும்.

(vi) தீ மிதிப்பின் முதலாம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று திருக் கதவு திறத்தல், அம்மனை எடுத்துவருதல் என்பவற்றுடன் சடங்குகள் ஆரம்பமாகும்.

(vii) மூன்றாம் நாட் சடங்கில் கன்னிப் பிள்ளை பிடித்தல், கலியாணக்கால் வெட்டுதல் ஆகியன இடம்பெறும்.

(viii) நான்காம் நாட் சடங்கில் எரிக்கிலை (எருக்கம் இலை) வெட்டுதல், நெல்லுக்குற்றுதல் ஆகியன நடைபெறும்.

(ix) இறுதி ஆறாம் நாளில் வெள்ளிக்கிழமையன்று தீ மிதித்தல் நடைபெற்றுச் சடங்குகள் நிறைவெய்துகின்றன.

(x) ஈழத்தில் தீமிதிப்புச் சடங்குகள் நடைபெறும் பிரதான ஆலயங்களில் ஒன்றாகவும், கிராமியப் பண்பாட்டைத் தழுவிய சடங்குகளைக் கொண்டதாகவும் இவ்வாலயம் விளங்குகிறது.


தீமிதிப்பு வைபவம்

(xi) அருளும் பக்தியும், இறை நம்பிக்கை யும் கொண்டு விரதமிருந்து தீ மிதிப்பில் சிறியவர் முதல் பெரியவர் வரை ஈடுபடுவது உணர்வு பூர்வமான இறை கைங்கரிய மாகும்.

(xii) புலம்பெயர்ந்த நாடுகளில் வசிப்போரும் இத்தலத்தில் இடம்பெறும் தீ மிதிப்புச் சடங்கினைக் காண வருகின்றமை சிறப்பானதாகும். இறை அருள் பெற்று ஆடும் தெய்வக் காவலர்கள் (தேவராளர்கள்) திருவாக்குச் சொல்லுதல், பில்லி சூனியம் முதலானவற்றுக்குப் பரிகாரம் சொல்லுதல் ஆகியவற்றை மேற்கொள்வர்.

(xiii) மாதம் தோறும் பௌர்ணமி பூசையும் இக்கோயிலில் இடம்பெறுகிறது.

(xiv) பிள்ளை வரம் வேண்டுவோர் இத்தலத்திலுள்ள பிரத்தியங்கிரி அம்மனைத் துதித்து தமது தேவையினை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

(xv) இவ்வாலயத்தின் மீது பாடப்பட்ட கும்மிப் பாடல்கள் ,தாலாட்டுப் பாடல்கள், காவடிச்சிந்து பாடல்கள் ஆகியன உள்ளன. அவை பாடப்பட்டும் இசையமைக்கப்பட்டும் இறுவெட்டு வடிவில் வெளிக் கொணரப் பட்டுள்ளன.

## 04. முருகன் ஆலயம்

### நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்

#### அ. ஆலய அமைவிடம்


நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்

(i) இலங்கையின் புராதன நகர்களில் நல்லூரும் ஒன்றாகும்.

(ii) இது யாழ்ப்பாணத்து அரசர்களான ஆரியச் சக்கர வர்த்திகளின் தலைநகராக விளங்கியது.

(iii) யாழ்ப்பாண நகரத்திலிருந்து ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள நல்லூரின் நடுநாயகமாகக் கந்தசுவாமி ஆலயம் காணப் படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. ஆலய வரலாறு

(i) **நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பழைமையான வரலாற்றை அறிவதற்கான ஆதாரங்கள்:**

1. முத்துராசக் கவிராயரின் கைலாய மாலை நூல்
2. மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவ மாலை நூல்
3. போர்த்துக்கேய வரலாற்றாசிரியரான குவெறோஸ் பாதிரியாரின் குறிப்புகள்
4. ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்துப் பதிவேடுகள்.

(ii)

1. இவ்வாலயம் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் கட்டப்பட்டதாகக் கைலாய மாலை கூறுகிறது. புவனேகபாகு என்னும் ஆரியச் சக்கரவர்த்தியின் முதலமைச்சரால் 1248 இல் கட்டப்பட்டதாக இந் நூல் குறிப்பிட்டுள்ளது.
2. பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த முதலாவது ஆரியச் சக்கரவர்த்தியான கூழங்கைச் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டதாக யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிட்டுள்ளது.
3. **இலக்கிய சகாப்த மெண்ணுடற் றெழுபதா மாண்டதெல்லை**
   **அலர்பொலி மாலை மார்பனாம் புவனேகபாகு**
   **நலமிகும் யாழ்ப்பாணத்து நகரிகட்டுவித்து நல்லைக்**
   **குலவிய கந்தவேட்குக் கோயிலும் புரிவித்தானே**

என்பது கைலாய மாலையிலுள்ள செய்யுட் சான்றாகும்.

(iii) தற்போதுள்ள இடத்திலே அமைக்கப்பட்ட கந்த சுவாமி ஆலயமானது 1450 ஆம் ஆண்டளவில் கோட்டை இராச்சிய அரசனின் வளர்ப்பு மகனான புவனேகபாகுவினால் (செண்பகப் பெருமாள் என்பதும் அவனது பெயர்) அழிக்கப்பட்டு, மீண்டும் அவனாலேயே முத்திரைச் சந்திக்கு அண்மையில் கட்டப்பட்டதாகும். ஆலயத்தில் கட்டியம் கூறும் போது புவனேகபாகுவின் பெயர் இன்றும் வழங்கப்படுகிறது.

(iv) மீண்டும் இந்த ஆலயமானது போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது 1621 ஆம் ஆண்டின் பெப்ரவரி இரண்டாந் திகதி அவர்களின் தளபதி பிலிப் தெ ஒலிவெறா என்பவனால் முற்றாக அழிக்கப் பட்டது.

(v) கோயிற் குருக்கள் ஆலய விக்கிரகங்கள் சிலவற்றை நல்லூர்ப் பூதராயர் கோயிலின் அண்மையிலுள்ள குளத்தில் புதைத்து வைத்துப் பாதுகாத்தார்.

(vi) போர்த்துக்கேய வரலாற்றாசிரியரான குவெறோஸ் இவ்வாலயம் பற்றித் தனது குறிப்பேட்டில் "யாழ்ப்பாணத்தில் நெடு மதில்களையுடைய பெரிய ஆலயமாகக் காணப்பட்டது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

(vii) பின்னர் மீண்டும் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் கிருஷ்ணையர் சுப்பையர் என்பவரால் 1734 ஆம் ஆண்டு சிறு மடாலயமாக இவ்வாலயம் கட்டப்பட்டது.

(viii) ஒல்லாந்தர் ஆட்சியின்போது யாழ்ப்பாணத்தில் சிறாப்பராகப் பணியாற்றிய இரகுநாத மாப்பாண முதலியாரால் பெரிய கற்கோயிலாக இவ்வாலயம் உருவாக்கப்பட்டது. அன்று தொடக்கம் அவரது பரம்பரையினரே நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் அறங்காவலர்களாக இறை பணி புரிந்து வருகின்றனர். சண்முகதாஸ் மாப்பாணரின் மறைவிற்குப் பின்னர் அவரது தம்பியார் குமாரதாச மாப்பாணர் தற்போது ஆலய அறங்காவலராக விளங்குகின்றார். அவரது பணி அரை நூற்றாண்டுக் காலத்தைத் தாண்டித் தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ix) ஈழத்துச் சித்தர் பரம்பரையினரான செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்ற தவ ஞானிகளும் நல்லூர் ஆலயச் சூழலில் நடமாடி முருகனைத் தரிசித்துள்ளனர்.

**இ. ஆலய அமைப்பு**

(i) நல்லூர்க் கந்த சுவாமி ஆலயம் மிகவும் அழகான கட்டட அமைப்புடன் படிப்படியாக மெருகேறி வந்துள்ளது. கிழக்கு நோக்கி அமைந்துள்ள இவ்வாலயத்தின் கருவறையானது கருங்கல்லால் ஆனதும், தூபிகளின்றி மடாலயமாக விளங்குவது மாகும். இங்கே தங்கத்தினாலான வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

(ii) மகா மண்டபத்தில் ஆறுமுக சாமியும், அர்த்த மண்டபத்தில் முத்துக் குமார சுவாமியும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் பிள்ளையார், கஜவல்லி மகாவல்லி, சந்தான கோபாலர், மனோன்மணியம்மன், சூரியன், வைரவர், தண்டாயுதபாணி ஆகியோருக்கும் தனித்தனிப் பிரகார ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(iii) கிழக்கு தெற்கு வாசல்களில் அழகிய இராஜ கோபுரங்கள் விளங்குகின்றன. மேலும் இரண்டாம் வீதியின் தெற்கு வாசலில் 2012 ஆம் ஆண்டு 108 அடி உயரமான நவதள இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோன்றதாகத் தற்போது வடக்குப் புறமாகப் பூந்தோட்ட வாயிலில் 108 அடி உயரமான நவதள இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டு நிறைவடைய உள்ளது. ஐந்து மணிக் கோபுரங்களும், இலங்கையிலேயே பிரம்மாண்டமான வசந்த மண்டபமும் இவ்வாலயச் சிறப்புக்களாகும்.

(iv) நல்லூர் ஆலயத்தைச் சூழ நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசைமடம், சடையம்மா மடம் ஆகியனவும் காணப்படுகின்றன.

(v) நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் தெற்கில் நாவலர் மண்டபமும், வடமேற்கில் ஸ்ரீ மனோன்மணியம்மன் ஆலயமும், வடக்கே மகேஸ்வரன் மணிமண்டபமும், வடமேற்கு மூலையில் பரமேஸ்வரி நடராஜா திருமண மணிமண்டபமும், வடமேற்கில் துர்க்கா மணி மண்டபமும் அமைந்து ஆலயச் சூழலை அழகுபடுத்துகின்றன.

**ஈ. பூசைகளும் விழாக்களும்**

(i) நாள்தோறும் ஆறுகாலப் பூசைகள் இங்கு நடைபெறுகின்றன. நாளாந்த பூசைகளாயினும் சரி, மகோற்சவ காலப் பூசை நிகழ்ச்சிகளாயினுஞ் சரி நேரந் தவறாமல் நடைபெறுவதே இவ்வாலயத்தின் தனிச் சிறப்பாகும்.

(ii) ஒவ்வொரு மாதப்பிறப்பன்றும், திருவனந்தற் பூசைக்கு(திருப்பள்ளியெழுச்சி) முன்னதாகப் பூந்தோட்ட திருமஞ்சனக் கிணற்றில் தீர்த்தம் நடைபெறுவது வழக்கமாகும்.

(iii) இங்கு குமார தந்திர முறையில் பூசைகள் நடைபெறுகின்றன.

(iv) இதன் வருடாந்த மகோற்சவம் ஆடி அமாவாசை வந்து ஆறாம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இருபத்தைந்து நாட்கள் நடைபெறும். இருபத்தாறாம் நாள் பூங்காவனத் திருவிழா எனப்படும் திருக்கல்யாணச் சிறப்பு இடம்பெறும். மஞ்சம், கைலாச வாகனம், திருக்கார்த்திகை, வேல்விமானம், சப்பறம், தேர், தீர்த்தம், திருக்கல்யாணம் என்பன சிறப்பான திருவிழாக்களாகும். இருபதாம் திருவிழாவுக்குப் பின்னர் அதிகாலையிலும் திருவிழா உற்சவம் இடம்பெறும். கஜவல்லி மகாவல்லி, சந்தான கோபாலர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மனோன்மணி, சூரியன், தண்டாயுதபாணி (மாம்பழத் திருவிழா) ஆகியவை இவைகளாகும்.



ஆறுமுக சுவாமி தேருக்கு எழுந்தருளுகின்றார்

(v) இங்கு ஒரு தேர் மட்டும் வலம் வரும். அலங்காரமும் அழகும் நிறைந்த மணித்தேர் அது. காலை ஐந்து மணிமுதல் பத்து மணிவரை தேரோட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும் . தேருக்கு எழுந்தருளும் ஆறுமுக சுவாமியினது பேரழகில் பக்தி சொட்டச் சொட்ட பல லட்சம் மக்கள் தம்மை மறந்து நெஞ்சுருகி நிற்பர். யாழ்ப்பாண மக்களின் தேசியத் திருவிழா போன்று தேரோட்டம் நடைபெறும். உலகெங்கிருந்தும் மக்கள் இன மத பேதமின்றிக் கலந்து கொள்வர்.

(vi) தீர்த்தத் திருவிழா தெற்கு வீதியிலுள்ள தீர்த்தக் கேணியில் நடைபெறும். முதலில் பூங்காவிலுள்ள திருமஞ்சனக் கிணற்றில் சுவாமி தீர்த்தமாடிய பின்னரே தீர்த்தக் கேணிக்கு வருவார். ஐந்து சுவாமிகள் வெண்ணிற அலங்காரங்களுடன் வாகனங்களில் எழுந்தருளுவர்.



கந்தனின் தேரோட்டம்

(vii) வசந்த மண்டபத்திலிருந்து வாகனம் வரை தெய்வத் திருவுருவங்களை அந்தணர்களே காவிச் செல்லும் மரபு இங்கு காணப் படுகின்றது.

(viii) திருக்கல்யாண நிகழ்ச்சிகள் தென்மேற்கு மூலையில் இடம்பெறும். ஒரே வாகனத்தில் வள்ளி தேவயானை சமேதராய் முருகப் பெருமான் வீதிவலம் வருவார்.

**உ. நூல்கள்**

(i) காலங்காலமாக நல்லூர்க் கந்தசுவாமியார் மீது பல்வேறு பிரபந்தங்கள் பாடப்பட்டுள்ளன. அவற்றின் எல்லை கணக்கிட முடியாதது.

(ii) அவற்றில் சிறப்பான 45 பிரபந்தங்கள் பற்றிக் கூறப்படுகின்றது. அதில்

1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பாடிய தனிநிலைச் செய்யுள்
2. கூழங்கைத் தம்பிரான் பாடிய நல்லைக் கலிவெண்பா
3. நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடிய நல்லையந்தாதி, நல்லைத் திருப்புகழ்.
4. ஆறுமுக நாவலரின் தந்தையார் நல்லூர் கந்தப்பிள்ளை பாடிய நல்லைக் குறவஞ்சி
5. சபாபதி நாவலர் பாடிய நல்லை சுப்பிரமணியர் பதிகம்
6. நல்லூர் சரவணமுத்துப் புலவர் பாடிய நல்லை வேலவருலா

என்பன குறிப்பிடத் தக்கவை. இருபாலைச் சேனாதிராய முதலியார், சுன்னாகம் முத்துக் குமார கவிராயர் உட்படப் பலரும் நல்லூர் முருகன் மீது பிரபந்தங்கள் பாடியுள்ளனர்.

(iii) யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவினால் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் **நல்லைக் குமரன் மலர்** என்னும் சிறப்பு மலர் வெளியீடு ஆண்டு தோறும் மகோற்சவ காலத்தின் போது வெளியிடப் படுகின்றது.

(iv) நல்லூர்க்கோயில் வரலாறு பற்றி குலசபாநாதன், செங்கையாழியான், சொக்கன் முதலான பலர் நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஞ்சத்தில் கந்தன்



சப்பறத்தில் வள்ளி, தெய்வானையுடன் கந்தன்



தேரிலன்று பச்சை சாத்தி வரும் கந்தன்



தீர்த்தக் கேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புகள்

| ஆலயம் | அமைவிடம் | ஆலய வரலாறு கூறும் சான்றுகள் | ஆலய அமைப்பு | ஆலயச் சிறப்புக்கள் |
|---|---|---|---|---|
| 1. களுதாவளைப் பிள்ளையார் | மட்டக்களப்பு - களுதாவளை | களுதேவாலயக் கல்வெட்டு | 1. சுயம்புலிங்க பீடத்தில் பிள்ளையார் திருவுருவம் பிரதிஷ்டை.<br>2. பரிவாரத் தெய்வங்களுக்கான சந்நிதிகள்.<br>3. பலிபீட நந்திக்குப் பதிலாக மூஷிகம்.<br>4. தீர்த்தக் குளம், கல்யாண மண்டபம்.<br>5. சிற்பச் சிறப்பு, சுவர்களிலும் ஆலய தூண்களிலும்.<br>6. சோடச கணபதி வடிவங்களும் சிற்பங்களும். | 1. தல விருட்சம் வில்வ மரம்.<br>2. நித்திய, நைமித்திய, காமியக் கிரியைகள்.<br>3. அடியவர்கள் நேர்த்திகளை நிறைவேற்றல்.<br>4. விஷேச நாட்களில் பூசை.<br>5. பெருங்கதை விரத நாட்களில் கதை படித்தல்.<br>6. ஆனி உத்தரத்தில் தீர்த்தம் நடைபெறுமாறு வருடாந்த மகோற்சவம்.<br>7. வண்ணக்கமாரின் ஆலய பரிபாலனம். |
| 2. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் | மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை | மட்டக்களப்பு மான்மியம் களுதேவாலயக் கல்வெட்டு | 1. கிழக்குவாயில் கோயில்<br>2. கி.பி 13 ஆம் நூற்றாண்டுக்குரிய கட்டடக் கலையுள்ள பழைய மூலஸ்தானம் 1978 இல் சூறாவளியால் சிதைவு<br>3. போர்த்துக்கேயரை விரட்டிய நந்தி அமைந்துள்ளமை<br>4. 60 அடி உயரமான கொடித் தம்பம் | 1. கொக்கட்டிமரம் தல விருட்சம்.<br>2. மூன்றுவேளைப் பூசைகள் இடம்பெறல்<br>3. வீராகம நெறியில் பூசை.<br>4. திருப்படைக் கோயிலாக (தேசத்துக் கோயில்) விளங்குதல்.<br>5. முந்தையகாலத்தில் செய்யப்பட்ட இரு தேர்கள் காணப்படுதல்.<br>6. வண்ணக்கமாரின் ஆலய பரிபாலனம்.<br>7. ஆவணி மாதத்து வளர்பிறை முதல் நாள் கொடியேற்றத்துடன் மகோற்சவ ஆரம்பம்.<br>8. ஆலயம் பற்றிய பிரபந்தங்கள். |
| 3. நயினை நாகபூஷணி அம்மன் | யாழ்ப்பாணம் - தீவுப் பகுதியின் நயினாதீவு | 1ஆம் பராக்கிரமபாகு மன்னனின் கல்வெட்டு<br>சீனச் சாடிகள்<br>மணிமேகலைக் காப்பியம்<br>தேவி மகாத்மியம் | 1. கிழக்குவாயில் கோயில்<br>2. 108 அடி இராஜகோபுரம்<br>3. கருவறையில் சுயம்பான நாகம் மாலும் பாம்பும் பிரஷ்டை<br>4. பரிவாரத் தெய்வங்களுக்கான பிரகாரங்கள் உள்ளமை<br>5. நான்கு வேளைப் பூசைகள்<br>6. அழகிய மூன்று சித்திரத் தேர்கள்<br>7. அமிர்த புஷ்கரணி தீர்த்தம் | 1. பல்வகை நேர்த்திகளை அடியார்கள் நிறைவேற்றல்<br>2. அமுதசுரபி அன்னதான மண்டபப் பணி<br>3. பல்வேறு பிரபந்தங்கள் பாடப்பட்டுள்ளமை<br>4. ஆனிப்பூரணையைத் தீர்த்த நாளாகக் கொண்டு மகோற்சவம் நடைபெறல்<br>5. தலவிருட்சம் வன்னிமரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆலயம் | அமைவிடம் | ஆலய வரலாறு கூறும் சான்றுகள் | ஆலய அமைப்பு | ஆலயச் சிறப்புக்கள் |
|---|---|---|---|---|
| 4. புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் | மட்டக்களப்பு - புன்னைச் சோலை | கர்ணபரம்பரைக் கதை 1932 இன் பின் அமைக்கப்பட்ட ஆலயம் | 1. கர்ப்பக்கிருகத்தில் பத்திரகாளி அம்மனின் திருச்சூலம் பிரதிஷ்டை<br>2. பரிவாரத் தெய்வங்களுக்கு சந்நிதிகள்.<br>3. சிறிய கோவில்களாக உள்ளமை | 1. பாரம்பரிய ஆகம முறையில்லாத பூசை<br>2. ஆண்டுக்கொரு மறை மூலஸ்தானக் கதவு திறத்தல்<br>3. தீமிதிப்பு உற்சவம் ஆறு நாட்கள் இடம்பெறல் - பெரிய உற்சவம்<br>4. ஒருவேளைப் பூசை<br>5. மாதம் தோறும் பௌர்ணமிப் பூசை<br>6. நாட்டார் பாடல்கள் பாடப்பட்டமை |
| 5. நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் | யாழ்ப்பாணம் - நல்லூர் | 1. கைலாய மாலை<br>2. யாழ்ப்பாண வைபவ மாலை<br>3. குவெறொஸ் பாதிரியார் குறிப்புகள்<br>4. ஒல்லாந்தர் ஆங்கிலேயர் பதிவேடுகள் | 1. 13 ஆம் நூற்றாண்டில் புவனேக பாகுவால் பட்டப்பட்டமை<br>2. 1621 இல் அழிக்கப்பட்டமை.<br>3. 1734 இல் மீண்டும் கட்டப்பட்டமை<br>4. கிழக்குவாயில் கோயில்<br>5. பெரிய இராஜகோபுரங்கள் 108 அடி உயரத்தில் வடக்கு, தெற்கில் அமைந்துள்ளமை<br>6. ஐந்துமணிக் கோபுரம்<br>7. இலங்கையின் பெரிய வசந்த மண்டபம்<br>8. பரிவார சந்நிதிகள் | 1. நாள் தோறும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறல்<br>2. ஆடி அமாவாசை வந்து ஆறாம்நாள் கொடியேறி 25 நாட்கள் மகோற்சவம்<br>3. யாழ்ப்பாணத்தவரின் தேசியத் திருவிழா<br>4. பிரபந்தங்கள் பல பாடப்பட்டுள்ளமை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. இலங்கைச் சைவ சமய நூல்கள்

1. இலங்கைச் சைவப் பெரியார்கள் காலத்துக்குக் காலம் சைவ சமய நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டதன் மூலம் சைவ சமயப் பணி புரிந்துள்ளனர். அந்நூல்கள் சைவத் திருத்தலங்களின் தலபுராணங்களாகவும், சைவ விரதங்கள் பற்றியதாகவும், சைவ சமயச் சான்றோர் குறித்ததாகவும், சைவ ஒழுக்க நெறிகள் சார்ந்தனவாகவும் பல விதங்களில் அமைந்துள்ளன. அத்தகைய நூல்களில் ஒன்றாக விளங்கி இன்னும் இலங்கைச் சைவ சமயத்தவரிடையே பேணப்படுவதாகப் பிள்ளையார்கதை நூல் காணப்படுகின்றது.

## 2. பிள்ளையார் கதை:



பிள்ளையார் கதை நூல்

### அ) நூலாசிரியர் அறிமுகம்

(i) இது விரதங்களின் மகிமை பற்றிக் கூறுவது.

(ii) இது ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த நூலாகும்.

(iii) இந் நூலினைக் காசியிலிருந்து சுன்னாகத்துக்கு வந்து குடியேறிய வேதியராகிய அரங்கநாத ஐயர் அவர்களது புதல்வரான வரத பண்டிதர் (1656 – 1718) என்பவர் இயற்றியுள்ளார்.

### ஆ) நூலின் தோற்றத்துக்கான காரணங்கள்:

(i) போத்துக்கேயர் காலத்தில் சமயப் பொறுமையின்றி ஆட்சியாளர் நடந்து கொண்டதால் சைவ சமயத்தவர்கள் தமது சமய விரதங்களையும், அனுட்டானங்களையும் கடைப்பிடிக்க முடியாத சுதந்திரமற்ற நிலை காணப்பட்டது. நாளடைவில் அவற்றைக் கடைப்பிடிக்கும் ஒழுங்கு முறைகள் அருகிவிட்டன.

(ii) ஒல்லாந்தர் காலத்தில் ஓரளவு சமய சுதந்திரம் கிடைத்ததால் சைவ சமயத்தவர் மீண்டும் தமது சமயச் சடங்குகளையும், விரதங்களையும் பின்பற்றத் தொடங்கினர். ஆனாலும் அவர்களது சடங்குமுறைகளில் வேறுபாடுகள் காணப்பட்டன.

(iii) இவற்றை உணர்ந்து கொண்ட வரத பண்டிதர், சைவ சமயிகள் எல்லோரும் இவ்வாறுதான் சைவ விரதங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாகப் பிள்ளையார் கதையையும் ஏனைய நூல்களையும் எழுதினார்.

(iv) கார்த்திகை மாதத்து அபரபட்ச(தேய்பிறை)ப் பிரதமைத்திதி தொடங்கி மார்கழி மாதத்து பூர்வபட்ச(வளர்பிறை) சஷ்டித் திதி வரையுள்ள 21 நாட்கள் விநாயக சஷ்டி விரதம் அனுட்டிக்கப்படும் காலமாகும். இக்காலப் பகுதியில் பிள்ளையார் கதை நூல் பாராயணம் செய்யப்படுவது வழக்கம். சிலர் பிள்ளையார் பெருங்கதைப்படிப்பு என்றும் இந்த நூலைக் கூறுவர். இதனைக் கருத்தில கொண்டே பிள்ளையார் கதை அல்லது பிள்ளையார் பெருங்கதை என இந் நூல் அழைக்கப்படுகின்றது.

### இ) நூலின் அமைப்பு

பிள்ளையார் கதை நூலின் பொருண்மரபு பின்வருமாறு அமைந்துள்ளது.

(i) காப்புச் செய்யுள்
(ii) விநாயகர் துதி
(iii) சரஸ்வதி துதி
(iv) அதிகாரம்
(v) நூல்
(vi) போற்றித் திருவகவல்
(vi) வருக்கக்கோவை
(vii) தத்துவஞானத் திருவகவல்
(viii) நூற்பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதையினைப் பாட விநாயகப் பெருமான் துணை நின்று காத்தருள வேண்டு மென்று காப்புச் செய்யுள் இரண்டிலும் வரத பண்டிதர் வேண்டியுள்ளார். அதையடுத்து விநாயகர் துதியாக இரண்டு செய்யுள்களும் சரஸ்வதி துதியாக இரண்டு செய்யுள்களும் உள்ளன.

**ஈ) நூல் கூறும் விடயம்:**

(i) **பிள்ளையார் கதையில் இடம்பெற்றுள்ள கிளைக் கதைகளாவன.**

1) உமைபிறந்த கதை
2) உமை சிவன் திருமணம்
3) பிள்ளையார் பிறப்பு
4) பிள்ளையாரின் அற்புதம்
5) பிள்ளையார் கஜமுகாசூரனை அழித்து அவனை மூகூஷிக வாகனம் ஆக்கியமை.
6) பிள்ளையார் வல்லபையை மணந்தமை
7) சண்முகன் பிறந்து சூரனை அழித்த கதை
8) திருமால் குருட்டுப் பாம்புருவான கதை

(ii) **பிள்ளையார் கதையில் கூறப்பட்ட விரதங்களாவன.**

1) ஆவணிச் சதுர்த்தி
2) விநாயகர் சஷ்டி

விரதச் சிறப்புக்கள், அவை அனுட்டிக்கும் முறைகள், விரதங்களால் அடைந்த பேறுகள் ஆகியனவும் கூறப்பட்டுள்ளன.

(iii) **பிள்ளையார் கதையில் கூறப்படும் விநாயக சஷ்டி விரதம் அனுட்டித்துப் பேறுபெற்றவர்கள்:**

1) பஞ்ச பாண்டவர்கள் விநாயக சஷ்டி விரதம் நோற்றுப் பகைவரை வென்றமை.
2) சிவன் முப்புரங்களை எரித்தமை.
3) உருத்திரன் விருத்திராசுரனைப் போரில் வென்றமை.
4) அகலிகை கணவனை அடைந்தமை.
5) தமயந்தி நளனைக் கணவனாக அடைந்தமை.
6) இராமன் அசுரரை அழித்துச் சீதையை அடைந்தமை.
7) பகீரதன் ஆகாய கங்கையைப் பூமிக்கு வரவழைத்தமை.
8) அட்டதேவதைகள் அட்டமா சித்திகளும் சாவா மருந்தாகிய அமிர்தமும் பெற்றமை.
9) தருமனும் சகோதரர்களும் இழந்த அரசினைப் பெற்றமை.
10) வச்சிரமாலி மன்னன் தனது உடம்பில் ஏற்பட்ட கடும்பிணி நீங்கப் பெற்று, திலோத்தமையை மணம்புரிந்தமை.


(iv) **இலக்கண சுந்தரியின் கதை**

1) விக்ரமாதித்த மன்னனின் மனைவி இலக்கண சுந்தரி, விநாயக சஷ்டி விரதத்தினை அனுட்டித்து இடையில் விட்டுவிட்டார். கட்டிய நோன்புக் காப்பினை அறுத்து காய்ந்த கொவ்வைச் செடியில் போட்டாள். அச்செடி துளிர்விட்டுப் படர்வதைக்கண்ட ஒரு பெண் அக்காப்பினை எடுத்துக் கட்டிய பிறகு இருமடங்கு அருள் கிடைக்கப் பெற்றாள். அத்துடன் விநாயகப் பெருமான் விக்ரமாதித்தனின் கனவில் தோன்றிக் கூறியதற்கிணங்க அவன் இலக்கண சுந்தரியை புறந்தள்ளி வைத்தான்; துரத்திவிட்டான். அதனால் இன்னல்கள் பலவற்றுக்கு இலக்கண சுந்தரி ஆளானாள். அவள் செல்லும் இடமெல்லாம் தீங்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றன. இலக்கண சுந்தரி முதலில் வணிகனொருவன் வீட்டினில் தஞ்சமடைந்தாள். அவனிடமிருந்த இரத்தினங்கள், முத்துக்கள் எல்லாம் பருக்கைக் கற்களாக மாறி விட்டன. வணிகன் அவளைத் துரத்தி விட்டான். அவள் உழவன் வீட்டில் சென்று தஞ்சமடைந்தாள். அப்போது உழவனின் செய்பயிர்கள் எல்லாம் அழிந்து வருமானம் குன்றியது. உழவனும் அவளைத் துரத்திவிட அவள் குயவன் வீட்டினிற் சென்று தஞ்சமடைந்தாள். ஆனால் குயவனின் மட்பாண்டங்கள் யாவும் உடைந் தழிந்ததுடன் கொள்ளையும் போயின. குயவனும் அவளைத் துரத்திவிட அவள் சலவைக் காரன் வீட்டில் அடைக்கலமானாள். ஆனால் அவள் அங்கு சென்றதும் அவனது துணிகள் எல்லாம் கிழிந்து கந்தைகள் ஆயின. அவனும் அவளைத் துரத்திவிட, மாலை கட்டுபவன் வீட்டில் தஞ்சம் புகுந்தாள்; மாலைகள் பாம்பாகியது கண்ட அவனும் உலகிற்கு தீங்கு செய்ய வந்த கொடும்பாவி என அவளைத் திட்டித் துரத்தி விட்டான். இறுதியாக ஔவையாரிடம் தஞ்சம் புகுந்தபோது, ஔவையார் செல்லுமிடம் எங்கணும் மக்கள் அவரை ஏசினர்; கல்லால் எறிந்தனர்; தள்ளினர்; அடித்தனர். இதன்பிறகு வீடுசென்ற ஔவையார் இலக்கணசுந்தரியைப் பார்த்து நீ யார்? என்று வினவினார். தான் உலகையாளும் மார்த்தாண்ட மன்னனின் மகள் என்றும், விக்ரமாதித்தனின் மனைவி என்றும் தன்பெயர் இலக்கண சுந்தரி என்றும் அவள் கூறினாள்.



இலக்கணசுந்தரிக்கு உதவியஔவையார்

2) அதன்பிறகு ஔவையாரின் சொற்படி சாணத்தால் தரைமெழுகி, பிள்ளையார் பிடித்துவைத்து, பூப்போட்டு, விளக்கேற்றி, இருபத்தொரு இழைகள் கொண்ட காப்புக்கட்டி, படையலிட்டுப் பிள்ளையார் கதையினைப் படித்து விநாயக சஷ்டி விரதமிருந்தாள் இலக்கண சுந்தரி. ஆரம்பத்தில் அவளுக்கேற்பட்ட இடையூறுகளையெல்லாம் ஔவையார் தீர்த்து வைத்தார். விரத மகிமையினால் ஒரு பணியாரமும் சிறிதளவு நீருங் கொண்டு அரசன், படைவீரர்கள் ஆகியோருக்கும் யானைகள், குதிரைகள் ஆகியவற்றுக்கும் உணவளித்தும் உணவு முடியாதிருந்த அதிசயத்தைக் கேள்விப்பட்ட அவளது கணவனான விக்கிரமாதித்தன் அவளை மீண்டும் தன்னுடன் அழைத்துச் சென்றான். இவ்வாறு இலக்கண சுந்தரி கதையினூடாக விநாயக சஷ்டி விரத மகிமை "பிள்ளையார் கதை" யில் கூறப்பட்டுள்ளது.

(v) **இந்நூலில் கூறப்பட்டுள்ள விநாயகர் வழிபாட்டினை மேற்கொள்ளவேண்டிய சந்தர்ப்பங்கள்:**

1) வீட்டிலிருந்து புறப்படும்போது 2) யுத்தம்புரியப் புறப்படும்போது
3) வித்தியாரம்பம் செய்யும்போது 4) உத்தியோகத்திற்குப் புறப்படும்போது.

(vi) **விநாயகர் சஷ்டி விரதம் அனுட்டிப்பதால் ஏற்படக்கூடிய பயன்கள்:**

1) சந்ததி தழைக்கும். 2) சம்பத்து(செல்வம்) உண்டாகும்.
3) நினைத்த பொருள் கிடைக்கும்; கைகூடும்.
4) மேலவர்களை வென்றிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(vii) **நூற்பயன்:**

*1)* பிள்ளையார் கதையினைப் படித்து முடிப்பவர்கள் அடையக்கூடிய பயன்கள்:

**(அ)** கல்வி அதிகமாகும்.
**(ஆ)** பொன் கிடைக்கும்.
**(இ)** எல்லாப் பொருளும் செல்வமும் தேடிவரும்.
**(ஈ)** இக்கதையைப் பார்த்தவர் கேட்டவர் நோற்றவர் ஆகியோருக்குக் கேடு வராது.
**(உ)** பிள்ளைப் பாக்கியம் கிடைக்கும்.
**(ஊ)** நோய்களினின்றும் விடுபடுவர்
**(எ)** பிறவிகளில் நல்லபெருஞ் செல்வம் பெற்றுச் சிறப்புப் பெற்று வாழ்வர்.

*2)* **வெள்ளை யெருதேறும் வீரீசடையோன் பெற்றெடுத்த**
**பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி**
**நோற்றார் மிகவாழ்வார் நோலா தருகிருந்து**
**கேட்டோர்க்கும் வாராது கேடு**

இது நூற்பயன் கூறும் நான்கு பாடல்களில் ஒன்றாகும்.

## குறிப்புகள்

1. வரத பண்டிதர் இயற்றிய நூல் பிள்ளையார் கதை ஆகும்.
2. ஒல்லாந்தர் காலத்தில் சைவ மக்கள் ஒழுங்கான விரத முறையைப் பின்பற்ற வேண்டுமென்ற நோக்குடன் இந்நூல் இயற்றப்பட்டது.
3. விநாயக சஷ்டி விரத காலமாகிய 21 நாட்களும் இந் நூல் ஆலயங்களில் படிக்கப்படும்.

• • • • • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. இலங்கையிலுள்ள சைவ சமய நிறுவனங்கள்

## சைவ வித்தியாவிருத்திச் சங்கம்


அலுவலகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் பெரும்பாலான பாடசாலைகள் கிறிஸ்தவ மிஷனறிமாரா லேயே நடத்தப்பட்டன. இப் பாடசாலை களிற் கற்பதற்காகச் சைவ மதத்தினர் பலர் மதம் மாறினர். படிப்படியாகத் தமது சைவத் தமிழ்ப் பாரம்பரியங்களைக் கைவிடத் தொடங்கினர். அப்போது யாழ்ப்பாணத்தி லிருந்து சைவத் தமிழ் மறுமலர்ச்சியை ஏற்படுத்த அரும் பாடுபட்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்(1822-1879) அவர்கள். அவர் தொடக்கிவைத்த முயற்சியால் இலங்கைச் சைவர்கள் மத்தியில் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டது. சைவத் தமிழ்ப் பாரம்பரியங்களைப் பேணி வளர்த்திடச் சைவசமய நிறுவனங்கள் பல தோற்றம் பெற்றன. அவற்றுள் ஒன்றாக விளங்குவது சைவ வித்தியாவிருத்திச் சங்கமாகும்.

### 1. தோற்றம்


சு. இராசரெத்தினம்

1923 ம் அண்டு மார்கழி மாதம் ஒன்பதாந் திகதி சைவ வித்தியா விருத்திச் சங்கமானது யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நிறுவப்பட்டது. இதன் ஆரம்ப காலத் தலைவராக சேர். பொன். இராமநாதன் அவர்களும், செயலாளராக சி. இராசரெத்தினம் அவர்களும் விளங்கினர். சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி , சு. இராசரெத்தினம், சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம், ஆகியோர் உறுப்பினர்களாயிருந்தனர். சிறிது காலத்தின் பின்னர் சு. இராசரெத்தினம் அவர்கள் முகாமையாளராகப் பொறுப்பேற்று 1923 – 1970 வரை இச் சங்கத்தின் உயிர் நாடியாக விளங்கினார். சங்கத்தின் பல்வேறு செயற்பாடுகளையும் விரிவாக்கினார். இதனால் இவரை **இந்து போட்** இராசரெத்தினம் என அனைவரும் அழைத்தனர். இவர் அரசாங்க சபை உறுப்பினராகவும் இருந்தவர்; இந்தியா சென்று கல்வி கற்றவர். நியாயவாதியாகவும் பணியாற்றியவர்.

### 2. நோக்கம்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு அமைந்தன:

**அ)** இலங்கையில் எங்கெல்லாம் சைவப் பாடசாலைகளின் தேவை இருக்கிறதோ அங்கெல்லாம் சைவப் பாடசாலைகளை நிறுவிப் பரிபாலித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆ)** தனிப்பட்டவர்களால் நடத்துவதற்குச் சிரமப்படும் சைவப் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்துதல்.

**இ)** முன்னர் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வரும் சைவப் பாடசாலைகளுக்கு வேண்டிய உதவிகளையும் ஒத்துழைப்பினையும் வழங்குதல்.

**ஈ)** சைவாசிரியர்களைப் பயிற்றுவித்தல்.

**உ)** சைவப் பண்பாட்டினைப் பேணிப் பாதுகாத்தல்.

**ஊ)** முத்தமிழையும் வளர்த்தல்.

**எ)** சைவ சமய அநாதைப் பிள்ளைகளையும் பராமரித்தல்.

## 3. பணிகள்

சைவ வித்தியா விருத்திச் சங்கமானது காலந்தோறும் பல பணிகளை முன்னெடுத்து வந்துள்ளது. அவற்றுள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

### அ) சைவப் பாடசாலைகளை அமைத்தல்

(i) சங்கத்தின் நோக்கத்திற்கு அமைவாக சைவ மக்கள் வாழும் இலங்கையின் பல பகுதிகளிலும் சைவப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம் சங்கத்தினால் முதன்முதலில் நிறுவப்பட்ட பாடசாலையாகும்.



**மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம்**

(ii) சைவ வித்தியா விருத்திச் சங்க முகாமைத்துவத்தின் கீழ் 187 பாடசாலைகள் நிறுவப்பட்டன. யாழ்ப்பாணம் – 156, கிளிநொச்சி – 10, வவுனியா – 5, முல்லைத்தீவு–7, மன்னார் – 1, பதுளை – 1, நாவலப்பிட்டி – 3, கண்டி – 2, புத்தளம் – 2 என்றவாறு இவை காணப்பட்டன.

(iii) இவற்றுள் 03 ஆங்கிலப் பாடசாலைகளும், 04 இருமொழிப் பாடசாலைகளும் அடங்குவன. பாடசாலைகள் அனைத்தும் சைவத் தமிழ்ப் பெயர்கள் சூட்டி அழைக்கப்பட்டன.

(iv) நல்லூர் செங்குந்தா இந்துக் கல்லூரி, அராலி இந்துக் கல்லூரி, வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, பதுளை சரஸ்வதி மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய கல்லூரி என்பன சைவ வித்தியாவிருத்திச் சங்க முகாமைத்துவத்தினால் வளர்ச்சிகண்ட பாடசாலைகளில் சிலவாகும்.

(v) 1961 ஆம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டபோது சைவ வித்தியா விருத்திச் சங்க முகாமையின் கீழ்ச் செயற்பட்ட சைவப் பாடசாலைகள் அனைத்தும் அரசினரிடம் கையளிக்கப்பட்டன. அதன் பின்பு சங்கத்தின் பாடசாலைகள் அமைக்கும் பணி கைவிடப்பட்டது.


### ஆ) சைவாசிரிய கலாசாலையை நிறுவியமை

சைவ சமய ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக சைவ வித்தியா விருத்திச் சங்கமானது திருநெல்வேலியில் 1925 ஆம் ஆண்டு சைவாசிரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாலை ஒன்றினை நிறுவியது. இதன் முதலாவது அதிபராக மயிலிட்டி கே. சுவாமிநாதன் பணியாற்றினார். சிந்தனைச் சிற்பி அளவெட்டி சி. கைலாசபதி அவர்கள் உப அதிபராக விளங்கினார். விரிவுரை யாளர்களில் ஒருவராகப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் சுமார் 30 ஆண்டுகள் பணியாற்றினார். 1963ஆம் ஆண்டு இக் கலாசாலை மூடப்படும் வரை 1500க்கு மேற்பட்டோர் ஆசிரியப் பயிற்சி பெற்று வெளியேறினர்.



**திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை**

**இ) காவியப் பாடசாலையை அமைத்தமை**

சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தராதரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஆசிரிய கலாசாலையுடன் இணைந்ததாக 1930 ஆம் ஆண்டு காவியப் பாடசாலையொன்று உருவாக்கப்பட்டது. அங்கு பாலபண்டிதர், பண்டிதர் வகுப்புக்கள் நடத்தப்பட்டன. தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மொழி களும் கற்பிக்கப்பட்டன.

**ஈ) தொழிற் பாடசாலைகளை அமைத்தமை**

இச் சங்கத்தின் உதவியுடன் கல்வி கற்று விட்டு வேலையற்றிருக்கும் பெண் பிள்ளைகளின் நலன் கருதிச் சங்கத்தினால் 31 தொழிற்பயிற்சிப் பாடசாலைகள் நிறுவப் பட்டன. இவற்றுள் 15 தையற் பாடசாலைகளும், 16 பன்னவேலைப் பாடசாலைகளும் காணப்பட்டன. இவற்றில் பயிற்சி பெற்றவர்கள் இலகுவில் தொழில் வாய்ப்புகளையும் பெற்றுக் கொண்டனர்.

**உ) சைவச் சிறுவர் இல்லங்கள் அமைத்தல்**

சைவ வித்தியா விருத்திச் சங்கமானது அநாதரவான சைவச் சிறுவர்களின் நலன் கருதி 1930 ஆம் ஆண்டு ஆண், பெண் பிள்ளைகளுக்குத் தனித்தனியான சிறுவர் இல்லங்களைத் திருநெல்வேலியில் அமைத்துச் சிறுவர்கள், சிறுமியர்கள் ஆகியோரைப் பராமரித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக இன்று சுமார் முந்நூறு பிள்ளைகள் இந்த இல்லங்களில் தங்கியுள்ளனர். இல்லத்தின் பெயரையும் **நிறைவாழ்வு இல்லம்** என அழைக்கின்றனர். சிறுவர் இல்லங்களுக்கான பௌதீக வசதிகளும் விரிவாக்கப் பட்டுள்ளன. இல்லத்துச் சிறார்கள் அனைவரும் அருகிலுள்ள முத்துத் தம்பி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றனர்.



**சிறுவர் இல்லம்**

2010 ஆம் ஆண்டு முதல் உரும்பிராய் கருணை இல்லம் என்னும் பெண் பிள்ளைகளுக்கான அநாதை இல்லமும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் பொறுப்பேற்கப் பட்டு நிர்வகிக்கப் படுகின்றது. எனவே தற்போது மூன்று சைவச் சிறுவர் இல்லங்கள் சங்கத்தின் பொறுப்பில் பராமரிக்கப் படுகின்றன.

**ஊ) இணுவில் இராசரத்தினம் தொழிற்பயிற்சி நிலையம்.**

சங்கத்தினால் பராமரிக்கப் பட்டுவரும் சைவச் சிறுவர் இல்லங்களிலிருந்து படிப்பினை முடித்து வெளியேறிய பிள்ளைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவும் பொருட்டு இணுவில் கிராமத்தில் **இந்து போட்** இராசரெத்தினம் அவர்களது பெயரில் இத் தொழிற்பயிற்சி மையம் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மின்னிணைப்பு, கணினி ஆகிய துறைகளில் இங்கு பயிற்சி வழங்கப் படுகிறது.

இவ்வாறு 1923 ஆம் ஆண்டிலிருந்து சைவத் தமிழ் மக்களுக்காக அரிய பணியாற்றி வரும் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிகள் இன்று மட்டுப் படுத்தப் பட்டுள்ளன. இருப்பினும் உலகெங்கும் வாழும் சைவத் தமிழ் மக்களின் கருணையினால் அளிக்கப்படும் நன்கொடையினாலும் அரசாங்கத்தின் வரையறுக்கப்பட்ட உதவியினாலும் சைவச்சிறார்களின் பராமரிப்பில் முன்னேற்றங் கண்டு வருவது குறிப்பிடத் தக்கதாகும்.



**அமரர் இந்து போட் இராசரத்தினத்தின் சிலை**

## குறிப்புகள்

### சைவ வித்தியா விருத்திச் சங்கப் பணிகள்

1. சைவப் பாடசாலைகள் அமைத்தமை.
2. சைவாசிரிய கலாசாலையை அமைத்தமை.
3. காவிய பாடசாலை அமைத்தமை.
4. சைவச் சிறுவர் இல்லங்கள் அமைத்தமை.
5. இணுவில் தொழிற்பயிற்சி மையங்கள் அமைத்தமை.
6. சைவத் தமிழ்ப் பண்பாட்டை வளர்த்தமை.
7. தொழிற் பாடசாலைகள் அமைத்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. சரியைத் தொண்டுகள்

1. இறைவனால் எமக்குக் கொடுக்கப்பட்ட உடம்பு, அறிகருவிகள், உலகம், நுகர் பொருட்கள்(தனு, கரண, புவன, போகங்கள்) ஆகியவற்றைக் கொண்டு இறைபணி மூலம் முத்தியடைதலே மனிதப் பிறவியின் நோக்கமாகும்.

2. முத்தியடைவதற்கான மெய்யுணர்வைப் பெறுவதற்குரிய சாதனங்களாகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சைவ நாற்பாதங்களைச் சைவாகமங்கள் கூறுகின்றன.

3. அவரவர் பக்குவ நிலைக்குத் தக்கதாக இந்த நான்கு நெறிகளும் அமைகின்றன. முதல் மூன்று மார்க்கங்களும் நான்காவதான ஞானத்தைப் பெறும் நிலைக்கே இட்டுச் செல்வன.

4. நால்வகை மார்க்கங்களில் முதலாவதாகச் சரியை அமைந்துள்ளது.

5. இறையன்பின் துணை கொண்டு உடம்பினாற் செய்யப்படும் கடவுளுக்கான பணிகள் அனைத்தும் சரியை நெறி எனப்படும்.

6. சரியைத் தொண்டானது எளிமையானது; இலகுவாகச் செய்யக் கூடியது; ஆரம்ப முயற்சியாக அமைவது; தூய தெய்வ பக்தியும் ஒழுக்கமும் மேலோங்கச் செய்யப்படுவது.

7. சரியை நெறி நின்று முத்தியடைந்த நாயன்மார்களுள் திருநாவுக்கரசு நாயனார் குறிப்பிடத் தக்கவர்.

8. சரியை நெறி நிற்போர் தாச மார்க்கத்தைக்(அடிமை மார்க்கம்) கைக்கொண்டு சாலோக முத்தியைப் பெறுவர்.

9. தாச மார்க்கம் பற்றித் **திருமந்திர** நூல் பின்வருமாறு கூறுகிறது.

**எளிய நல் தீபமிடல் மலர் கொய்தல்**
**அளியின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்**
**பளிபணி பற்றல் பன்மஞ்சனம் ஆதி**
**தளிதொழில் செய்வது தான் தாச மார்க்கமே**

**பொருள்**

விளக்கேற்றுதல், பூக்கள் கொய்து மாலை தொடுத்தல், திருக் கோவிலைத் தூய்மை செய்து மெழுகுதல், பாடலால் வாழ்த்தல், இறைவன் வீற்றிருக்கைக்குரிய பணிகள் செய்தல், பலவகைத் திருமஞ்சனப் பொருள்களைக் கொண்டு வரல் ஆகிய திருக் கோவிற் பணிகள் செய்வது தாச மார்க்கமாகும்.(அளியின் மெழுகல் - திருக்கோவிலை மெழுகுதல்; அது தூர்த்தல் - துப்பரவு செய்தல்; பளிபணி - திருப்பள்ளிக்கான தொண்டு; பன்மஞ்சனம் - பல்வேறு பூசைக்குரிய பொருட்கள்; ஆதி தளி தொழில் - ஆகிய கோயிற் பணிகள்)

10. **சரியைச் செயற்பாடுகள் பலவுள. அவற்றுள் சில வருமாறு:**

(i) திருக்கோவிலைக் கூட்டுதல், மெழுகுதல், கழுவுதல்.
(ii) திருக் கோவிலில் திருவிளக்கேற்றுதல்
(iii) திரு நந்தவனம் அமைத்தல், பூ எடுத்தல், பூமாலை தொடுத்தல்.
(iv) பூசைக்குரிய திரவியங்களைக் கொடுத்தல்.
(v) பூசைப் பொருட்களைத் துலக்கிச் சுத்தம் செய்தல்.
(vi) தீவர்த்தி, கொடி, குடை, ஆலவட்டம் பிடித்தல்.
(vii) கோவிலுக்குரிய வாகனங்களைத் துடைத்துக் கழுவித் தூய்மையாக்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(viii) உழவாரப் பணி செய்தல்.

(ix) கோவில்களைப் புதுப்பித்தலும், திருத்தஞ் செய்தலும்.

(x) இறைவனை மனமுருகி வழிபடலும் இறைவன் புகழ் பாடுதலும்.

(xi) புராண படனம் செய்தல், கேட்டல், புராணக்கதை படித்தல்.

(xii) தல யாத்திரை செய்தல்.

(xiii) அன்னதானம் செய்தல்.

(xiv) சுவாமி காவுதல், மணியடித்தல்.

**11. ஆலயத்தைத் துப்புரவு செய்தல்**

(i) எம்மையும், இவ்வுலகப் பொருட்களையும் படைத்த இறைவன் உறையும் கோவிலைத் துப்புரவாக வைத்திருத்தல் இன்றியமையாத திருத் தொண்டாகும்.

(ii) எமது ஊரிலுள்ள கோவில்களை, பாடசாலை யிலிலுள்ள கோவிலை நாம் சுத்தமாக வைத்திருப்பதால் எமது மனம் தூய்மையாவதுடன், இறையருளும் கிட்டுகிறது.

(iii) **நாம் ஆலயங்களில் செய்யக் கூடிய துப்புரவுப் பணிகள்:**

**அ)** கோயில் வீதிகளிலும் வளவிலும் காணப்படும் புல் பூண்டுகளைக் களைவதுடன் அசுத்தமான,தேவையற்ற பொருட்களை அப்புறப் படுத்தல்.

**ஆ)** திருக்கோயிலின் உட்பிரகாரங்களைக் கூட்டித் துப்புரவு செய்தல்.

**இ)** பிராணிகளின் எச்சங்களை நீக்கிச் சுத்தஞ்செய்தல்.

**ஈ)** சூரியன் உதிக்குமுன் திருக் கோயிலையும் முற்றத்தையும் அலகிடுதல் (கூட்டுதல்).

**உ)** கோயில் மண்டபங்களைக் கழுவுதல் அல்லது சாணத்தினால் மெழுகுதல்.

**ஊ)** ஆலயப் பொருட்களைத் தூய்மைப் படுத்தல்.



**திருவலகிடுதல்**

**எ)** திருக்கோவிற் கிணற்றினை இறைத்துச் சுத்தஞ் செய்தல்.

(iv) **திருக்கோயிலில் தொண்டு புரிவோர் கடைப்பிடிக்க வேண்டியன:**

**அ)** சைவ ஆசாரமுடையோராய் இருத்தல்.

**ஆ)** சமய தீட்சை பெற்றிருத்தல்.

**இ)** சிவத்தியானத்துடன் திருவைந்தெழுத்தை உச்சரித்தல்.

**ஈ)** தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிதல்.

(v) திருக்கோயிலில் உழவாரப்பணி செய்தவர் திருநாவுக்கரசு நாயனார். இவர் பாடிய திருவாரூர்த் திருத்தாண்டகத்தில் திருக்கோவிலைச் சுத்தஞ்செய்யும் நெறி முறைகளைக் கூறியுள்ளார்.

**நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா**
**நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்**
**புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டு**
**பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்**
**தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்**
**சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்**
**அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்**
**ஆரூரா என்றென்றே அலறா நில்லே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொற்பொருள்** நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா - நெஞ்சமே இந்த உயிரானது இறைவனிடஞ்சென்று நிலையான முத்திப் பேற்றினை அடைய வேண்டுமென நீ எண்ணுவாயானால் வருவாயாக; நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு - தினந்தோறும் எங்கள் சிவபெருமானுடைய திருக் கோவிலினுட் சென்று; புலர்வதன்முன் அலகிட்டு - பொழுது புலர்வதன் முன்னம் கோயிலைக் கூட்டிச் சுத்தம் செய்து; மெழுக்கும் இட்டு - சாணத்தினால் மெழுக வேண்டியிருப்பின் மெழுகி; பூமாலை புனைந்து - பூமாலைகளைத் தொடுத்துக் கட்டி; ஏத்திப் புகழ்ந்து பாடி - போற்றிப் புகழ்ந்து பாடி; தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி - தலையின் மேல் கைவைத்துக் கும்பிட்டு அங்கும் இங்குமாக ஆனந்தத்தால் கூத்தாடி; சங்கரா சய போற்றி போற்றி என்றும் - சங்கரனே! போற்றுகின்றேன், போற்றுகின்றேன் என்றும்; அலை புனல்சேர் செஞ்சடை எம் ஆதீ என்றும் - கங்கா நதியைத் தரித்த விரிந்த சிவந்த சடையினையுடைய எமக்கு ஆதாரமானவனே என்றும்; ஆரூரா என்றென்றே அலறா நில்லே - திருவாரூரில் வீற்றிருப்பவனே என்று சொல்லிச் சொல்லி அரற்றி நிற்பாயாக.

## 12. தலவிருட்ஷம் வைத்தல்

(i) ஆலயங்களின் முக்கிய அம்சங்களில் ஒன்று தல விருட்ஷமாகும்.

(ii) பல ஆலயங்கள் தல விருட்ஷங்களைக் கொண்டுள்ளன.

(iii) ஆலயச் சூழற் பிரதேசங்களில் செழித்து வளரக் கூடிய தாவரங்களைத் தல விருட்ஷமாகக் கொள்வது வழக்கமாகும். புராண – இதிகாசக் கருத்துக்களுக்கு ஏற்றதாகவும் தல விருட்ஷங்கள் பேணப்படுவதுமுண்டு.

(iv) நோய் தீர்க்கும் காரணியாகவும், அடியார்கள் இளைப்பாற நிழல் தந்து உதவுனவாகவும் தல விருட்ஷங்கள் பயன்படுகின்றன.

(v) அரசு, ஆல், வேம்பு, கூழா, மருது, இத்தி, கொன்றை முதலான பல விருட்ஷங்கள் ஆலயங்களின் தல விருட்ஷங்களாகப் புகழ்பெற்றுள்ளன.

## 13. நந்தவனம் அமைத்தல்


நந்தவனத் தொண்டு

(i) இறைவன் உறைந்து அருள் பாலிக்கும் இடங்களில் நந்தவனம் அமைத்து அழகுபடுத்தல் அடியவர்களின் இன்றியமையாத கடமையாகும்.

(ii) கடவுளுக்குரிய பூந்தோட்டம் என்ற கருத்தில் திரு நந்தவனம் என்று அழைப்பதில் **திரு** என்பது **கடவுளுக் குரிய** எனப் பொருள் தருகின்றது.

(iii) கோயில் வளாகத்தில் புனிதமான இடத்தில் திருநந்தவனம் அமைதல் வேண்டும்.

(iv) **திரு நந்தவனம் அமைதல் பற்றிச் சிவாகமங்கள் கூறுவன:**

**அ)** திரு நந்தவனம் திருக் கோயிலுக்கு அண்மையில் உள்ளதும், தூய மண் கொண்டதுமான இடத்தில் அமைதல் வேண்டும்.

**ஆ)** சுடுகாடு, மலசலம் கழிக்குமிடம் போன்றவற்றிலிருந்து தூர இருத்தல் வேண்டும்.

**இ)** திரு நந்தவனத்தில் இறைவனின் பூசைக்கேற்ற மலர் தரும் மரங்களை அல்லது செடிகளை நாட்டல் வேண்டும்.

**ஈ)** வில்வம், மந்தாரை, சண்பகம், நெல்லி, வாழை, செவ்விளநீர் முதலிய மரங்களும், மல்லிகை, முல்லை, இருவாச்சி, பிச்சி, தாளி, வெற்றிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலான நிலக் கொடிகளும், அலரி, நந்தியாவர்த்தம், செவ்விரத்தை, துளசி போன்ற செடிகளும், தாமரை, செங்களுநீர், நீலோற்பலம் முதலிய நீர்க் கொடிகளும் இடம்பெறுதல் நல்லதாகும்.

**உ)** திரு நந்தவனத்தை நீரூற்றிப் பாதுகாத்தல் முக்கியமானது.

**ஊ)** பூக்கள் நான்கு வகைப்படும். அவையாவன:

கோட்டுப்பூ - மரங்களில் இருந்து பெறும் மலர்
நிலப்பூ - செடிகளில் இருந்து பெறும் மலர்
கொடிப்பூ - நிலக் கொடிகளிலிருந்து பெறும் மலர்
நீர்ப்பூ - நீர்க் கொடிகளிலிருந்து பெறும் மலர்

**எ)** கடவுளுக்குரிய பூக்களை கோவில் நந்தவனத்திலிருந்து பெற முடியும். பூக்களை உதிரிகளாகவும் பூசைக்குக் கொடுக்கலாம். பூமாலைகள் கட்டியும் கொடுக்கலாம்.

**ஏ)** திரு நந்தவனப் பூக்களை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தலாகாது.

**ஐ)** திருநந்தவனம் அமைத்துச் சிவத்தொண்டு புரிந்து சிவபதம் அடைந்தோரில் திலகவதி அம்மையார், முருக நாயனார், சிவகாமி யாண்டார் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

## குறிப்புகள்

### சரியைத் தொண்டுகள்

- இறைவழிபாடு
- ஆலயத்தின் உள்ளும் புறமும் துப்புரவு செய்தல்
- ஆலயப் பொருட்கள், பூசைப் பொருட்கள்
- முதலானவற்றைத் துப்புரவு செய்தல்
- தல விருட்சம் வைத்தல்
- நந்தவனம் அமைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. சைவ தர்மம்

1. **தருமம்** எனும் சொல்லானது, கொடை, கருணை, தயை போன்ற பல்வேறு பொருள் தரும் சொல்லாகவும் விளங்குகின்றது.
2. இந்து சமயத்தில் தருமம் என்பது வாழ்க்கைக்கான சரியான வழிகாட்டுதல்களை வழங்கும் நீதி நெறி அல்லது போதனை எனக் கருதப்படும்.
3. இந்து சமயத்திற்குச் சனாதன தருமம் எனும் பெயருமுண்டு.
4. வடமொழி நூலான **மனுதர்ம சாஸ்திரம்** நான்கு வகையான வர்ணாச்சிரம தர்மங்களாகப் பிரம்மச்சரியம்(மாணவநிலை), கிருஹஸ்தம்(இல்லறநிலை), வானப்பிரஸ்தம் (துறவுக்கு ஆயத்தநிலை), சந்நியாசம்(துறவு நிலை) ஆகிய வற்றைக் குறிப்பிட்டுள்ளது.
5. கொடையாளிகளும், யாசிப்பவர்களும் **தருமம்** எனும் சொல்லை அதிகம் பயன் படுத்துவர்.
6. மனித குலத்தைப் பொறுத்தவரையில் சரியான, நீதியான பாதையில் நடப்பதையே தருமமாகக் கொள்ள வேண்டும்.
7. அண்டவெளியில் பூமி சுழல்வதும், அண்ட சராசரங்கள் ஓர் ஒழுங்கில் இயங்குவதும் கூடத் தருமமாகும்.
8. இந்து சமயமானது இறைவனின் விதிகள் தருமம் என்கிறது. வேதாந்த சாஸ்திரங்கள் "எது தாங்குகின்றதோ அதுவே தர்மம்" என வரையறை செய்துள்ளன.
9. இவ்வுலகில் நாம் செய்யக் கூடிய தருமங்கள் பலவுள. அவற்றுள் அன்னதானம் செய்தல், தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், ஆகியனவும் அடங்குகின்றன.

**10. அன்னதானம் செய்தல்.**

**அ)** பசியினால் வாடுவோருக்கு உணவை அன்புடன் வழங்குவது அன்ன தானமாகும். இது மனிதப் பண்புகளில் சிறந்தது. "பசியென்று வந்தோர்க்கு ஒருபிடி சோறு புசியென்று தருவாயப்பா" எனப் பாரதிதாசன் பாடியதும் இதன் மாண்பு அறிந்தேயாகும்.



அன்னதானம் செய்தல்

**ஆ)** அன்னத்தை வெறுக்கக் கூடாது; மிகுதியாக உண்டாக்க வேண்டும்; அன்னத்தை வேண்டி வந்த எவரையும் தள்ளிவிடக் கூடாது; எவ்விதத்திலாவது அவர்களது பசியைப் போக்க வேண்டும்.வருகிறவர்களுக்கு அன்னம் எப்போதும் தயாராக இருக்கிறது என்று சொல்லுவார் பெரியோர்.

**இ) அன்னதானம்** எல்லாத் தானங்களிலும் உயரியது. ஆயிரக் கணக்கான ஆண்டுகள் பழமை வாய்ந்த பாரத ரிஷிகளின் சமூக சிந்தனையாக விளங்குவது. தைத்திரீய உபநிடதத்தில் சொல்லப்பட்டுள்ளது. எக்காலத்திலும் பொருந்தக் கூடியது. பசியற்ற பாரத நாட்டினைக் காண விழையும் சிந்தனையாக அமைவது. இங்கு வாழும் மனிதர்களின் வயிற்றுக்குச் சோறிட வேண்டும் என்ற சிந்தனையால் விளைந்தது.

**ஈ) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே** என்கிறது மணிமேகலை. அதற்கமையப் பிறருக்கு அன்னதானம் செய்வது நமது கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் கொண்டாடப்படும் விழாக்களில் அன்னதானம் செய்தல் புண்ணிய காரியமாகும்.

**உ)** அன்னதானம் செய்பவர் அலங்காரமின்றி, மனத்தூய்மையுடன் இறை சிந்தனையுடன் இருத்தல் வேண்டும்.

**ஊ)** பெருமழைக் காலத்தில் சிவனடியார் வேடத்தில் சிவ பெருமான் வந்து உணவு கேட்டபோது பெரும் சிரமத்தின் மத்தியிலும் அன்புடன் அன்னமளித்த இளையான்குடிமாற நாயனார் அன்னதானம் செய்து முத்தியடைந்தவராவார்.

**எ)** ஈழத்தில் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திலும், தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலும் தினந்தோறும் அன்னதானம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**ஏ) அன்ன பூரணி ஸ்லோகம்**

**அன்ன பூரணே சதா பூரணே சங்கரப்பிராண வல்லபே!**
**ஞான வைராக்ய சித்யர்த்தம் பிக்ஷடம் தேஹிச பார்வதி!**

உலக மக்கள் பசிப்பிணி போக்கும் பொருட்டு அன்னை பராசக்தி யானவள் அன்னப் பூரணியாக அவதரித்து காசித் திருத்தலத்தில் அருள் புரிகின்றாள். இந்தச் சுலோகத்தைத் தினமும் உணவு உண்ணும் போது சொல்லிவரின் எப்போதும் உணவிற்குக் குறைவிராது.

**11. தண்ணீர்ப்பந்தல் அமைத்தல்**

அ) தருமங்களில் தண்ணீர்ப்பந்தல் அமைத்துக் களைப்புற்று வருவோருக்குத் தாக சாந்தி செய்வித்தலும் மேலானது.

ஆ) திருவிழாக் காலங்களில் கோயில்களில் தண்ணீர்ப் பந்தல்களை அமைத்து, வருகின்ற அடியார்களுக்குத் தாகத்தைப் போக்கும் திருத்தொண்டினை நாம் செய்ய முடியும்.



**தண்ணீர்ப் பந்தல்**

இ) எந்தத் தரும காரியத்தைச் செய்யும் போதும் மனத்தூய்மை, இறைசிந்தனை ஆகிய வற்றுடன் செய்தல் வேண்டும்.

ஈ) நாயன்மார்களில் அப்பூதியடிகள் நாயனார் திருநாவுக்கரசர் பெயரில் தண்ணீர்ப் பந்தல் அமைத்துத் தொண்டு புரிந்தவர்.

## குறிப்புகள்

**சைவ தர்மம்**

அன்னதானம் வழங்கல்
தண்ணீர்ப் பந்தல் அமைத்தல்

**"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வினாக்கள்

1. சைவசமயம் என்பதன் கருத்து யாது?
2. இறைவனின் சொரூப நிலை இயல்பு எத்தகையது?
3. சைவ நாற்பாதங்களும் எவை?
4. இறை நம்பிக்கை உதவுகின்ற இரண்டு விழுமியப் பண்புகளைக் குறிப்பிடுக.
5. பாடசாலையில் இடம்பெறக் கூடிய சைவசமயம் சார்ந்த செயற்பாடுகள் 2 தருக.
6. ஜீவ காருண்யம் என்றால் என்ன?
7. நைமித்தியப் பூசை என எதனை அழைப்பார்கள்?
8. சைவ விழுமியம் என்பதனால் கருதப்படுவது எது?
9. ஆன்மீக விழுமியங்கள் நான்கினைப் பெயரிடுக.
10. வாய்மை எனப்படுவது யாதெனத் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்?
11. பஞ்சாங்கத்தில் அடங்கியுள்ள அங்கங்கள் எவை?
12. பஞ்சாங்கக் கலைக்கு முன்னோடியாகத் திகழ்ந்த இருவரின் பெயர்களைத் தருக.
13. சந்திர மாதத்திற்கும் சூரிய ஆட்சிகளுக்கும் இடையிலான வேறுபாடு எத்தகையது?
14. கேதாரகௌரி விரதம் எத் தெய்வத்தை வேண்டி அனுட்டிக்கப் படுகின்றது?
15. சூரன்போர் உணர்த்துகின்ற ஆன்மீக தத்துவக் கருத்து யாது?
16. இந்தியாவில் சனீஸ்வரன் கோவில் அமைந்துள்ள இடங்களைக் குறிப்பிடுக.
17. வட பாரதத்தில் கொண்டாடப்படும் தீபாவளிப் பண்டிகையைக் குறிக்கும் வேறுபட்ட பெயர்கள் நான்கு கூறுக.
18. தீபாவளிப் பண்டிகை பற்றிப் பதும பராணம் கூறுவது யாது?
19. வாழ்வியற் சடங்குகள் ஐந்தினைப் பெயரிடுக.
20. திருமணத்தின் போது பாணிக்கிரகணம் செய்தல் என்றால் என்ன?
21. திருமணத்தின் போது இரட்சா பந்தனம் எதற்காகச் செய்யப் படுகிறது?
22. திருமணச் சடங்கின் பொது மணமக்கள் பசு தரிசனம் செய்யும் முறைமை யாது?
23. வேதத்தின் மறு பெயர்கள் மூன்று கூறுக.
24. உபநிடதம் என்பதன் பெயர்க் காரணம் யாது?
25. இருக்கு வேதத்தில் அதிகளவில் போற்றப்படும் தெய்வங்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. சதருத்திரயம் என்றால் என்ன?

27. அதர்வ வேதத்தினை ஏனைய வேதங்களுடன் முன்னர் சேர்க்கப் படாமைக்கான காரணங்கள் யாவை?

28. வேதம், ஆகமம் ஆகிய சொற்களின் பொருள்களை வேறுபடுத்துக.

29. சைவாகமங்கள் ஐந்தின் பெயர்களைப் பட்டியலிடுக.

30. ஆகமக் கருத்துக்களை உள்வாங்கித் தமிழில் எழுந்த நூல் எது?

31. திருஞான சம்பந்தர் பாடிய தேவாரங்கள் அமைந்துள்ள பண்களில் இரண்டினைக் குறிப்பிடுக.

32. அங்கமும் வேதமும் என்னும் தேவாரத்தில் தொடர்புடைய இரண்டு சிவத்தலங்களும் எவை?

33. திருக் கழுமலத்தின் மறுபெயர்கள் மூன்று தருக.

34. அற்றம் மறைப்பது முன்பணியே – இவ்வடியின் பொருள் யாது?

35. திருநாவுக்கரசர் மனிதப் பிறவியை எதற்காக வேண்டுகின்றார்?

36. நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என நாவுக்கரசர் சமணர்களின் அமைச்சரிடம் கூறக் கூடிய தைரியம் எதனால் ஏற்பட்டது?

37. சுந்தரர் ஊன்றுகோல், இடக்கண், வலக்கண் பெற்ற திருத்தலங்கள் எவை?

38. உந்தன் வண்மை கண்டு என்பதில் சுந்தரர் கூறிய வண்மை யாது?

39. தேவாசிரியன் மண்டபம் அமைந்துள்ள கோயில் யாது?

40. திருவாரூர் இறைவனை வாளாங்கிருப்பிர் எனச் சுந்தரர் கூறியதன் காரணம் என்ன?

41. மணிவாசகர் உலப்பிலா ஆனந்தம் என எதனைக் குறிப்பிட்டுள்ளார்?

42. மணிவாசகர் இறைவனை நோக்கி யார் கொலோ சதுரர்? எனக் கேட்டதன் காரணம் யாது?

43. கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி எது?

44. சேந்தனார் அருளிய இரண்டு பிரபந்தங்களும் எவை?

45. பாலுக்குப் பாலகன் எனத் தொடங்கும் திருப்பல்லாண்டில் இடம்பெற்றுள்ள புராணச் செய்திகள் இரண்டும் எவை?

46. யாவர்க்கும் நன்மை பயப்பனவெனத் திருமூலர் கூறும் நான்கு செயல்களும் யாவை?

47. விநாயகப் பெருமானை வணங்குவதற்கான காரணங்களாகக் கபிலதேவ நாயனார் கூறுவன யாவை?

48. பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ள தண்ணளி வெண்குடை வேந்தன் செய[illegible]கையது?

49. திருக்கூட்டம் எனப்படுபவர்கள் யாவர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. பூத நாயகர், புற்றிடங் கொண்டவர் - இந்தப் பாடலடியின் பொருள் யாது?

51. தேவாசிரியன் மண்டபம் அமைந்துள்ள இடம் எது?

52. தேவாசிரியன் மண்டபம் ஆயிரம் பாற்கடல் ஒன்று சேர்ந்தது போலக் காணப்பட்டது எதனால்?

53. திருக்கூட்டத்தவரின் தோற்றம் எத்தகையது எனச் சேக்கிழார் கூறுகின்றார்?

54. திருக் கூட்டத்தவரின் உள்ளம் எப்படியிருந்ததெனப் பெரியபுராணம் கூறுகிறது?

55. திருக்கூட்டத்தினர் பெருமைபற்றி ஆலாலசுந்தரர் அருளிய நூலின் பெயரென்ன?

56. திலகவதியாரின் வரலாறு பெரியபுராணத்தின் எப்பகுதியில் இடம்பெற்றுள்ளது?

57. திலகவதியார் திருத்தொண்டு செய்த கோயிலின் பெயரென்ன?

58. சமண சமயத்தைத் தழுவிய மருணீக்கியாரை மீண்டும் சைவத்துக்கு மாற்றித்தரும்படி வேண்டிக் கொண்ட திலகவதியாருக்குச் சிவபெருமான் என்ன உறுதிமொழியை வழங்கினார்?

59. மகோற்சவம் என்பதன் இருவிதமான பொருள்களும் எவை?

60. மறைத்தலைக் குறிக்கும் திருவிழா எது?

61. கொடிமரம், திரைச்சீலை, கயிறு ஆகியன புலப்படுத்தும் தத்துவங்கள் எவை?

62. கோயிலில் வீற்றிருக்கும் நந்தியின் கால்களாக விளங்கும் நான்கு கணங்களும் எவை எனக் கருதப்படுகின்றது?

63. கோயில் தேர் செய்வதற்குப் பொருத்தமான மரங்கள் எவை?

64. சாம்பவ தீட்சை எனப்படுவது யாது?

65. சைவ சமய குரவர்களில் எவருடைய வரலாறு திருத்தொண்டர் புராணத்தில் இடம்பெறவில்லை?

66. சமய குரவர்கள் ஆற்றிய சமய, சமூகப் பணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

67. சன்மார்க்கம் எனப்படுவதன் பொருள் யாது?

68. இறைவனை ஆண்டான் - அடிமை முறையில் அணுகிப் பக்தி செலுத்திய நாயனார் யார்?

69. திருஞான சம்பந்தர் ஆச்சாரியத் தகுதிக்குரிய விருதுகளைப் பெற்ற தலம் எது?

70. பல்லவர் காலத்தில் சைவ சமயப் பணிபுரிந்த இரண்டு பெண்களின் பெயர்களைத் தருக.

71. அனல்வாதம், புனல் வாதம் ஆகியவற்றின்போது ஞான சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிய பதிகங்கள் இரண்டும் எவை?

72. திருமறைக் காட்டில் கதவு திறக்கவும், பின்னர் மூடவும் அப்பரும் சம்பந்தரும் பாடிய பதிகங்களின் தொடக்கத்தினைக் குறிப்பிடுக.

73. சீர்காழித் திருத்தலத்தில் சம்பந்தர் பாடிய திருப்பதிகம் ஒன்றினைக் கூறுக.

74. திருநாவுக்கரசு நாயனார் பிறந்த ஊர் எது?

75. திருநாவுக்கரசருக்குச் சமணர்கள் இழைத்த கொடுமைகள் நான்கினைத் தருக.

76. ஆறாந் திருமுறையில் இடம்பெற்றுள்ள திருநாவுக்கரசரின் பதிகங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

77. திருநாவுக்கரசரின் குருபூசைத் தினம் எது?

78. திருவாரூர்க் கோயிலில் இருந்த மண்டபம் எது?

79. சுந்தரர் செய்த அற்புதங்கள் மூன்றினைக் கூறுக.

80. சேரமான் பெருமாள் நாயனாரின் இயற்பெயர் எது?

81. வாதவூரருக்காகச் சிவபெருமான் விளைவித்த அற்புதங்கள் யாவை?

82. மாணிக்க வாசகர் பாடிய நூல்கள் எவை?

83. மாணிக்கவாசகர் பாடியருளிய நாட்டுப்புற விளையாட்டுக்கள் தொடர்பான பதிகங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

84. புறச் சந்தான குரவர்கள் யாவர்?

85. சித்தாந்த அட்டகத்தை இயற்றியவர் யார்?

86. சகலாகம பண்டிதர், கொற்றவன் குடி முதலியார் என அழைக்கப்படுவோர் யாவர்?

87. பட்ட கட்டையிலே பகற்குருடு போகின்றது என யார் யாரைப் பார்த்து கூறினார்?

88. உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய புராண நூல்கள் எவை?

89. திருவாவடுதுறை ஆதீனத்தைத் தாபித்தவர் யார்?

90. பெற்றான் சாம்பானுக்கு முத்தியளித்த சந்தான குரவர் யார்?

91. மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ் எது?

92. ஈழத்துச் சித்தர் பரம்பரையின் மூலவர்களான மூவரைக் கறிப்பிடுக.

93. யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் எனக் கூறியவர் யார்?

94. திருமூலரின் இயற் பெயர் எது?

95. திருமந்திரம் நூலானது எத்தனை தந்திரங்களைக் கொண்டது?

96. திருமந்திரத்தின் ஐந்தாந் தந்திரம் கூறும் முக்கியமான ஐந்து விடயங்கள் எவை?

97. நடுவு நின்றார்க்கன்றி எனத் தொடங்கும் திரு மந்திரப் பாடலில் நடுவு நின்றார் எனப்படுபவர் யார்?

98. சுவாமி விபுலாநந்தர் இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகியவற்றுக்கு அளித்த இரு நூல்களும் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

99. சுவாமி விபுலாநந்தர் பணியாற்றிய பத்திரிகைகள் எவை?

100. சுவாமி விபுலாநந்தர் இராமகிருஷ்ண மிஷனுடன் சேர்ந்து நிறுவிய பாடசாலைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

101. சுவாமி விபுலாநந்தர் பணியாற்றிய பல்கலைக் கழகங்கள் எவை?

102. சுவாமி விபுலாநந்தரின் சமாதி அமைந்துள்ள இடம் எது?

103. சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் எவை?

104. வினையானது செய்யப்படும் போது எவ்வாறு அழைக்கப்படும்?

105. இரும்புண்ட நீரிற் றிரும்பாத வீடு என்பது யாது?

106. மாயா தத்துவங்கள் மூன்றும் எவை?

107. சைவ சித்தாந்தத்தின் நீக்கம் எனப் பொருள் தருவது எது?

108. திருவருட்பயன் நூலின் முதல், கடைசி அத்தியாயங்களின் பெயர்களைக் கூறுக.

109. திருவருள் குருவடிவாய் எழுந்தருளுவது எதற்காக?

110. குரு எனக் கூறப்படுவதன் பொருள் யாது?

111. சைவ சமயம் குறிப்பிடும் ஆன்ம விடுதலைக்கான மூன்று வழிபாடுகளும் எவை?

112. குருவின் பிரதான செயற்பாடுகள் யாவை?

113. இலிங்கம் என்பதன் கருத்து என்ன?

114. இலிங்க வழிபாடு செய்து முத்தியடைந்த நாயன்மார்கள் நால்வரின் பெயர்களைப் பட்டியலிடுக.

115. சிவலிங்கத்தின் இருவகைகளும் எவை?

116. சங்கமம் என்பது யாரைக் குறிக்கும்?

117. சங்கம வழிபாடு செய்து முத்தியடைந்த நாயன்மார் நால்வரின் பெயர்களைப் பட்டியலிடுக.

118. சிவபெருமானின் அடியார்கள் எச்சாதியினராயிருப்பினும் வணக்கத்துக்கு உரியவர்கள் என அப்பரடிகள் பாடிய பதிகத்தின் அடிகளைத் தருக.

119. நாட்டுப்புறச் சடங்குகள் ஐந்து கூறுக.

120. மேல் நிலையாக்கம் பெற்ற கோயிற் சடங்குகள், நாட்டார் தெய்வ வழிபாட்டுச் சடங்குகளிலிருந்து எவ்விதம் வேறுபடுகின்றன?

121. நாட்டார் தெய்வ வழிபாட்டின் போது இடம்பெறும் சடங்குகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

122. ஈழத்தில் வழிபடப்பெறும் கிராமியத் தெய்வங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

123. ஈழத்தில் காணப்படும் திரௌபதையம்மன் ஆலயங்கள் ஐந்து கூறுக.

124. பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயம் யாரால் கட்டப்பட்டது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

125. பத்ததிகள் எனப்படுபவை யாவை?

126. வைரவரின் தோற்றம் பற்றிப் புராணங்கள் கூறுவன யாவை?

127. வைரவ மூர்த்தங்களில் தலைசிறந்தது எது?

128. கொக்குவில் தலையாழி வைரவர் ஆலயத்தின் சிறப்புகள் எவை?

129. வைரவருக்குரிய விரத நாட்கள் எவை?

130. ஈழத்தில் காணப்படும் நாட்டார் கலைகள் ஐந்தினைப் பெயரிடுக.

131. நாட்டுப்புறக் கலைகள் எவற்றை மக்களுக்குப் போதிக்கின்றன?

132. ஈழத்தில் நாட்டுக் கூத்துக் கலைக்கு மறுவாழ்வு கொடுத்தவர் யார்?

133. இலங்கையின் வசந்தன் கூத்து இடம்பெறும் இடங்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

134. இதிகாசம் என்பதன் பொருள் யாது?

135. இதிகாசங்கள் மூன்றும் எவை?

136. இலங்கைச் சைவ சமய வரலாற்றுடன் தொடர்புடைய, இதிகாசம் கூறும் மன்னன் யார்?

137. இராவணன் சாமகானம் பாடியது எதற்காக?

138. எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால் இத் தேவார அடியில் கூறப்படும் இருவர் யாவர்?

139. இராவணனின் மனைவி, தாயார் ஆகியோர் பெயர்கள் யாவை?

140. இராமாயண சம்பவங்களுடன் தொடர்புடைய ஈழத்துத் திருத்தலங்கள் எவை?

141. இலங்கையிலுள்ள தான்தோன்றி ஈஸ்வரங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

142. களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் தோற்றம் பற்றிய தகவல்களைக் கூறும் சான்றாதாரம் எது?

143. களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் தனித்துவமான சிறப்பம்சம் என எதனைக் கருதலாம்?

144. சுயம்புலிங்கப் பிள்ளையாரின் ஆலயத்திலுள்ள சோடச வடிவங்கள் எத்தனை?

145. கொக்கட்டிச் சோலை தான்தோன்றியீச்சரப் பணிகளில் ஈடுபட்ட இலங்கை அரசர்கள் யாவர்?

146. கொக்கட்டிச் சோலை தான்தோன்றியீச்சரக் கொடித்தம்பத்தின் சிறப்பு யாது?

147. கொக்கட்டிச் சோலை தான்தோன்றியீச்சரம், களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆகிய ஆலயங்களின் பரிபாலகர்கள் எவ்வாறு அழைக்கப் படுகின்றார்கள்?

148. நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் சிறப்புக்கள் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

149. நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத் தீர்த்தத்தின் சிறப்புக்கள் எவை?

150. நயினை அம்பாள் மீது ஊஞ்சற்பதிகம் யாரால் பாடப்பட்டது?

151. புன்னைச் சோலை ஸ்ரீ பத்திரகாளி கோயிலின் தனிச் சிறப்புக்கள் எவை?

152. நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வரலாற்றை அறிய உதவும் சான்றுகள் எவை?

153. இலங்கையிலுள்ள சைவக் கோயில்களில் நல்லூர் முருகன் ஆலயம் சிறப்புப் பெற்று விளங்குவதற்கான காரணிகள் இரண்டு தருக.

154. நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவ நாட்களில் காலையில் இடம்பெறும் சிறப்புத் திருவிழாக்கள் எவை?

155. நல்லைக் குமரன் மலர் முதலில் வெளிவந்த ஆண்டு எது?

156. வரத பண்டிதர் இயற்றிய நூல்கள் எவை?

157. பிள்ளையார் கதை நூலின் தோற்றத்துக்கான காரணங்கள் எவை?

158. இலக்கண சுந்தரிக்கு ஏற்பட்ட சோதனைகள் யாவை? அவற்றை அவள் எவ்வாறு வெற்றி கொண்டாள் எனப் பிள்ளையார் கதை கூறுகின்றது?

159. பிள்ளையார் கதையில் விநாயக சஷ்டி விரதம் நோற்றுப் பயனடைந்தோர் நால்வரின் பெயர்களைக் குறிப்பிடுக.

160. திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கப் பணிகள் நான்கினை எழுதுக.

161. இந்துபோட் என்ற பட்டத்துடன் சு. இராசரெத்தினம் அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

162. இந்துபோட் டால் வளர்ச்சி கண்ட கல்லூரிகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

163. திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் முதல் அதிபர் யார்?

164. திருநெல்வேலியில் சைவ வித்தியா விருத்திச் சங்கம், சைவாசிரிய கலாசாலை, காவிய பாடசாலை ஆகியன உருவாகிய ஆண்டுகள் எவை?

165. திருமந்திரம் கூறுகின்ற சரியைத் தொண்டுகள் யாவை?

166. நான்கு வகைப் பூக்களும் எவை?

167. திருநந்தவனத் தொண்டு செய்து முத்தியடைந்த நாயன்மார் யாவர்?

168. இந்து சமயத்தின் மறுபெயர் எது?

169. தருமம் என்பதன் பொருள் யாது?

170. சைவ சமயத் தருமப் பணிகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

● ● ● ● ● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதிரி வினாப்பத்திரம்

தரம் : 10 பாடம் : சைவநெறி

நேரம் : 01 மணித்தியாலம்

வினாத்தாள் – 1

**அவதானிக்க வேண்டியவை**

i. எல்லா வினாக்களுக்கும் விடை தருக

ii. 01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்ட விடைகளில் மிகப் பொருத்தமான விடைகளைத் தெரிவுசெய்க.

iii. உங்களுக்குத் தரப்பட்டுள்ள வினாத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையின் இலக்கத்தினுள் (X) இடுக.

iv. வினாத்தாள் 1 இன் விடைத்தாளை வினாத்தாள் 2 இன் விடைத்தாளுடன் இணைத்துக் கையளிக்கவும்.

---

01. **சிவம்** என்னும் சொல்லின் பொருளாக அமைவது

1. மூவகைத் திருமேனிகளை உடையது 2. குருவடிவாய் எழுந்தருளுவது
3. செம்மையைக் கொடுப்பது 4. ஆக்கவும் அழிக்கவும் வல்லது

02. இறைவன் ஞானப்பழமாய் விளங்குகின்றான் என்பதை எடுத்துக் காட்டுகின்ற திருப் பாடலைப் பாடியவர்

1. சேந்தனார் 2. திருமாளிகைத் தேவர்
3. திருஞானசம்பந்தர் 4. திருநாவுக்கரசர்

03. மூவகைப் பூசை முறைகளில் இடம்பெறாதது

1. காமியபூசை 2. நித்தியபூசை
3. நிஷ்காமிய பூசை 4. நைமித்திய பூசை

04. **அன்பேசிவம்** என்பதை வலியுறுத்தும் நூல்

1. திருக்குறள் 2. திருமந்திரம்
3. திருப்புகழ் 4. திருப்பாவை

05. வாய்மைக்கு இலக்கணமாக விளங்கிய மன்னன்

1. மனுநீதி கணட சோழன் 2. நெடுஞ்செழியப் பாண்டியன்
3. அரிச்சந்திரன் 4. சிபிச்சக்கரவர்த்தி

06. பஞ்சாங்கம் கணிப்பதில் முன்னோடிகள் வாழ்ந்த ஆட்சிக்காலம்

1. குப்தர் காலம் 2. மௌரியர் காலம்
3. சாத வாகனர் காலம் 4. மொகலாயர் காலம்

07. சனி பகவானைத் தோல்வி காணச் செய்த இருவர்

1. முருகனும் பிள்ளையாரும் 2. பிரமனும் அனுமானும்
3. அனுமானும் பிள்ளையாரும் 4. இந்திரனும் பிரம்மனும்

08. விநாயக சஷ்டி விரத காலமாக விளங்குவது

1. கார்த்திகை மாத வளர்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறைச் சஷ்டி வரை
2. கார்த்திகை மாதத் தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறைச் சஷ்டி வரை
3. கார்த்திகை மாத தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத தேய்பிறைச் சஷ்டி வரை
4. கார்த்திகை மாத வளர்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத தேய்பிறைச் சஷ்டி வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் மேற்கொள்ளக் கூடாதது

1. புத்தாடை அணிதல்
2. இறைவனை வணங்குதல்
3. பல்வேறு பலகாரங்கள் உண்ணல்
4. மாமிசம் உண்ணல்

10. தீபாவளிக் காலத்தில் செய்யப்படும் பூசைகளும் நற்செயல்களும் ஆன்மாக்களை நரகத்தினின்றும் காக்கும் எனக் குறிப்பிட்ட நூல்

1. இராமாயணம்
2. பத்ம புராணம்
3. கருடபுராணம்
4. மகாபாரதம்

11. இந்து திருமணச் சடங்கின்போது இடம்பெறும் **பாணிக்கிரகணம்** என்பது

1. கைப்பிடித்தல்
2. காப்புக் கட்டுதல்
3. தாலிகட்டுதல்
4. அம்மி மிதித்தல்

12. **சதருத்ரயம்** இடம்பெற்றுள்ள வேதம்

1. இருக்கு
2. யசுர்
3. சாமம்
4. அதர்வணம்

13. அதர்வ வேதத்தின் இன்னுமொரு உட்பகுதியாக அமைந்த பகுதி

1. சாமவேதம்
2. ஆயுர்வேதம்
3. கிருஷ்ணயசுர்வேதம்
4. சதுர்வேதம்

14. திருமுறைப் பாடல்களை உளமுருகிப் பாடுவதால் நாம் பெற முடியாதது

1. இறைபக்தி
2. மனநிம்மதி
3. மாந்திரீக சாதனை
4. ஆன்மீக உணர்வு

15. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடிய **உற்றுமை சேர்வது மெய்யினையே** என்னும் பதிகம் பாடப்பட்ட திருத்தலம்

1. திருவாரூர்
2. திருக்கழுமலம்
3. திருவீழிமிழலை
4. சிதம்பரம்

16. **பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட** எனத் தொடங்கும் திருப்பல்லாண்டில் பால்வேண்டி அழுத பாலகனின் தந்தை

1. விசுவாமித்திரர்
2. வியாக்கிரபாதர்
3. பதஞ்சலி
4. வசிட்டர்

17. பஞ்சபுராணம் ஓதவேண்டிய ஒழுங்காக அமைவது

1. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம்
2. தேவாரம், திருவாசகம், திருப்பல்லாண்டு, திருவிசைப்பா, திருப்புராணம்
3. தேவாரம், திருப்புராணம், திருவிசைப்பா, திருவாசகம், திருப்பல்லாண்டு
4. தேவாரம், திருவாசகம், திருப்புராணம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

18. திருக்கூட்டத்தாரின் இயல்பாய் அமையாதது

1. இறைவன் மீதுள்ள அன்பினால் மெய் புளகிப்பவர்கள்
2. கைத் திருத்தொண்டு செய்பவர்கள்
3. தமது செய்கை பற்றிப் பெருமிதம் கொள்பவர்கள்
4. மேனி மேல் திருநீற்றின் ஒளி விளங்கச் செய்பவர்கள்

19. திருக்கூட்டத்தினரைப் புகழ்ந்து ஆலால சுந்தரர் பாடிய பதிகம்

1. திருத்தொண்டர் திருவந்தாதி
2. திருத்தொண்டர் புராணம்
3. திருத்தொண்டத் தொகை
4. திருத் தொண்டர் வெண்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. திலகவதியார் திருவவதாரஞ் செய்த இடம்

1. திருவாரூர்
2. திருநாவலூர்
3. திருவாமூர்
4. திருவாதவூர்

21. கோயில் மகோற்சவத்தின் போது வாகனத் திருவிழாக்கள் உணர்த்துவது

1. படைத்தலை
2. காத்தலை
3. அருளலை
4. மறைத்தலை

22. சம்பந்தரும், நாவுக்கரசரும் படிக்காசு பெற்ற தலம்

1. திருவீழி மிழலை
2. திருமறைக் காடு
3. மதுரை
4. திருக்கழுமலம்

23. அப்பரடிகள் இறுதியாகப் பாடிய திருப்பதிகம்

1. மாதர்ப் பிறைக் கண்ணியானை
2. குனித்த புருவமும்
3. எண்ணுகேன் என்சொல்லி
4. புழுவாய்ப் பிறக்கினும்

24. கழற்றறிவார் என்பவருடன் நட்புப்பூண்டு பழகியவர்

1. திருஞானசம்பந்தர்
2. திருநாவுக்கரசர்
3. சுந்தரர்
4. மாணிக்கவாசகர்

25. சைவ சமய குரவர்களாகிய நால்வருக்கும் பொதுவாய் அமையாத கூற்று

1. சிவபெருமானை நினைந்துருகித் தெய்வீகப் பனுவல்களைப் பாடியவர்கள்.
2. சிவபெருமான் திருவருளால் அற்புதங்கள் பல செய்தவர்கள்.
3. தமது பாடல்கள்யாவும் பன்னிருதிருமுறைகளில் இடம்பெற்ற பெருமைக்கு உரியவர்கள்.
4. சேக்கிழார் பெருமானால் பெரியபுராணத்தில் பாடப்பட்ட சீர்பெற்றவர்கள்.

26. மெய்கண்டதேவரின் மாணவ பரம்பரையைச் சேராதவர்

1. அருணந்தி சிவாச்சாரியார்
2. நமச்சிவாயத்தேவர்
3. மறைஞான சம்பந்தர்
4. திருவியலூர் உய்யவந்த தேவர்

27. திருமந்திரத்தின் ஒன்பதாவது தந்திரம் கூறுவது

1. அணைந்தோர் இயல்பு
2. முத்திபெறும் சாதனங்கள் இயல்பு
3. உயிர்களின் இயல்பு
4. திருவருளின் இயல்பு

28. சுவாமி விபுலாநந்தர் இராமகிருஷ்ண மிஷனுக்காக முகாமைசெய்த முதற் பாடசாலை

1. திருமலை இந்துக் கல்லூரி
2. யாழ்ப்பாணம் வைதீஸ்வராக் கல்லூரி
3. கல்லடி சிவானந்த ஆண்கள் பாடசாலை
4. காரைதீவு சாரதா வித்தியாலயம்

29. வினையானது அனுபவிக்கப்படும்போது அழைக்கப்படும் பெயர்

1. சஞ்சிதம்
2. கன்மம்
3. பிராரர்த்தம்
4. ஆகாமியம்

30. **அறிஞர்க் கறிவாம் உருவும்** எனத் திருவருட்பயன் கூறும் திருமேனி

1. சதாசிவன்
2. மகேசுரன்
3. மால்
4. அயன்

31. ஒளி படாவிடில் சூரிய காந்தக் கல்லில் நெருப்புத் தோன்றாது அதுபோல் குருவடிவாய் வந்த திருவருளின் பார்வை படாமல் ஆன்மாக்கள் முத்தியடைய முடியாது- இக்கருத்தினை எடுத்துக் கூறாத நூல்

1. திருவருட்பயன்
2. திருமந்திரம்
3. திருவாசகம்
4. சிவஞான சித்தியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. சிவலிங்க வகைகளில் ஒன்றான பரார்த்த லிங்கத்தின் மறுபெயர்

1. மானுடலிங்கம் 2. தாவரலிங்கம்
3. சுயம்புலிங்கம் 4. தைவிகலிங்கம்

33. மேனிலையாக்கக் கோயிற்பூசைகளினின்றும் நாட்டார் தெய்வ வழிபாடு பெரிதும் வேறுபடுவது

1. பூசகர் சடங்குகளைச் செய்வதால்
2. மந்திரத் தன்மையின்மையால்
3. பக்தர்கள் நேரடியான பங்களிப்பைச் செய்வதால்
4. நேர்த்திகள் நிறைவேற்றப்படுவதால்

34. எல்லா ஆலயங்களிலும் காணப்படும் வைரவ மூர்த்தம்

1. உக்கிர வைரவர் 2. காலவைரவர்
3. நரசிம்ம வைரவர் 4. ஞான வைரவர்

35. வசந்தன் கூத்து வகைகளில் அடங்காதது

1. முருகன் வசந்தன் 2. பிள்ளையார் வசந்தன்
3. அனுமார் வசந்தன் 4. அம்மன் பள்ளு வசந்தன்

36. சிவபெருமான் சிறு குழந்தை வடிவில் மண்டோதரியின் மடியில் தவழ்ந்த செய்தியைக் கூறும் நூல்

1. இராமாயணம் 2. மகாபாரதம்
3. உத்திரகோச மங்கை புராணம் 4. கைலாய மாலை

37. களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் தல விருட்சம்

1. வில்வம் 2. வன்னி
3. வேம்பு 4. அரசு

**38-40 வரையான வினாக்களுக்குப் பின்வரும் அட்டவணை உதவியுடன் விடை தருக**

A- கொக்கடிச்சோலைத் தான்தோன்றியீச்சரம் E- களுதாவளைப் பிள்ளையார் கோயில்

B- நயினை நாகபூஷணி அம்மன் கோயில் F- கோணாவளை வைரவர் கோயில்

C- புன்னைச் சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் G- திருக்கேதீச்சரம் கோயில்

D- நல்லூர்க் கந்தசுவாமி கோயில் H- செல்வச் சந்நிதி கோயில்

38. போர்த்துக்கேயரை விரட்டிய நந்தி அமைந்துள்ள திருத்தலம்

1. A 2. C
3. H 4. D

39. அன்னதானத்திற்குப் பேர்பெற்ற இரண்டு ஆலயங்கள்

1. D, H 2. B, H
3. B, D 4. H, A

40. தீமிதிப்புச் சடங்கு நாட்களே மிகப் பெரிய திருவிழாவாக நடைபெறும் கோயில்

1. A 2. E
3. C 4. G

**(1x40= 40 புள்ளிகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் – 2

நேரம் : 02 மணித்தியாலம்

**முதலாம் இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

01. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சுருக்கமான விடை தருக

i. **கடவுள்** என்பதன் பொருள் யாது?

ii. **சைவ சித்தாந்தம்** என்பதனால் கருதப்படுவது யாது?

iii. உபநிடத மகா வாக்கியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

iv. பஞ்சாங்கத்தில் இடம்பெறும் ஐந்து அங்கங்களும் எவை?

v. சிவ விரதங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

vi. திருமணச் சடங்கில் இரட்சா பந்தனம் என்றால் என்ன?

vii. இருக்கு வேதத் தெய்வங்களில் அதிகமான பாடல்களால் துதிக்கப்பட்ட மூவரை ஒழுங்குமுறையில் பட்டியற்படுத்துக.

viii. சைவாகமங்கள் நான்கின் பெயர்களை எழுதுக.

ix. பெரியபுராண காப்பியம் எழுதுவதற்கு அடிப்படையாய் அமைந்த இரண்டு நூல்களும் எவை?

x. மாணிக்க வாசகருக்காகச் சிவபெருமான் நடத்திய திருவிளையாடல்கள் இரண்டினைத் தருக.

**(2x10= 20 புள்ளிகள்)**

02. பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதி, அவற்றின் பொருளினையும் எழுதுக.

i. "உற்றுமை சேர்வது"

ii. "நாமார்க்குங் குடியல்லோம்"

iii. "தந்ததுன் தன்னை"

iv. "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை"

v. "தண்ணளி வெண்குடை வேந்தன்"

**(8x2= 16 புள்ளிகள்)**

03. "சைவ மக்கள் தம் வாழ்வை நெறிப்படுத்தி, ஆன்மீகத் துறையில் முன்னேறவும், முத்தியடைய உதவும் சாதனங்களில் விரதமும் ஒன்றாகும்".

i. **விரதம்** என்பதற்கு ஆறுமுக நாவலர் கூறியுள்ள வரைவிலக்கணம் யாது?

ii. முக்கியமான விரத வகைகள் நான்கினைக் குறிப்பிட்டு, அவற்றிற்கான உதாரணங்கள் இரண்டு வீதம் குறிப்பிடுக.

iii. புரட்டாதிச் சனி அனுட்டிக்கப்படும் விதத்தினைச் சுருக்கமாக எழுதுக.

**(8 புள்ளிகள்)**

04. "வேதமும் ஆகமமும் இறை உண்மையை எடுத்துக்காட்டும் நூல்களாகும்"

i. **வேதம், ஆகமம்** இரண்டினையும் வேறுபடுத்திக் காட்டுக

ii. வேதத்தின் முக்கியமான பகுதிகள் இரண்டினையும் சுருக்கமாக அறிமுகப்படுத்துக

iii. சைவாகமங்களில் கூறப்பட்டுள்ள விடயங்களைச் சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

**(8 புள்ளிகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. "சிவபெருமான் ஐந்தொழில்களைச் செய்து உயிர்களைக் காக்கும் முறையை மகோற்சவங்கள் உணர்த்துகின்றன".

i. ஐந்தொழில்களையும் உணர்த்தும் மகோற்சவ நிகழ்ச்சிகள் யாவை?

ii. நகருங்கோயில்கள் எவ்வாறு உருவாக்கப்டுகின்றன?

iii. நயினை நாகபூஷணி அம்மன் ஆலய மகோற்சவம் பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்க.

**(8 புள்ளிகள்)**

06. "திருவருளைப் பற்றியும் அதனது பயனைப் பற்றியும் விளக்கமாகக் கூறுதலின் இந்நூல் திருவருட்பயன் என்னும் பெயர் பெற்றது"

i. திருவருட்பயனின் முதல் ஐந்து அதிகாரங்களும் எவை?

ii. மும்மலங்கள், மூவகை ஆன்மாக்கள், இறைவனின் இரண்டு நிலைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

iii. அருளது நிலை பற்றித் திருவருட்பயன் நூல் கூறும் கருத்துக்களைத் தொகுத்துத் தருக.

**(8 புள்ளிகள்)**

07. "சைவ நெறி ஆன்ம விடுதலைக்கான பல மார்க்கங்களைக் குறிப்பிடுகின்றது. அவற்றுள் குருலிங்க சங்கம வழிபாடும் ஒன்றாகும்".

i. குருலிங்க சங்கம வழிபாடு என்பதால் அறியப்படுவது யாது?

ii. சங்கம வழிபாட்டின் சிறப்புக்களைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுக.

iii. குருவழிபாட்டின் மூலம் முத்தியடைந்த நாயனார் ஒருவரின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுக.


**(8 புள்ளிகள்)**

● ● ● ● ● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISB... - 5

pbd
60103016
SAIVANERI G-10
23/07/2016
R.S. 350.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org